
# கவின்தமிழ்

# 2011



வட மாகாண
தமிழ்மொழித் தினச் சிறப்பு மலர்

# கவின் தமிழ்



வடமாகாண

# தமிழ்மொழித்தினச்

## சிறப்பு மலர்

2011

**நூல் விபரப் பட்டியல்**

| | | |
|---|---|---|
| இதழின் பெயர் | : | கவின் தமிழ் |
| வகை | : | இலக்கிய ஆக்கங்களின் தொகுப்பு |
| இதழாசிரியர் | : | திரு.தி.தர்மலிங்கம் |
| வெளியீடு | : | தமிழ்மொழித் தினக்குழு<br>மாகாணக் கல்வித் திணைக்களம்<br>வடமாகாணம். |
| அட்டைப்படம் | : | மு.இராதாகிருஷ்ணன் |
| பதிப்பு | : | 2011 |
| பக்கங்கள் | : | 145 |
| பிரதிகள் | : | 2000 |
| அச்சுப்பதிப்பு | : | கரிகணன் பிறிண்டேர்ஸ்<br>கே.கே.எஸ். வீதி,<br>யாழ்ப்பாணம். |

# கவின் தமிழ்

# 2011

## மலர்க்குழு

**திரு.மு.இராதாகிருஷ்ணன்**
*மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)*

**திருமதி.பி.செல்வின் இரேனியஸ்**
*மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)*

**திரு.வ.ஸ்ரீஸ்கந்தராசா**
*பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)*

**திரு.தி.தர்மலிங்கம்**
*உதவிக்கல்விப் பணிப்பாளர் (தமிழ்)*

**திரு.இ.இராஜேஸ்வரன்**
*உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)*

## அட்டைப்படம்

**மு.இராதாகிருஷ்ணன்**
*மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்*
*(கல்வி அபிவிருத்தி)*

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கொழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த
திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ
லனைத்துலக மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெருந் தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்தபடி இருப்பது போல்
கன்னடமுங் களிதெலுங்குங்
கவின் மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம் போலுலகவழக்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே

- மனோன்மணீயம்
பெ.சுந்தரம்பிள்ளை

# வடமாகாண
# தமிழ்மொழித்தின விழா
# 2011

## விழாக்குழுவினர்

### காப்பாளர்
**திரு.இ.இளங்கோவன்**

*செயலாளர்,*
*கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,*
*இளைஞர் விவகார அமைச்சு*
*வடமாகாணம்.*

### தலைவர்
**திரு.ப.விக்னேஸ்வரன்**

*மாகாணக் கல்விப் பணிப்பாளர்,*
*மாகாணக் கல்வித் திணைக்களம்,*
*வடமாகாணம்.*

### இணைப்பாளர்
**திரு.மு. இராதாகிருஷ்ணன்**

*மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,*
*வடமாகாணம்.*

### செயலாளர்
**திரு.தி.தர்மலிங்கம்**

*உதவிக் கல்விப் பணிப்பாளர்,*
*மாகாணக் கல்வித் திணைக்களம்*

# இதழ்களாக....


| | | |
|---|---|---|
| 1) | ஆசிச்செய்திகள் | vii-ix |
| 2) | தமிழ் மொழித்தின விழா இணைப்பாளரின் இதயத்திலிருந்து... | x |
| 3) | தமிழ்மொழித்தின இதழாசிரியரின் கருத்துரை | xi |
| 4) | பூந்தோட்டம் | 01 |
| 5) | தந்தை தாய் பேணல் | 02 |
| 6) | கல்வி வளர்ச்சியில் தொலைக்காட்சி | 04 |
| 7) | அறிவுத் தேடலில் இணையம் | 06 |
| 8) | இயற்கையும் தொழில்நுட்ப வளர்ச்சியும் | 09 |
| 9) | என்னை என்றேனும் மன்னிப்பாயா.... | 13 |
| 10) | மனித மனங்கள் | 18 |
| 11) | புரியாத புதிர் | 22 |
| 12) | புது அத்தியாயம் | 25 |
| 13) | குறுநாடக ஆக்கம் | 28 |
| 14) | யாரொடு நோகேன் | 37 |
| 15) | பெற்றோரைப் பேணுவோம் | 43 |
| 16) | சுவர் (கவிபாடும்) ஓவியப் பெண்கள் | 45 |
| 17) | காளமேகம் பொழிந்தது கவி மழை | 48 |
| 18) | ஆசிரியத்துவம் ஓர் நோக்கு | 51 |
| 19) | சமகால சமூகத்தின் சவால்களும் கல்வியும் | 54 |
| 20) | மனமே நீ பேசு | 62 |
| 21) | "தகசாக்காவும் நானும்" | 63 |
| 22) | இலக்கியம் கற்பிப்பதில் கையாள வேண்டிய நுட்பங்கள் | 68 |
| 23) | வாசிப்பு மொழிவிருத்தியின் அடித்தளம் மட்டுமல்லாது | 72 |
| 24) | மொழி கற்பித்தலின் அடிப்படைகள் | 76 |
| 25) | இன்றைய தகவல் தொழில்நுட்பயுகத்தில் அருகிவரும் வாசிப்புப் பழக்கம் | 79 |
| 26) | தமிழின் சிறப்பு | 81 |
| 27) | புதுமைச் சிற்பிகள் | 82 |
| 28) | இன்றைய இளைய தலைமுறையும் கையடக்கத் தொலைபேசியும் | 83 |
| 29) | செல்லிடத் தொலைபேசி | 85 |
| 30) | விதை தந்த விருட்சங்கள் | 87 |
| 31) | புதிய ஆசிரியருக்கு ........ | 88 |
| 32) | இணையிலாத் தமிழ் | 90 |
| 33) | வாழ்வும் இசையும் | 92 |
| 34) | செம்மொழி வரிசையில் தமிழ்மொழி | 95 |
| 35) | ஆரோக்கியமுள்ள மனிதரும், சாரணியமும் | 98 |
| 36) | உங்கள் சிந்தனைக்கு....... | 101 |
| 37) | மழலை இன்பம் | 103 |
| 38) | தமிழ்த்தாயின் தவப்புதல்வன் தனிநாயக அடிகள் | 105 |
| 39) | "புழுதி மண்" | 108 |
| 40) | மாற்றங்கள் | 113 |
| 41) | மனங்கொண்ட மாங்கல்யம் | 116 |
| 42) | கணனி யுகத்தில் தமிழ் | 120 |
| 43) | அகில இலங்கை தமிழ் மொழித்தின தேசிய நிலைப் போட்டி முடிவுகள் - 2010 | 122 |
| 44) | மாகாண நிலைத் தமிழ்மொழித்தினப் போட்டிகள் - 2010 | 125 |

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர்

திரு.இ.இளங்கோவன் அவர்களின்

# ஆசிச்செய்தி

எங்கள் தமிழ்மொழி, நாம்வாழுங் காலத்தில் செம்மொழி அந்தஸ்தைப் பெற்றுள்ளது என்பது எமக்கெல்லாம் பெருமை. நாம் தமிழர் என்பதில் பெருமையிலும் பெருமை. இந்தப்பெருமை தமிழ்மொழிக்குக் கிடைக்க வரலாற்று ரீதியாக தமிழ் கண்ட அனுபவக்களம், அதன் வளர்ச்சி தமிழர் தம் வாழவின் இன்ப துன்பமெல்லாம் ஒருங்கு சேர்ந்து இயம்பியுள்ளது. தமிழின்பால் பெருமையும் காதலும் கொண்ட பல்லாயிரம் அறிஞர்கள் புலவர்கள் கவிஞர்கள் படைத்த இலக்கியங்களும் தமிழ்மொழி செம்மொழியாவ தற்கு வழிகோலியுள்ளது.

இத்தகைய பெருமைக்குரிய தாய்மொழியாகக் கொண்ட தமிழ், முஸ்லிம் மாணவரிடையே மொழித்திறன் விருத்தியையும் கலைத்திறன் விருத்தியையும் நன்றாக வளரத்தெடுக்கும் வகையில் நாம் ஆண்டுதோறும் தமிழ்மொழித் திறன் போட்டிகளை நடாத்தி வருகின்றோம். இத்தகைய போட்டிகளுக்கூடாகத் தமிழின்பால் தமிழிலக்கியத்தின்பால் தமிழியற் கலைகளின்பால் மாணவர்கள் ஈடுபடுவதன் மூலம் தமிழை வளப்படுத்த இயலும் இத்தகைய நன்முயற்சிக்கு மாகாணக் கல்வித்திணைக்களம் ஊக்கமுடன் செயற்படுவது பாராட்டுதற் குரியது. இத்தகைய தமிழ்மொழித் தின விழாவும் போட்டியும் சிறப்புறும் வகையில் தமிழியற் கட்டுரைகளைத் தாங்கி வெளிவரும் "கவின்தமிழ்" 2011 சிறப்புற வெளிவர எனது வாழ்த்துக்களும் நல்லாசிகள்.

இ.இளங்கோவன்
செயலாளர்
வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு

வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன் அவர்களின்

# ஆசிச்செய்தி

வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம் மாணவர்களின் பல்வேறு உடல், உள ஆளுமைகளை விருத்தி செய்வதில் போட்டிகளையும், நிகழ்வுகளையும் செயற்பாடுகளையும் சிறப்புற முன்னெடுத்து வருகின்றது. அத்தகைய செயற்பாடுகளில் தமிழ்மொழித்தினப் போட்டிகளும் முக்கியமானவை.

பாடசாலை ரீதியாக, வலய ரீதியாக, மாகாண ரீதியாக, தேசிய ரீதியாகவும் நடத்தப்படும் இப்போட்டிகளில் அதிக மாணவர்கள் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்கும் வகையில் வாய்ப்பளிக்கப்படுகிறது. உடல், உளச் சமநிலை, மொழித்திறன் விருத்தி கொண்ட மாணவர்களை உருவாக்குவதில் இப்போட்டிகள் பெரும்பங்கு வகிக்கின்றன. முக்கியமாக, பாடசாலை நிலையில் நடத்தப்பட்டு வருகின்ற போட்டிகள் மாணவர்கள் பலர் பங்குபற்றுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது.

பாடசாலைக் காலத்தில் மாணவர்களிடம் ஏற்படுகின்ற மொழிவிருத்தியே அவர்களது வாழ்நாள் முழுவதும் செல்வாக்குச் செலுத்துகிறது என்பதாலும், தமிழ்மொழித்தினப் போட்டிகள் முக்கியமானவை. இப்போட்டிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றுவது வரவேற்கத் தக்கது. பாடசாலைகள் இப்போட்டிகளில் தாம்பெறும் இடங்களைத் தொடர்ந்துவரும் காலங்களில் தக்கவைத்துக் கொள்வதிலும் அக்கறை காட்டுகின்றன. அதைத் தமக்குரிய சிறப்புத்தகவாக (Bench Mark) கொள்வதும் குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் தமிழ்மொழித்தினப் போட்டிகளில் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

தமிழ்மொழித்தினப் போட்டிகளினூடாக மொழித்திறன்சார்ந்த போட்டிகள் நடத்தப்படுவதோடு தமிழ் மக்களின் கலை, கலாசாரம், பண்பாடு, தனித்துவ அடையாளங்களைப் பேணுவதற்கான போட்டிகளும் நடத்தப்படுகின்றன. அந்தவகையில் பாரம்பரியக் கலைகளில் ஒன்றான நாட்டுக்கூத்துப் போட்டிகள் நடத்தப்பட்டு வருவது சிறப்பம்சமாகும். இதனால் அருகிவரும் கலையை மாணவர்கள் ஆர்வத்தோடு கற்கின்றனர்.

பல்வேறு நிலைகளிலும் நடத்தப்பட்டு வருகின்ற தமிழ்மொழித்தினப் போட்டிகளுக்கு ஆர்வத்துடன் பங்குபற்றுகின்ற மாணவர்களுக்கு எனது

வாழ்த்துக்களையும், ஆசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போட்டிகள் நடைபெறுவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற ஆசிரியர்கள், அதிபர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி அலுவலர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றியும் பாராட்டுக்களும்.

மாகாணநிலைப் போட்டிகளை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிவருகின்ற வடமாகாண, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதம கணக்காளர், நிதிப்பிரிவினர், நிர்வாக அலுவலர்கள், பிரதம எழுதுவினைஞர்கள், எழுதுவினைஞர்கள், சாரதிகள், பணியாளர்கள் அனைவரையும் நன்றியுடன் வாழ்த்துகின்றேன்.

2011ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மிகச் சிறப்பாக நடைபெறுகின்ற தமிழ்மொழித்தினப் போட்டிகளும், அவற்றின் ஆவணமாகச் சிறப்புற வெளிவரும் "கவின் தமிழ்" சிறப்பு மலரும் சிறப்புற நிறைவுபெற எனது நல்லாசிகள்.

ப. விக்னேஷ்வரன்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.

# தமிழ் மொழித்தின விழா இணைப்பாளரின் இதயத்திலிருந்து.........

தமிழ் மொழிக்கும், தமிழர் தம் பாரம்பரியத்திற்கும் பண்பாட்டு விழுமியங்களுக்கும் பெருமை சேர்க்கும் செயற்பாடுகளில் வடமாகாண கல்விபுண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சும் மாகாணக்கல்வித் திணைக்களமும் ஈடுபட்டுவருவது யாவரும் அறிந்ததே. தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து கிடைத்துள்ள இந்த நூற்றாண்டில் தமிழர் தம் கலைகளையும் வாழ்வியலையும் எடுத்தியம்பும் தமிழ்த்தினப் போட்டிகளும் விழாவும் தமிழுக்கு மேலும் ஒரு அணிகலன்களாகும். இத்தகைய தமிழ்மொழித்தினப் போட்டிகள் மாணவர்களிடையே மொழித்திறன், கலைத்திறன், நாடகத்திறன், இசைத்திறன் என்பனவற்றை வளர்ப்பதுடன் தமிழின்பால் பற்று ஏற்பட வழிவகுக்கும். தாமும் தமிழர் என்ற உணர்வு மேலோங்க வழிசமைக்கும், நன்நோக்கு ஏற்பட வகை செய்யும்.

இத்தகைய வாழும் வளர்மொழியைப் பாடசாலை மட்டத்தில் வளர்க்கும் நோக்குடன் நடாத்தப்படும் இப்போட்டிகளில் பாடசாலை மாணவர்கள் அனைவரும் பங்குபற்றி தமது மொழித்திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே இவ்வழாவின் முக்கிய இலக்கு. இந் நோக்கிலேயே அரிய படைப்புக்களை வெளித்தாங்கி விழா சிறப்புற வெளிவருகின்றது "கவின்தமிழ் - 2011" சிறப்பு நூல். யாழ்ப்பாண மாவட்டத்தில் நிகழ்த்தப்படும் இவ்விழாவிலே விழாவின் சிறப்புக்கு உறுதுணையாக நிற்கும் அனைத்துத் தமிழ் அன்பர்களுக்கும் மாணவர்களுக்கும் பாராட்டுகளை நல்கும்.....

முத்து இராதாகிருஷ்ணன்,

மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)

மாகாணக்கல்வித் திணைக்களம்,

வடமாகாணம்.

# தமிழ்மொழித்தின இதழாசிரியரின் கருத்துரை

தமிழ்மொழியை தமிழ்மொழிசார்ந்த திறன்களை இளஞ்சமுதாயத்திடம்; குறிப்பாக, பாடசாலை மாணவர்களிடம் வளர்ப்பதில் வருடாவருடம் நடாத்தப்பட்டு வரும் "தமிழ் மொழித்தினப் போட்டிகள்" முதன்மையானவை; முக்கியமானவை. மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் போட்டி போட்டுக்கொண்டு பங்குபற்றுவதிலிருந்தே மேற்படி உண்மை புலனாகும். ஒவ்வொரு பாடசாலையும் தமக்கென ஒரு தனி இடத்தை பெறும் நோக்கில் செயற்படுகின்றமை பாராட்டத்தக்க விடயம்.

மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளினூடாகப் பாட விதானம் சார்ந்த திறன்களை விருத்தி செய்யவும் இப்போட்டிகள் துணைபுரிகின்றன. மாணவர்களிடம் மொழிசார்ந்த கேட்டல், கிரகித்தல், பேச்சு, எழுத்துத் திறன்களை வளர்ப்பதிலும், இசை, நடன, நாடகத்துறைகளில் விருத்தி செய்வதிலும் இப்போட்டிகளின் பங்கு மிக முக்கிய இடம் பிடிக்கின்றன. இப்போட்டிகளில் பங்குபற்றுவதற்கான ஆயத்த முயற்சிகளில் மாணவர்கள் ஆர்வத்தோடு ஈடுபடும்போது அவர்களிடத்தில் தேடலும், வாசிப்புப் பழக்கமும், படைப்பாற்றலும் அதிகரிக்கின்றன. தொடர்பாடல் சார்ந்த தேர்ச்சிகள், பொழுது போக்குச் சார்ந்த தேர்ச்சிகள், சமயம், ஒழுகலாறு சார்ந்த தேர்ச்சிகள் மாணவரிடம் விருத்தியடைகின்றன. வருடாவருடம் நடத்தப்படுகின்ற இந்தத் தமிழ்மொழித் தினப் போட்டிகளினூடாக மட்டும் தமிழ்மொழியை, தமிழ்மொழி சார்ந்த திறன்களை மாணவர்களிடத்தில் வளர்க்க முடியாது. நாளாந்த வகுப்பறைச் செயற்பாடுக ளினூடாகவும் வளர்த்தெடுக்கப்படும் போதுதான் வெற்றியளிக்கும்.

பாடசாலை நிலை, கோட்ட நிலை, வலயநிலை, மாவட்ட நிலை, மாகாண நிலை என இப்போட்டிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு உறுதுணை புரிந்து வருகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள், வலயக் கல்வித் திணைக்கள அலுவலர்கள், மாகாணக் கல்விப் பணிமனையைச் சேர்ந்த மாகாணக் கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், நிர்வாக அலுவலர்கள், பிரதம எழுதுவினைஞர்கள், பணியாளர்கள், சாரதிகள், பிரதம கணக்காளர் அனைவருக்கும் எனது நன்றி.

மாகாண நிலையில் தமிழ்மொழித்தினப் போட்டிகளும், நாட்டுக்கூத்துப் போட்டிகளும் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்காக எம்மையெல்லாம் ஊக்குவித்து ஒத்தாசை வழங்கிவருவதோடு வாழ்த்துச் செய்தியையும் வழங்கிய கல்விச் செயலாளர் திரு. இளங்கோவன் அவர்களுக்கும் எனது நன்றி.

மாகாணநிலைப் போட்டிகளை நடத்துவதில் அல்லும் பகலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து, எம்மை இயக்கி வருகின்ற வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.ப. விக்னேஸ்வரன் அவர்களுக்கும், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அலுவலர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், சிற்றூழியர்கள் முதலான அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றி.

நிறைவாக "கவின் தமிழ்" இதழ் சிறப்புற வெளிவர ஆக்கங்களை அனுப்பிய எழுத்தாளர்கள், கலைஞர்கள், முகப்பு அட்டையை வடிவமைத்த மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு. மு. இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், சிறப்புற அச்சுப்பதிப்புச் செய்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சார்பில் மிக்க நன்றி.

தி. தர்மலிங்கம்
உதவிக் கல்விப்பணிப்பாளர் (தமிழ்)
வடமாகாணம்.



# பூந்தோட்டம்

பி.எடின்ஷிகா
மு/யோகபுரம் ம.வி. துணுக்காய்.
ஆக்கம் எழுத்து : பிரிவு – 1

1. எனது ஓய்வு நேரங்களைப் பயனுள்ள முறையில் கழிக்க எடுத்துக்கொண்ட பொழுதுபோக்கு "பூந்தோட்டம் அமைத்தல்" ஆகும்.
2. இப்பூந்தோட்டத்தில் கண்ணைக் கவரும் பலவர்ணப் பூக்களைப் பூத்துச் சொரியும் பூஞ்செடிகளை நாட்டியுள்ளேன்.
3. அப்பூஞ்செடிகளினுள் பலவர்ண நிறங்களில் பூத்துச் சொரியும் ரோஜா, செவ்வந்தி, கனகாம்பரம், மயிர்க் கொன்றை போன்ற பூஞ்செடிகள் எனது பூந்தோட்டத்தைப் பெரிதும் அழகுபடுத்து கின்றன.
4. அதிகாலையிலே சூரியனின் பொற்கதிர்கள் மெதுமெதுவாக வெண்மையடைய எனது பூந்தோட்டத்திலுள்ள பூக்களெல்லாம் பூத்துச்சிரிக்கும்.
5. சூரியனைக் கண்டதும் மலர்களெல்லாம் மலர்ந்து அவைகளின் இனிய நறுமணங்கள் காற்றுடன் கலந்துவரும்.
6. எனது பூந்தோட்டத்தின் பெருமிதத்தை இரசித்த தேனீக்கள், வண்டுகள், வண்ணத்துப்பூச்சிகள், தினம் எனது பூந்தோட்டத்திற்கு வரும்.
7. காலை வேளையிலே பூக்களின் இதழ்களின் மேலே பனித்துளிகள் விழுந்திருப்பதைக் காண ஏற்படும் உவகைக்கு நிகரில்லை.
8. மாலை வேளையிலே சூரியன் மேற்கு வானில் அஸ்தமமாக எனது பூந்தோட்டத் திலுள்ள பூக்களெல்லாம் வாடிவிடும் ஆனால் மறுநாள் காலையில் பூக்கள் எப்போது மலரும் என்று ஆவலுடன் காத்திருப்பேன்.
9. நான் மாலை நேரங்களிலெல்லாம் எனது பூந்தோட்டத்திற்கு நீர் பாய்ச்சி பசளை இடுவேன்.
10. என்னுடைய முயற்சியினாலேயே "என்னுடைய பூந்தோட்டத்தில் இவ்வளவு கொள்ளை அழகு உண்டு" என அம்மா என்னைப் பாராட்டுவார்.
11. நான் ஆசையோடு வளர்க்கும் இப்பூந்தோட்டம் என்னுடைய வீட்டிற்கே மிகவும் அழகைக் கொடுக்கின்றது.
12. அதிகாலை நேரங்களில்தான் என்னுடைய பூந்தோட்டத்தில் ஏற்படும் அழகிற்கு நிகரில்லை.
13. எனது வீட்டிற்கு வருகை தரும் அனைத்து விருந்தினர்களும் எனது பூந்தோட்டத் தைப் பார்வையிட்டு என்னைப் பாராட்டி விட்டுத்தான் செல்வார்கள்.
14. இப் பெருமையுடன் என் பூந்தோட்டத்தை இன்னும் சிறப்பிக்க விடாமுயற்சி எடுக்கின்றேன்.
15. நான் எனது இக்கொள்ளைமிக்க பூந்தோட்டத்தை என் உயிரைவிட மேலாக நேசிக்கின்றேன்.



# தந்தை தாய் பேணல்

க. அபிஷிகா
கிளி/ முருகானந்த ம.வி. கிளிநொச்சி.
கட்டுரை வரைதல் : பிரிவு – 2

எம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கும் தாய் தந்தையரே எமது கண்கண்ட முதற் கடவுள்கள். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பார்கள். இந்தக் கூற்றுக்கிணங்க நாம் தந்தையையும், தாயையும் காப்பாற்ற வேண்டும். அவர்களைப் பேண வேண்டும். தாய், தந்தை என்றால் எல்லோருக்கும் ஆனந்தம்.

"மாதா, பிதா, குரு, தெய்வம்" என்பார்கள். முதலில் எமக்கு தேவையானவள் தாய். பின்பு தந்தை. தந்தைக்குப் பிறகுதான் எமக்குக் கற்பிக்கும் ஆசான். பின்பு இறைவனையும் வணங்குகின்றோம். இந்த அளவிற்குப் பெற்றோரின் சிறப்பு அளப்பரியது என்பதை உள்ளத்தில் பதித்துக்கொள்ளவேண்டும். தாயானவள் பத்து மாதம் சுமந்தெடுத்துப் பாலூட்டி வளர்த்தவள் தந்தை பாடம் சொல்லித் தருபவன். தந்தை, தாய் பேணாதவரின் வாழ்க்கை இருண்டதாகவே இருக்கும். தந்தை, தாயை நாம் மதிக்கவேண்டும். அவர்கள் சொற்படி நடக்க வேண்டும்.

கூடுதலாக தந்தை, தாயை சிறுவர்களும், வளர்ந்தவர்களும் மதிப்பதில்லை. அவர்களின் சொல்லிற்கு மீறுகின்றனர். மாதாவையும் பிதாவையும் காப்பாற்று என்று பெரியவர்கள் கூறுகின்றனர். ஆனால் சிறியவர்களோ அதைக் கேட்பதில்லை.

மாதாவையும், பிதாவையும் கண்கண்ட தெய்வம்போல் நாம் நினைக்க வேண்டும். இதனையே ஒரு கவிஞரும்

"கண்கண்ட தெய்வமாம் அன்னையும் தந்தையும்
பேணி வளர்த்த பெருஞ் செல்வமாம்"


என்று தந்தையையும் தாயையும் போற்றுகின்றார். "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" எனும் இந்த பொன்மொழியானது தாயைச் சிறப்பிக்க வைக்கிறது. தாயைவிட சிறந்தது எதுவும் இல்லை என்று உணர்த்துகின்றது. தந்தையின் வார்த்தையிலும் மனிதத்துவம் இருக்கின்றது. தந்தை சொல்லை நாம் மீறக்கூடாது என்ற கருத்தை உணர்த்துகின்றது.

தந்தையையும் தாயையும் சேர்த்து நாம் பெற்றோர் என்று அழைக்கின்றோம். ஆதிகாலம் முதல் நவீன காலம் வரை தாய் தந்தையரை தெய்வம் என்று அழைக்கின்றனர். தாய், தந்தையரை இழந்து எத்தனை சிறுவர்கள் அல்லற்படுகின்றனர். இந்த இனிய பெற்றோர்களை இழந்த சிறுவர்களின் துன்பத்தை நாம் உணர வேண்டும். மாதா, பிதாவைக் காப்

பாற்ற வேண்டும். ஆதிகாலத்தில் தாயை தன்னுயிர் போலவும், தந்தையை பொன் எனவும் கருதி வாழ்ந்தார்கள். ஆனால் இப்போது பெற்றெடுத்து பத்துமாதம் சுமந்த தாயையும் மதித்த வரலாறே இல்லையென லாம்.

தாயும், தந்தையும் எம்மில் வைத்திருக்கும் அன்பை நாம் உணருதல் வேண்டும். தாய் எமக்கு வேண்டிய தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றுகின்றாள். தந்தை நாம் கேட்பதை எல்லாம் வாங்கித் தருகிறார்.

ஆகவே மனிதர்களாகிய நாம் தந்தை, தாயை விட்டு எமக்கு வேறு உறவில்லை என்று நினைக்க வேண்டும். தந்தை தாய் பேண் எனும் வாக்கை சிந்தையில் நிறுத்தி ஒழுக வேண்டும். இந்த தலைசிறந்த ஒழுக்கத்தை மதிக்க வேண்டும். அவ்வாறு மதிக்காதவனின் வாழ்க்கை பழியெய்தி பாழ்பட்டுவிடும் என்பதைத் தெட்டத் தெளிவாகக் கூறலாம். ஆகவே தமிழ்கூறும் நல்லுலகத்தில் வாழ்கின்ற நாம் ஒவ்வொருவரும் தாய், தந்தையை மதித்து இந்தத் தரணியில் நற்பெயருடன் வாழ்வோம் என்பது எமது மனதில் பசுமரத்தாணிபோல் பதிய வேண்டும்.



# கல்வி வளர்ச்சியில் தொலைக்காட்சி

தே. உமையாளினி
யா/ அருணோதயக் கல்லூரி, வலிகாமம்.
கட்டுரை வரைதல் : பிரிவு – 3

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்பது பொய்யாமொழிப்புலவர் வள்ளுவப் பெருந்தகையின் பொன்வாக்காகும். ஆம் உண்மைதான். மானிடராகப் பிறந்த நாம் கற்க வேண்டிய அனைத்தையும் கற்றுக் கல்வியிலே மேன்மை நிலையை அடைய வேண்டும். மண்ணின் மைந்தர் நாம் விண்ணுலகிலே பயணம் செய்து தண்மதியிலே குதித்துவிட்டோம். இவற்றிற்கெல்லாம் காரணம்? விஞ்ஞானத்தின் அசுர வளர்ச்சியே என்பதை மறந்துவிடலாகாது.

அன்றைய காலகட்டத்தில் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்திருக்கவில்லை. மனிதன் "கிணற்றுத் தவளைபோல" தனது பிரதேசத்திற்குள்ளேயே முடங்கிக் கிடந்தான். பிற நாடுகளுடன் ஏன்! பிற பிரதேசங்களுடன் கூடத் தொடர்புகளை மேற்கொள்வதற்கு அன்று ஒன்றும் இருக்கவில்லை. ஆனால் இன்று பல ஊடகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. ஊடகங்களின் வரிசையிலே, கணினி, இணையம், தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வூடகங்கள் மனிதனது அறிவு வளர்ச்சிக்குப் பல வகையில் பங்கெடுக்கின்றன. எனினும் இவற்றிலே, "இமயத்தின் பெருமையை சிறுகல் செப்புமா?, எல்லையில்லா கல்வியினது வளர்ச்சியில் தொலைக்காட்சியின் பங்களிப்பு சொல்லிலே சிக்குமா? எனக் கூறுமளவுக்கு கல்வி வளர்ச்சியில் தொலைக்காட்சி முக்கிய பங்காற்றுகின்றது.

"முயற்சி திருவினையாக்கும்" என்ற கூற்றிற்கிணங்க தொடர் முயற்சியின் விளைவாக விஞ்ஞானி ஒருவரால் எமக்களிக்கப்பட்ட அருங்கொடையாகத் தொலைக்காட்சி விளங்குகின்றது. தொலைக் காட்சியில் எமது அறிவுக்கு விருந்தளிக்கும் வகையில் பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. அவற்றிலே, கல்விச்சுடர், உலக அதிசயங்கள், பொது அறிவுகள், சிந்தனைத் துளிகள், அறிவுக்கு விருந்து விஞ்ஞான விந்தைகள், விஞ்ஞானிகளின்மீது ஒரு பார்வை போன்ற தலைப்புகளினையே அடிப்படையாகக் கொண்டு ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் இன்றைய இளம் முத்துக்களின் அறிவுப் பசிக்கு உணவாகின்றது எனலாம். இவ்வாறு தொலைக் காட்சிகளிலே மாணவர்களின் கல்வியினை மேம்படுத்தும் வகையிலே விவாத மேடைகளும் இடம்பெறுவதுண்டு. இவை மட்டுமல்ல. இல்லை, இல்லை. உறங்கிக் கொண்டிருக்கும்

மனித மூளைகளைத் தட்டியெழுப்பி உற்சாகப்படுத்தும் இத் தொலைக்காட்சிகள், இவ்வாறான கல்வியினை மேம்படுத்தும் நிகழ்ச்சிகளை நடாத்துவதன்மூலம், மாணவர்களுக்குப் பல அனுகூலங்களை அள்ளி வழங்குகின்றன.

பாடசாலை ரீதியாக இடம்பெறும் தமிழ்த் தினப்போட்டிகள், ஆங்கில தினப் போட்டி கள், கணித, விஞ்ஞானப் போட்டிகள், விளையாட்டுப்போட்டிகள் போன்ற அனைத் திலும் மாணவர்கள் பங்குபற்றி வெற்றி மாலை சூடுவதற்காக தொலைக்காட்சியானது வழிவகுக்கின்றது என்றால் அது மிகையாகாது. கல்வி சம்பந்தமான பல போட்டிகளை நிகழ்த்தி பரிசு மழைகளை பொழியச் செய்வதற்கான நடவடிக்கைகளிலே இன்று தொலைக்காட்சிகள் காலடியெடுத்து வைத்திருக்கின்றனவென்றால் அது மிகை யாகாது.

தொலைக்காட்சியிலே இடம்பெறுகின்ற நாடகங்கள் மற்றும் படங்கள் அதாவது, திரைத்தொடர்கள் என்பவற்றில் "நெல்லோடு களையும் சேர்ந்துவருவதைப்போல்" நன்மை களுடன் சில தீமைகளும் கலந்தே இருக்கின் றன. இவற்றினைப் பார்ப்பதனூடாக எமக்குக் கற்பனையாற்றல் விருத்தியடையும், எம்மாலும் பல நாடகங்கள், திரைப்படங் களை எழுத முடியும். இவற்றினால் நாம் தலைசிறந்த எழுத்தாளர்களாக மாற முடியும் என்பது உண்மையாகும். நாடகங்கள், திரைப்படங்களிலே நடிகை, நடிகர்கள் இன்றைய சமுதாயத்தினரைப் பழுதுபடுத்தும் வகையிலும், சம்பிரதாயங்களைச் சீர்குலைக் கும் வகையிலும் ஆடை அணிந்தாலும், அவற்றை நாம் கவனத்திற்கொள்ளாது கல்வி சம்பந்தமான அறிவை மட்டும் தேர்ந் தெடுத்தல் எம்மை நல்வழிப்படுத்தும்.

எனவே "அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது" என்ற ஔவைப் பிராட்டியின் பொன் வாக்கிற்கிணங்க அரிதான இந்த மானிடப் பிறவியில் அவதரித்த நாம் "ஐந்து பணத்திற்கு குதிரையும் வேண்டும்; ஆறு கடக்கப் பாயவும் வேண்டும்" என்று பேரவா கொள்ளாமல், சிறந்த முறையிலே கல்வி கற்றுத் தொலைக்காட்சியினைத் தேவைக்குப் பயன்படுத்தி வாழ்விலே அனைத்து சுபீட்சங் களையும் பெற்று முன்னேறுவோமாக!



# அறிவுத் தேடலில் இணையம்

வா. ஜெயப்பிரசன்னா
யா / ஹாட்லிக் கல்லூரி, வடமராட்சி.
கட்டுரை வரைதல் : பிரிவு 4

காலங்கள் பல கடந்து இன்றொரு பொற்காலத்திலே வேகமாக வீறுநடை பயிலுபவனாக இன்றைய மிலேனிய யுகத்து மனிதன் மார்பு தட்டி எழுச்சியுடன் இயங்கிக் கொண்டிருக்கும் கணினியுகம் இது, என்று கூறினால் மிகையல்ல. விலங்குகளுடன் விலங்குகளாக தம்மையே யார் என்று தெரியாது தம்மை மறந்து நடை பயின்றது அந்த காலமாக இருந்தது. எனினும், இன்று மனிதன் நன்கு முன்னேற்றம் அடைந்து விட்டான். மாற்றங்கள் நிலையான மாறுகின்ற உலகினிலே மானிடனின் மாற்றத்தினை ஏற்றுக்கொண்டு காலநீரோட்டத்தில் கங்கு கரை தெரியாமல் துரித முன்னேற்றம் அடைந்து கொண்டுள்ளான்.

ஆம் இவற்றினைத் தன் வாழ்க்கையிலே அனுபவித்த கவிஞன் ஒருவன் அதனை பின்வருமாறு கூறுகின்றான்.

"ஆதி மனிதன் கல்லைக் கண்டான். அடுத்த மனிதன் காட்டை அழித்து நாட்டைக் காட்டினான். நேற்றைய மனிதன் வானிலே தனது தேரினை ஓட்டினான். இன்றைய மனிதன் நிலவினிலே தனக்கென தனியிடம் தேடுகின்றான் வரும் நாளைய மனிதன் ஈரேழு உலகங்களையும் அரசாளப் போகின்றான்...." என்று மிக அழகாக சமூகத்திலே விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும் ஏற்படுத்திய விந்தைமிகு மாற்றங்களினை மிகச் சிறப்பாகக் கூறிவிடுவதனை கண்கொண்டு நோக்க முடியும்.

மனிதகுல வரலாற்றிலே அவன் இயற்கையிடமிருந்து கற்றுக்கொண்டு விடயங்கள் இன்றியமையாதவையாகக் காணப்படுகின்றன. "சைகைகள் முறை, புகையூட்டல், கூக்குரலிடல் என தனது தொடர்பாடல் முறையினை ஆரம்பத்தில் வைத்திருந்த மனிதன் "மொழி" என்ற உன்னதமான ஓர் ஊடகத்தினைக் கண்டறிந்தமை வரலாற்றிலே குறிப்பிடத்தக்கதொரு மைல் கல்லாகவே அமைந்தமை ஈண்டு நோக்கத்தக்கது. இதன் பின்னர் "புவி தட்டையானது" என தம்மை மூட நம்பிக்கைகளில் மூழ்க வைத்திருந்த மனிதன் விஞ்ஞான விந்தையினால் பிரபஞ்சத்தின் மர்மங்களை மிக இலகுவான முறையிலே கண்டு கொண்டான். ஆம் "புவி கோளமானது" என்பதனை நிக்கலஸ் கொப்பர் நிகஸ்" என்ற விஞ்ஞானி ஆதாரங்களுடன் முன் வைத்தமை நாம் அனைவரும் அறிந்த விடயமேயாகும்.

இதனால் தான் பேரறிஞர் வினோபாவே அவர்கள், "விஞ்ஞானம், ஆத்தும ஞானம், இலக்கியம் என்ற முத்துறைகளின் கூட்டுறவினாலேயே மனித வாழ்வு முழுமை பெறுகின்றது." என்ற தத்துவக் கருத்து கூறினார்.

இவ்வாறு படிப்படியாக முன்னேற்றப்படிகளில் கால்வைத்து தனது வாழ்க்கையினை முன்னேற்றிய முற்போக்கு மனிதன் புவியினை விட்டு, வேற்றுக்கிரகம் மிகையாகாது. "நீல் ஆம்ஸ் ரோங்", யூரிகாரின் வலன்ரீனா தெரஸ்கோவா, கல்பனா செளலா, எட்வின் அல்ரின் ..." என மனித குல விஞ்ஞானத் தந்தைகள் நடை பயில வித்திட்ட மகான்கள் எனவே கூறலாம்.

ஆரம்பத்தில் வானொலி "மார்க்கோணி" அவர்களாலும் அதனை தொடர்ந்து தொலைக்காட்சி "ஜோன் லொயிக் போர்க்" அவர்களாலும், தொலைபேசி "அலெக்சாண்டர் கிரகம் பெல்" அவர்களாலும் கண்டறியப்பட்டமை மனிதன் தனது அறிவுத் தேடலை விருத்தி செய்யப் போதுமானதாக காணப்படவில்லை. இவற்றை எல்லாம் விஞ்சி நிற்கும் வகையிலே, "சாள்ஸ் பபேஜ்' அவர்களினால் "கணினி" என்ற அரிய கண்டுபிடிப்பு காலத்தினை வென்று ஞாலம் தனை ஆட்சி செய்யவெனத் தோன்றிய அற்புதப் படைப்பு அவற்றினுள்ளும் "இணையம்" என்ற இங்கிதமான ஈடு இணையற்ற படைப்பானது பூமி என்ற பரந்து விரிந்த பாரினை ஒரு என்ற "பூகோளக் கிராமமாக" மாற்றம் அடையச் செய்தது. சுருங்க வைத்துக் கொண்டது என்று கூறினால் மிகையல்ல.

வளர்ச்சியடைந்த இன்றைய சமுதாயம், இணையப் பயன்பாட்டின் பல்துறை தேவைகளிற்கும் தீர்வுகூறும் தேவையினைப் பூர்த்தி செய்கின்ற இன்றியமையாததாக மாற்றம் அடைந்து விட்டது. "கல்வித்துறை, பொறியியல்துறை, மருத்துவத் துறை, வியாபாரம், வர்த்தகம், கணக்கியல், யதார்த்த நடைமுறை செய்திகள், விடயங்கள்" என எந்தவொரு துறைக்கும் இன்றியமையாததாகிவிட்டது. விஞ்ஞானம் மேற்கொண்ட விந்தைகளில் சற்று வித்தியாசமானது என்றே கூற வேண்டும்.

இவற்றில் குறிப்பாக, கல்வித் துறையில் மாணவர்களாயினும் சரி எவருக்கும் அவரவரது தேவைகளினை "அறிவுத்தேடல்" என்ற கல்விப் பசியை நிவர்த்தி செய்து வைப்பதற்கு இன்றைய கால கட்டத்தில் ஈடு இணையற்ற மிக உன்னதமான சேவையை வழங்கி வருவதில் முதலிடம் பெறுகின்றது என்று கூறினால் மிகையாகாது.

கல்வி என்ற கங்கு கரையற்ற கடலில் தேடல் என்ற படகினை ஆழத்திலிருந்து உச்சிக்கு கொண்டு செல்வதற்கு இன்று இணையம் ஈடு இணையற்ற சேவையினை வழங்கி வருகின்றது. இணையங்களின் மூலம் மாணவர்கள் தமக்குத் தேவையான "நூல்களின் பக்கங்கள், மற்றும் வரைபடங்கள், தகவல்கள், அறிஞர்களது கருத்துக்கள், விரிவுரையாளர்களது உரைகள், மற்றும் ஏனைய விடயங்கள்" என எந்த ஒரு விடயத்தினையும் திரிபுற ஆணித்தரமாக அறிந்து கொள்வதற்கும் இணையம் இன்றியமையாத இணையற்ற சேவையினை வழங்குகின்றது.

இவற்றின் "கிளிங்ரொங்" என்ற அமெரிக்கா நாட்டு மென்பொருள் வல்லுநர் அவர்களது கண்டுபிடிப்பான "பொட்டல சேவை" யானது இவற்றிற்கு அதாவது அறிவுத் தேடலிற்கு உன்னத உறுதுணை புரிகின்றது. குறித்த அறிஞர் கூறுகையில் "அறிவுத் தேடலிற்கு இவ் அமைப்பானது மிக சிறந்து உறுதுணை புரியக்கூடியது" என்று கூறுகின்றார்.

இன்றைய கல்விச் சீர்திருத்த கல்வி முறைமையின் குறித்த ஒரு அங்கமாக "தேடிக் கற்றல்" என்ற விடயம் காணப்படுகின்றது. இதற்கு கணினி அறிவுள்ள மாணவனுக்கோ,

நபருக்கோ இணையம் இன்றியமையாத சேவையை வழங்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. அண்மையில் அமெரிக்காவில் ஒரு பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வுகளின் படி பின்வரும் முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன. "ஒரு குழந்தை மாணவன் தன் அறிவிற்கும், அதனை வளர்ச்சியடைய செய்வதற்கு மிக சிறந்ததும் கையாளுவதற்கு இலகுவானதாக இணையம் காணப்படுகிறது" என்று கூறப்பட்டுள்ளது.

உதாரணமாக, இலங்கையில் வசிக் கின்ற ஒரு நபர் குறித்த ஒரு துறை அல்லது விடயம் தொடர்பாக பல தரப்பட்ட விடயங் களையும் அறிய ஆவல் கொண்டுள்ளார். சற்று சில வருடங்களிற்கு முன் என்றால், அவர் தனது அறிவினை விருத்தி செய்வதற்கு தேவையான புத்தங்கள், மற்றும் இதர விடயங்களையும் பெற பல நாட்கள், மற்றும் பணம் என்பன அதிகளவில் தேவைப்படும். ஆனால், இணையத்தளத்தின் மூலம் மிகக் குறைவான பணச் செலவுடன் மிகவும் குறுகிய காலத்தில் வினைத்திறனா்ன முறையில் பெற்றுக் கொள்ள முடியும்" இங்கு அறிவுத் தேடலிற்கு இன்றைய காலத்தில் இணையத்தின் செல்வாக்கு, பயன்பாடு மற்றும் பங்களிப்பு என்பவற்றை அறிந்து கொள்ள முடியும்.

இவ்வாறு ஒரு பக்கம் கல்வி, அறிவு என்ற பயிருக்கு அதனை செழிக்கச் செய்ய பசளையிடும் இணையம் சிறப்பிற்குரியதே. எனினும், மறுபக்கம் அதனை எதிர்மறையாக நோக்குகின்ற சமுதாயம் சற்று பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்படுவது தவிர்க்க முடியாத தாகிவிடும் என்றே கூற வேண்டும். ஆம் இன்று நமது நாட்டில் கூட சமூகம் தடம் புரழ்வ தற்கான வாய்ப்பினையும் இணையத்தளங்கள் ஏற்படுத்தியே விடுகின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மையே.

"உலகிலே பல துன்பங்கள் இருக் கின்றன. ஆனால் அவற்றுக்கான தீர்வுகளும் இங்கே தான் காணப்படுகின்றன" என்று கூறுகிறது. அயர்லாந்து நாட்டினது பழமொழி. நிச்சயமாக இணையத்தால சமூகக் கட்டுக்கோப்பு சீர்குலைவு அடைவதற்கான வழிமுறைகளை தவிர்த்துக் கொள்ள முடியும். ஒருபுறம் இளஞ்சந்ததி அறிவுத்தேடலின் பயனை அனுபவிக்கின்ற போதிலும் கூட மறுபுறம் தீய வழியிலான, அறிவுத் தேடலும் இளஞ்சந்ததியிடம் நிலை பெற்று விடுமோ? என்ற எண்ணமும் எழத்தான் செய்கின்றது. ஒழுக்கம் குன்றிய சமுதாயம் உருவாகி விடுமோ? என்கிற அச்சம் எமக்குள் சற்று எட்டிப் பார்க்கின்றது.

"ஒழுக்கம் இலான் கண் உயர்வு இல்லை"
"ஒழுக்கத்தின் கண் உயர்வு"
"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"


என்றெல்லாம் பொய்யா மொழிப் புலவரது குறட்பாக்கள் இன்று அர்த்தம் பெறவே செய்கின்றன.

ஆம் உலகம் முன்னேறிவிட்டது. அறிவுப் பசி எம்மை ஆட்கொண்டுவிட்டது. விண்வெளியில் கூட வீறுநடை பயில மனிதன் காத்திருக்கும் விஞ்ஞானத்தின் விந்தையின் காலம் வெகுதூரமில்லை. இணையம் அறிவுத் தேடலிற்கு உரிய தீனி போடக் காத்திருக்கிறது.

"வழி நடக்க வருகவே - வளமை
கொள்ள வருகவே
பொழுது புலரும் வேளையாச்சு
போக வேணும் வருகவே...."

என்கின்றது கவிஞர் கே. சி. எஸ். அருணாசலம் அவர்களது கவிதை வரிகள்.

சமூகமே! இணையத்தினை சரியான வழியில் பயன்படுத்த முன்னேற்ற அறிவுத் தேடலை பூரணமாக்க இன்றே எழுவோம். நன்றே செய்வோம். இணைய பயன்பாட்டின் பூரண பயனை அனுபவிப்போம்.




# இயற்கையும் தொழில்நுட்ப வளர்ச்சியும்

அ. டினுஜான்சி
மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, முல்லைத்தீவு.
தமிழியற் கட்டுரை வரைதல் : பிரிவு – 5

நவீனத்துவ வளர்ச்சியின் புரட்சிப் பின்னணியில் பல துறைகளுமே சங்கமித்து நிற்பதோடு உலகாயுத சிந்தனைத் திறனடிப்படையில் பூகோள மயமாக்கலும் மனிதனை ஆட்சிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. தொழினுட்ப வளர்ச்சியின் உயர் செயற் பாட்டுத்தள விரிவாக்கத்தின் தொடரியல் பணியின் பிரதிபலனால்; வேட்டுப் பரம்பரை இன்று செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வுக்காய்ப் புறப்பட்டுவிட்டது. பொருளாதாரச் சந்தையும், அரசியல் பின்னணியும், மாநாடுகளும், கல்வி, மருத்துவம், ஆய்வு சட்டம், பல்லூடகப் பயன்பாடு என இன்னோரன்ன செயற்பாட்டு அம்சங்களில் செவ்வனே தன் பணியை அளித்து இன்று விண்வெளியிலேயே கேளிக்கைகளையும், உபசார அறைகளையும் அமைக்குமளவிற்கு வளர்ச்சிப் படியேறி நிற்கிறது என்றால் இது இருப்பத்தியோராம் நூற்றாண்டின் வரம் என்றுதான் விழிக்க வேண்டும். எந்த ஒரு விடயத்தைப் பொதுவாக எடுத்து நோக்கினும் "அனுகூலம் ஒன்று இருந்தால் பிரதி சடலங்கள் பல மடங்காக இருக்கும்" என்பது படித்தவர் முதல் பாமரர்வரை உணரப்பட்ட வாழ்வியல் அம்சம். இதன் பொருளும், கூடிய விளைவுகளும் தொழில்நுட்ப புரட்சியின் இயற்கைக்கு மாறான அணுகுமுறையால் விளைந்துள்ள அனர்த்தங்களின் கோர வடுக்கள் பறைசாற்றி நிற்கின்றன.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், பல விதங்களில் மனிதனை முன்னேற்றினால் ஒரு விதத்தில் "இயற்கையை வெல்ல மனிதன் முற்படுகின்றானோ?" எனும் கேள்வி பொதுவாகவே எழுகின்றது. சுனாமித் தாக்கம், தொடர் நடுக்கங்கள், கடல் நீர்மட்ட உயர்வு, வெப்ப அதிகரிப்பு என்பன இதையே சுட்டி நின்று பாடம் கற்க நம்மைத் தூண்டுகின்றன. அண்மையில் யப்பானில் ஏற்பட்ட புவிநடுக்க சுனாமியனர்த்தத் தாண்டவத்தால் 35000 மக்களுக்கு மேல் கொல்லப்பட்டும், இரண்டாம் உலக யுத்தத்தால் மரணித்து மனித வலுவால் உயிர்பெற்ற நாடு வரலாறு காணாத அழிவு எதிர்கொண்டது மனம்கொள்ளத்தக்க விடயமாகும்.

கடற்கோளின் தாக்கத்தை காட்டிலும் "பொக்கிஷாமா" அணு உலை வெடிப்பின் நேரடித் தாக்கமும் நீண்டகாலத் தாக்கமும் மனிதனின் உளத்திடனையும் புரட்டிப் போட்டு விட்டது எனலாம். "டிமோகிறட்டிஸ்" என்பவரினால் பல நோக்கோடு கண்டுபிடிக்கப்பட்ட அணு

இன்று இயற்கையோடு முரண்பட்டு துண்டாடப்பட்டிருக்கிறது என்றால் மிகையா காது. மண்துகள் தொடக்கம் அயல் நாடுகள் வரை அணுகசிவின் தாக்கத்தால் மிரண்டு போன சம்பவம் நினைவிருத்தி மாற்றுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயத்தை வல்லரசுகளுக்கு கட்டியம்கூறி நிற்கிறது.

2004ஆம் ஆண்டுச் சுனாமியின் பின் இலங்கையும் அதையண்டிய நாடுகளும் இயற்கையின் சீற்றத்தை உணர்ந்திருப்பினும் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு அவுஸ்ரேலியாவையும் இணைத்து மீண்டும் இலங்கைக்கு பாடம்புகட்டியது. இதைவிட அண்மையில் சென்னையில் வீசிய "அனல் காற்று" இன்னொரு எடுகோளாகும். அமெரிக்காவை அடிக்கடி கையறு நிலைக்குக் கொணரும் "டொனனடோ சூறாவளி" தன் தாக்கத்தை பல ஆண்டுகளுக்கு முன் மட்டக் களப்பிலும் காட்டியதை மறக்க முடியாது.

உயிர்ப்பு எரிமலைகளையும், உறங்கு நிலை எரிமலைகளையும் இந்த உலகம் தாங்கி நிற்கின்றது. அந்த வகையில் நிலத்தடியில் மேற்கொள்ளப்படும் ஆழமான அத்தி வாரங்கள் முதல் நீர்க்கம்பிகள், சுரங்கரயில் கள், நிலக்கரி அகழ்வு என்பவற்றால் பல் லாண்டு காலப்பாதிப்பை எதிர் கொண்டது மல்லாமல் அணுக்கண்டுப் பரிசோதனைக ளால் பாறைகளும் பிளவுற்று நீண்ட காலப் பாதிப்பின் எதிரொலியாய் "ஐஸ்லாந்தில் உறங்குநிலை எரிமலையாகவிருந்த "இயப் யாலோ யோகுல்" தீப்பிளம்புகளைக் கக்கி விமான சேவைகளையே மேற்கொள்ள முடியாத நிலைக்கு இட்டுச் சென்றமை யாவருமறிந்த நிதர்சன உண்மையாகும். இச்சம்பவங்களால் உணரக்கூடிய ஒரே விடயம் "இயற்கை யோடிணைந்த தொழினுட்ப புரட்சிக்கு மனிதன் தன்னை உட்படுத்தவேண்டும் என்பதாகும்".

"கி.பி 1500 தொடக்கம் பசுபிக் வலயத்தினை எரிமலை வலயம், நெருப்பு வலயம் எனும் சொல்லாடல்களால் அழைக்கப்பட காரணம் இங்கு பல உயிர்ப்பு எரிமலைகள் இயங்கு நிலையில் உள்ளமை யேயாகும். மனிதன் தன்னுடைய ஆதிக்கத்தை தொழில்நுட்பம் மீது செலுத்தி அதைப்பகடைக்காயாக்கி மேலும் செயற்படு வானாயில் இயற்கையின் சீற்றத்தால் அழிவுப் பாதைக்குள் சென்று எரிமலைகளின் வாய்க் குள் அகப்படுவான் என்பது ஆய்வாளர்களின் நேரடிக் கருத்தாகும்.

சமநிலை மாற்றத்தினால் புவியீர்ப்பு காந்த விசையில் தாக்கம் உணரப் பட்டமையின் விளைவாக அமெரிக்காவில் பல்லாயிரக்கணக்கான பறவைகள் இறந் துள்ளன. கடல்நீரில் ஒட்சிசனின் அறியப் பட்ட அளவைவிட குறைவாக உள்ளதால் பல லட்சம் மீன்களும் இறந்துள்ளன. "மியன்மார் தொடக்கம் ஆப்கானிஸ்தான்" வரையுள்ள பனிப்பாறைகள் மிக வேகமாக உருகி வருவதாக அண்மைய ஆய்வுகள் கூறுகின்றன. இதற்கான பிரதான காரணம் வெப்ப அதிகரிப்பு என்பது பரவலான கருத்தாகும்.

அண்மையில் இயற்கையின் புனிதத்தை உணர வைப்பதாகவும் தொழில்நுட்ப தாக் கத்தை உணர்த்துவதற்காகவும் மாலைதீவில் பிரதான மாநாடு ஒன்று கடலுக்கடியில்

நடத்தப்பட்டது. இதைவிட நேபாள அரசு முக்கியமான கலந்துரையாடல் ஒன்றை மலையுச்சியில் நடத்தியது. இப்படியான விழிப்புணர்வுகள் ஒருபுறம் இருந்தாலும் மறுபுறம் தம்முடைய நவீனத்துவத்தைக் கைவிடுவதில்லை என வல்லரசுகள் கங்கணம் கட்டத்தான் செய்கின்றன. குறுகிய கால ஆய்வினடிப் படையில் சமுத்திர நீர் அதிகரிப்பினால் மாலைதீவும், பிரித்தானியாவும் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள தாகத் தெரிய வருகின்றது.

வெப்ப அதிகரிப்பு ஏற்பட்ட பிரதான காரணம் "ஓசோன் படையிலுள்ள துவாரமாகும்" இது 1980 காலப்பகுதியில் கண்டறியப்பட்டது. எனினும் இதற்குப் பிரதான காரணமாக இருக்கின்ற "நைதரசன், புளோரோ, குளோறோ" வாயுக்கள் இன்னும் அதிகரித்த வண்ணமே உள்ளன. இதன் காரணமாகப் புற ஊதாக் கதிர்களின் தாக்கத்தால் தோல்நோய்கள் உட்பட புற்று நோய்களுக்கான வாய்ப்பும், பிரச்சினையும் இன்றுவரை தொடர்ந்த வண்ணமே உள்ளன. இன்றைய காலகட்டத்தில் 1.5 டிகிரியில் இருந்து 3 டிகிரி அதிகரிப்பை வெப்பம் கொண்டுள்ளது. காபனீரொட்சைட், மீதென், நைதரசன், புளோரோ குளோரோ காபன்களின் ஒட்டுமொத்தத் தாக்கத்தின் விளைவினால் அமிலமழை பொழிகின்றது. இதனால் விளைநிலங்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன.

அண்மையில் நச்சுநீர் வெளியேற்றத்தினால் காலிப்பகுதியில் கடல்நீர் கறுப்பு நிறமாக மாறியது யாவருமறிந்த விடயமாகும். இதைவிட பெருகிவரும் இலத்திரனியல் கழிவுகளினால் மண்ணின் தன்மை பாதிக்கப்பட்டு தாவர வளர்ச்சிக்குக்கூட இடம்தராத நிலை கவலைக்கிடமாகும். கூடுதலாக வளர்முகநாடுகள் இலத்திரனியல் கழிவுகளின் தொட்டியாக மாறிவருகின்றது. இதனைத் தடுக்க சம்பந்தப்பட்ட அரசுகளின் ஒப்புதலடிப்படையில் "பேசல் ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டது. எனினும் சீரான நடைமுறைக்கேற்ற வகையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவில்லை. நச்சுவாயுக் குறைப்பு சம்பந்தமாக 160 நாடுகள் பங்கேற்ற மாநாடு நடத்தப்பட்டது. "கியோட்டோ மாநாடு" எனினும் இதன் தீர்மானப்படி ஒவ்வொரு நாடும் 5% நச்சு வாயுக் குறைப்பினை ஏற்றுக்கொண்டன. நடைமுறைக்கு ஒவ்வாத முறையில் இருப்பதாக சில நாட்கள் குற்றம் சாட்டினாலும் நிறைவேற்றப் பட்டதற்கான ஆதாரம் இன்றுவரை இல்லை.

இலங்கையில் "சூழற்சட்டம்" 1980 இல் கொண்டுவரப்பட்டது ஓரளவிற்குப் பயன் பட்டது என்பது உண்மைதான். எனினும் சீரான முன்னேற்றம் இன்றுவரை இல்லை. மனிதன் இயற்கைத் தாவரங்களை அழித்து, தன்னுடைய பொருளாதார முன்னேற்றத்திற் காய்ப் பயன்படுத்துகிறான். அனல் மின்நிலையங்கள், கைத்தொழில்கள், பெற்றோல் கிணறுகள், பாரிய கட்டடங்கள் என தன்னுடைய முன்னேற்றத்திற்காய்த் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக் காடுகளை அழிப்பதனால் காபனீரொட்சைட்டின் அளவு அதிகரிப்பதோடு, ஒட்சிசனின் மட்டம் குறைவடைகின்றது என்பது ஏற்கப்பட்ட உண்மையாகும். தற்போதைய ஆய்வின்படி கூடுதலாக இலத்தீன் அமெரிக்காவும், தென்கிழக்காசியநாடுகளுமே ஈடுபடுவதாகத்

தெரிய வருகின்றது. தென்னாபிரிக்காவில் வருடம் ஒன்றிற்கு 24% காடுகள் அழிக்கப்படு கின்றன. தொழில்நுட்பத்தை விருத்தியாக்க காட்டையழிப்பது முட்டாள்தனம் என்பது அண்மைய மண் சரிவுகள், நிலத்தடிநீர் இன்மை என்பவற்றால் உணர முடிகிறது.

"இயற்கை மனிதனின் நண்பன்" என்பார்கள். தொழில்நுட்ப புரட்சியின் நாகரிகக் கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது. பொருளாதாரத் தள முன்னேற்ற மும், உலக சந்தையும் நாடுகளின் முன்னேற் றத்தைத் தீர்மானிக்கின்றன என்பதற்காக இயற்கையை அழித்து அதைச் சுரண்டித் தான் முன்னேற வேண்டும் என முனைந்தால் அழிவுதான் முடிவாக இருக்கும். இயற்கையை நேசித்து, ஒன்றித்து அதோடு இணைந்ததான தொழில்நுட்பங்களை உருவாக்க முனைந்தால் அழிவு தடுக்கப்பட்டுப் பசுமையான வாழ்வை எதிர்நோக்கலாம்.



# என்னை என்றேனும் மன்னிப்பாயா....

மு. கயல்விழி,
கிளி / கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி.
சிறுகதை ஆக்கம் : பிரிவு -04.

என்னங்க..... என்னங்க ........ இஞ்ச பாருங்க ...... நாளைக்கு ஊருக்குட் போகவேணுமெல்லோ? நீங்க..... என்னன்டா பிடிச்சு வச்ச பிள்ளையார் சிலை மாதிரி ...... ஒரே இடத்திலேயே இருக்கிறியள். "என்னங்க ........ நான் பாட்டுக்கு பேசிட்டு இருக்கிறன். நீங்க ஒண்டுமே சொல்லாம இருக்கிறீங்க"? "ஏன் உடம்பேதும் சரியில்லையா ?.... என்று தன் அன்பு மொழிகளை என் மீதுள்ள கரிசனையால் மனைவி கேட்டாள். கேட்ட மாத்திரத்திலேயே "என்னங்க.......... தலைவலிக்குதா...... நான் அதிகமா கதைச் சிட்டனா .... என்னை ...... மன்னிச்சிடுங்க" என்று படபடத்தாள். இல்ல மது ... உங்கள்ள ஒரு பிழையும் இல்ல. இரண்டு ..... நாளா உடம்பு ..... ஒரு மாதிரியா ........ இருக்கு அதான் என்றேன். "என்மேல் ..... கோபம்..... இல்ல தானே? ..... நீங்க ரெஸ்ட் ..... எடுத்துக்குங்க .... நான் மற்ற வேலைகளை பார்க்கிறன் என்று கூறிவிட்டு மது அவ்விடத்தை விட்டு அகன்றாள். ஆனாலும் ஆனந்த் மதுவிடம் சொன்னது பொய். ஊரிற்குப் போறதை நினைத்துத் தான் குழம்பியிருந்தான். ஊரைப் பற்றி யோசித்த உடனேயே அவன் ஏக்கம் கலந்த விழிகளில் பழைய நினைவுகள் புரண்டோடின.

ஊரைச்சுற்றி கங்காதேவி பாய்ந் தோடி அழகு சேர்க்க நொச்சி மரத்திலே கிளிகள் கூட்டாக அமர்ந்து கீதம் இசைக்கும் பூமியாம் கிளிநொச்சிப் பதியிலேயுள்ள ஆனந்தபுரம் எனும் சிற்றூரிலே வாழ்ந்த கண்ணம்மா - சிவப்பிரகாசம் தம்பதியரின் தவப்புதல்வன் தான் ஆனந்த். ஆனந்த்தை பார்ப்பவர்கள் எல்லோரும் "ஆளுக்கேற்ற பெயர்" என்று தான் கூறுவார்கள். ஆனந்த் சிறு வயதிலிருந்தே குறும்புத்தனமானவன் பெயருகேற்றபடி ஆனந்தமானவன். பாட சாலையிலே ஆனந்த் என்றால் எல்லா ஆசிரியர்களிற்கும் கொள்ளைப்பிரியம். அவ்வளவிற்கு நல்ல கெட்டிக்காரன். தரம் ஐந்து புலமைப்பரீட்சையில் சித்தியடைந் ததால் அவனது பெற்றோர் யாழ்ப்பாணத்தில் உள்ள பெரிய பாடசாலையில் சேர்ப்பித்தனர். அவன் அங்கு சென்று படித்தான். அங்கும் அவன்தான் பாடசாலையில் முதலாவதாக வருவான். அன்றும் அப்படித்தான் அவன் மாகாண மட்ட போட்டிக்கு சென்றிருந்தான். மாகாண மட்ட போட்டியாகையால் அவனது பிரிவில் வலயத்திலிருந்து அவன் மட்டும் தான் வந்திருந்தான். தெரிந்த முகங்களாக எவரும் இல்லை. எனவே அவன் ஏக்கத்துடன் போவோர் வருவோரைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது ஒரு பெண் அவனருகில் வந்து "நீங்களும் ........... இலக்கணப் போட்டிக்கா ....... வந்தனிங்கள். ஒருக்கா ..... உங்கட புத்தகத்தை ...... தாறிங்களா ?.......... என்று அமைதியாகக் கேட்டாள். அவளது

பணிவான குரலே பிடித்திட ஆனந்த் புத்தகத்தை கொடுத்தான். "தாங்ஸ் ..... அண்ணா ........ உங்களிற்கு போட்டி ....... தொடங்கிறதிற்குள்ள .... தாறன்." என்று கூறிவிட்டுச் சென்றாள். ஆனால் அவள் சென்று சிறிது நேரத்திலேயே ஆனந்தின் போட்டி ஆரம்பமாகிவிட்டது. ஆனந்தும் கொண்டு வந்து தருவார் தானே என்ற நம்பிக்கையுடன் பரீட்சை எழுதச் சென்றான். பரீட்சை எழுதி முடித்து விட்டு வந்து பார்த்தாலும் அந்த பெண்ணை காணவில்லை. சுற்றும் முற்றம் பார்த்தான். தூரத்திலே அவள் போவதைக் கண்டான். ஓடிச் சென்று அவர்களருகில் சென்று "எக்ஸ்கியூஸ்"....... என்னுடைய ...... புத்தகத்தை ... தருவீர்களா ..... என்றான்.

உடனே புத்தகம் வாங்கிய அந்தப் பெண் திரும்பி "சொறி.... அண்ணா .... என்னை... மன்னிச்சிடுங்கோ"...... என்று விட்டுத் தன் புத்தகப்பையிலிருந்த புத்தகத்தை எடுத்து ஆனந்திடம் தந்தாள். அதற்குள் அவள் நண்பி "என்னடீ .... சொறி எல்லாம் கேக்கிறா .... இவர் பெரிய மன்மதன் .... மன்னிப்பெல்லாம் கேட்க .... கேவலம் ஒரு புத்தகத்திற்காக திரத்தி .... வந்து வாங்கிறான்.... இவனிட்ட போய் ...... மன்னிப்பெல்லாம் கேட்கிறா" என்று அவள் நண்பியை அதட்டிவிட்டு ஆனந்தைப் பார்த்து நக்கலாக சிரித்துவிட்டு அவள் நண்பியை இழுத்துக் கொண்டு சென்றாள். ஆனந்திற்கு ஒரு மாதிரியாகப் போய்விட்டது. அவன் தன்னுடைய புத்தகம் என்றாள் பேசாம விட்டிருப்பான். ஆனால் அப்படியில்லையே அது அவன் நண்பனுடைய புத்தகமாயிற்றே. அவனிற்கு அந்த நக்கலாக சிரித்த பெண்ணை நினைக்க கோபம்... கோபமா வந்தது. அவன் மனம் கோபத்தால் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. அவன் கெட்டிக்கார னாகையால் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

போட்டி முடிவுகள் வெளியாகின. அவன் முதலாமிடத்தைப் பெற்றிருந்தான். அவன் அந்த வெற்றிக் களிப்பில் அப்பொழுது அந்த விடயத்தை மறந்துவிட்டான். சந்தோஷத்தோடு தான் தங்கியிருந்த மாமா வீட்டிற்குச் சென்றான். மாமாவிடம் கூற அவரும் அவனது சந்தோசத்தைப் பகிர்ந்து கொண்டார். மறுநாள் பாடசாலையில் அவனிற்கு ஏகப்பட்ட பாராட்டுக்கள், புகழாரங்கள். அதிபர் "நாளை பாடசாலைக்கு பெருமை சேர்த்து தந்த மாணவனிற்கு பாராட்டு விழா" என்று அறிவித்தார். அவனும் சந்தோஷத்தோடு வீடு திரும்பினான்.

மறு நாட்காலை அழகாக விடிந்திருந்தது "ஆனந்த் ..... ஆனந்த் .... எழும்பப்பா..." என்று மாமியின் குரல் கேட்டு எழுந்து, பல்துலக்கி, குளித்துவிட்டு பாடசாலைக்கு தயாராக ஆயத்தமானான். ஆயத்தமாகிக் கொண்டிருக்கையில் மாமி வந்து "அப்பன் ஆனந்த் .... இன்டைக்கு ..... என்னோட ...... பக்கத்து வீட்ட குடிபூரல் வாறியேனை" என்று கேட்டார். "யாரு ...... மாமி ..... யார் வீட்ட குடிபூரல் ?" என்றான் ஆனந்த். அதற்கு மாமி "யாரோ .... சயன்ஸ் சேராம் ..... மன்னாரிலிருந்து இடமாற்றம் கிடைச்சிருக்காம். வரச் சொல்லி வந்து சொல்லிவிட்டு போனவையள்" என்றார். "இல்லை மாமி ...... பள்ளிக்கூடத்தில இண்டைக்கு ...... எனக்கு பாராட்டு விழா ...... கட்டாயம் நான் போகவேணும் ......." என்று கூறிவிட்டு ஆயத்தமானான். பாராட்டு விழா மிகச்சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

ஒரு நாள் ஆனந்த் பாடசாலைக்கு ஆயத்தமாகி சைக்கிள்ள பாடசாலைக்கு சென்று கொண்டிருந்தான். "ஆ.... அது..... அவளே தான் .... முறையா மாட்டீற்றா ....... அந்த போட்டியில பார்த்த அதே பெண். இண்டைக்கு .... நல்ல பேச்சு குடுக்க வேணும்.

என்ன மாதிரி நக்கலடிச்சவா என்று கறுவியபடி அந்தப் பெண்ணின் அருகில் சென்றான்.

அவள் அவனைப் பார்த்துப் "அண்ணா .... பக்கத்தில ... சைக்கிள் கடையேதும் இருக்கோ ?" என்று கவலையாகக் கேட்டாள். அவள் கேட்ட விதத்தைப் பார்த்ததுமே ஆனந்தின் கோபம் மறைந்து போய் விட்டிருந்தது. "இல்லை ..... சைக்கிள் கடை பக்கத்து றோட்டில தான் இருக்கு"..... "ஏன் ஏதும் பிரச்சினையா? என்றான். ஓம் .... அண்ணா ..... செயின் ...... களண்டிட்டுது.... அதான். அவளும் பாடசாலை சீருடையுடன் நின்றதால் சரி ... தாங்கோ ... பூட்டித் தாறன். என்று பூட்டிக் கொடுத்தான். அவள் தாங்ஸ் என்றாள். பிறகு இருவரும் சேர்ந்து கைக்கிளில் புறப்பட்டனர். இருவரிற்குள்ளும் ஒரு சின்ன அறிமுகம். ஆம் அவள் பெயர் நிஷா அவனது பாடசாலையை தாண்டியே அவளும் செல்ல வேண்டியிருந்ததனால் இருவரும் ஒன்றாக சேர்ந்தே செல்லத் தொடங்கினர்.

நாட்கள் சென்றன. ஒரு நாள் நிஷா வராவிட்டாலும் ஆனந்திற்கு ஒரே கவலையாகிவிடும். ஆனந்திற்கு இன்னும் சில மாதங்களில் உயர்தரப் பரீட்சை, அவன் மருத்துவப் பிரிவு என்பதால் அவனை டொக்டர் என்றே அழைப்பர். இரண்டு நாட்களாக நிஷா பாடசாலை வராததால் அவளுடைய தோழியொருவரிடம் விசாரித்தான். அவளிற்கு காய்ச்சல் என்பது தெரியவந்தது. அவனிற்கே காய்ச்சல் வந்தது போல அவன் துவண்டே போய் விட்டான். அப்பொழுதுதான் அவன் மனதில் தோன்றியது. " எனக்கு ..... நிஷா ..... மேல் ... இருப்பது காதல் என்று". தன்னிடம் ஏற்பட்ட மாற்றம் அவளிடம் ஏற்பட்டிருக்கின்றதா என அறிய விரும்பினான். ஆனால் சிறு தயக்கம் காலமகள் கவலையின்றி ஓடிக் கொண்டிருந்தாள். அவனது பரீட்சையும் ஆரம்பமாகியது. அவன் சிறப்பாக முழுக் கவனத்துடனும் பரீட்சையை எழுதினான். சில மாதங்களின் பின் பரீட்சை முடிவுகள் வெளியாகின. அவன் மருத்துவ பீடத்திற்கு தெரிவாகி இருந்தான். அவன் வீட்டிலும், மாமாவிற்கும் ஒரே சந்தோஷம். ஆனால் அவன் மட்டும் கவலையாக மரத்தின் கீழ் யோசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது குளிர்காற்று வீசியது. இதனால் குளிர்ந்த அவன் மனமும் "இன்று .... எப்படியாவது ...... சொல்ல வேண்டும் என்ற முடிவுடன் சைக்கிளை எடுத்தபடி நிஷா வீட்டை நோக்கி சென்று கொண்டிருந்தான். அப்போது நிஷா ஒரு வேப்பமரத்தடியில் நிற்பது தெரிந்தது. அவளருகில் சென்றான். அவள் சத்தம் கேட்டு திரும்பினாள். திரும்பியவள் விழிகளில் நீர். தன்னைப் போன்ற உணர்வு அவளிடமிருப்பதை அறிந்தான். தன் காதலை தெரியப்படுத்தினான். "பூரண நிலவு போல அவள் முகம் சட்டென பிரகாசமாகியது அவள் முகத்தில் கபடமற்ற சிரிப்பு" இருவரும் சிறிது நேரம் உரையாடினார். காதல் எனும் வானிலே இருவரும் இப்போது பட்டாம்பூச்சிகளாய் பறந்தனர்.

ஆனந்த் பல்கலைக்கழகம் செல்ல வேண்டிய நாள் வந்தது. நிஷா தன் ஞாபகமாக ஒரு பொம்மையை ஆனந்திற்கு கொடுத்தாள். "எனக்காக காத்திரு .... நாம் மீண்டும் சந்திப்போம்". என்று கூறிவிட்டு கண்டி செல்லும் பேருந்தில் ஆனந்த் ஏறினான். இருவரது காதலும் தொலைபேசி மூலமாகவும், கடிதம் மூலமாகவும் "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமு மாகவும்" வளர்ந்தது. ஆனந்த் அவளது கற்றலிற்கு தேவையான புத்தகங்கள், ரியூட்ஸ் என்பவற்றை வாங்கி அனுப்பி அவளும் கல்வி கற்க வழிவகை செய்தான். அவளும் கற்று

தேசிய கல்வியற் கல்லூரி சென்று 3 ஆண்டு கல்வியை நிறைவு செய்து கிளிநொச்சியில் ஆசிரியராக நியமனம் பெற்றாள். இவர்கள் காதலும் வளர்ந்துகொண்டேயிருந்தது.

யார் கண்ணூறு பட்டதோ தெரியவில்லை. "போர்" எனும் கொடிய அரக்கன் கிளிநொச்சி மண்ணை ஆட்கொண்டான். அதன் பின் ஆனந்தினதும், நிஷாவினதும் தொடர்பு துண்டிக்கப்பட்டது. ஆனந்த் துடித்துப் போனான். ஆனாலும் அவள் காத்திருப்பாள். என்ற நம்பிக்கையில் படிப்பை நிறைவு செய்தான். போர் ஓய்ந்தது பாதுகாப்பாக மீட்கப்பட்டு புனர்வாழ்வளிக்கப்பட்டனர். ஆனந்தும் முகாம்களிற்கு சென்று நிஷாவைத் தேடினான். ஆனால் அவனிற்கு கிடைத்த ஒரே பதில் " வீட்டு வாசலில் உள்ளே வந்தவா அப்பதான் கண்டனாங்கள்... அதுக்குப் பிறகு காணேல" என்றனர்.

ஆனாலும் ஆனந்த் தன் நம்பிக்கையை இழக்கவில்லை. காத்திருந் தான். பெற்றோரின் வற்புறுத்தல்கள் தொடர்ந்தன. எவ்வளவு நாளைக்குத் தான் "இலவு காத்த கிளி போல இருக்கப் போற.. எங்களிற்கும் .... பேரப்பிள்ளையை ..... பார்க்க ஆசையில்லையோ....." என்றனர்.

பெற்றோரின் வற்புறுத்தலால் மதுவைத் திருமணம் செய்தான். திருமணத் தினால் மது என்ற உறவு அவனிற்கு ஏற்பட்டது. அவர்களின் இல்லறத்தின் சாட்சியாக மகள் பிறந்தாள். ஆனந்த் நிஷாவின் நினைவாக "நிஷாந்தி" எனப் பெயர் வைத்தான். மதுவும் ஒரு வைத்தியராகையால் இருவரும் மேல் படிப்பிற்காக லண்டன் பயணமாகினார். லண்டனில் வசிக்க ஆரம்பமாகி இப்போது 2 வருடங்களா கின்றன. இப்போது தான் ஊரிற்கு திரும்புகிறார்கள்.

"அப்பா .... அப்பா .... எழும்புப்பா ...." என்று மழலை மொழி கேட்டு பழைய நினைவிலிருந்து மீண்டான். "அப்பா நாளைக்கு போகணுமில்ல.... வாங்க...." எனக் கூற எழுந்தான். மறுநாள் பின் மதியநேரம் இலங்கையை வந்தடைந்தான். பின் ஒரு வானை வாடகைக்கு பிடித்து ஊரிற்கு பயணமாகினார். மனைவி மது குழந்தைக்கு இது இன்ன இடம் என அறிமுகம் செய்து வந்தாள். ஆனால் ஆனந்திற்கு மனம் எதிலுமே பதிய மறுத்தது. நிஷாவைப் பற்றிய சிந்தனைகள். "அவள் இருக்கிறாளா.... இல்லையா..." போன்ற பல கேள்விகள். அவன் இவ்வாறு எண்ணியபடியே அயர்ந்து போனான். "என்னங்க... எழும்புங்க...." என்ற மனைவியின் குரல் கேட்டு எழுந்தான். ஆம் அவன் வீடு வந்து விட்டிருந்தது.

மறு நாட் காலை சுற்றுலாப் பயணிகளை கவர்ந்த இடம் என அவர்களை மாமா அழைத்துச் சென்றார். கவர்ந்த இடம் என அவர்களை மாமா அழைத்து சென்றார். ஆம் அது அந்த வேப்பமரம் நிஷாவை சந்தித்த இடம். அவன் அப்படியே அதிலேயே லயித்துப் போனான். பின் குழந்தை அழும் சத்தம் கேட்டு குழந்தைக்கு ஐஸ்கிறீம் வாங்கிப் கொடுக்கும்படி மனைவியை பணித்துவிட்டு அம்மரத்தின் கீழ் போடப்பட்டிருந்த கல் பெஞ்சில் அமர்ந்தான்.

அது... ஆம் ... அது அதில வாறது நிஷா தான். பாடசாலை மாணவர்கள் சுற்றுலா வந்திருந்ததை அவன் அப்போதே அறிந்திருந்தான். ஆனால் நிஷா வருவாள் என சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவன் அவளை அடையாளம் கண்டது போல அவளும்

அடையாளம் கண்டாள். அவளிற்கு ஒரு கால் இல்லை. ஊன்று கோலுடன் சென்று கொண்டிருந்தாள். அதற்கு மது அவனருகில் வந்து விட்டாள். நிஷா அவனைப் பார்த்தபடியே சென்றாள். ஆம் அவன் கூறியபடியே அவள் காத்திருக்கிறாள். என்பதனை அவள் நெற்றியிலிருந்த பொட்டு சான்று கூறியது. ஆனால் அவன் ஆனந்த் " என்னை ... என்றேனும் ... மன்னிப்பாயா.... என்ற ஏக்கம் கலந்த பார்வையுடன் அவளைப் பார்த்தான். ஆனால் அவளோ எதுவுமே கூறாது அமைதியாக சென்றாள். அவனது ஏக்கத்திற்கு பதில் கூறாமலேயே.

(முற்றும்)

(யாவும் கற்பனை)

# மனித மனங்கள்

சி. ரதிதேவி
வ / நெடுங்கேணி ம. வி, வவுனியா வடக்கு.
சிறுகதை ஆக்கம் : பிரிவு -05.

என்றும் போலவே அன்றும் கதிரவன் தனது கடமைகளிற் கண்ணாயிருந்தான். அவனது வரவிற்காகக் குயிலினங்கள் கூவிற்று. சேவல்களும் முரசு கொட்டிப் பகலவனைப் போற்றியது. பாவியரின் உள்ளம்போல கங்குலும் மறைந்துகொள்ள தேவர்களுள் தேவனான ஞாயிறோன் தேரில் வருகிறான். இரவு விடிந்துவிட்டது. பொழுதுபுலர்ந்து விட்டது என வரவேற்போர் பலர். பொழுது விடிந்துவிட்டதே என அதை வெறுப்போர் பலர். அப்படியானால் இவ்விரண்டிலும் இவன் எந்த ரகம்?

தென்றல் ஏழை, பணக்காரன் என்று பேதம் பிரித்து வீசுவதில்லை என்று படித்திருக்கிறேன். இவன் வாழ்வில் மட்டுமேன் வசந்தத் தென்றல் வீச மறுக்கிறது? இலையுதிர்காலம் கழிந்தால் வசந்தகாலம் மலரும். சிலரது வாழ்வில் இலையுதிர் காலமே தொடருவதேன். அனைவருக்கும் வலது கையால் வரலாற்றை எழுதும் இறைவன் இவனுக்கு மட்டும் இடது கையால் வரைந்து விட்டான் போலும். அது எப்படி? தமிழ் மொழி எழுதுவதைப் போன்று இடமிருந்து வலமாகவோ? சீனமொழி எழுதுவதைப் போன்று வலமிருந்து இடமாகவா? எழுதப்படுகிறது. "சிங்கத்தின் உதவியுடன் உயிர் வாழும் கன்றுக்குட்டி" கேள்விப் பட்டிருக்கிறேன். மனிதனே ஒருவனைச் சுடுவதற்காகவே துப்பாக்கி செய்கிறான். ஒரு நாட்டை அழிக்கவே அணுகுண்டு செய்கிறான்.

அங்கே வாழ்வதற்கான போராட்டம் இங்கே வல்லரசு ஆவதற்கான வாலாட்டம். இரண்டு நாட்களாக அந்தக் குடிசை இல்லையில்லை. அதைக் குடிசை என்று கூடச் சொல்ல முடியாது. கூரையாற் சூரியனின் தரிசனம் கிடைக்கும் சுவர் தன்னுடைய மரண நாழிகையை எண்ணிய வண்ணம் சாய்ந் திருந்தது. அதுதான் அவனது வீடு. அது மூடப்பட்டிருந்தது.

இவனும் ஆனந்தமாய் ஓடி, ஆடித் திரிந்து கிளித்தட்டு, கிட்டிப்புள், என்று விளையாடியவன்தான். அம்மா, அப்பா, சசி எனச் சிறு குருவிக்கூடு போன்று குதூகலித்துக் கிடந்த குடும்பம். அப்போது சசி ஐந்து படித்துக்கொண்டிருந்தான். ஒரே ஒரு பிள்ளை என்பதால் தாயின் அன்பும், தந்தையின் அரவணைப்பும் மிகுதியாகவே கிடைத்தது. சசியின் தாயின் பேரில் ஏகப்பட்ட சொத்து. இவர்கள் இருவரும் காதலித்துக் கரம் பிடித்ததால் உறவுகள் ஒதுக்கினர். சசியின் அப்பாவின் சொந்த உழைப்பிலே குடும்பம் கோலாகலமாக இயங்கியது.

ஒரு விழாவிற்காகச் சசியையும் அழைத்துக்கொண்டு கிளம்பினார்கள். இது தான் கடைசிப் பயணமாக இருக்கும் என்று யார் தான் நினைத்தார்கள்? நினைத்திருக்கவும்

வாய்ப்பில்லை. தூங்கிக்கொண்டிருந்த சசியைப் பார்த்துக் கொண்டிருந்த பிரியாவை ரசித்தவண்ணம் காரோட்டிய தரன் முன்னால் வந்த லாறியை கவனிக்கத் தவறிவிட்டான். அந்த ஒரு வினாடி அந்த நிமிடம் என்னவோ எல்லாம் நடந்து முடிந்துவிட்டது.

கார் லாறியுடன் மோதியதில் மூவரும் தூக்கி வீசப்பட்டனர். பிரியாவும் தரனும் வீதியில் வீசப்பட, தொடராக வந்த வாகனங்கள் இருவரையும் மிதித்துச் செல்ல ஓரமாக வீசப்பட்ட சசி அதைத் தன் இரண்டு கண்களாலும் காணும் பாக்கியம் பெற்றான். என்ன கொடுமை? என்ன கொடுமை. இருவரின் இறுதிக் கிரியைகளும் நடந்தேறியது. "எவ்வளவு பாசமானவங்க கூடியே போய் சேந்திட்டாங்க" என்று வருவோர் கூறும்போது சசியின் குழந்தை மனம் "என்னில ரெண்டு பேருக்கும் பாசமில்லையா? என்னையும் அழைச்சுண்டு போயிருக்கலாமே." என்று கூறுவதைக் கேட்டு தாய்க்குலமே இரத்தக் கண்ணீர் வடித்தது. கூட அழைத்துச் செல்வதற்கு அவர்களென்ன சுற்றுலாவா போனார்கள் ? இதை எப்படிப் புரிய வைப்பது ?

சசி தனது மாமாவின் பொறுப்பில் விடப்பட்டான். நாட்கள் யாருக்காகவும் காத்திருக்கவில்லை. தனது போக்கில் நகர்ந்து கொண்டிருந்தது. ஆரம்பக் கட்டமாகச் சசி பாடசாலையில் இருந்து நிறுத்தப்பட்டான். பெற்றோர் மரணத்தை நேரடியாய்ப் பார்த்ததால் அவனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியே காரணம் எனச் சமாளித்தார் மாமா. காலம் செல்ல மாட்டுத் தொழுவமே சசியின் வீடானது. எப்போதும் மாமா தனது குடும்பத்துடன் ஒட்டிக்கொள்வதன் பொருள் அவர்களிடம் இருந்த சொத்துத்தான் என்பது புரிவதற்குச் சசிக்கு நீண்டகாலம் பிடிக்கவில்லை. மரண வீட்டிற் கூடத் தேம்பித் தேம்பி அழுதானே? எல்லா வெளிப்பூச்சும் இப்போது வெளுத்துவிட்டது.

ஒரு நேர உணவு கொடுக்கக்கூட மனமில்லாத மிருக மனிதனா இவனது மாமா. வெடித்து இரத்தமும் சீழும் வடியும் புண்ணுடன் இவன் வீதியிற் செல்லும்போது அவனது மேனி தீண்டிய காற்றுக்கூட பட்டுவிடக்கூடாது என விலகிச் செல்லுமந்த மனிதர்களைக்கூட அவன் கவனிக்கவில்லை. அவனது சிந்தனை நீண்ட நாளாக ஒட்டி உலர்ந்து போய்கிடக்கும் தனது வயிற்றுப் பாடுதான். சுவைசுவையாக உண்ட வாய் ஒரு நேர உணவுக்கு ஏங்கியது. இவன் இப்போது சோகங்களின் சொந்தக்காரன். ஏக்கங்களின் எஜமான்.

"சசி உணவகம்" என்று பெயருடன் ஜொலித்த சாப்பட்டுக் கடை இப்போது "டெசி உணவகம்" என்று பெயர் மாற்றப் பட்டிருந்தது. இது மாமாவின் மகளின் பெயர். சசி, . டெசி இருவரின் பெயரிலும் ஒற்றுமை என்று மாமா பேசிச் சிரிப்பது மனதில் வந்து மறைந்தது. மெதுவாக அவனது கால்கள் அந்த உணவகம் நோக்கி நடந்தது. எஜமானின் மகன் எனப் பௌவியமாக விலகி நின்று மரியாதை கொடுக்கும் வாயிற்காவலன் அவனை விழுங்கி விடுவதுபோற் பார்க்க ஆடிப்போய் விட்டான் சசி. குழந்தை பயந்து விட்டது.

சாப்பிட்டுக் கொண்டு வந்த பெரிய வடையின் மீதியை ஒருவன் குப்பைக் கிடங்கிற் போடும்போது சசியின் பார்வை விரிந்தது. அவன் எடுக்கச் செல்லுமுன் ஒரு நாய் அதைக் கொண்டு செல்லவே அதையும் இழந்து விட்டோமே என வருந்தியமனம் திடுக்கிடும் படியாக அவனது மாமா முன் நின்றார். மாமாவைக் கண்டதும் ஏதாவது உண்ணத்

தருவார் என்றே சசி எண்ணினான். வந்த வேலை அவர் உள்ளே செல்லவும் தான் நினைத்ததுதான் என உணர்ந்தான்.

வாயிற் காவலாளி அவனை நோக்கி வரவும், மாமா வேகமாக உள்ளே சென்றதன் அர்த்தம் சசிக்கு விளங்கியது. தன்னைப் பாதுகாக்க ஓடினான். அருகில் நின்ற நாய் அவனைப் பார்த்து முறைத்தது. விலகிச் செல்லவே தனது உணவிற் பங்குபோட வரவில்லை என்பதை நினைத்து அமைதி யடைந்தது அந்த நாய்.

நேராக வீட்டுக்குச் சென்று பானை யில் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக ஏந்தி வைத்த தண்ணீரை எடுத்துக் குடித்தான். தங்கு தடையின்றி நேராக உரிய இடத்தில் விழுந்தது. அவன் அழவில்லை. அழுது அழுது அவனது கண்ணீர்க் கடலே வற்றி விட்டது. எதை நினைத்து அழுவான். பெற்றோர் தவிக்கவிட்டுச் சென்று விட்டார்களே அதை நினைத்தா அல்லது சொத்து அனைத்தையும் சுரண்டிக் கொண்டு நடுத்தெருவில் விட்ட மாமாவை நினைத்தா ? நாய்கூடப் பார்த்து முறைக்கும் தன்னைப் பற்றியா ? எதை எதை நினைத்து... எப்படி நடித்து விட்டான் மாமா. முழுமையாகப் பெற்றோரின் சுக போகங் களை அனுபவிக்கும் நடேசன் சசிக்கு ஒரு நேர உணவு கொடுப்பதால் மட்டும் குறைந்து விடுவரனா? கொஞ்சிக் குலாவிப் பழகி, பாழ் குழியில் விழுத்தி விட்டானே.

எதைப்பற்றியும் யோசிக்கச் சசியின் வயிற்றுப்பசி இடம் கொடுக்கவில்லை. மெதுவாக எழுந்து பாயைப் போட்டவன் தாயின் அரவணைப்புக்காகத் தவித்தான். ஏன் இவர்கள் இதனை மட்டும் விட்டுச் சென்றனர். நுளம்புகளின் ரீங்கார ஓசை கூட அவனுக்கு விளங்கவில்லை. "எனது உடலில் இருந்து ஒரு சொட்டு இரத்தம் இருந்தாற் குடித்துக் கொள்ளுங்கள்" எனச் சவால் விடுவதுபோல எதையும் புலப்படுத்தாமற் படுத்து, தூங்கிப் போனான். தான் உணவு உண்ணாத போதும் இன்னுமொரு உயிருக்கு உணவு கொடுக் கின்றானே இதுதான் மனிதாபிமானமா?

விடிந்தது. அது வழமையாகத்தானே நடக்கிறது. இவனது விடியலும் அப்படித்தான் கால் கடுக்க நீண்ட பயணம். ஒரு கணம் அவனது தளர்ந்த நடை நின்றது. வீடு அவனது வீடு மாட மாளிகைபோல வானளாவி உயர்ந்து நின்ற அந்த வீடு அவனுடையது. பெற்றோருடன் அவன் கூடி மகிழ்ந்த வீடு. உள்வாயிலை அடைந்தவன் செவியில் இனிமையான கீதமாய் "நல்ல விருந்து" என்று பலரும் கூறிக்கொண்டு வெளியில் வருவது தெரிந்தது. மாமாவின் நெருப்புப் பார்வையில் முன்தினம் சுடப்பட்டது கூட அவனுக்கு மறந்து போயிற்று.

வந்தவர்கள் எல்லோரும் நடேசனுக்கு நன்றிகூறி விடை பெற, தனது சொத்துபத்துப் பற்றிப் பெருமையடித்துக்கொண்டு வந்தான். அவனது மாமா, எப்படிக் கொஞ்சம் கூட வெட்கம் இல்லாமல் தனது சொத்து என்று சொல்கிறான். இது முறைப்படி சசிக்கு சேர வேண்டிய சொத்தாயிற்றே. யாரிடம் கேட்பது. மனுநீதி செத்துவிட்ட மண்ணா யிற்றே இது நீதி, அநீதி பற்றி யார் யோசிக்கிறார்கள் என்னுடைய சொத்தை தா என்றா கேட்கிறான். இல்லை; ஒரு நேர உணவு; பசி வந்தால் பத்தும் பறந்துவிடும் என்பார்களே. சசியின் கால்வயிறு உணவிற் காகப் பரிதவித்தது.

அனைவரையும் வழி அனுப்பி வாசற் பக்கம் திரும்பிய நடேசன் சசி நிற்பதைக் கண்டான். சசியினுடைய அந்தப் பரிதாபப் பார்வை பாலைவனம் கூட நீர் சுரந்துவிடும். சம்பந்தர் அப்பாவைக் காணவில்லை என்று

அழுதபோது பால் கொடுத்த உமாதேவி யாருக்கு இந்தக் குழந்தை பசிக்கழுவது மட்டும் ஏன் விளங்கவில்லை. சசி அந்த இடத்தைவிட்டு நகரவில்லை. ஏதாவது மிச்சம் மீதியாவது கிடைக்குமென்று அவன் மனமார நம்பினான். மாமாவின் பார்வை இன்னும் கடுமையாவதைக்கூட உணராமல் அவன் பார்வை மீதி உணவு கொட்டும் குப்பைக் கூடையைத் தேடியது என்ன கொடுமை.

மாமாவின் மகள் டெசி வண்ணமாக உடையணிந்து வந்து நின்றதைக் கண்ட சசியின் மனம் அனலாய்க் கொதித்தது. இதே வீட்டில் தானே அவனும் அலங்காரமாய் வலம் வந்தான். இப்போது ஒரு நேர உணவிற்கு .... என்று எண்ணுவதற்கு முன்னே உள்ளே சென்ற நடேசன் திரும்பி வரும் அரவம் கேட்டது ஆர்வமாய் அவன் உண்பதற்கு ஏதாவது கொண்டு வருவார் என்று அவனது கைகளைப் பார்த்தவன் நிலைதடுமாறினான்.

ஒரு நீண்ட கொட்டனுடன் நடேசன் சசியை நோக்கி வந்து கொண்டிருந்தான். நிலை தடுமாறிய போதும் தன்னை சுதாகரித்துக்கொண்டு வாசல் படி நோக்கி ஓடினான். உணவு இல்லாத உடலை இயக்க வெகுபாடுபட வேண்டியிருந்தது. உயிர் தப்பினால் போதும் என்ற எண்ணத்துடன் ஓடியவனைப் பார்த்துக்கூட அந்தக் கல் மனம் உருகவில்லை. அவனைக் கொன்றே விடுவது போல ஓடிய நடேசன் சசியைப் பிடிப்பதற்கு நீண்ட இடைவெளி எடுக்கவில்லை. சிங்கம் மானைப் பிடிப்பதுபோல வெகு சுலபமாகப் பிடித்து நடேசனின் கையில் இருந்த கொட்டன் சசியின் தலையைப் பதம் பார்த்தது.

மயங்கியவன் விழித்துப் பார்க்கும் போது ஒரு குப்பை மேட்டில் கிடப்பதை உணர்ந்தான். தள்ளாடிய நடையும் தனது குடிசை நோக்கி நடந்தவன் நுளம்புகளின் இசையுடன் உறங்கிப் போனான். அந்தக் குடிசை இருந்த இடத்தையும் நடேசன் விற்று விட்டான். சில தினங்களுக்கு முன்னாக சசியைக் காலி பண்ணும்படி சொல்லிவிட்டுச் சென்றான். அவன் எங்குபோவான்.

அன்றிலிருந்து இன்றுவரை அந்தக்குடிசை திறக்கப்படவில்லை. அந்த உருவமும் வெளியில் நடமாடுவது இல்லை. என்றைக்காவது அந்த நிலத் தரகர் மீண்டும் சசியைக் காலி பண்ணச் சொல்வதற்கு வரும்போதுதான் அவன் தன் பெற்றோரிடம் சென்று விட்டான். இவ்வுலகத்தை நிரந்தரமாகவே அவன் காலி செய்துவிட்டான் என்ற உண்மை உலகிற்குத் தெரியவரும்.

இதை எப்படிச் சொல்வது விதி என்று சொல்வதா ? சதி என்று சொல்வதா ? தெரியவில்லை. விடை காண முடியாத வினா இது. கடவுள்தான் பதிலளிக்கவேண்டும்.

# புரியாத புதிர்



உ. அனுதரன்
வ / வவுனியா த. ம. ம. வித், வவுனியா தெற்கு.
கவிதை ஆக்கம் : பிரிவு - 05

புரியாத புதிர்தனை
புரிந்து தான் கேட்டதேனோ?
புரியாத புதிர்தனை
புரிவது தான் எவ்வாறோ?
புதிருக்கே புதிர்போடும்
புதிரான உலகமிது.

அண்டந் தாண்டி என்னவுண்டு
அறிந்தவர் தான் யாருமில்லை
அவற்றிலெல்லாம் என்னவுண்டு
படைத்தவனும் அறிந்ததில்லை
படைத்ததெல்லாம் புதிர்தான்
படைத்தவனும் ஒரு புதிர்தான்.

கோள்கள் சுற்றும் சூரியனை - துணைக்
கோள்கள் சுற்றும் கோள்களினை
ஒன்றில் ஒன்றிற்கு காதலா?
ஒன்று ஒன்றிற்கு அடிமையா?
விடையாய் அமைவது தான் யாரோ?
விளங்கிடாத புதிர்தான் அதுவோ?

ஆண்டவன் படைத்த புவிதனிலே
அழகு கொஞ்சும் சோலையுண்டு
அனல் தகிக்கும் பாலையுமுண்டு
ஆண்டவன் செய்த தவறோ

ஆண்டவன் செய்த செயலோ
அறியாத இதுவும் புதிர்தானோ ?

குன்றொன்று தெரிகையிலே - அருகே
குழியொன்று தெரிந்திடுதே
பணமுகம் தெரிகையிலே - அருகே
பசிமுகம் தெரிந்திடுதே
படைத்தவன் செய்த சதியோ - இது
படைத்தவன் விடுத்த புதிரோ !

வண்ணம் கொண்ட வானவில்லை
வானம் வெறுத்து அழிக்கிறதே
மோகம் கொண்ட வெண்ணிலவை
மேகம் வந்து மறைக்கிறதே
இயற்கை கொண்ட அழகதனை
இயற்கை வந்து அழிக்கிறதே

புல்லில் விழுந்த பனித்துளியை
புல்லால் காக்க முடியவில்லை
மனிதன் பெற்ற இயற்கைதனை
மனிதனால் காக்க முடியவில்லை
புதிராய் தோன்றும் இவற்றையெல்லாம்
புதிரால் அவிழ்க்க முடியவில்லை.

விளக்கைச் சுற்றும் விட்டில்களாய்
பெண்ணைச் சுற்றும் ஆடவர்கள்
இறகுகள் கருகித் தீயும் வரை
இதமாய் பெண்ணைச் சுற்றிடுவர்
காமத் தீ அணையும் வரை
கருத்தாய் பெண்ணை கவர்ந்திடுவர்.

தன்னை அழிக்கும் ஆயுதங்கள்
தானே நன்றாய் செய்தானே

தன் தலையில் மண்ணைத்தான்
தானே அள்ளிப் போட்டானே
விந்தையிலும் விந்தையடா - இவன்
விசித்திர உலகின் புதிர்களடா.

தானே தொடக்கிடுவான் - பின்
தானே முடித்திடுவான்
தொடக்கியதற்காய் முடித்திடுவான்
முடித்ததற்காய் தொடக்கிடுவான்
முடியாத இவ்வுலகில் - இவனும்
முடியாத புதிர்தானோ ?
அத்தனையும் இங்கு புதிர்களடா
அறிந்ததெல்லாம் என்றும் புதிர்களடா
புதிராய் எல்லாம் தெரியுதடா
புதிரும் புதிதாய் ஆனதடா
புதிரும் புதிதாய் ஆனதடா
புதிரால் உலகம் புதிரானதடா
புதிரால் உலகம் புதிதானதடா.




# புது அத்தியாயம்

சி. விதூர்சனா,
மு / கலைமகள் வித்தியாலயம், முல்லைத்தீவு.
கவிதை ஆக்கம் : பிரிவு - 4.

ஏடெடுத்து, எழுத்தாணிக் கூர்தொடுத்து
எழுதுகிறேன், என் கவிதை தனை
புதிய அத்தியாயம் நோக்கி; நாம்
புது நடை போடணும் என நினைத்து,
அடுக்கடுக்காய் வரிகளிலே கவிதை, அதை
அள்ளி அல்ல கிள்ளிக் கூறிடுவேன் !
தாய்மொழியாம் தமிழ்மொழியை வணங்கி - நான்
தயவுடன் தொடங்குகிறேன், என் கவிதை !

"எம் வாழ்வின் சோக அத்தியாயம்" அது
எம் கால அடக்குதலின் ஆதிக்கம் !
சும்மா கூறலாமோ ? நாம் இதை
சுருக்கி இவ் அத்தியாயம், தனிலே !
விம்மி அழுதாலும் மாறாது அந்த
வீரர் பரம்பரைத் தமிழர் கதை !
தம்பி ! தங்கையரே ! கேளும், நீர் ! - எம்
தமிழ்த்தாய் பெற்ற மக்கள் நிலையை !

கன்னக் குழி அழகதனில் விழும்,
கரிய அந்த நிழல் எது !
மண்ணிலுள்ள மட மாந்தர், அவர்
மனதிலுள்ள வஞ்சக நிழல், அது !
தண்ணீருக்கே, பஞ்சமான தமிழ்த்
தாய் நாட்டில் நீ தனி மரமாய் !
புன்னகை சிந்தும் போலி முகம் ! - அது
புதைக்கிறதே ! எம்வாழ்வின் சுதந்திரத்தை !

நெஞ்சினிலே வஞ்சமில்லாப் பிள்ளைமனம்
நினைப்பதுவோ ? தன் வாழ்வின் புது வசந்தம் !
கஞ்சக்கருமிகட்கு எங்கே புரியும் ! அந்த
பிஞ்சுக் குழந்தை புன் சிரிப்பின் அர்த்தம் !
செஞ்சோற்றுக் கடன், தீர்த்த நம்,
செம்மொழி தர்மகுலத் தமிழருக்கு
எஞ்சியது என்னவோ ? கவலைகளே தான் ! இங்கு
எள்ளளவும் மகிழ்ச்சிக்கு இடமேயில்லை !

சங்க காலத்து நாளில் கூட,
சங்கடமான இந்த வாழ்வு இல்லை !
வங்கக் கடலின் எழில்தனை முகர்ந்து,
வாழ்ந்தனராம், அம் மனிதர் தானும் !
"சுங்கவரி செலுத்தும் வரைக்கும், ஏனோ ?!
சுருட்டப்படும் எம் வாழ்வின் சுதந்திரம்" !
கங்கைத் திராவிட வம்சம் - அதன்
கடிமுகம் வாடுவது, தான் ஏனோ ?!

கண்ணீர் வழிந்து ஆறாகப் பாய,
காதைக் குண்டு மழைகள் அதட்ட,
செந்நீர் குருதி சீறிப் பாய்ந்து,
சிவந்திட்டதே ! நம் செந்தமிழ் நாடு !
கண்ணீர் வடித்தே , நாம் நாளும்,
கலங்கி வாழலாமோ ?! சொல்மின்கள் !
எண்ணம் கொண்டு எழுந்திடு ! நீ! - நாளை
எடுத்திடுவோம், கைளிலே புது அத்தியாயம் !

சத்தியம் காத்திட்ட தர்ம குலத்தில்,
சரித்திரம் படைக்க வந்தவர், நாம் !
இத்தனை சோகமாய் இருந்தாலும்,
இது ஒரு சிறு பகுதியே கேளிர்!
கத்திச் சண்டையிலும் கடிவாளம் பூண்ட,
கடும் பெரும் சந்ததியடா! நாங்கள் !
நித்தமும் புது உலகில், என்றும் - நாளை
நிறுவுவோம், புது அத்தியாயம், வாரீர் !

வண்ணமய அத்தியாயம், நோக்கி !
வாழடா! நீ ! மானிடனே ! என்றும்,
எண்ணங் கொள் உன் மனதினிலே !
ஏற்றி வைப்போம், வீர அத்தியாயம் !
நன்னெறி மனிதர் நாம், பட்ட,
நாச வாழ்வை மறக்காது நீ !
உன் மனத்தின் ஓர் ஓரத்திலே ! இட்டு
உயர்த்தி எழுதிவை ! ஒரு அத்தியாயமாய் !
ஆம் ! வெற்றி முரசு ஒலிக்கிறது "! ஆம் !
"விடுதலைக்கான கதவு திறக்கிறது" !
புத்தம் புதிய பூக்கள் மலர்கின்றன" !
"புது அத்தியாயமதை வரவேற்கின்றன"
"பூக்களுடன் நாம் சேர்ந்து கொள்வோம்" என்றும்
புது நாளில், புது அத்தியாயம் அமைத்திடுவோம்"
உலகத்தின் மேடையில், புது அத்தியாயம்! படைக்க - உயர்
உத்தமர்களே ! எழுந்து வாரீர்! வாரீர் ! வாரீர் !



# குறுநாடக ஆக்கம்

ஜெ. கோகிலா
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வடமராட்சி.
குறுநாடக ஆக்கம் : பிரிவு - 5

தலைப்பு: அடக்கம் அமரருள் உய்க்கும்
காட்சிகள்: 04
பாத்திரங்கள்: லட்சுமி (கதாநாயகி)
பாக்கியம் (லட்சுமியின் தாய்)
திவ்யா, சுதாகர், (லட்சுமியின் தங்கையும், தம்பியும்)
நிலா
(லட்சுமியின் உயிர்த்தோழி)
பத்மநாதன், கமலம்

திரை மெல்ல விலகுகிறது

## காட்சி I

பாத்திரங்கள்: பாக்கியம் (தாய்), லட்சுமி, திவ்யா, சுதாகர்.
இடம்: லட்சுமியின் வீடு
நேரம்: 07 நிமிடம்
காலம்: அதிகாலைப்பொழுது விடியும் நேரம்.

(மேடையின் திரை மெல்ல விலகும்போது பின்னணியில் பறவைகளினது கீச்சிடல்கள் கேட்கின்றன. மேடையில் லட்சுமி வீட்டு வேலைகளில் மும்முரமாக ஈடுபட்ட வண்ணம் இருக்கின்றாள். அடுப்பு புகைத்த வண்ணம் இருக்கின்றது)

(லட்சுமி தன் நெற்றியில் இருந்து வழிந்தோடிய வியர்வையை ஒரு கையால் துடைத்தபடியும் மற்றைய கையில் பானையொன்றை ஏந்தியபடியும் நிற்க...)

குரல்: (பின்னணியில்) இவள் தாங்க லட்சுமி பேரு மட்டும் லட்சுமி இல்ல. இவ லட்சுமியைப்போல அழகானவள். நல்ல குணமுடையவள். யாரையும் எதிர்த்து எதுவும் பேசமாட்டாள். ரொம்ப அடக்கமான பொண்ணு. ஆனா இவகிட்ட ஒன்று மட்டும்தான் இல்ல. என்னனு பார்க்கிறீங்களா? காசுதாங்க. இவளப்பத்தி என்னடா இவ்வளவு சொல்லுறேனு பாக்கிறீங்களா? இவள்ட வாழ்க்கைல நடக்கப்போறததான் நீங்க பார்க்கப்போறீங்க. இவ எப்பிடி எல்லார் மனசிலும் வாழ்றானு பார்க்கலாம் வாங்க. (மேடையில் காட்சிகள் ஆரம்பமாகின்றன).

லட்சுமி: (வியர்வையைத் துடைத்த வாறே...) (மெதுவாக நடந்து வந்து .......கொண்டிருக்கும் தங்கையையும், தம்பியையும் கட்டிய வாறே...) செல்லங்கள் . எந்திரிங்கடா. நேரத்துக்கே ஸ்கூலுக்குப் போகணுமில்லையா? எந்திரிச்சி வேலையெல்லாம் முடிச்சிட்டு

ரெடியாகுங்க... (பின்னணியில் சேவல் கூவுகிற ஓசை கேட்கிறது)

(திவ்வியாவும், சுதாகரும் கண்ணைக் கசக்கியவாறே மெதுவாக எந்திரிக்கின்றனர். திவ்யா இவ்வருடம் சாதாரண தர பரீட்சை எழுதுபவள். சுதாகர் உயர்தரத்தில் உயிரியல் துறையில் கற்பவன்)

சுதாகர்: அக்கானா.... அக்காதான் கரெக்ட் ரைம்ல நான் சொன்னமாதிரியே எழுப்பிடிச்சி. (என்று திவ்யாவிடம் சொல்லிவிட்டு) அக்கா...! அக்கா! நான் டெஸ்ட்டுக்கு கொஞ்ச நேரம் படிச்சிட்டு வாறன். (என்றபடி மேசையில் அமர்ந்து பாடநூல்களில் மூழ்கிப் போகிறான்)

(திவ்யா எழுந்து சென்று லட்சுமிக்கு சமையல் உதவியாக மரக்கறிகள் வெட்டிக்கொண்டிருக்கிறாள். அப்போது கட்டிலில் கிடந்த தாய் எழும்ப முயற்சிக்கின்றாள். இயலாமையால் திரும்ப விழுகிறாள். அதனால் இருமுகிறாள். இதை அவதானிக்கிறாள் லட்சுமி)

லட்சுமி: (அருகில் ஓடிவந்தபடி) என்னம்மா இப்ப என்ன அவசரம் (நெஞ்சை தடவியவாறே...!) பேசாமல் படுத்திருங்க. டொக்டர் என்ன சொல்லியிருக்கார். எங்கயும் எழும்பித் திரியாதேங்கோ. இப்பவே படுத்த படுக்கையா இருக்கிறீங்க ஏதாவது செய்யப்போய் எதுவும் ஆயிட்டா! எங்களுக்கு துணை இல்லாமப் போயிடும்.. (கண் கலங்குகிறாள்)

பாக்கியம்: இந்தக் கட்டைல இருந்து உசிர் எப்ப போகுமோ...! (இருமியவாறே தளர்ந்த குரலுடன்) நானும் உனக்கு ரொம்ப கஸ்டம் குடுக்கிறேன்! கடவுளே... உனக்கு கண் இல்லையா? ஏன் இப்படி என்ர குடும்பத்த வதைக்கிறாய்? (இருமுகின்றாள்)

சுதாகர்: பாடசாலைக்கு வெளிகிட்டபடியே)

ஏனம்மா இப்படி நீயும் கஸ்டப் படுற. சொல்லால அக்காவையும் கஸ்டப்படுத்ற பேசாம படுத்துக் கொள்ளம்மா.

### காட்சி - 02

இடம்: கமலத்தின் வீடு

பாத்திரங்கள்: கமலம், (வீட்டுக்காரி,) பத்மநாதன் (கமலத்தின் கணவன்) நிலா (கமலத்தின் மகள்) லட்சுமி (கமலத்தின் வீட்டு வேலைக்காரி)

நேரம்: 08 நிமிடம்

(கமலம் சற்று கோபக்காரி, பணம்தான் எல்லாம் என்பவள், ஆனால் மகள் நிலாவின் மீது அளவு கடந்த பாசமுடையவள். லட்சுமி வேலைக்காரி என்பதால் கொடுமைப்படுத்துவாள். அதிகாரத்துடன் நடந்து கொள்ளுவாள்)

கமலம்: (அங்கேயும், இங்கேயும் நடந்தவளாய், கைகளைப் பிசகியவாறும், வாசலை வெறித்துப் பார்த்தபடியும் நிற்கின்றாள். நிலா பத்திரிகை வாசித்தபடியும் சிறிய புன் சிரிப்புடன் தாயைப்

பார்த்தபடியும் இருக்கிறாள்) என்னடி நிலா...! இன்னும் இந்தப் பொண்ணக் காணல. வீட்ல எவ்வளவு வேலை. வரட்டும் அவள வச்சிக்கிறேன். (கோபத்துடன் வாசலைப் பார்க்கிறாள்)

நிலா: (மெதுவாக எடுத்து தாயருகில் வந்து) என்னம்மா...! நீங்க அவ வீட்டில் இருக்கிற நிலமை தெரியும் தானே! பாக்கியம் அம்மா இண்டைக்கோ! நாளைக்கோ தலையைப் போடுற நிலைமை. எல்லா வேலையும் அவதான் செய்யணும். பாவம் என்ன நடந்ததோ...? வந்திடுவாளம்மா. (என்று கூறியபடி அவள் வாசலைப் பார்க்கவும் லட்சுமி வருவதைக் கண்டுவிட்டு முக மலர்ச்சியுடன் அம்மாவைப் பார்த்து)

அம்மா...! அம்மா...! லட்சுமி வர்றாளம்மா (என்றபடி லட்சுமி அருகில் சென்று) லட்சுமி அம்மா கோபமா இருக்காங்க பாத்து நடந்துக்கடி. (என்று விட்டு விலகிச் செல்கிறாள்).

கமலம்: வாடியம்மா ..! வா...! இதென்ன சத்திரமே! நினைச்ச நேரத்துக்கு வர்றதுக்கும் நினைச்ச நேரத்துக்குப் போறதுக்கும் இப்ப என்ன நேரம் எண்டு தெரியுதா? எட்டரையாகுது. உன்ன ஆறுமணிக் கெல்லாம் வேலைக்குவரச் சொன்னானெல்ல. (தட்டியவாறு கண்ணில் கோபத்துடன், லட்சுமியைப் பார்க்கிறாள்)

லட்சுமி; (பயந்தவாறே.... தயக்கத்துடன்) அது வந்தும்மா....! வீட்ல வேலையெல்லாம் முடிச்சிட்டு வர...

கமலம்: (இடை மறித்தவளாக) உண்ட வீட்டு வேலையைப் பாத்தா இந்த வீட்டு வேலைய லட்சுமியை பார்த்தவாறு) அக்கா...! அக்கா...! சாப்பாடு பார்சல் பண்ணிட்டியா?

திவ்யா: (சாப்பாடு பார்சல்களை எடுத்துக் கொண்டபடி) இந்தா வர்றன் அண்ணா...

லட்சுமி: (சுதாகர் அருகில் வந்து அவன் தலையில் கை வைத்தபடி...) என்ர செல்லம் டெஸ்ட் வருகுதெல்லே வடிவா பாஸ்பண்ணி சீக்கிரமாவே நீ ஒரு டொக்டரா வரணும்னா வடிவா படிடா... (என்றவள் கலங்கிய கண்களுடன் சுதாகரின் அகன்ற நெற்றியில் முத்தமிடுகிறாள்.

சுதாகர்: நீ எங்களுக்காக கஸ்டப்படுறப்ப கவலைப்படாதக்க. நான் கட்டாயம் டொக்டரா வருவன். உன்ன உக்கார வச்சி சாப்பாடு போடுவன்.

திவ்யா: (இறுமாப்புடன்) நீ மட்டுமா? நானும் பெரிய டொக்ரா வந்து அக்காவையும் அம்மாவையும் வடிவா பாத்துக்குவன் (என்று கூறியவளை லட்சுமி கலங்கிய கண்களோடும் முகத்தில் சிரிப்புடனும் வாஞ்சைபோல அவளைக் கட்டியணைத்து நெற்றியில் முத்தமிட்டு

வழியனுப்பி வைக்கிறாள்).

(அவர்கள் இருவரும் போவதையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு அவசர அவசரமாக உடையை மாற்றுகிறாள். தாயின் அருகில் வந்து அவளின் நெற்றியில் முத்தமிட்டு விட்டு காலினை தொட்டுக் கும்பிட்டவாறு)

லட்சுமி: அம்மா...! நீங்க போட்டுக்க வேண்டிய மாத்திரைகள், சாப்பிடுறதுக்கு சாப்பாடு எல்லாம் தலமாட்ல மேசைல இருக்கு. கவனமா இருக்கு. நேரத்துக்கு சாப்பிடுங்க. நான் வேலைக்குப் போறன்.(என்றபடி அவசர அவசர மாகக் கிளம்புகிறாள்).

பாக்கியம்: (பெருமூச்சுடன்) கடவுளே! இந்தப் பிள்ள படுற கஸ்டத்துக்கு முடிவே இல்லையா! இதுல விலைவாசியும் ஏறிப்போச்சு. எனக்கு மருந்து வாங்கியே காசெல்லாம் கரையுது. எங்கட கஸ்டமெல்லாம் எப்படி யப்பா தீரப்போகுது. (என்றவள் இருமிக்கொண்டே பெருமூச்சு விடுகிறாள்).

மேடையில் லட்சுமி அவசர அவசர மாக நடந்து சென்றுகொண்டிருக் கிறாள்.

## காட்சி - 03

இடம்: லட்சுமியின் வீடு

பாத்திரங்கள்: பாக்கியம்
லட்சுமியின் தோழி நிலா
சுதாகர், திவ்யா

நேரம்: 05 நிமிடம்

காலம்: மாலைப்பொழுது

(மேடையில் சுதாகர் படித்துக் கொண்டிருக் கிறான். திவ்யாவும் படித்துக்கொண்டு இருக்கிறாள். பாக்கியம் மெதுவாக தளர்ந்த நடையுடன் அங்குமிங்கும் உலாவிக் கொண்டு இருக்கின்றார்.

சுதாகர்: (சோம்பல் முறித்தவாறே...) திவ்யா....! திவ்யா...!

திவ்யா: என்னண்ணா? (அலட்சியமாக)

சுதாகர்: தேத்தண்ணி ஒண்டு தாவண்டி. அக்காவ இன்னும் காணல்ல.

(திவ்யா எந்திரிச்சி அடுப்பங்கரை நோக்கி செல்கிறாள். 'தாய் பாக்கியம் அருகில் வருகின்றாள் (தளர்வாக)

பாக்கியம்: தம்பி...! எப்பவும் அக்கா இந்த நேரத்துக்கு வந்திடுவாளே...! இன்னும் காணல்லயே! என்னப்பா எனக்குப் பயமாக இருக்கு.

(திவ்யா தேநீர் கோப்பையோடு வந்து கொண்டே....)

திவ்யா: அம்மா...! இப்பதான் கொஞ்சம் உடம்பு சரியாகி இருக்கு. கொஞ்ச மேனும் எழும்பி நடக்கிறீங்க. மனசப் போட்டுக் குழப்பிக்காம போய் ரெஸ்ட் எடுங்க போங்க. (என்றபடியே சுதாகரிடம் தேநீர் கோப்பையை நீட்டுகிறாள்).

சுதாகர்: அம்மா திவ்யா சொல்றது சரிதான்.... போய் படுத்துக்குங்க. அக்கா வந்திடும் விடயகூட அக்கா அவங்கள முதலாளிகூட இண்டைக்கு டவுணுக்குப் போறதா சொன்னிச்சு. போயிட்டு வர லேட்டாகி இருக்கும்.

(என்றபடியே யாரோ நடந்து வர்ற சத்தம் கேட்கவும், அக்காதான் வர்றாள் போல... (என்றவாறே எழுந்து வாசல்வரை செல்கிறான். அங்கே கலங்கிய கண்களுடன் நிலா நிற்கிறாள்)

(திவ்யா நிலாவை கண்டதும் முகத்தில் சிரிப்போடு...)

நிலா: இல்லம்மா (பாய்போடுவதை தடுத்தபடி) நான் அதுக்கு வரல்லம்மா, என்றபடி முக்கி முனங்குகிறாள்)

சுதாகர்: (சிரித்தபடி) ஒன்றும் சொல்ல வேணாம். அக்கா வர கொஞ்சம் லேட்டாகும். அப்பிடித்தானே! நாங்கள் ஒன்றும் நினைக்க மாட்டம். நேரமாகு தென்று நீங்க வந்தீங்களா...?

நிலா: (இறுகிய முகத்துடன் அங்குமிங்கும் பார்த்தவாறு) அதில்லப்பா... (என்றவள் திவ்யாவை நோக்கி) தண்ணி கொஞ்சம் தாம்மா. (என்று விட்டு அங்குமிங்கும் நடந்தாள் திவ்யா நீர் கொண்டு வந்து கொடுக்கவும் அதை வாங்கி மடமடவெனக் குடித்துவிட்டு) அது வந்து... அது வந்து...; (என்று முழுங்கவும்)

சுதாகர்: (ஏதோ விபரீதம் விளைந்து விட்டதாக எண்ணியவன்) அக்கா எங்க? (என்று உரக்க கேட்க தாய் பாக்கியம் அவ்விடம் வருகிறாள்)

நிலா: (தன்னை சுதாகரித்துக்கொண்டு) லட்சுமி... அப்பாவோட சந்தைக்கு எங்கட வீட்டுக்கு மரக்கறி வேண்டுறதுக்காக கார்ல போனார். போனப்ப...; (என்று கடையில் நிறுத்தவும்)

பாக்கியம்: (பதற்றத்தோடு) என்ர பிள்ளைக்கு என்ன நடந்தது?

நிலா: (பாக்கியத்தை ஒரு கையால் தாங்கிப் பிடித்தபடி) அழாதேயுங் கோ. நாற்சந்தி ஒண்டில திரும் பேக்க எதிர்ல வந்த லாறியோட ஆக்சிடன்ட் ஆயிட்டாங்க. இப்ப ரெண்டுபேரும் கொஸ்பிட்ட லில்ல இருக் காங்க. (என்றவள் அழ ஆரம்பித்தாள்)

(திவ்யா சுதாகர்மீது சாய்ந்தவாறு கதறி அழ ஆரம்பித்தாள். சுதாகர் எதுவும்பேசாது பேயறைந்தவன் போல வெறித்துப் பார்த்தபடி நின்றான். பாக்கியம் கதறிக் கதறியழ ஆரம்பிக்கிறார். நிலா பாக்கியத்தை கதிரையில் அமர வைக்கிறாள்)

பின்னணியில்.....;

முகாரி ராகத்துடன் கூடிய இசை ஒலிக்க விடப்பட்டிருக்கிறது.

(அனைவரும் மேடையில் அழுதபடி இருக்க இருள் பரவுகிறது)

## காட்சி 04

இடம்: வைத்தியசாலை (நோயாளர்கள் பிரிவு)

பாத்திரங்கள்: வைத்தியர்
தாதிகள் இருவர்
மகலம், பத்மநாதன், பாக்கியம், நிலா, திவ்யா, சுதாகர்.

நேரம்: 10 நிமிடம்

காலம்: காலைப்பொழுது

(சுதாகர், திவ்யா, பாக்கியம், கமலம், நிலா என அனைவரும் அவசர சிகிச்சைப் பிரிவின் முன்பாக நின்றுகொண்டிருக்கின்றனர். தாதியர்கள் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டு இருக்கின்றனர்.

சுதாகர்: (திவ்யாவின் தலையை வருடும் படியும் பாக்கியத்தைத் தாங்கிய படியும்) அழாதேயுங்கோ...! அக்காவுக்கு ஒன்டும் ஆகாது. (திவ்யாவைப் பார்த்து) நீ இப்படி அழுதா அம்மாவ யாரையம்மா தேற்றுவாங்க. (என்று ஒருவருக்கு ஒருவர் அவன் சமாதானம் செய்ய முயற்சிக்கின்றான்.

கமலம்: (பாக்கியத்தின் அருகில் வந்து) அம்மா அழாதேயுங்க. எல்லாம் என்னால வந்தது. நான்தான் அவள கட்டாயப்படுத்தி அனுப்பிவிட்டன் என்று அழுகிறாள்)

நிலா: (கமலத்தின் அருகில் வந்து) கவலப்படாதீங்க. ஒருதருக்கும் ஒண்ணும் ஆகாது.

(அப்போது டாக்டர் அவசரமாக உள்ளே செல்ல சுதாகர் டாக்டரை இடைமறிக்கிறான்)

சுதாகர்: (கலங்கிய கண்களுடன்) சேர்...! சேர்...! அக்காவுக்கு என்னாச்சு சேர்? எப்படி இருக்காங்க சேர்? (என்று அழுதவாறு டாக்டரின் கையைப் பிடித்தபடியே பதற்றத்தோடு கேட்கிறான்)

டாக்டர் என்ன சொல்லப் போறார் என்பதை அனைவரும் எதிர்பாக்கிறார்கள்)

டாக்டர்: எல்லாம் கடவுள் செயல். பத்மநாதனுக்கு கொஞ்சம் பரவா யில்லை. ஆனா அவர்ட கண்கள்ட கண்ணாடி குத்தினதால பார்வையை இழந்திட்டாரு. அதோட லட்சுமி கொஞ்சம் சீரியஸ்சா இருக்காங்க. அவர் களைப்பத்தி இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது. ரொம்ப இரத்தம் போயிட்டுது. ரைபண்டிட்டுதான் இருக்கிறம். நீங்களும் கடவுளிட்ட பிரார்த் தனை பண்ணுங்க.

(என்றவர் மேலே பார்த்து கையை விரித்தபடி சொல்ல) (அனைவரும் அழுதே விட்டனர். பாக்கியம் மூர்ச்சையுற்று வீழ்கிறாள். சுதாகர் தாயை தாங்கி பிடித்து நீர் தெளித்து ஓர் இடத்தில் அமர வைக்கிறான். நிலாவும் திவ்யாவும் பாக்கியத் துக்கு ஆதரவாக அமர்கின்றனர். கமலம்... கலங்கியபடி)

கமலம்: (தன் தலையில் அடித்தபடி) எல்லாம் என்னாலதான். அப்பவும் அவர் சொன்னாரே! நான் வேண்டிட்டு வர்றன்னு. நான் இண்டைக்கு எவ்வளவு பெரிய பாவம் செய்திட்டன் என்று கலங்குகிறாள்.

(சுதாகர் அங்குமிங்கும் நடந்து கொண்டிருக்க டாக்டர் வெளியே வருகிறார்)

டாக்டர்: (சுதாகரின் அருகில் வந்து) இனி எங்களால எதுவும் இயலாது எல்லாம் எல்லை மீறிப் போச்சு. அவங்கள போய் பாக்றவங்க பார்க்கலாம். (என்றுவிட்டு அவர்

கையில் அணிந்திருந்த இரத்தம் படிந்த கைகுலோசை அகற்றி விட்டுப் போகிறார்.

(எல்லோரும் கலங்கியவாறு லட்சுமி கிடத்தப்பட்ட அறைக்குள் நுழைகின்றனர். லட்சுமியின் கண்கள் துணியால் கட்டப்பட்டுள்ளது. நிறைய இடங்களில் வயர்கள் பல காணப்பட்டிருந்தன. அனைவரும் வந்து அவள் கட்டிலை சுற்றி நிற்க)

தாதி: (நேர்ஸ்) பேசன்ட டிஸ்ரப்பண்ணாம பேசுங்க. (என்றுவிட்டு தன் வேலைகளில் ஈடுபடுகிறாள்)

சுதாகர், திவ்யா: அக்கா...! அக்கா...! (என்று கலங்கியவாறிருக்க)

லட்சுமி: (வாய்திறந்து பேசமுடியாத நிலையிலும் மெதுவாக பேசுகிறாள். குரல்களெல்லாம் மாறுபட்டு கேட்கிறது. அவள் பேசுவது மெதுவாகக் கேட்கிறது) சுதாகரது தலையை வருடியவாறு த....ம்...பி...! தி.... வ்..... யா....! நீங்...க ரெண்...டு பேரும் மெதுவாக மூச்சு வாங்கியபடி) ஆர....ப்பட்....டபடி டொ....க்டரா.... வர....ணும் (என்றபடி திருப்ப மூச்சு வாங்கியபடி) அம்ம..ா (கமலத்தைப் பார்க்கிறாள்)

டாக்டர்: சொறி உங்க பத்மநாதனுக்கு லட்சுமியோட கண்ணதான் வச்சிருக்கம்மா...

கமலம்: (கலங்கியபடி லட்சுமி அருகில் வந்து) நான் தப்பு பண்ணிட்டன்மா. நான் தப்பு பண்ணிட்டன்மா.

டாக்டர்: லட்சுமீ நல்ல பொண்ணு. தான் இறந்தாலும் வாழணும் நினைக்றா அவள்ட,

(எவன் வந்து பாக்றதாம். இண்டைக்கு எட்டு மணிக்குத் தான் வீட்ட போக மறந்திடாத. (என்றவள், லட்சுமியின் கையை பிடித்திழுத்துக்கொண்டு கிணற்றடி நோக்கி நடக்கிறாள்.

(கிணற்றடியில் ஏராளமான பாத்திரங்கள் ஒரு பக்கமாகவும் துணிமணிகள் ஒருபக்கமாகவும் கிடக்கிறது. அதைக் காட்டியவாறே கமலம்)

கமலம்: (லட்சுமியை நிறுத்திவிட்டு) பாத்தல்ல, இவ்வளத்தையும் பத்தரையாகிறதுக்குள்ள க்ளீன் பண்ணிடு (என்றார் கோபமாக).

லட்சுமி: இவ்வளத்தையும் எப்படிம்மா...? (என்றபடி கமலத்தை நோக்கவும் அவள் எதிர்பாராதவண்ணம் கமலம் லட்சுமியின் முகத்தில் அறைகிறார். லட்சுமி கீழே விழுகிறாள்)

கமலம்: எதிர்த்தாடிப் பேசுற பேசாம வேலையைப்பாரு. உனக்கு சண்டைக்கு மத்யான சாப்பாடுமில்ல. புரிஞ்சிக்க. எதிர்த்து பேசுற லட்சணத்தைப் பாரு. (என்றபடி கிணற்றடி விட்டு நகர்கிறாள்)

(லட்சுமி மெதுவாக எந்திரித்து கிணற்றிலிருந்து நீர் இறைக்கின்றாள்).

பின்னணியில்....... (சோகமாக பாடல் இசைக்கிறது)

"வாழ்வே மாயமோ...!
இந்த வாழ்வும் மாயமோ...!
விலைவாகி ஏறிப்போச்சுதே...! அடியே

மண்ணில் இந்த குருவி வாடுதே...!
யார் செய்த பாவமோ....! கிளியே

குடும்பத்துக்காய் வாடுகின்ற மலரே...!" என்று பாடல் இசைக்க (லட்சுமி பாத்திரங்கள் ஒவ்வொன்றாக கழுவி அடுக்கிவிட்டு துணிகளை துவைத்துக் காயப் போடுவதற்காக ஈரத்துணிகளை எடுத்துக் கொண்டு எழுந்தவள் இயலாமை காரணமாக வீழ்கிறாள். பின்னர் எழுகிறார் மீண்டும் விழுகிறாள்.

பத்மநாதன்: (இதைக் கண்டுவிட்டு) கமலம்...! கமலம்...! கோபமாகவும் உரக்கவும் அழைக்கிறார். அடியே கமலம்....!

கமலம்: (பதற்றத்தோடும், வியர்வை துளிர ஓடிவந்து) என்னப்பா ஏன் கூப்பிட்டீங்க...!
(என்று பயந்தபடி கேட்கிறாள்)

பத்மநாதன்: (லட்சுமியை சுட்டிக்காட்டி) என்னடி இது...? ஏன் இப்படி இந்தப் பிள்ளையை இவ்வளவு கஸ்டப்படுத்தற ஏன்டி...?

கமலம்: (நிமிர்ந்தவாறு சிரிப்போடு) வேலக்காரிய வைக்கிற இடத்தில வைச்சாத்தான் குறைஞ்ச சம்பளத்ல வேல வாங்கலாம். அவ எதித்தல்ல பேசுகிறாள் அதுதான் இண்டைக்கு சாப்பாடும் குடுக்கல. போட்டு வாங்கிட்டன். (என்று பெருமையோடு கூறுகிறாள்.

பத்மநாதன்: (கோபத்தோடு கமலத்தின் கன்னத்தில் அறைந்துவிட கமலம் கலங்கியபடி நிற்கிறாள்) நீயெல்லாம் ஒரு பெண்ணா? அவளப்பற்றி எனக்குத் தெரியும். அவ அடக்கமான பொண்ணு. அவ எதிர்த்துப் பேசி இருக்கவேமாட்டா. நீதான் அடங்காப் பிடாரி. நீயும் ஒரு பொண்ணுதானே! (என்று கோபத்தோடு பேசியவன் நிலாவை அழைக்கின்றான்).
நிலா....! நிலாம்மா...! இங்கு வாம்மா....?

நிலா: (வந்து கொண்டே) என்னப்பா என்ன விஷயம்.

பத்மநாதன்: (லட்சுமியை காட்டி) போய் அவளக் கூட்டிட்டு போய் முதல்ல சாப்பாடு குடு. அப்புறம் அவள வீட்ட அனுப்பிவை. இண்டைக்கு செய்த வேல்லயே போதும். (என்று கூறியபடி கமலத்தை கோபத்தோடு பார்த்துவிட்டு கிளம்புகிறான்)
(நிலா, லட்சுமியை தாங்கிப் பிடித்தவாறு கூட்டிவந்து சாப்பாடு கொடுக்கிறாள். அதன்போது பின்னணியில் மெதுவான இசை ஒலிபரப்பப்படுகிறது. பின்னர் லட்சுமியைப் பார்த்து)

நிலா: லட்சுமி நேரம் ஐந்தாயிட்டுது. நீ வீட்ட போம்மா (என்று இரக்கத்தோடு கூறுகிறாள்)

லட்சுமி: இல்லையம்மா...! நான் மற்ற வீட்டு வேலையெல்லாம் (என்றவளை பத்மநாதன் இடைமறித்து)

பத்மநாதன்: அதெல்லாம் நாளைக்கு பாத்துக்கலாம். நீ போய் நல்லா ரெஸ்ட் எடுத்துக்க. போ...! என்கிறார். அதோடு லட்சுமி

தனது பைகளை எடுத்துக் கொண்டு வீடு நோக்கி கிளம்புகி றாள்). சம்மதத்தோட நான் நாங்க இத........

கமலம்: நான் உனக்கு எவ்வளவு கொடும பண்ணினன் அதெல்லாம் மனசில வச்சிக்காம என்ர புருசனுக்கு உன்ர கண்ண தானம் பண்ணிட்டியேம்மா. நான் உனக்கு எப்பிடிம்மா நன்றிக் கடன் செலுத்தப் போறன். (என்றபடி லட்சுமி அருகில் வந்து அழுகிறாள்).

லட்சுமி: (கமலம் தலைமேல் தடவி அவள்தான் என்பதை உணர்ந்துகொண்டு)

அம்மா....! என்...ர தம்... பி..! தங்க...ச்சி (என்று விட்டு மூச்சு எடுக்க முடியாது போக நிறுத்துகிறாள்)

கமலம்: லட்சுமி...., லட்சுமி.... கவலப்படாதம்மா இனிமே அவங்களும் என்ர பிள்ளைங்க நீ ஆசைப்பட்ட மாதிரியே அவங்கள நானே டொக்டராக்கி றன்மா (என்று கண்களைத் துடைத்தபடி சொல்கிறார்.)

நிலா: லட்சுமி......; கவலப்படாதம்மா. (என்றபடி லட்சுமி மூச்சை மேலெடுக்க இறந்து போகிறாள்)

பின்னணியில்....

சோகத்தோடு பாடல் இசைக்கிறது

தாதியர்கள்: எல்லாட மனசில மட்டுமில்ல.
இறந்தும் இவள் இப்ப
உலகத்ல வாழ்றாள்.
சும்மாவா சொன்னாங்க.
அடக்கம் அமரர் உய்க்கும்னு
முற்றும்.

திரை மெல்ல மூடுகிறது.



# யாரொடு நோகேன்

பா. அஜித்தா
கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி.
குறுநாடக ஆக்கம் : பிரிவு - 4

பாத்திரங்கள்: கமலம் (அம்மா)
கந்தன் (அப்பா)
வேந்தன் (அண்ணா)
வேணி (தங்கை)
காந்தன் (அண்ணனின் நண்பன்)

காட்சிகள்: நான்கு
நேரம் : முப்பது நிமிடங்கள்

## காட்சி - I

பாத்திரங்கள்: கமலம்
கந்தன்
வேந்தன்
வேணி

இடம்: வேந்தனின் வீடு
காலம்: மாலைப்பொழுது
(திரை விலகுகிறது)

(பாடசாலை விட்டுவந்த வேந்தன் மிக வேகமாகத் தனது வீட்டுக்குள் நுழைந்தபடி)

வேந்தன்: அம்மா..... அம்மா... என்ன உந்த மனிசிக்கு காது செவிடாகிட்டு போல (தனக்குத்தானே கூறிய வாறு) அம்மா எணேய் எங்க நிக்கிறியள் கூப்பிடுறது கேக்கேல லயே.

கமலம்: (குசினியை விட்டு வெளியே வந்தபடி) என்னடா? தம்பி கத்துற நான் குசினிக்க தானே நிப்பன் ஏன் சும்மா தொண்டைய நோக வைக்கிற. ஏன் இப்ப கூப்பிட்டனி. (என்றபடி அருகில் செல்கிறாள்)

வேந்தன்: அம்மா, இப்ப எங்க போட்டாய்? (கோபத்துடன்)

கமலம்: அப்பா விடியப் போனவர் இன்னும் வீட்ட வரக் காணேல்ல. இப்ப உனக்கேன் அவர், நீபோய் கைகால் கழுவிப்போட்டு வா சாப்பிட-போப்பன் நீ. என்று (மகனைத் தடவிக் கொடுத்தாள்)

வேந்தன்: அப்பா அந்த சுப்பற்ற கடையில இன்னும் ரெண்டு பேரோட குடிச்சுப்போட்டு கூத்துப்போட்டுக் கொண்டு நிக்கிறாரா எனக்கு அவர். என்ன செய்யிறது எண்டு தெரியேல்ல அம்மா. (கலங்கிய கண்களுடன்) நான் சோதினைக் காசுகேட்டுத் தரேல்ல. இப்ப குடிக்கிறதுக்கு காசு எங்கால அவருக்கு.

கமலம்: தம்பி நீ அழாதையடா. நான் உனக்கு சோதினைக் காசு நாளைக்கு பள்ளிக்கு போகேக்குள்ள தாறன் நீ இப்ப போய் உடுப்ப மாத்து. என்ன

செய்யிறது எல்லாம் எங்கட தலை விதி. நீ போப்பன் போ.... (என ஆதரவுடன் தலையை வருடினாள்.

வேந்தன்: சரி அம்மா நான்போய் கைகால் கழுவிப்போட்டு வாறன். நீங்க சாப்பாட்ட போடுங்கோ (என்றபடி கிணற்றடிக்குச் செல்ல)

(வேந்தன் கிணற்றுக்குச் செல்ல வேணி உள்ளே வந்தபடி)

வேணி: அம்மா பசிக்குதம்மா சாப்பாட்ட தாங்கோ பசிக்குது (என்றபடி தாயின் அருகே செல்லல்)

கமலம்: சரி பிள்ள அண்ணாவும் வரட்டும் ரெண்டு பேரும் சேர்ந்து சாப்பிடுங் கோவன்.

வேணி: அம்மா அண்ணா வந்திட்டானோ? ஏன் இவ்வளவு நேரம் செண்டதாம் பள்ளியால வர.

கமலம்: காலையில பள்ளிக்குப்போகும் போதே சொல்லிப்போட்டுத்தான் போனவன். ஏதோ மற்ஸ் கிளாஸ் எண்டு- அதுதான் பிந்தினது.

(வேந்தன் குசினியை நோக்கி வந்தபடி)

வேந்தன்: அம்மா சாப்பாட்டைக் கொண்டு வாங்கோ.

கமலம்: உள்ள வா தம்பி. வேணியும் இன்னும் சாப்பிடேல்ல ரெண்டு பேரும் சேர்ந்து சாப்பிடுங்கோ. உள்ள வா தம்பி.

வேந்தன்: (உள்ளே வந்தபடி) ஏன் வேணி இவ்வளவு நேரமும் சாப்பிடேல்ல. (என்றபடி அவள் அருகில் சென்று அமர்கிறான்)

வேணி: எனக்குப் பசிக்கேல்ல அண்ணா. அதுதான் இவ்வளவு நேரமும் சாப்பிடேல்ல.

கமலம்: இந்தாங்கோ ரெண்டுபேரும் சாப் பிடுங்கோ. (இரண்டு கோப்பை களை அவர்களிடம் கொடுத்து விட்டு வெளியே வந்து மாமரத்தின் கீழ் அமர்கிறாள்)

வேந்தன்: வேணி, அப்பா குடிச்சுப்போட்டு அந்த சுப்பற்ற கடையில நிண்டவர். எனக்கு என்ன செய்யிறது எண்டு தெரியாம கிடக்கு. அம்மா பாவம் தோட்டம் செய்து அதில வருகிறது சாப்பாட்டுக்கே காணாது அதில எங்கள் ரெண்டு பேரின்ர படிப்பை யும் கவனிக்கிறதுக்கு எங்க போவா அம்மா. எனக்கு எல்லாத்தையும் யோசிச்சா - படிப்ப விட்டுப் போட்டு பேசாம வேலைக்குப் போனா உன்னையாவது ஒழுங்கா படிக்க வைக்கலாம். (கலங்கிய கண்களுடன்)

வேணி: அண்ணா என்னண்ணா நீ கதைக்கிற நீ படிப்ப விட்டியண்டால் நானும் பள்ளிக்கூடம் போகமாட்டன். இனிமேல் நீ படிப்ப விடப்போறன் எண்ட கதை என்னோட கதைக்கக்கூடாது. சரிதானே.

வேந்தன்: நான் ஒண்டு சொன்னால் நீ ஒரு கதை சொல்லுவ. சரி; நான் இனி இப்பிடிக் கதைக்கமாட்டன். இப்ப சந்தோசம் தானே.

வேணி: (மலர்ந்த முகத்துடன்) அச்சா அண்ணா.

இருவரின் பேச்சினுள்ளும் குறுக்கிட்டு வாசலில் கந்தனின் சத்தம் கேட்கிறது.

(பாடிய படி வந்த கந்தன் மாமரத் தின் கீழ் இருந்த மனைவியைக் கண்டதும் தள்ளாடியவாறு அருகில் வந்தபடி)

கந்தன்: கமலம்..... எடியேய் கமலம் என்னடி நான் கூப்பிடுறது விளங் கேல்லயா.... (கோபத்துடன் கத்துகி றான்)

கமலம்: (எழுந்தபடி) என்னத்துக்குக் கத்திறியள் பிள்ளையள் பயப்பிடப் போகுதுகள். போங்கோ போய் படுங்கோ பேசாமல்.

கந்தன்: என்னடி கனக்க கதைக்கிற. பிள்ளையள் என்டா என்ன? எனக்கு குடிக்க காசு முடிஞ்சுது. எனக்கு இப்ப எப்படியாவது காசு வை. (கத்து கிறான்)

(சாப்பிட்டுக் கொண்டிருந்த வேணியும் வேந்தனும் வெளியே வந்து நின்றனர்)

கமலம்: என்னப்பா கதைக்கிறியள் பிள்ளையள் படிப்புக்கு காசு கேட்டதுகள். அதுக்கே என்னட்ட காசு இல்ல. உங்களுக்கு குடிக்க எங்கால நான் காசுதாறது. கொஞ்சம் யோசியுங்கோ பாப்பம்.

கந்தன்: (தள்ளாடியபடி) எனக்கு தெரியாது எனக்கு காசு வை.

வேந்தன்: (கோபத்துடன்) அப்பா....... நீங்க காசுகேட்ட உடன தாறதுக்கு அம்மா வேலை செய்கிறாவோ அல்லது குடுத்து வைச்சிருக்கிறி யளோ. இல்ல தெரியாமல்தான் கேக்கிறன்.

வேணி: உழைக்கிற காசெல்லாம் வைச்சுக் குடிக்கிறது; குடிச்சுப்போட்டு உந்த தெரு எல்லாம் நாய் மாதிரி அலைகிறது. கொஞ்சமாவது என்னையும் அண்ணாவையும் அம்மாவையும் பற்றி யோசிக் கிறனீங்களா? சொல்லுங்கோ அப்பா (கலங்கிய கண்களுடன்)

கந்தன்: நான் இவ்வளவு நாளா குடிச்சுக் கொண்டு வரேக்க என்ர பிள்ளை யள் ஒண்டும் கதைக்கிறது இல்ல இண்டைக்கு என்ன பேசுதுகள். இதுக்கு நீதான்டீ காரணம் உன்ன (என்றபடி அடிக்கச் செல்கிறான்)

வேந்தன்: (இடையில் பாய்ந்து மறித்தபடி) அப்பா அம்மாவுக்கு அடிக்கா தேங்கோ, வேணி அம்மாவ உள்ள கூட்டிக்கொண்டுபோ.

வேணி: வாங்கோ அம்மா உள்ளுக்க (என்று தாயை அணைத்துக்கொண்டு செல்லுகின்றாள்)

கந்தன்: நல்ல அம்மாவும் பிள்ளையளும் (என்றபடி உள்ளே செல்லல்)

வேந்தன்: ஒருவாறு சண்டைமுடிஞ்சிட்டுது அப்பான்ர குடியை நிப்பாட்டு போணும். (என்றபடி உள்ளே செல்லுகிறான்.)

## காட்சி II

பாத்திரங்கள்: வேந்தன்
காந்தன்
வேணி

இடம்: பாடசாலை மைதானம்

காலம்: இடைவேளை நேரம்

(புதன்கிழமை பாடசாலை மைதானத்தில் காந்தனும் வேந் தனும் அமர்ந்திருந்தனர். அவர்களை நோக்கி கையில் பார்ச்சல் ஒன்றுடன் வந்து கொண்டு இருந்தாள் வேணி. இதனை

அவதானித்த காந்தன் வேந்தனிடம்)

காந்தன்: மச்சான் வேந்தன் உன்ர தங்கச்சி வேணி வாறாளடா.

வேந்தன்: (திரும்பிப் பார்த்தபடி) என்ன? கையில ஒரு பாசல் கொண்டு வாறாள். என்னவாக இருக்கும்.

காந்தன்: அவசரப்படாதையடா மச்சான் வருவாள்தானே.

வேணி: (அருகில் வந்தபடி) அண்ணா அம்மா உனக்கு சாப்பாடு தந்து விட்டவா நீ காலமையும் சாப்பி டேல்ல எண்டு சத்தம் போட்டவா இந்தா அண்ணா இதப்பிடி நான் போப்போறன்.

வேந்தன்: (பாசலை வாங்கியவாறு) நீ சாப் பிட்டியா வேணி.

வேணி: அண்ணா நான் கொண்டு வந்த னான். சாப்பிடடன். நீங்க ரெண்டு பேரும் சாப்பிடுங்க நான் போறன். (என்றபடி செல்லல்)

காந்தன்: மச்சான்வேணி சாப்பிட வில்லை யடா அவளின்ர முகம் காய்ஞ்சு போய் கிடக்கு.

வேந்தன்: ஓமடா மச்சான்! நான் சாப் பிடல்லை எண்டா அவளும் சாப்பிடமாட்டாள். இப்ப பொய் சொல்லிப்போட்டுப் போறாள்.

காந்தன்: மச்சான், உனக்கு இப்பிடி ஒரு தங்கச்சி கிடைக்க நீ குடுத்து வைச் சிருக்கோணும் எனக்கு இருக்குது களே ரெண்டு. நாய்கடி பூனைகடி மாதிரி நிப்பாளவை அதனால நான் பெரிசா அவளவையோட கதைக் கிறதில்லை. (கவலையுடன்)

வேந்தன்: மச்சான் உன்ர தங்கச்சிமாரோட பாசமா இரு அப்ப அவையளும் உன்னில பாசமா இருப்பினம்.

காந்தன்: சரியடா மச்சான் வா நாங்க வகுப்புக்குப் போவம். மணி அடிக்கப்போகுது.

வேந்தன்: சரிவா போவம் (என்றபடி எழுந்து இருவரும் வகுப்பை நோக்கிச் செல்லுகின்றனர்)

## காட்சி III

பாத்திரங்கள்: கமலம்
காந்தன்
வேணி
வேந்தன்

இடம்: வீதியோரம்

காலம்: காலைப்பொழுது

(கமலம், கந்தன், வேணி மூவரும் வீதியால் நடந்து செல்லுகின்றனர். எதிரே வேந்தன் வந்துகொண்டு இருக்கின்றான். தாயைக் கண்டதும் அவர்களிடம் வந்தபடி)

வேந்தன்: அம்மா, அப்பா, வேணி எங்க மூண்டுபேரும் வெளிக்கிட்டீங்கள்.

வேணி: அண்ணா இந்தப் பிள்ளையார் கோயிலுக்குப் போறம் நீயும் வாவன் அண்ணா எங்களோட

வேந்தன்: இல்ல அம்மா-எனக்கு ஏலாமல் கிடக்கு நீங்க போட்டு வாங்கோ நான் வீட்டபோறன்.

கந்தன்: இந்தா தம்பி வீட்டுத் திறப்பு கவனமாவீட்ட போ.

வேந்தன்: சரி அப்பா நான் போறன் (என்றபடி சொல்லுகின்றான்)

வேணி: அண்ணா போட்டுவாறன் (நகைப்புடன்)

வேந்தன்: உனக்கு என்னப்பாக்க நகைப்பதான் இருக்கும். போட்டு வா (என்று

சிரிப்புடன் கூறிவிட்டு செல்லுகிறான்)

## காட்சி IV

பாத்திரங்கள்: வேந்தன்
காந்தன்
வேணி

இடம்: வைத்தியசாலை

காலம்: மாலைப்பொழுது

(மாமரத்தின் கீழ் படுத்திருந்த வேந்தனிடம் வந்த காந்தன்)

காந்தன்: (பரபரப்புடன் அவனருகே வந்து) வேந்தன். என்னோட ஒரு இடத்துக்கு அவசரமா வா. வெளிக்கிடு வெளிக்கிடு. உடன வெளிக்கிடடா.

வேந்தன்: என்ன மச்சான் எங்க எண்டு சொல்லன்.

காந்தன்: எங்க எண்டு கேக்காம என்னோட வா.

வேந்தன்: சரி கொஞ்சம் பொறு வீட்ட பூட்டிப்போட்டு வாறன். (என்றபடி வீட்டை பூட்டிவிட்டு அவனுடன் கிளம்பிச் செல்கின்றான்)

காந்தன்: (வைத்தியசாலை வாசலில் வந்து நின்றபடி) இறங்கு மச்சான் வேகமா உள்ளே போவம்.

வேந்தன்: ஏனடா இப்பிடி அவசரப்படுற ஏன் என்ன பிரச்சினை உனக்கு.

காந்தன்: மச்சான் நான் சொல்லுற விசயத்த உன்னால தாங்க ஏலாது இருந்தாலும் என்னால மறைக்க ஏலாது அதனால் சொல்லுறன் மச்சான் உன்ர அம்மா அப்பா வேணி எல்லாரும் பிள்ளையார் கோயிலுக்கு போகேக்க.......

வேந்தன்: பேகேக்க.... (அதிர்ச்சியுடன்)

காந்தன்: பின்னால வேகமா வந்த லொறி மோதி அம்மாவும் அப்பாவும் அதிலையே இறந்திட்டினம். வேணிக்கு சரியான காயம் ஆசுப்பத்திரியில கொண்டந்து விட்டிட்டு தான் உன்னட்ட வந்தனான். (என்று கூறிமுடித்தான்)

வேந்தன்: என்ன! என்ர அம்மா அப்பா செத்திட்டினமோ.
ஐயோ! கடவுளே நான் உனக்கு என்ன பாவம் செய்தனான். என்ர உறவுகள என்னட்ட இருந்து பறிச்சிட்டியே கடவுளே. (என்று கதறினான்)

காந்தன்: (கலங்கிய கண்களுடன்) அழாதையா – மச்சான் வேணி அவசர வாட்டில இருக்கிறாள் அவளிட்ட போகோணும். வாடா போவம் (என அவனை அணைத்தபடி உள்ளே செல்லல்)

வேந்தன்: அம்மா அப்பாவத்தான் என்னட்ட இருந்து பிரிச்சிட்ட என்ர தங்கச்சியாவது என்னட்ட இருக்கவிடு (அழுதல்)

காந்தன்: (அவனை அவசர வாட்டின் அருகில் இருத்திவிட்டு) அங்கே நின்ற நேசுடன் கதைத்துவிட்டு வந்தவன்) மச்சான் வா வேணியைப் போய் பாப்போம்.

வேந்தன்: சரிவா போவம் (கண்களை துடைத்தபடி)

உள்ளே வேணி ஒரு கட்டிலில் படுத்திருந்தாள் அண்ணனைக் கண்டதும்....

வேணி: அண்ணா... அண்ணா... என்ன

விட்டிட்டு அம்மாவும் அப்பாவும் போட்டினமாம் அண்ணா நீயும் நானும் அநாதையாகிட்டம் (என்று கதறினாள்)

வேந்தன்: (தங்கையை அணைத்து அழுதான்) இல்லம்மா நீ அநாதை இல்ல உனக்கு நான் இருக்கிறன். நீ அழாதை அம்மா (என்று கண் களைத் துடைத்தான்)

காந்தன்: வேணி அழாதையும் பேசாமல் படுத்திருங்கோ நாங்கள் போட்டு பிறகு வாறம். (அழக்கூடாது என கண்களைத் துடைத்தான்)

வேணி: சரி என தலையசைத்தபடி கட்டிலில் மெல்ல சாய்ந்தாள். அவளிடம் விடைபெற்று வெளியில் வந்தனர்.

வேந்தன்: நான் என்னடா செய்வன். எனக்கு ஏன் இப்பிடி நடந்தது. வேணிய பாத்தனீதானே அவளால ஏலாது அதோட இந்த இழப்பும் வேற என்னாலயே தாங்க ஏலாமல் கிடக்கு. அவள் எறும்பு கடிச்சால் கூட கத்துவாள். என்ர வேதனையை போய் ஆரோடு நொந்து கொள்ளுகிறது. நான் (என்று கதறியழுதான்).

காந்தன்: மச்சான் நீதான் தைரியமா இருக்க வேணும் வா நாங்க அம்மா அப்பாவின்ர இறுதிச் சடங்க செய்யப்போவம் (என்று அவனை அழைத்தான். வேந்தன் தனது வேதனையை ஆரோடு நொந்து கொள்வது என்று தெரியாமல் அவனோடுகூட நடந்தான்).



# பெற்றோரைப் பேணுவோம்

செல்வி ம. ரம்மியா,
ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை, சுன்னாகம்.
தரம் 5 B.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", "தாயிற் சிறந்தொரு கோவிலும் இல்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்னும் முதுமொழிகள் பெற்றோர் தம் சிறப்பினைப் பேசுகின்றன. நம் பெற்றோர்கள் நமக்குச் செய்த உதவியும், அவர்கள் காட்டும் அன்பும் பாசமும் அளவிடற்கரியன. அவற்றைச் சொல்லில் வடித்தலும் அரிது.

நமக்கு என்றும் இனியவர்கள் தாய் தந்தையரே. இவர்களை விடச் சிறந்தவர் எவரும் இவ்வுலகில் எமக்கில்லை. ஆசிரியரும் தெய்வமும் அரசனும் அவர்களுக்குப் பின்னவராவர்.

நம்மைப் பெற்று வளர்த்திட நம் பெற்றோர் பட்ட துன்பங்கள் பலப்பல. இறைவனை வேண்டி விரதமிருந்தனர். ஈ, எறும்பு தீண்டாமல் பேணி வளர்த்தனர். வேளையறிந்து உணவளித்துக் காத்தனர். நமக்கு நோய் வாய்ப்பட்டால் துடிப்பதும் அவர்களே. நம்மைப் பாடசாலைக்கு அனுப்பினார்கள். நமக்கு வேண்டிய சகல உபகரணங்களையும் உடைகளையும் வாங்கித் தந்தனர். கல்வி கற்று நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ வேண்டுமென விரும்பினார்கள். அவர்களது அன்பும் தியாக சிந்தையும் என்றும் நம்மால் மறக்க முடியாதவையாகும்.

வாழ்நாள் முழுவதும் நமது நலனுக்காகப் பாடுபட்ட பெற்றோர்களை நாம் என்றும் நன்றியுடன் போற்றக் கடமைப் பட்டுள்ளோம். நமது பெற்றோர்களே எமது கண்கண்ட கடவுளாவார். அவர்கள் சொல்வனவற்றை நாம் கேட்டு நடத்தல் வேண்டும்.

"ஏவா மக்கள் மூவா மருந்து" என்ற பொன்மொழிப்படி பெற்றோரின் குறிப்பறிந்து நாம் செயற்படவேண்டும். பிள்ளைகளே பெருஞ் செல்வமெனக் கருதி எம்மை வளர்த்த பெற்றோரை எந்நாளும் நாம் பேணிக்காத்தல் வேண்டும். குறிப்பாக முதுமையடைந்த வேளையில் பெற்றோரின் தேவையறிந்து அவர்களுக்கு வேண்டியவற்றை உதவிட வேண்டும்.

இன்று நம்மத்தியில் பெற்றோரைப் பேணிக் காப்பதில் பிள்ளைகள் அதிக நாட்டம் கொள்வதாயில்லை எனக் கூறப்படுகிறது. சில இளைஞர்கள் பெற்றோரின் அறிவுரைகளைக் கருத்தில் கொள்ளாது அவர்களை மனம் நோகும் வகையில் கண்டிக்கவும் முற்படு கின்றனர். பாடுபட்டு வளர்த்த பெற்றோர் களது அன்பையும் அருமையையும் நன்றி யையும் மறந்து இவ்விதம் நடந்துகொள்வது தவிர்க்கப்படல் வேண்டும்.

பிள்ளைகள் தமது கடமைகள்

எவையென்பதை நன்கு உணர்ந்து செயற்பட வேண்டும். தாய் தந்தையரைப் போற்றி நடந்த பெரியோர் பலருடைய வரலாறுகளைப் படித்திருக்கின்றோம்.

உலகம் போற்றும் மகாத்மாகாந்தி யடிகள் தன் வாழ்வில் இறுதிவரை தாயின் சொல்லை மறவாது வாழ்ந்து அழியாப் புகழ் பெற்றமையை நாம் நினைவிற் கொள்ளல் வேண்டும்.

நமது அறநூல்கள் எல்லாம் தாய் தந்தையரை மதித்துப் பேணிக் காத்திட வேண்டும் என்றே வலியுறுத்துகின்றன.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண் டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"என்ற வள்ளுவர் வாக்கு இதனையே தெளிவுபடுத்துகிறது. பெற்றோரைப் பேணிக் காக்கும் கடமை பிள்ளைகளுக்கு உண்டு. தாய், தந்தையர் செய்த தியாகங்களை, நன்றிகளை மறப்போர் ஒரு போதும் உய்தி பெற முடியாது. அவர்களது மனம் நோகாது மகிழ்வுடன் வாழ்வதற்கு உதவுதலே பிள்ளைகளின் பெருங் கடனாகும்.

"பணியுமாம் என்றும் பெருமை" என்றார் திருவள்ளுவர். பணிவு என்றும் பெருமை தரும். பணிவு என்றால் பெரியவர் களுக்கு அடங்கி மரியாதை காட்டுதல் எனப் பொருள்படும்.

எமக்கு என்றும் இனியவர்கள் தாய் தந்தையரே. இவர்களை விடச் சிறந்தவர் எவரும் இவ்வுலகில் எமக்கில்லை. நாமும் கண்கண்ட தெய்வங்களை என்றும் போற்றி வணங்குவோம்.



# சுவர் (கவிபாடும்) ஓவியப் பெண்கள்

திரு. து.துசியந்தன்,
ஆசிரிய ஆலோசகர் (சித்திரம்)
வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

கண்ணுக்கு மையழகு கவிதைக்குப் பொய்யழகு என ஒரு பாடல், கவிஞனின் பொய்மையே கவி என்கிறது. பொதுவாகக் கவி என்பது கவிஞனின் உள்ளத்தில் இருந்து எழும் மிகையான அழகுணர்வு எனலாம். கவிதை உலகில் இன்று நேற்று தோன்றிய தன்று, மிகப் பழங்காலத்தொட்டு, அது பயின்று வருகிறது. சரித்திரம் தோன்றுவதற்கு முன் தொட்டு எல்லா மொழிகளிலும் கவிதைகள் தோன்றின. இன்று உலகில் எத்தனையோ மொழிகள் தமக்கென வரிவடிவம் இல்லாமல் இருக்கின்றன. எனினும் அவற்றில் கூட கவிதை உண்டு என்பதை அறிவோம்.

இதேபோன்று மனிதன் பேசும் மொழியை அறியும் முன்னே ஓவியமொழியை அறிந்திருந்தான். தனது அழகுணர்வின் வெளிப்பாட்டினைத் தான் வாழ்ந்த குகைச் சுவரில் வரைந்தான். காலம் செல்ல ஓவியத்திலே கவிபாடும் திறன் பெற்றான்.

கவிஞர்கள் மலருக்கும் மங்கைக்கும் இடையில் தொடர்பைக் கண்டது போல ஓவியர்களும் கண்டனர் என்பதற்கு சிகிரியா ஓவியங்கள் மகத்தான எடுத்துக்காட்டுக்களாக அமைகின்றன. இந்த சிகிரியா ஓவியங்கள் கி.பி. 4ஆம், 5ஆம் நூற்றாண்டில் வரையப் பட்டவை. இவை இந்தியாவில் குப்த கலை மரபின் தழுவல்களில் உருவாக்கப் பட்டவை. குப்தர் காலத்து ஓவியக் கலைஞர்கள் வேலைக்காரியானாலும், நடிகையா னாலும், அரசியானாலும் பெண் அழகில் அதிக ஆர்வங்காட்டி வரைந்தார்கள். அவ்வுருவங் களைப் பார்க்கும்போது மனம் சஞ்சலப்படு மாறு வரைந்தார்கள்.

சிகிரியா பெண் ஓவியங்கள் கவிதைக்கு ஒப்பானது என்பர். இதற்கு காரணம் இந்தப் பெண்கள் இயற்கைத் தோற்றத்திலும் மிகையான அழகுடன் காட்டப்பட்டுள்ளனர். இப்பெண்களின் சிறுத்த இடை, பெருத்த மார்பகங்கள், மென் உதடுகள், நீண்ட அழகிய கண்கள் என்பன காவியங்களில் பெண்களை வர்ணிப்பதற்கு நிகரானது ஆகும்.

சிகிரியாவில் 500க்கு மேற்பட்ட பெண்ணோவியங்கள் இருந்ததாகக் கருதப்படு கின்ற போதிலும் இன்று 18 பெண் உருவங்களே எஞ்சியுள்ளன. இவ்வுருவங்கள் சோடியாகவும் தனியாகவும் காணப்படு கின்றன. இப்பெண் உருவங்கள் மலர்த்தட்டை ஏந்தியவாறும் மலர்களைத் தாங்கியவாறும், மலர்களைச் சொரிந்தவாறும் காணப்படு கின்றன.

காவியத்து மங்கையை ஓவியத்திலே புனைந்த சிகிரியாக் கலைஞனின் ஆற்றல்

மகத்தானது. இதேவேளை இந்த ஓவியத்து மங்கையை கவியிலே புனைந்த கவிஞரும் உள்ளனர் என்றால் அது வியற்பிற்குரியது. பல நூறு வருடங்களுக்கு முன்னர் இவ்வோவியங் களைப் பார்க்க வந்த கவிஞர் களால் இப்பெண் உருவங்கள் தமக்கு ஏற்படுத்திய மனப்பதிவைச் சிகிரியாவில் பளிங்குச்சுவரிலே பொறித்துச் சென்றிருக்கிறார்கள்.

குகைப் பாதைச் சுவரின் மழமழப் பான உட்புறம் இன்றுங்கூடப் பளபளப்பாக இருப்பதாற் பளிங்குச்சுவர் என்னும் பெயர் அதற்குப் பொதுவாக வழங்குகிறது. நன்கு மினுக்கப்பட்டுள்ள இச்சுவரைக் கூர்ந்து கவனிப்பின், பல சுவரெழுத்துக்கள் எமக்குப் பழக்கமில்லாத ஒரு வரிவடிவிலே ஆழமின்றிப் பொறிக்கப் பட்டிருப்பதையும் காணலாம். இவை கடந்த நூற்றாண்டுகளிற் சிகிரியைப் பார்க்கச் சென்றவர்களால் பொறிக்கப்பட்டவையென்பது, இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆயிரமாண்டு களுக்கு முன் அங்கு சென்றவர்கள் இந்தப் பளிங்குச் சுவருக்கு சிதைவு அதிகம் ஏற்படா வண்ணம் தாம் எழுதியவற்றைக் கவனமாகச் சிறிய எழுத்துக்களில் மெல்லெனப் பொறித்துச்சென்றிருக்கின்றனர்.

இவ்வெழுத்துக்கள் கி.பி. 7ஆம் நூற்றாண்டு தொடக்கம் 11 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலத்திற்குரியவையெனக் கொள்ளப்படும். நூற்றுக்கணக்கான இச்சுவரெழுத்துக்கள் யாவும் ஒரே மாதிரியாக இருப்பதால் இதற்கு உலோக எழுத்தாணி ஒன்று பயன்பட்டிருத்தல் வேண்டும் எனக் கருதப்படுகிறது. பெரும்பாலான சுவரெழுத்துக்களில் உபயோகிக்கப்பட்ட மொழி, மிகப்புராதன சிங்கள இலக்கியங் களிற் காணப்படும் மொழி நடைக்கும் மாறுபட்ட முக்கிய ஒரு நிலையில் அமைந் திருப்பதால், இவ்வெழுத்துக்களை வாசித் தறிவது மிகக் கடினம் எனப் பரணவிதான என்ற ஆய்வாளர் கூறுகிறார். பொதுவான சொற்களும் சொற்றொடர்களும் அக்காலச் செய்யுள் இலக்கியத்திற் பயின்றிருக்க வேண்டுமெனப் புலப்படுவதுடன், இப்போது நமக்குக் கிடைக்காத அக்கால இலக்கியத்தின் தன்மையையும் காட்டுவனவாயுள்ளன. இவ்வாரம்பகால எழுத்தாளர் தாம் சிகிரியாவிற் கண்ட அழகும் சிறப்பும் மிக்க காட்சிகளைப் பற்றியும், பிரதானமாகப் பாறையின் மேற்குப் புறத்தில் உள்ள அநேக ஓவியங்களின் எழில்நலம் பற்றியும், அவற்றைக் கண்டதும் தமது மனத்திடைப் பதிந்த கருத்துக்கள் பற்றியும் சிறப்பாகத் தம் செய்யுள்களிலே எடுத்துக் கூறியுள்ளனர். இங்குள்ள சுவர்க்கவியொன்றில் இதைக் காணலாம்.

"வாவியைக் கண்ட அன்னம் போல்
நன்கு மலர்ந்த தாமரைகளைக் கண்ட வண்டு போல்
அவள் சொல்லிய செய்தியை நான் கேட்டேன்
பேதலித்த என் நெஞ்சு ஆறுதல் அடைந்தது"
(மொழி மாற்றம் செய்யப்பட்டது)

இவ்வெழுத்தாளர்கள் தமது பெயரையும் பதவியையும் எழுதிச் சென்றதால் சமூகத்தின் பல தரப்புக்களிலிருந்தும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இந்தியாவில் இருந்துமே, இப்பாறையைப் பார்க்க மக்கள் வந்தார்கள் என்பது புலனாகிறது. எனவே, இச்செய்யுள்கள் ஒரு சீரான இலக்கியத் தன்மையைக் காட்டவில்லை ஆயினும், இவற்றை ஆக்கியோர் பலர், செய்யுள் இலக்கியத்தை ஓரளவு அறிந்திருந்தன ரென்பதும், மற்றவர்களின் சுவரெழுத்துக் களைப் பார்த்து நல்ல செய்யுள் எவை, கூடாதவை எவையென வேறுபடுத்தக் கூடியளவு திறமை பெற்றிருந்தனர் என்பதும் புனாகின்றது.

பார்க்கச் சென்றவர்களுள் ஒருவர் தாம் ஓர் ஓவியத்திற் கண்டறிந்தவற்றை

வாசகருக்குச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார்.

"ஒருபுறம் சாய்ந்து கொண்டும், ஒரு கையை மற்றைய கைக்கு அருகில் வைத்துக்கொண்டும், மழப்புற்ற நுண்ணிடை யையுடைய மங்கை நல்லாள் ஒருத்தி தனது கையிலுள்ள மலரை நோக்குகிறாள்"

(மொழிமாற்றம் செய்யப்பட்டது)

சிகிரியாக் காட்சிகளைக் கண்டோரின் மனத்தில்தோன்றிய கருத்துக்களின் பதிவுகளாகவே பெரும்பாலான சுவர்க்கவிகள் அமைந்துள்ளன. சிகிரியா பெண் ஓவியங்கள் கண்டோரை மிகுதியாகக் கவர்ந்தவை. இவ்வோவியப் பெண்களை உயிருள்ள மகளிராகப் பாவித்துப் பலர் கவிபாடியுள்ளனர். சிகிரியாவைக் காணச்சென்ற இளைஞர் பலர், அவ் இளமகளிர் தம்பாற் பரிவின்றி மௌனமாக இருப்பதைக் குறித்துப் புலம்பிப் பின்னர், அம்மகளிர் இன்னும் தம் தலைவன் காசியப்பனை இழந்த கவலையில் மூழ்கியுள்ளனர் போலும், எனக் கூறித் தம்மைத் தாமே தேற்றிக் கொண்டமையைத் தமது கவியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்.

"காதலர் பிரிந்து அவர் துன்புற்று துயருறும்
நன்மலர் நீலாம்பல் நீள் விழி மங்கையரை
பியல் மலைச் சாரலில் வந்து கண்டனன்"

(மொழிமாற்றம் செய்யப்பட்டது)

காசியப்பன் தன் அரண்மனை மகளிரை இவ்வண்ணம் நூற்றுக்கணக்கானவரின் காட்சிக்கு விட்டு விட்டானே !

இது எப்படி ஆகலாம்? என ஆச்சரியம் தெரிவித்துள்ளார் ஒருவர். பண்டைக் காலத்திற் சிகிரியாவைப் பார்க்கச் சென்றோர். மற்றவர் மனதைப் புண்ணாக்காதவாறு நயமாகக் கேலிபண்ணும் நகைச்சுவையுணர்வுடையவர் என்பதற்கும் நல்ல சான்றுகள் உள. உருகுணையிலிருந்து சென்றவர் ஒருவர், தமக்கு இசைந்த அழகியர் மீது பின்னர் தமக்குச் சலிப்புத் தோன்றியதால். தாம் அவர்களை விட்டு வந்ததாகக் கூறுகின்றார்.

பளிங்குச் சுவரிலுள்ள எழுத்துக்களிற் கணிசமான அளவின பெண்களால் எழுதப்பட்டவை. அச்செய்யுள்களின் உள்ளடக்கம் பெண்பாலரின் குணவியல்புகளையே கொண்டுள்ளன வாயினும், அவர்கள் அழகிய செய்யுள்களை ஆக்கும் ஆற்றல் உடையவராயிருந்தனர் என்பது தெளிவாகிறது. தேவா எனும் பெயருடைய பெண்ணொருத்தி பின்வருமாறு இசைக்கின்றாள்.


"மலைச்சாரல் மான விழியாளென் மனத்தே
அலைசின மூட்ட வலமந்தேன், அவள் தன் கையில்
விலை முத்துப் பல கோத்த வில்லாரந் தொங்கச்
சிலையொத்த வழிகாட்டியெனை யேய்த்தாளென் செய்வேன்"

(மொழிபெயர்க்கப்பட்டது)

எனவே சிகிரியாக் கலைஞன் தன் ஓவியங்களில் கவிப்பெண்களைப் படைக்க, அதைக்கண்ணுற்ற கவிஞர்கள் கவியாக படைத்துள்ளனர்.

**உசாத்துணை நூல்கள் :**


1. நம் முன்னைய சிங்கள ஓவியங்கள் - நந்தசேன விஜயசேகரா
2. இடைக்கால சிங்களக்கலை - ஆனந்த குமாரசுவாமி
3. நாட்டின் கல்விக்கும் பண்பாட்டிற்கும் என்றுமுள்ள நினைவுச் சின்னம் - த. சில்வா
4. கலைக்களஞ்சியம்
5. ஏ.மரே - The rock Painting of sigiri



# காளமேகம் பொழிந்தது கவி மழை

க. சின்னத்துரை (உ.க.ப)
தென்மராட்சி.

இற்றைக்கு 500 ஆண்டுக்கு முற்பட்ட காலம். இயற்கை எழில் பொங்கும் நந்திக் கிராமம். கும்பகோணத்தின் அயற்கிராமம். அரங்கநாதர் பள்ளிகொள்ளும் தலத்திற் கருவில் உள்ள கிராமம். அரங்கன் அடியார் வாழும் அழகிய கிராமம். அரந்த நாதனின் அருளால் வந்துதித்தவர் வரதன். வரதன் வைணவர். திருவானைக்காவில் உறையும் சிவ்னின் தொண்டால் சைவரானவர். சிவ்த்தொண்டு செய்த மோகனாங்கியின் மீது காதல் கொண்டவர். காதல் கைகூடாது தடுத்தது தூக்கம். தவத்தில் சரஸ்வதியைக் கண்ட அந்தணனுக்கு அதிஷ்டம் தடுக்க அருகிருந்து தூங்கிய வரதன் அதிஷ்ட தேவதையின் பார்வையைப் பெற்றான். சரஸ்வதி தம் பலத்தை வரதனுக்கு வழங்கினாள். நாவினால் ருசித்து நாமகள் நல்லருளை உள்வாங்கினான். தேவி மறைய எல்லாக் கலைகளும் வல்ல பண்டிதனாகச் சூல் கொண்ட காளமேகம் போலக் கவிமாரி பொழியத் தொடங்கினான் வரதன். அந்தக் காளமேகமே தமிழுக்கு மாரியாய் தமிழ்ப் பாமழை சொரிந்த கவி. அந்தக் கவி காளமேகப்புலவர். வசைபாடுவதில் வல்லவர் நிந்தாஸ் துதி செய்வதில் நிகரற்றவர். அக் கவியின் கவித்துளி சில காண்போம்.

பாவிற் சிறந்தது வெண்பா. செப்பலோசை கொண்ட வெண்பா. அத்தகு வெண்பாவால் அன்னை சரஸ்வதிக்கு பக்திமழை பொழிந்தது காளமேகம்.

"வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடு என்னைச்
சரியாசனம் வைத்த தாய்"

எனத் தாயின் புலக்காட்சியை கண்முன்னே கவி மழையாகத் தருகிறார் காள மேகப் புலவர். கவிமழை பொழிந்தது காளமேகம் வெள்ளம் பெருகியது. தமிழ்க் கடல் ஓசை ஒலி எழுப்பியது. மழை நீரும் ஓடும் நீரும் இரண்டறக் கலந்தது. கவியின் நாவில் சிலேடைக் கவி தாரை தாரையாய்த் தமிழ் மணம் பெருக்கிற்று. பாம்புக்கும் வாழைப்பழத்துக்கும் ஒரு மழை, பாம்புக்கும் எள்ளுக்கும் ஒரு மழை, வைக்கோலுக்கும் யானைக்கும் ஒரு மழை, ஆமணக்குக்கும் யானைக்கும் ஒரு மழை அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சூல் கொண்ட காளமேகம் இரட்டையரை விஞ்சிச் சிலேடைக் கவி மழை பொழிந்தது.

ஆடிக்குடத்தடையும் ஆடும் போதேயிரையும்
முடித்திறக்கின் முகங்காட்டும் - ஓடிமண்டை
பற்றில் பரபரெனும் பாரில் பிண்ணாக்கும் - உண்டாம்
உற்றிடு பாம்பு எள்ளெனவே ஓது.

எனப் பாம்பையும் எள்ளையும் விளக்கி சிலேடையாகப் பாடிய பாடல் இது. இவ்வாறு பல பாடல்கள் காளமேகத்தின் கைவரிசை.

கட்டித் தழுவுதலால் கால்சேர ஏறுதலால்
எட்டிப் பன்னாடை இழுத்தலால் - முட்டப்போய்
ஆசைவாய்க் கள்ளை அருந்துதலால் அப்பனையும்
வேசை எனலாமே விரைந்து.

"கள்" தரும் பனையும் வேசையும் ஒன்றாய்க் கவின்மழை தந்தது காளமேகம். இவ்வாறு பல தனிப்பாடல்களில் சிலேடைக் கவிமழை மொழிந்தது காளமேகம்.

சில வேளைகளில் பருவமழையும், சூறாவளி மழையும், மேற்காவுகையும் இணைந்து சூல் கொண்டு மழை பொழிவதும் உண்டு. தமிழ்க் கவிமழையிலும் பல மழை திரண்டு ஒரு சொல் பல பொருள் புலப்படப் பெருமழை பொழிந்தது காள மேகம். பாக்கு எனும் பதம் பெருஞ்சூலாய் பாமழை தந்தது.

"கொட்டைப் பாக்கும் ஒ, கண் கூடையைப் பாக்கும் மடியில்
பிட்டைப் பாக்கும் பாகம் பெண் பாக்கும் - முட்ட நெஞ்சே
ஆரணனும் நாரணனும் ஆதிமறையும் தேடும்
காரணனைக் கண்ட களிப்பாக்கு"

எனப் பரமசிவனின் பிட்டுக்கு மண்சுமந்த காட்சியைக் கவிமழையாகத் தருகிறது காளமேகம்.

காளமேகத்தின் கவிமழையின் பெருமை சொல்லிமுடியா; சொல்லிலடங்கா. அதி மதுரகவி உன்பெயர் என்ன எனப் பாடியது இப்பாடல்.

"இம்மென்னுமுன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம் பாட்டா காதோ - சும்மா
இருந்தால் இருந்தேன் எழுந்தேனேயாயின்
பெருங்காளமேகம்பிளாய்"

எனப் பெரும் கருக்கொண்டெழுந்த கருமேகத்தைப் போல் கவிமழை பொழியும் காளமேகம் எனக் தற்றிறம் கூறுகிறார் வரதர்.

காளமேகம் நினைத்த மாத்திரத்தில் நில்லாது மழை பொழியும். கவிமழை நில்லாது நினைத்த மாத்திரத்திலேயே பாடுந்திறன் காளமேகத்துக்கே உண்டு. மோர் கொடுத்த வேளையிலும் கும்பகோணம் சமாராதனையிலும் நினைத்த மாத்திரத்தே உணர்ச்சிச் சீறலொடு மின்னலும் மழையும் பொழிகிறது காளமேகம்.

சுருக்கவிழ்ந்த முன் குடுமிச் சோழியா சோற்றுப்
பொருக்கு உலர்ந்த வாயா புலையா - திருக்குடந்தைக்
கோட்டானே, நாயே, குரங்கே உனை ஒருத்தி
போட்டாளே வேலை அற்றுப் போய்

என உள்ளங் குமுறிக் குடைந்து கவி மழை பொழிந்தது காளமேகம்.

கவிவாணர் மத்தியில் இது சாதாரண மேகமன்று பெரிய சூல்கொண்ட காளமேகம். இது பொழிவதும் பெருமழைதானெனப் பாடியது.

"வாலெங்கே? நீண்ட வயிறெங்கே முன் இரண்டு
காலெங்கே? உள் குழிந்த கண் எங்கே சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள் நீவிர்
கவிராசன் என்று இருந்தக்கால்"

என்று நீங்கள் கவிஞர்களல்ல (கவிகள்) குரங்குகள் என்று எள்ளி நகை மழையாய்ப் பொழிகிறது. காளமேகம் மேலும் முருகப் பெருமானை எள்ளி நகை மழை பொழிவதும் காளமேகம். தில்லை நடராசர் நடனத்திலும் நகையாகக் காள மேகம் மழை பொழிகிறது.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் ஆயிரம் ஆயிரம் பாடல் பாடியிருப்பினும் காளமேகம் போல் நின்ற இடத்தில் நின்று குமிட்டிப் பொருமி ஓரெழுத்து வர்க்கத்தால் கவிமழை பொழிய முடியவில்லை. ஆனால் காளமேகம் ககரவரி, தகர வரி வைத்து தன் கவித்துவத் திறனைப் பெருமழையாகத் தந்திருப்பது காளமேகம் பொழிந்தது கவி மாரி என்பதற்குச் சான்றாகிறது.

"காக்கைக்காகா கூகை கூகைக்காகா காக்கை
கோக்குக் கூக் காக்கைக்குக் கொக்கொக்க - கைக்கைக்கு
காக்கைக்குக் கைக்கைக்காகா"

என அற்புதமாக ஓரெழுத்து வரியிலேயே தத்துவமாக ஒப்புமையாகக் கவிமழை பொழிகிறது காளமேகம். இக் கவியானது காக்கைக்குப் பகை கேட்டான் கோட்டானுக்குப் பகை காக்கை பகலில்

காகம் கூகையை வெல்லும். இரவில் கூகை காக்கையை வெல்லும். அரசன் உலகத்தைக் காப்பாற்றுவதற்கு மீனை நோக்கிக் காத்திருக்கும் கொக்கைப் போன்றிருந்து காலம் வாய்த்தபோது செயலைச் செய்து முடிக்க வேண்டும். அவ்வாறில்லையேல் பகைவனை வென்று நாட்டைக் காப்பாற்று தல் எந்தத் தலைவனாலும் ஆகாது. என மிக ஆழமாகப் பெருங் குமிழியாகக் குறிவைத்துப் பொழிகிறது காளமேகம்.

இவ்வாறே த்கர எழுத்துவரியில் பூஞ்சோலையில் மலரின் இனிமையானது எது என வண்டை வினவுவதாக அமைகிறது ஒரு பாடல்

தத்தித்தாதூதுதி தாதூதித்தத்துதி
துத்தித்துதைதி துதைந் தத்தாதூதுதி
தித்தித்த தித்தித்த தாதெது தித்தித்த
தெத்தாதோ தித்தித்த தாது

என் ஓசை ஒத்திசை புலப்பட ஒப்பிலாக் கவிமழை பொழிகிறது காளமேகம்.

மேலும் தலைவன் பிரிவால் துயருறும் தலைவியின் பிரிவாற்றாமையை தகர அக்கரத்தில் தருகிறது காளமேகம்.

தாதிதூதோ தீது தத்தை தூதோதாது
தூதிதூதெத்தித்த தூததே - தாதொத்த
துத்தி தத்தாதே துதித்துத் தேத் தொத்தீது
தித்தித்த தோதித் திதி

எனத் தலைவி தூது அனுப்ப எண்ணுவதாக அமைகிறது இப்பாடல்.

எனவே காளமேகம் தமிழணங்கின் நற்றேன் பருகி. தன்னிகரில்லாத் தலைவன் என்று தரணி மாந்தர் போற்றத் தந்த கவிமாரி (மழை) வகை வகையாக, பல்வேறு படிமமாக, பல்வகை உணர்ச்சியும் உட் பொருட் பொதிவும் உவப்பப் பல்சுவை நகைபல காட்டி நானிலம் போற்றும் நற்கவி பலருள்ளும் நாயகனாவன் காளமேகம். காளமேகம் தந்தது தனித்தனிப்பாடல் பற்பல, திருவானைக்கா உலா, சித்திரமடல், பரப்பிரமவிளக்கம் முதலான நூல்களையும் தமிழுக்கு அளித்து தமிழன்னை அழகும் பொலிவும் நளினமும் செழுமையும் பெற காளமேகமே கவி மாரி பொழிந்தது.

"வாழ்க, வளர்க நற்றமிழ்,
சூழ்க காளமேகமெங்கும்
பொழிக கவி மழை"



# ஆசிரியத்துவம் ஓர் நோக்கு

மகேசு பங்கயன், ஆசிரியர் ,
யா/தட்டாதெரு மெ.மி.த.க.பாடசாலை, பருத்தித்துறை.

உலகின் தொன்மையான வாண்மைகளில் ஒன்றாக விளங்கும் ஆசிரியத்துவம் சமூகமயமாக்கல் செயற்பாடுகளை முன் எடுப்பதற்கு துணைநின்று வந்துள்ளது. "மெய்ப்பொருள் காண்பது அறிவு" எனும் பட்டறிவைக் கையளிப்பதிலிருந்தும், சடங்குகளை மேற்கொண்டு ஆற்றுப்படுத்தலை மேற்கொள்வதிலிருந்தும், மாயவித்தைகளை ஆற்றுகை செய்வதிலிருந்தும் வளர்ச்சியடைந்ததாக அறிகை மானிடவியல் குறிப்பிடுகின்றது.

அரசின் தோற்றத்தோடு அதிகாரங்களை நிலைநிறுத்தும் கரங்களாக ஆசிரியர் உருவாக்கம் பெற்றனர். தொன்மை யான கிரேக்க மரபில் ஆசிரியர் ஒழுக்கம், இலக்கணம், கணிதவியல், முதலாய அறிவுப்புலங்களை வலிமைப்படுத்தும் சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர். இதன் ஒப்புமையை பண்டைய தமிழகத்திலும் காணமுடியும். அறிகை வடிவின் குறியீட்டு வடிவினராக அமைந்த ஆசிரியர் கணக்காயர் எனவும் அழைக்கப்பட்டனர்.

ஆசிரியத்துவத்தைக் காப்பாளர்களாக ஆசிரியர்கள் விளங்குதல் இன்றியமையாதது. எம்மைச் சூழ வளர்ந்துவரும் சமூகமயப்படுத்தல் கோட்பாட்டிற் குடும்பம், பாடசாலை, சமவயதுக்குழுக்கள், மதம்சார்ந்த கல்விப்பிரயோகங்கள் கணினி அறிவியலின் வளர்ச்சி என்ற பல்வேறு காரணிகள் இதில் பங்கெடுக்கின்றன. குறிப்பாக, மதங்கள் கூறும் கோட்பாடுகள் யாவை என்பதை மிகச் சுருக்கமாக ஆராய்கிறது இக்கட்டுரை.

எந்த மதமும் பாரியதொரு கல்விச் செயன்முறை ஆகிறது. மனிதன் தனது ஆன்மிகத் தேவைகளைச் சமய சிந்தனையுடன் ஊடாகவே நிறைவுசெய்து கொள்ளுகிறான். ஆன்மீக வழிகாட்டல், உளப்பாதுகாப்பு, மனிதத்துவம் எல்லாவற்றையும் சமய சிந்தனை ஊடாகவே பெற முடிகிறது. உலகில் தோன்றிய ஒவ்வொரு சமயமும் உயர்வான கல்வி சார்ந்த சக்திகள் ஆகும். குறிப்பாக, இலங்கையின் கல்வி, சமய தத்துவார்த்த பின்னணியைக் கொண்டது. இவை ஒழுக்க விதிக்கோவையினை முடிவு செய்கின்றன.

புத்தபெருமானால் தோற்றுவிக்கப்பட்ட பௌத்தமதம் தத்துவத்தின் உயர் எல்லையைச் சித்திரிக்கின்றது. கணத்துக்குக் கணம் மாற்றமடைதலாகிய கணபங்கவாதம் ஒவ்வொரு பொருளிற்கும் உரித்தானது நித்தியமின்மை ஆகிறது. உலகில் உள்ள அனைத்தும் தற்காலிகமானவை. வகுப்பறையில் மாணவனை அறிய இத்தத்துவம் உதவுகிறது. எவையும் நிலையற்ற, சதாமாறிக் கொண்டிருக்கும் பௌத்தமத தத்துவம் ஒரு ஆயுட்காலக் கல்விச் செயன்முறை ஆகும். அறிவு, திறன், மனப்பாங்கு ஒருவரின் வாழ்க்கையின் முடிவுவரையும் இடையீடு

இன்றிப் பரம்பிச்செல்லும் என்பது பௌத்த கல்வியின் அடிப்படை. இதனால், இக் கல்வித் தத்துவமானது அதன் இலட்சியமாகப் பரிபூரண விடுதலையைக் கொண்டது. இன்ப துன்பங்களிலிருந்து பரிபூரணமாக விடுபடுதல் ஆகும். மனிதனை சுகப்படுத்துவது பௌத்த கல்வித்தத்துவம், சரியான சிந்தனை, சரியான எண்ணங்கள் என்பவற்றின்மீது கட்டி யெழுப்பப்பட்டது.

**இந்துக் கல்வி மரபு**

பரம்பொருளை உணர்ந்து கொள் வதே வாழ்க்கையின் உயர்ந்த இலட்சியமாகும் எனக்கொண்டு மனிதர்கள் இவ்வுலகில் பிறக்கின்றனர். பரம்பொருள் என்பது சர்வவல்லமை பொருந்திய கடவுளைக் குறிக்கும். முற்பிறப்பில் தோன்றிய கருமங் களுக்கு ஏற்ப மனிதன் தோன்றி அதற்கமைய சுக துக்கங்களை அனுபவிக்கின்றான். கடவுள் பற்றிய முழுவிளக்கமும் கிடைக்கும்வரை மறுபிறப்பு நடந்து கொண்டேயிருக்கும். ஆன்மா ஒரு போதும் மரணிப்பது இல்லை. ஆன்மா கடவுள் அல்ல. சர்வ வல்லமை பொருந்திய கடவுளின் கருணை ஆன் மாவுக்குக் கிடைக்கின்றமையால் ஆன்மா மறுபிறப்பிலிருந்து மீட்சியடைகிறது. சகலவித போகங்களையும் அனுபவிக்கும் இன்பம் தற்காலிகமானது. இதனை இக்கல்வித் தத்துவம் விளக்குகின்றது. மனதினை அடக்குவது பிரதான இலட்சிய மாக அமைந்து கடவுள் தொடர்பாக அறிந்து கொள்வது இதன் அடிப்படையாகிறது. சைவ சித்தாந்தம் கூறும் இறுதி நிலையாகிய ஆன்மா தெய்வ நிலையை அடைந்து கொள்ளும் வழியைக் வழிகாட்டுகின்றது.

இதற்கான குருகுலக்கல்விப் பாரம் பரியத்தில் முகிழ்ந்த சிந்தனைகளாக

"தாயைத் தெய்வமாகப் போற்றுக
தந்தையைத் தெய்வமாகப் போற்றுக
ஆசிரியனைத் தெய்வமாகப் போற்றுக
விருந்தினனைத் தெய்வமாகப் போற்றுக"

என்ற அறக் கருத்துக்களை இது விதைத்திருந்தது. இதன் அங்கமாக இன்றும் சில பிரதேசங்களில் மாணவர்கள் பெற்றோர், ஆசிரியர்களை வீழ்ந்து வணங்கும் முறைமை காணப்படுகிறது. "கற்றலின் பயன் கடவுளை வணங்குதல்" என்ற தாரகமந்திரத்தை இந்துமதம் ஆணித்தரமாக எடுத்தியம்புகிறது.

**கிறிஸ்தவ மரபியலில் போதனைக்கோட்பாடு**

குரு-ராபி (Teacher) எம்மை மீட்க வந்த இரட்சகர் யேசுபிரான் சிறந்த ஆசிரியர். இவரது மலைப்பிரசங்கம், உவமைக்கதைகள் நல்ல சமாரியன் கதை என்பனமூலம் யேசுநாதர் நல்லாசிரியராகக் காணப்படு கின்றார். கிறிஸ்தவ கல்வித் தத்துவம் மனிதன் பிறந்து இறக்கும் வரை கிறிஸ்தவனாக வாழ்தல் அவசியமானது எனக்குறிப்பிடுகின்றது.

கிறிஸ்தவக் கல்வி என்பது மனிதனை தனது இறுதி இலட்சியத்தின்பால் கொண்டு செல்லல் ஆகும். கிறிஸ்தவம் இல்லாத பரிபூரணக் கல்வி எதுவும் உலகில் தோன்ற முடியாது. சுவர்க்கத்தில் உள்ள கடவுளைக் காண்பதும் அவரை அடைவதும் மனிதனை மீட்சிநிலைக்கு கொணர்ந்து அவனுக்குப் பூரணத்துவத்தை வழங்குகின்றது. நல் ஒழுக்கம், சிறுவர்உரிமை, அன்பு, கருணை என்ற பண்புகள் அமையப்பெற்ற கிறிஸ்த வனை உருவாக்குவதையே கிறிஸ்தவ கல்வித்தத்து வமும், கிறிஸ்தவ பூரணத்துவமும் விளக்குகின்றது.

**இஸ்லாமிய கல்விச்சிந்தனையில் போதனை மரபுகள்**

இஸ்லாமியமதம், வாழ்க்கை, கல்வி என்பன நகமும் சதையும் போல் ஆனது. நபி ஒரு ஆசிரியர். தூய அல்குரானை கற்றலே இக் கல்வியின் ஆரம்பம். பள்ளிவாசல் இதன் மைய

இடமாகும். கடவுளை அல்லது அல்லாவை அண்மிப்பதற்காக நற்கருமங்களின் ஊடாக ஆன்மாவைச் சுத்திகரித்துக்கொள்ள வேண்டும். அல்லாவின் பெயரால் அறிவைப் பரப்பும் கருமத்திற்கான இஸ்லாமிய தத்துவம் ஆசிரியருக்கு வழிகாட்டுகின்றது. சுத்தம் அல்லது தூய்மை முக்கியம் பெறுகிறது. சகத் கொடுத்தல் அறிவுறுத்தலை விட முன்மாதிரி சிறந்தது. ஆசிரியர்கள் உடல்ரீதியில் தூய்மை பேணவேண்டும் என இஸ்லாமிய கல்விச் சிந்தனை எடுத்துரைக்கின்றது.

இவ்வாறாக மதம் சார்ந்த கல்விக் கோட்பாடுகள் கல்விசார்ந்து அதனைப் போதிக்கும் ஆசிரியர் சார்ந்த விடயதானங் களை "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற முதுமொழிக்கு ஏற்பக் கொண்டு செல்கிறது என்பதில் வியப்பில்லை. எனவே புனிதமான ஆசிரியத்துவத்தின் தன்மையை உணர்ந்து இவ்வுலகமதில் பணியாற்றச் சென்றிடுவோம் எட்டுத்திக்கும்.

# சமகால சமூகத்தின் சவால்களும் கல்வியும்

பிரேமாவதி செல்வின் இரேனியஸ்,
மேலதிகமாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மாகாணக்கல்வித் திணைக்களம், வடமாகாணம்.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக யுத்தம், இடப்பெயர்வு, வன்முறை ஆகியவற்றின் கோரப்பிடிக்குள் சிக்குண்டிருந்த நம்சமூகம் தற்போது யுத்தமற்ற ஒரு சூழலுக்குள் பிரவேசித்துள்ளது. சுமார் இரண்டு தசாப் தங்களுக்குப் பின்பு இடப்பெயர்வுக்குள்ளான மக்களில் பெரும்பாலானோர் தங்களது வாழ் விடங்களுக்குத் திரும்புவதற்கான வாய்ப் பினைப் பெற்றிருக்கின்றனர். ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில் யுத்தகாலத்தில் ஏற்பட்ட உயிரழிவு களும் பௌதிகச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களும் பொருளாதார நட்டங்களும் அரச, அரசசார்பற்ற மற்றும் சர்வதேச நிறுவனங் களாலும் குழுக்களாலும் கணக்கிலெடுக்கப் பட்டுள்ளன. பௌதிக வளங்களை மீளக் கட்டமைப்பதற்கும் புதியவசதிகளை கட்டு ருவாக்குவதற்கும் தேவையான வளங்கள் கணிப்பிடப்பட்டும் சாத்தியமானவை அடை யாளங் காணப்பட்டும் நிரலிடப்பட்டுள்ளன. வடக்குக் கிழக்கின் துரிதப்படுத்தப்பட்ட மீள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளினை முன்னெடுப்பதற்கென தேசிய, மாகாண, மாவட்ட, உள்ளூராட்சி மற்றும் கிராமிய மட்டத்தில் பல்வேறு செயலணிகள் முனைப்புடன் செயலாற்றுகின்றன. இந் நாட்டின் தலைவர் அதிமேதகு சனாதிபதி அவர்கள் யுத்தத்தால் இழக்கப்பட்ட உயிர் களைத் தவிர ஏனைய யாவற்றினையும் மக்கள் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் வழிசெய்யும் என உறுதியளித்துள்ளமை எமக்கு நம்பிக்கை யைத் தருகின்றது.

மிகக்குறுகிய காலத்தினுள் ஒருதேசத் திலோ அல்லது பிராந்தியத்திலோ இடம் பெறும் பாரிய யுத்தங்கள் மக்களைச் சடுதியான இடப்பெயர்வுகளுக்கும் மனிதநேய நெருக் கடிகளுக்குள்ளும் உட்படுத்தினாலும் அச் சமூகத்தின் கட்டமைப்பும் (Social structure) மீள்எழுச்சிக்கான திறனும் (Resillient capacity) சிதைவடைந்து போவதில்லை. அத்துடன் அச்சமூகங்களின் இருப்பிலும் மேம்பாட்டிலும் தாக்கம் செலுத்தக்கூடிய சமூகவியல் (Social), பொருளியல் (Economical), அரசியல் (Political), தொழிநுட்பம் (Technical), சூழலியல் (Environmental) போன்ற இன்னோரன்ன துறைகளிலும் பாரிய மாற்றங்கள் அக்குறுங் காலத்தினுள் நிகழ்ந்துவிடுவதில்லை. இதன் காரணமாகக் குறுகிய காலத்தில் இடம்பெறும் யுத்தங்கள், பாரிய இயற்கை அனர்த்தங்கள் ஆகியவற்றின் பின்பும்கூட அச்சமூகங்களினால் விரைவாகவும் பூரண ஆளுமையுடனும் புறநிலையில் மேலெழும் சவால்களுக்கு (Emerging challenges in external conditions) ஈடுகொடுக்கும் திறன்கொண்டதாக (Societiy's coping abilities) மீள்எழுச்சிபெற முடிகின்றது.

எமது நாட்டில் நீடித்திருந்த உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு இரண்டுவருடங்கள் முடிந்துள்ளன. வன் முறைக்கும் யுத்தத்திற்கும் ஏதுவான மூல காரணிகள் கண்டறியப்பட்டு அவற்றினை இல்லாதொழிப்பதற்கும் நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய சமாதானத்தினைக் கட்டியெழுப்பு வதற்குமான முயற்சிகள் விரைவில் பலனளிக்கு மென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் நீண்டகால யுத்தத்தினுள்ளும் தொடர்ச்சியான இடப்பெயர்வுகளுக்குள்ளும் சிக்கித்துயருற்ற மக்களின் இயல்பு வாழ்க்கையினைக் கட்டியெழுப்புவது என்பது இலகுவான ஒரு பணியன்று.

ஒரு சமூகம் நீண்டகால யுத்தத்தையும் இடப்பெயர்வையும் வன்முறை சார்ந்த அரசியல் அழுத்தத்தையும் எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கப் படும்போது அங்கு அச்சமூகத்தின் இருப்பு நிலைக்கான அடித்தளம் தகர்க்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகின்றன.

யுத்தத்தின் நீட்சியும் இடப்பெயர்வு வாழ்க்கையும் சமூகக்கட்டமைப்புகள் சிதைந்து போவதற்கும், மனிதவளத்தின் சிறப்புத்திறனும் ஆற்றல்களும் குன்றிப் போவதற்கும் காரண மாகின்றது. சமூகத்தினதும் தனி மனிதரதும் தொழிலாண்மையும் உற்பத்தித் திறனும் மூலதனப் பெருக்கமும் வலு விழக்கின்றன. அச்சமூகங்கள் கட்டிவளர்த்த சனநாயக மரபுகளும், விழுமியங்களும், பெறுமானங் களும் வழக்கொழிந்தும் மறக்கப்பட்டும் போகின்றன. இத்தகைய பலவீனமான சூழ்நிலை கள் தனிமனித நடத்தைப் பிறழ்வுகளுக்கும் சமூகவிரோத காரணிகளின் ஆக்கிரமிப்பிற்கும் வாய்ப்பாகின்றன.

**மீள் எழுச்சிக்கான சவால்கள்**

எமது நாட்டின் வடக்குக்கிழக்குப் பகுதிகளுக்குள் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தினது நேரடியான தாக்கத்தினால் வடக்குக்கிழக்குப் பிரதேசத்தினுள் வாழ்ந்த மக்கள் பாதிப்படைந்து கொண்டிருந்த சமகாலத்தில் நாட்டின் ஏனைய பகுதி யிலிருந்தவர்களும் வடக்குக்கிழக்குப் பகுதி யிலிருந்து வெளியேறி வாழ்ந்தோரும் தங்களது இருப்பையும் அபிவிருத்திகளுக்கான வாய்ப்புக்களையும் சிறப்பாகத் தக்கவைத்து மேம்படுத்திக் கொள்ள முடிந்தது. இது யுத்தப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களுக்கும் ஏனைய மக்களுக்குமிடையில் சமூகப் பொருளாதார நிலைகளில் பல்பரிமாணங்கொண்ட இடை வெளியினை உருவாக்கியுள்ளது. இந்த இடை வெளியினைப் பாரியளவிலான முதலீட்டுப் பாய்ச்சல்கள் ஊடாகவோ விரைவுபடுத்தப் பட்ட உட்கட்டுமானங்களின் உருவாக்கத் தினாலோ மட்டும் நிரப்பிவிட முடியாது. அத்தகைய ஒற்றை அணுகுமுறை மென்மேலும் முரண்பாடுகளைக் கூர்மையடையச் செய்வ தாகவே அமையும் என்பதை எவரும் மறுக்க முடியாது.

**சிதைக்கப்பட்ட சமூகப்பாதுகாப்பு வலையமைப்பு**

பன்னெடுங்காலமாகத் தமது பூர்வீகக் குடியிருப்புக் காணிகளில் சமூகக்குழுக்களாக வாழ்ந்துவந்த மக்களைச் சுற்றி, கண்ணுக்கு புலனாகாத சமூகப்பாதுகாப்பு எனும் வேலி இடப்பட்டிருந்தது. அதனுடைய நெற்றிக் கண்ணிற்கு குடும்பமுரண்பாடுகள் தொடக்கம் தனிமனித நடத்தைப்பிறழ்வுகள் வரை கட்டுப் பட்டிருந்தது. வறுமையும் துன்பமும், பட்டி னியும் மகிழ்ச்சியும் கூட சமூகத்தின் பொதுப பொருளாகவே ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது. சாதீயம், தீண்டாமை போன்ற இருண்ட பக்கங்களுக்கு அப்பால் தொழிற் றிறனும் சிறப்புத்தேர்ச்சியும் அச்சமூகங்களின் முதுச மாகத் தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கப்பட்டது. சீட்டுமுறைகளும் பணச் சடங்குகளும் சமூகத்தின் பணச் சுற்றோட்டத் தையும் சேமிப்பாற்றலையும் மூலதனவாக்கத் தையும் தொழிலாக்கத் திறனையும் வளப்படுத் தின. முதியோரைக் கனம் பண்ணலும் இளையோருக்கு வழிவிடலும் உறவுக்குக் கைகொடுத்தலும் வாழ்க்கை நெறியாகியது. சமூகத்தின் கூட்டுப்பொறுப்புக் கூறும் கடப் பாடும் நா நயங்காத்தலும் சமூகக் குழுக்களுக் கிடையான முரண்பாடுகளைச் சீர்செய்தன. ஆலயங்களும் ஆண்டு விழாக்களும் குடும்ப நிகழ்வுகளும் கூட்டுவாழ்க்கையின் பெருமை யைப் பறைசாற்றின. ஊரெல்லை தாண்டாம லேயே வாழ்வெல்லை கண்டவர்கள் ஏராளம். திரைகடலோடித் திரவியம் தேடியவர்கள் கூட தாய்மடியில் கண்மூடதாகமாய் இங்கு வந்தனர்.

இவையாவும் இன்று தேவதைக் கதைகள் போன்று மாறியுள்ளன. மூன்று தசாப்தத்திற்குள் இடப்பெயர்வின் பேரால் ஓடிக் களைத்தவர்கள் தரித்து நின்றபோது அவர்கள் தங்கள் அடையாளங்களைத் தொலைத் திருந்தார்கள். குடும்பம் என்ற அலகு தனது முகவரியைப் பறிகொடுத்திருந்தது. யுத்தமும் திறந்தவெளி வாழ்க்கையும் பட்டினிச்சுமையும் மானிட சுபாவத்தினைப் பரீட்சித்துப் பார்த்தது. அதிர்ச்சி, சோகம், பயம், எதிர்காலம்பற்றிய நம்பிக்கையீனம், பட்டினி, அகதி வாழ்க்கை முதலானவை சமூகப்பெறுமானங்கள், விழுமி யங்கள் என்பவை வலுவிழக்கப்படவும் மீறப்படவும் தூண்டுதலளித்தன. மொத்தத்தில் சமூகத்தின் கூட்டு வாழ்க்கையும் ஒருங்கிணைந்த பாதுகாப்புப்பொறிமுறையும் மிகவும் மோச மாகச்சிதைவுக்குள்ளாகியது.

**வலுவிழந்துள்ள சனநாயக மரபுகளும் சமூகத்தின் கூட்டுப்பொறுப்பும்.**

இக்காலகட்டத்தில் எமது சமூகத்தின் தலைமைத்துவம் போர்க்கால நெறிமுறைகளை

மட்டும் கருத்திற்கொண்டு உருமாற்றப்பட்டது. இயல்பான சனநாயக மரபுகளும் பொதுக் கருத்துருவாக்கங்களும் மாற்றுக் கருத்துக்களை விவாதிக்கக்கூடிய தளங்களும் மறுக்கப்பட்டன அல்லது அவசியமற்றுப்போயின. இது ஒரு சமூகத்தின் ஆரோக்கியமான வாழ்க்கையையும் தனிமனித அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் உத்தரவாதப்படுத்துவதற்கு வேண்டிய சூழலை இல்லாதொழித்தது.

**பெருகியுள்ள தங்கிவாழ்வோர் தொகை**

நேரடியானதும் மறைமுகமானதுமான யுத்த விளைவுகள் எமது சமூகத்தினதும் குடும்ப அலகுகளினதும் பாரத்தைப் பன்மடங்காகப் பெருக்கியுள்ளது. தாய், தந்தையை இழந்தவர்கள், தாரமிழந்தவர்கள், உழைக்கும் வலுவிழந்த வர்கள், நிர்க்கதியான முதியோர், மருத்துவம், உளவியல் சார்ந்த சிறப்புத் தேவைகளுள்ளோர் என இப்பட்டியல் நீண்டு செல்கின்றது. இவற்றை விடப் பாடசாலை செல்லாதோர், பாடசாலையை விட்டு இடைவிலகியோர், தொழிற்பயிற்சியற்றோர், முன்னை நாட் போராளிகள், இராணுவ சேவையிலிருந்து வெளியேறுவோர் என மற்றுமோர் மனிதவளத் தொகுதியும் பெருகிக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் வருடாந்தம் அண்ணளவாக 2.8மில்லியன் புதிய தொழிலாளர் படை உருவாகி இணைகின்றது. தற்போதைய புள்ளி விபரங்கள் 65,000 பட்டதாரிகள் வேலைவாய்ப் புக்காகக் காத்திருப்பதாகக் கூறுகின்றது. பொதுவாகப் பௌதிக வளங்களைப் பயன்படுத்தாது வெறுமனே வைத்திருந்தாலும் அவை பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படாத காலத்தில் தாமாக வினைபுரியவோ எதிர்விளைவுகளை ஏற்படுத்தவோ முயற்சிக்கமாட்டாதென்பது நாமறிந்ததே. ஆனால் மனிதவளம் அவ்வாறு செயலற்று இருக்கப்போவதில்லை. மனிதவளம் அணுசக்தியைப் போன்றது. நாம் அதனைச் சாதகமான முறையில் வளப்படுத்தி நெறிப் படுத்தாவிட்டால் அது எமது அரசியல், சமூக பண்பாட்டுத்தளங்களில் மிகவும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும். இந்நிலையில் தற்போது வடக்குக் கிழக்கில் அதிகரித்துள்ள தங்கிவாழ்வோர் தொகையினைச் சுயசார்புள்ள குடிமக்களாக முழு ஆளுமையுடன் உருவாக்கு வதற்கான மிகப்பெரிய பொறுப்பு எம்மவரிடம் சுமத்தப்பட்டுள்ளது.

**தொழிற்சந்தைப் போட்டி**

யுத்தத்தின் பின்னான மீள்கட்டமைப்புப் பணிகள் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு செல்வதற்கு மிகவும் அவசியமானதாகவும் அவசரமானதாகவும் உள்ளன. விரைவுபடுத்தப் பட்ட புனரமைப்புப் பணிகளும் பாரிய தொழின் முயற்சி முனைப்புகளும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் முன்னெடுக்கப் படும்போது அவற்றால் உருவாக்கப்படும் நேரடியானதும் மறைமுகமானதுமான வாய்ப்புகள் பற்றி மிகவும் அக்கறை கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த மூன்று தசாப்த காலத்தில் இலங்கையின் பொருண்மியக் கட்டமைப்பு உலகமயமாதலுக்கு இசைவாகத் தன்னை மாற்றிக்கொண்டது. உற்பத்திச் சந்தைகள் பல்தேசியக் கம்பனிகளுக்காகவும் தனியார் துறையினருக்காகவும் திறந்துவிடப்பட்டன. விவசாயமும் மீன்பிடியும் அரசசேவைத் துறையும் முதன்மையினை இழக்க, அறிவையும் தொழிநுட்பத்தையும் மையப்படுத்தியதாகப் புதிய தொழில்வாய்ப்புகளுக்கான கதவுகள் தனியார் துறையினரால் திறந்து வைக்கப் பட்டன. மொத்த தேசிய உற்பத்தியில் சேவைத் துறையின் பங்கு 59.5%ஆக உயர்ச்சி யடைய கைத்தொழிற்றுறை 28.4%த்தினையும் விவசாயத் துறை 12.1% த்தினையும் கொண்டுள்ளதாக 2009ஆம் ஆண்டின் மத்திய வங்கி அறிக்கை குறிப்பிடுகின்றது.

கல்வியும், தொழிற்பயிற்சியும் வெளி நாட்டுப் பல்கலைக்கழகங்களின் தொலைதூரக் கல்வியும் இணைக்கப்பட்ட வளாகங்களும் இலங்கையின் மனித வளத்தினை அறிவுசார்ந்த தாக செழுமையூட்டியன. பிராந்திய தேசிய மற்றும் சர்வதேச தொழிற்சந்தையில் இலங்கை யின் தொழிற்படை போட்டியிட்டு வெற்றி யடையக்கூடியளவிற்கு ஆளுமை கொண்டதாக உருமாறியுள்ளது. ஆனால் இவையாவும் எமது தேசத்தின் வடக்குக் கிழக்கிற்கு வெளியேயுள்ள பகுதிகளில் மட்டுமே சாத்தியமாகியது. யுத்தம் மற்றும் யுத்தம்சார்ந்த கொள்கை வரையறைகள் காரணமாகவும் வடக்குக் கிழக்குப் பிரதேங் களில் தனியார் துறையினர் முதலிடத் தயங்கிய தாலும் மக்கள் தொடர்ச்சியான தசாப்த

காலத்திற்கு மேலாக இடப்பெயர்வு வாழ்க்கைக் குள் நிர்ப்பந்திக்கப் பட்டமையினாலும் மனித வள மேம்பாடும் அதற்கான வாய்ப்புக்களும் முற்றாக இல்லாமல் போயின. கிடைத்திருக்கக் கூடிய வாய்ப்புக்களும் முடங்கிச் செயலற்றிருந் தன. பாதிக்கப் பட்ட மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்காக விரைவுபடுத்தப்பட்ட புனரமைப்புப் பணி களின் காரணமாக உட்பிரவேசித்துள்ள பாரியளவிலான தனியார் துறை முயற்சிகள் பயிற்றப்பட்டதும் வளப்படுத்தப்பட்டதுமான மனித வளத்திற் கான கேள்வியினைப் பாரியளவில் எழுப்பி யுள்ளது. போர்ச்சூழலில் வளப் படுத்தலுக்கான வாய்ப்புக்களற்ற நிலையில் மழுங்கிப் போயுள்ள வடக்கு கிழக்கின் பெருந்தொகுதியினரான தொழிற் படையினரால் இன்று அரசதுறை யிலும் தனியார் துறையிலும் உருவாக்கப் பட்டுள்ள தொழில் வாய்ப்புக்களை உரித்தாக் கிக்கொள் வதற்காக, போர்ச்சூழலுக்கு வெளியே வாழ்ந்த மனிதவளத்துடன் போட்டியிட முடியா துள்ளது.

எமது பிரதேசத்தின் தொழிற் படை யானது உடலுழைப்பை வேண்டிநிற்கும் வினைத்திறனற்ற வாய்ப்புகளுக்குள் முடக்கப் படுவதனால், சமூகம் மீண்டும் முரண்பாட்டுச் சிக்கலுக்குள் பிரவேசிக்கும் அபாய நிலை தொடர்ந்தும் அதிகரிக்கின்றது.

**சேமிப்பும் மூலதனவாக்கமும்**

இயல்பாகவே சேமிப்பாற்றலினைக் கொண்டிருந்த வடக்குக் கிழக்கின் சமூகம் அதனைப் பிள்ளைகளின் கல்வியாகவும் தங்க ஆபரணங்களாகவும் குடியிருப்புக்காணி யுடனான வீடாகவும் சிறிய சொந்தமான தொழின் முயற்சியாகவும் வங்கிகளில் சேமிப்பு வைப்பாகவும் தேக்கிவைத்துக் கொண்டது. நடுத்தர மற்றும் பெரிய தொழின் முயற்சிகள் வர்த்தக நடவடிக்கைகளில் அவர்களது சேமிப்பினளவு மிகக்குறைவாகவே காணப் பட்டது. நீண்ட யுத்தமும் அதனோடிணைந்த பொருளாதார மற்றும் போக்குவரத்துத் தடைகளும் யுத்தப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைச் செலவினைப் பன்மடங்கு களாக பெருக்கியதனாலும், ஏதிலிகளாகப் பன்முறை இடம்பெயர்ந் தமையாலும் அவர்களின் சேமிப்புக்கள் யாவும் கரைந்தும் தொலைந்தும் போயின.

**இயல்பு வாழ்கையினைக் கட்டியெழுப்புவதில் உள்ள தடைகள்**

வடக்குக் கிழக்கின் ஒட்டுமொத்தச் சமூகமுமே தமது வாழ்க்கையினை மீளக்கட்டி யெழுப்ப வேண்டிய நிலையில் உள்ளது. குடியிருப்புக்கள், சமூக உட்கட்டுமான வசதிகள், தொழில்வாய்ப்புகள் என விரியும் முன்னுரி மைப்பட்டியலுடன் விசேட கவனத்திற்குரிய மனித வளத் தொகுதியினரும் கருத்திற் கொள்ளப்பட வேண்டியவராயுள்ளனர்.

இவையாவற்றுக்கும் மேலாக சமூகத்தில் நீடித்த அமைதியினைக் கட்டி யெழுப்புவதும் எதிர்கால அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய காரணிகளை முளையி லேயே கட்டுப்படுத்துவதும் மிகவும் முதன்மை யான விடயங்களாகவுள்ளன. இதனைப் போர்க்கால அணுகுமுறையூடாகவோ அல்லது வெறுமனே பௌதிக வளங்களையும் வாய்ப்பு களையும் பெருக்குவதன் மூலமோ மட்டும் அடைந்துகொள்ள எம்மால் முடியாது.

கடந்த காலத்தில் எமது சமூகம் எதிர் கொண்டிருந்த யுத்தமும் அதன் தொடர்விளைவு களும் வெளிப்படையானதும் மறைமுகமான தும் (Visible and Invisible), உடனடியானதும் நீண்டகாலமானதுமான (Immediate and longterm) பல்பரிமாணப் (Multi dimensional) பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இவற்றினை வெறுமனே புள்ளிவிபரங்களின் சட்டகத்தினுள் ளும் அவற்றினடிப்படையில் கீறப்படும் கோலங்களுக்குள்ளும் எம்மைச் சிறைப்படுத்திக் கொண்டு புரிந்துகொள்ள முடியாது. எமது கொள்கைவகுப்பாளர்களும் (Policy makers), திட்டமிடலாளர்களும் (Planners) நிறை வேற்றாளர்களும் (Executives) மற்றும் பணித் துறை ஆட்சியாளர்களும் (Bureaucrats), ஏன் அரசியல் தலைவர்களும் (Political Leaders) கூட இந்நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட ஆற்றல்கள் கொண்டவர்களாகவேயுள்ளனர்.

மொன்றிசோறி கல்வி முறையினை உலகுக்கு அறிமுகப்படுத்திய இத்தாலிய

மருத்துவரும் கல்வியியலாளருமான மரியா மொன்றிசோரி அம்மையார் "யுத்தம் தவிர்ப்பது அரசியல்வாதிகளின் கடமை: சமாதானத் தினைக் கட்டியெழுப்புவது கல்வியின் கடமை." ("Averting war is the work of politicians; establishing peace is the work of education" - Maria Montissori ) என்று குறிப்பிட்டுள்ளார். சமூகத்தை யுத்த நிலையிலிருந்து சமாதானத்திற்கு உருமாற்றும் இலக்குடன் மீள் கட்டமைப்பதற்குரிய சர்வவல்லமை கொண்டதும் வியாபித்ததுமான கருவியாகக் கல்வியே உள்ளது. கல்வியை சமாதானத்திற்கான கல்வியாக அன்றி கல்வி தான் சமாதானம் என்றவாறு சிந்திக்கவேண்டும் ("It is necessary to think of education as peace , not education for peace") என அவர் மிக உறுதியாக நம்பினார்.

கல்வி சமாதானத்தின் வடிவமாகக் கட்டியெழுப்பப்பட வேண்டுமானால் இவ்விடத்தில் சமாதானத்துடன் இணைந்த சுதந்திரம் (Freedom) என்பது முக்கியம் பெறுகின்றது. வழமையாகச் சுதந்திரம் என்கின்ற எண்ணக்கரு அரசியற் சுதந்திரம்" (Political freedom) எனப் பொருள் கொள்ளப் பட்டாலும் அதிகாரக் கைமாற்றம், ஆட்சி யதிகாரத்திற்கான உரிமை என்பவற்றுக்கு அப்பாலும் சென்று சுதந்திரம் என்பதனைப் பரந்துபட்ட பண்புசார் தளத்தில் புரிந்துகொள்ள வேண்டியது எமக்கு இன்று அவசியமாகவுள்ளது. இந்தியாவின் தலைசிறந்த சிந்தனையாளரும் 1998இல் பொருளியற்று றைக்காக நோபல் பரிசு வழங்கிக் கௌரவிக்கப் பட்டவருமான பொருளியலாளர் அமர்த்தியா சென் (Amrtya Sen) "அபிவிருத்தியே சுதந்திரத்தின் அடிப்படை" (Development as Freedom) என்ற தனது நூலில் குறிப்பிட்டுள்ள படி மக்களின் செயலாண்மையினை (Human agency) வளப்படுத்துவதும் உற்பத்திசக்திகள், இயற்கைவளங்கள் ஆகியவற்றின் மீது அவர்களின் உரித்தாண்மையினை உறுதி செய்வதுமே சுதந்திரத்தின் பண்புசார் நிலையாகும்.

எமது நாட்டைப் பொறுத்தளவில் கடந்த மூன்று தசாப்த காலத்தினுள் புறநிலை மாற்றங்கள் அதிகம் ஏற்பட்டுள்ளன. சந்தைக்கட்டமைப்பு உலகின் திறந்த போட்டிச் சந்தையுடன் இணைக்கப்பட்டுவிட்டது. அரசாங்கம் பொருளாதார, சேவைத் துறைகளுக்குள் கொண்டிருந்த தனியுரிமை கலைக்கப்பட்டு தனியார்துறையின் ஆளுமை யும் பங்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. உலகமயமாதலும் தகவற் தொழிநுட்பப் புரட்சியும் மின்னியற் தொழிநுட்பத்தின் அதீத பிரவேசமும் யுத்தத்தால் பாதிக்கப்படாத ஏனைய பகுதி மாணவர்களுக்கும் இளை யோருக்கும் மிகப்பெரும் வரப்பிர சாதமாக மாறியுள்ளது. இவர்கள் தங்களது தொடர் கல்வியினூடாகவும் கிடைத்த வாய்ப்புக்களி னூடாகவும் வளப்படுத்தப்பட்ட மனிதவளத் தொகுதியாக மாறியுள்ளனர். அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் தொழிற்பயிற்சியும் தயார்ப்படுத்தல் முறைமைகளும் அவர்களின் ஆற்றலினைப் பன்மடங்கு பெருக்கி, அவர்களை முன்னகர்த்தியுள்ளது.

இத்தகைய பின்புலத்தில் கல்வியின் தொடர்ச்சி இழக்கப்பட்டு, பாடசாலைப் பருவத்தினையும் தாண்டிய நிலையில் வெளியில் நிற்கும் வடக்குக் கிழக்கின் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் இளைஞர்கள் ஆகியோரின் செயலாற்றல் திறனை மேம்படுத்தி உரித்தாண்மை உள்ளவர்களாக மாற்றவும், வளப்படுத்தப்பட்ட மனிதவளத்துடன் போட்டியிட்டு வாய்ப்புகளைக் கைகப்படுத்த வும் எம்மால் முடியுமா? என்ற வினாவுக்கான விடையானது சமூகத்தின் பண்புநிலையான மாற்றத்தினையே வேண்டி நிற்கின்றது.

யுத்தசாப்தங்களில் சனநாயகப் பயிற் சியும் பங்களிப்பும் மாற்றுக்கருத்துக்களுக்கான மதிப்பும் சகிப்புத் தன்மையும் கூட்டாகப் பொறுப்புகூறும் பண்பும் முற்றாக பெறுமதி யற்றிருந்தது. அதனை மீண்டும் சிலவிதி முறைகளின் மூலமும் சட்டவாக்கங் களினூடா கவும் உருவாக்கி விடமுடியாது. இத்தகைய எதிர்மறையான சூழ்நிலைகள் சமூகத்தின் எதிர்கால அமைதியையும் சுதந்திரத் தையும் பாதுகாப்பதற்குப் பொருத்தமான தலைமைத் துவப் பண்புகள் கொண்ட எதிர்கால சந்ததி உருவாகுவதற்கு மிகப்பெருந்தடையாக இருக்கும். இந்நிலையில் மேம்படுத்தப்பட்ட மனிதவளமும் பண்படுத்தப்பட்ட ஆளுமையும்

கூட்டான வினைத்திறனும் இன்று எம் சமூகத்தின் முதன்மைத் தேவையாகவுள்ளது. இதனை நிறைவேற்றுவதற்குக் கல்வியும் கல்விசார் நிறுவனங்களும் சிந்தனையாளர்களும் சமூகமும் இணைந்து செயற்படவேண்டியுள்ளது.

**கல்வியின் புதிய பரிமாணம்**

யுத்தத்தின்பின்னான சமூக மீள்எழுச்சி என்பது நான்கு தளங்களில் அம்மக்களை நிலைநிறுத்தக்கூடியதாக அமையவேண்டும்.

அ) துரிதமாகத் தங்கள் வாழ்க்கையைக் கட்டியெழுப்பக்கூடிய தொழிலாற்றலை (employable capacity) வழங்குதல்.

ஆ) தம்மோடு ஒத்த ஏனைய மக்களுடன் சமமாகப் போட்டியிட்டு உள்ளூர், பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேசப் பரப்புக்களில் தம்மை நிலை நிறுத்தக் கூடியவர்களாக அவர்களது ஆளுமையினைக் கட்டியெழுப்புதல்.

இ) நீடித்த சமாதானத்திற்கு (Sustainable peace) அடித்தளமான சனநாயகப் பயிற்சியையும் (Democratic practice) நல்லாட்சிப் பிரயோகத்திற்கான (Good Governance) அக்கறையையும் - பங்கேற்றல் (participation), வெளிப்படைத்தன்மை (transparency), பொறுப்புச்சொல்லும் கடப்பாடு (accountability), மாற்றுக் கருத்துக்கள் (alternative voice) மீதான சகிப்புணர்வு, ஆகிய பண்புகளையும் பால் மற்றும் வயது வேறுபாடுகள் இன்றி சகல மட்டங்களிலும் உருவாக்குதல்.

ஈ) தங்களதும் சக சமூகங்களினதும் எதிர்கால சந்ததியினரதும் நீடித்த செழிப்புக்கும் உறுதிப்பாட்டிற்கும் வழிசெய்யும் வகையில் இயற்கைவளங்கள், உற்பத்திச் சாதனங்கள், சுற்றுச்சூழற்காரணிகள் ஆகியவற்றை முகாமை செய்யக்கூடிய உரித்தாளுமை கொண்ட சமூகமாக (community with entitlement) உருவாக்குதல்.

இந்நான்கு தளங்களும் வழமையான முறைசார் கல்வியின் (Formal education) பரப்பெல்லைக்குள் அடக்கப்பட முடியாதவை. தற்போது நடைமுறையிலுள்ள கல்வித் திட்டமும் பாடவிதானங்களும் (Education scheme and curricula) அடிப்படையான கல்வியறிவை (Literacy) எல்லோருக்கும் கிடைக்கச்செய்யும் நோக்குடனும் பொருளாதார அபிவிருத்தியை இலக்காக கொண்டு செயற்படும் சமூகங்களின் தேவையை நிறைவு செய்வதற்காகவும் தேசியரீதியாக வடிவமைக்கப் பட்டவை. சிறப்புத் தேவையுள்ள பிரதேசங்களையோ மக்களையோ (People or regions with special needs) கருத்திற்கொண்டு மாற்றங்களை உள்வாங்கப்படக் கூடியவையாக இவை தயாரிக்கப்படவில்லை.

இவ்விடத்தில் அமெரிக்க சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் சட்டத்துறைப் பேராசிரியராகவும் தத்துவம் அபிவிருத்தி சமூகவியல் ஆகிய துறைகளில் நன்கு அறியப் பட்ட சிந்தனையாளருமான மார்த்தா நேஸ்பாம் (Martha C. Nussbaum) அம்மையார் அண்மையில் தனது Not for Profit Why Democracy Needs the Humanities என்ற நூலில் "தேசிய வருவாயில் அவாக்கொண்டுள்ள தேசங்கள், சனநாயகத்தின் உயிர்வாழ்வுக்கான அடிப் படைத் திறன்களைத் தமது கல்விமுறைமை கொண்டுள்ளதா என்பதில் அக்கறையற்ற வர்களாகவே உள்ளனர். இந்நிலைமை தொடருமாயின் உலகிலுள்ள தேசங்கள் எல்லாம் தங்களின் மேல் அக்கறை கொள்ளக் கூடிய முழுமைகொண்ட குடிமக்களை, சக மனிதனின் துயரங்களையும் சாதனைகளையும் உணர்ந்து மதிப்பளிக்கக் கூடியவர்களை, உருவாக்குவதற்கு பதிலாக, விரைவில் உற்பத்திக்கு பயன்படக்கூடிய, இயந்திரங்களின் தலைமுறைகளை உருவாக்கி விடுவார்கள். உலகின் சனநாயகத்தின் எதிர் காலமே நூலிழையில் தொங்குகின்றது." என்று அபாயக்குரல் எழுப்புகின்றார். ("Thirsty for national profit, nations, and their systems of education, are heedlessly discarding skills that are needed to keep democracies alive. If this trend continues, nations all over the world will soon be producing generations of useful machines, rather than complete citizens who can think for themselves, criticize traditions, and understand the significance of another person's sufferings and achievements. The future of the world's democracies hangs in the balance.-Martha C.Nussbaum 2010 p2).

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடக்குக் கிழக்கில் எம் மக்களது வாழ்க்கையினையும் அவர்களது பொருண்மியச் செழுமையினையும் பாதுகாப்பான எதிர்காலத்தினையும் கட்டியெழுப்புவதற்கு மிகவும் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. எமது கடும் உழைப்புடன் அரசாங்கத்தினதும் சர்வதேசங்களினதும் புலம்பெயர் சமூகத்தினதும் உதவிகளும் பலமும் இணையும் போது நாம் நினைத்தவாறு மீள் எழமுடியும் அவையாவற்றிற்கும் அடிப்படையான மனிதவளத்தை சிறந்த முறையில் கையாண்டு வளப்படுத்துவதனூடாகவே தேசத்தின் சமாதானமும் செழுமையும் தனிமனிதர்களினதும் சமூகங்களினதும் கண்ணியமும் சுதந்திரமும் நீடித்த காலத்திற்கு நிலைத்துநிற்கும். இதற்கான ஒரேவழி கல்விதான்.

இதனடிப்படையில் எமது கல்விச் செயற்பாடுகள் பின்வரும் குறிக்கோள்களை நோக்கியதாக மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளன.

அ). விரைவான பொருண்மிய செழுமைக்காக உழைக்கக்கூடிய பல்திறன் ஆற்றல்கள் கொண்டவர்களாக எமது உழைப்பாளர்களும் எதிர்காலத் தலைமுறையும் பயிற்றுவிக்கப்படல்.

ஆ). ஒவ்வொரு மனிதனதும் கண்ணியத்தையும் ஆற்றல்களையும் அபிலாசைகளையும் மதித்து அவர்களுக்கு உரிய இடத்தினை வழங்கக்கூடிய, திறந்ததும் ஆரோக்கியமானதும் உத்தரவாதம் நிறைந்ததுமான அரசியல், சமூக மற்றும் பண்பாட்டுச் சூழலினைக் கட்டியெழுப்பும் கூட்டுப்பங்காளராக சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவரையும் தயார்ப்படுத்தல்.

இ). தற்போதுள்ள அரசியல் நிர்வாகம், பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்பு கள், நிறுவனங்கள், ஆகியவற்றில் பணியாற்றும் அல்லது பங்கேற்கும் அனைத்துத் தொகுதியினரும், யுத்தத்தின் பாதிப்புகளிலிருந்து எமது சமூகம் துரிதமாகவும் நிதானத்துடனும் பரந்துபட்ட நோக்குடனும் மீள் எழுச்சி பெறுவதற்கு வழி செய்யும் வகையில், இணைந்து செயற்படுவதற்கு ஏதுவாக தம்மை மாற்றத்திற்கு உட்படுத்த முன்வருதல்.

தற்போது நாம் துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு விஞ்ஞானம், வர்த்தகம், தொழிற்றுறை, கணனியும் தகவற்தொழிநுட்பமும், மருத்துவம், பொறியியல், விவசாயம் எனப் பல்கலைக்கழகப் பட்டங்களைக் குறிவைத்தும் வேலைவாய்ப்புகளைக் குறிவைத்தும் உயர் வருமான பதவிநிலைகளைக் குறிவைத்தும் எமது பிள்ளைகளைப் பாடசாலைகளூடாகத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். கடந்த சில தசாப்தங்களில் இழந்து போனவற்றை ஒருசில வருடங்களுக்குள் மீளப்பெற ஆவலாக உள்ளோம். ஆனால் இதனைத் தற்போது நடைமுறையிலுள்ளதும் பலவித மட்டுப்பாடுகளினைக் கொண்டதுமான அரசாங்கத்தின் கல்விக் கட்டமைப்பினாலோ அல்லது தேசிய நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட பாடத்திட்டங்களினாலோ மட்டும் அடைந்து விட முடியாது. எங்களிடமுள்ள ஆசிரிய வளமும் கல்விநிர்வாக ஆளணியும் பல்கலைக்கழகங்களின் புலமை யாளர்களும் கூட யுத்தகாலத் தேய்மானத்திற்கு உட்பட்டவர்களாகவும் புதிய சவால்களுக்கு முகம் கொடுக்கவும் அவற்றினை வெற்றிகரமாக முகாமை செய்யவும் பயிற்றப்படாதவர்களாகவே உள்ளோம்.

இத்தகைய நிலையில் பொருளாதார அபிவிருத்திக்காக மாணவர்களைத் தயார்ப்படுத்தும் அதேவேளையில் சனநாயக விழுமியங்களை மீளவும் கட்டியெழுப்பு வதற்காக அவர்களைப் பயிற்றுவிக்கும் பாரிய பொறுப்பினையும் நாங்கள் அனைவரும் இணைந்து நிறைவேற்ற வேண்டியவர்களாக உள்ளோம். பொறியியலாளர்களை, மருத்துவர்களை, விஞ்ஞானிகளை, கணனிவிற் பன்னர்களை, சட்டவாளர்களை, முகாமைத்துவ நிபுணர்களை, தொழின்முயற்சியாளர்களை, உருவாக்கும் அதேவேளையில் சிந்தனையாளர்களை, சமூகத்தலைவர்களை, எதிர்கால அரசியல் வாதிகளை மட்டுமன்றி ஆன்மீக வழிகாட்டிகளையும் கூட உருவாக்குவது எமது தலையாய கடமையாகவுள்ளது.

இக்கடமையினை முன்னெடுக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது வளங்களையும் சிந்தனைகளையும் ஆற்றல் களையும் ஒருங்கிணைக்க வேண்டியுள்ளது. எமக்குள்

உள்ள பலங்கள் பலவீனங்களை அடையாளங் காண்பதுடன் புறச்சூழலில் எமக்கு கிடைக்கக் கூடிய வாய்ப்புக்களையும் நாம் எதிர்கொள்ளக் கூடிய அச்சுறுத்தல் களையும் இனங்கண்டு எமது சமூகத்தின் தேவைகளையும் முன்னுரிமை களையும் நிறைவு செய்வதற்குப் பொருத்தமான வழிகளையும் வளங்களையும் வாய்ப்புக் களையும் கண்டறிந்து செயற்பட வேண்டும். எதிர்காலச் சந்ததியி னரை சம ஆளுமையும் முழுமையுங் கொண்ட குடிமக்களாக உருவாக்குவதன் பொருட்டு அரசியற்தலைவர் களும் அதிகார மற்றும் நிர்வாகபீடங்களில் உள்ளோரும் கல்விச் சமூகமும் பெற்றோரும் சமூகத் தலைவர்களும் பழையமாணவர்களும் புலம்பெயர்சமூகமும் இணைந்ததான செயலணிகள் பாடசாலை களைச் சார்ந்து அமைக்கப்படவேண்டும். தேசியபாடசாலை களும் வளமும் பலமும் கொண்ட பெரிய பாடசாலைகளும் தங்கள் அயலில் அல்லது கிராமங்களில் சிறிய வளங்குறைந்த பாடசாலை களின் அபிவிருத்திக்குப் பங்களிக்கவேண்டும்.

எமது தேவைகளும் தெரிவுகளும் முன்னுரிமைகளும் சிறப்புத் தன்மைகளைக் கொண்டவை. அவற்றை வெற்றி கொள்வதற் காக நாம் புதிய அணுகு முறைகளைத் தேடுகின்றோம். இங்குள்ள அரசாங்கத்தினதும் நிறுவனங்களினதும் மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புகளுக்காக பாடசாலை இடை விலகி யோரையும், தொழிற்பயிற்சி வேண்டு வோரையும், உயர்கல்விக்காக ஏங்குவோரையும் சிறப்புக்கல்வித் தேவைகளுக்காகத துயருடன் காத்திருப்போரையும் வருடக்கணக்கில் காத்திருக்கச் செய்வதற்கு எங்களில் யாருக்கும் உரிமையில்லை. அவர்களுக்குப் பொருத்தமான துறைசார் உயர் கல்வியையும் தொழிலாற்றல் பயிற்சிகளையும் வாழ்க்கை வளப்படுத்தல் பயிற்சிகளையும் உரிய காலத்தினுள் வழங்கி அவர்களை முழுமையடையச் செய்யும் வகையில் எமது தொலைநோக்குப் பார்வை அமைய வேண்டும்.

எனவே புலம்பெயர் சமூகத்தினது புலமையும் உழைப்பும் பெறுமதியான வளங்களும் மனிதவள மேம்பாட்டிற்கான துறைகளுக்குள் அர்ப்பணிக்கப்பட வேண்டும். காலச்சக்கரத்தை எவ்வாறு தடுத்து நிறுத்தி வைக்கமுடியாதோ அதேபோல் கவனிப் பாரற்றுக் கிடக்கும் மனிதவளம் அழிவுச்சக்தி யாக மாறுவதனையும் எம்மால் தடுத்துநிறுத்த முடியாது. அவர்களுக்காக செயற்படத் தாமதிக்கும் ஒவ்வொரு மணித்துளியும் எங்கள் பிள்ளைகளது, இளையோரது அடிப்படை உரிமைகளை நாம் மறுக்கும் மணித்தியாலங் களாகவே இருக்கும். எனவே சமகால சவால்களை இனங்கண்டு கல்வியினூடாக அவற்றை எதிர்கொள்ளும் ஆற்றலுள்ள ஆளுமையுள்ள சமுதாயத்தை உருவாக்குவதே எங்கள் அனைவரினதும் தலையாய கடமையாகும்.

# மனமே நீ பேசு

திருமதி சறோஜினி நாகராஜா,
பிரதிக்கல்விப் பணிப்பாளர்(க.அ.), வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்..

மனம் தூய்மையானது, அன்பானது, சந்தோஷமானது. இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்பது நல்லவர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப மாறக் கூடியதும், நோய் வாய்ப்படக்கூடியதுமான மனத்தைப் பக்குவப் படுத்திக் கொண்டவர்கள் உயர்ந்தவர்கள் வெற்றியடைபவர்கள்.

மனிதன் பேச்சுவழக்கில் பயன்படுத் தும் மனச்சாட்சி, மனப்பாங்கு, மனப்பக்குவம் என்பவையெல்லாம் இம் மனத்தின் செயற் பாட்டை விபரிக்க கூறும் சொற்கள். மனம் என்பது உண்மையில் மனப்பாங்கின் திரட்சியே. "மனம் போல வாழ்வு" ஒருவனின் மனம் எவ்வாறிருக்கின்றதோ அவ்வாறே அவனது வாழ்வும் இருக்கும் என்பதாலேயேயாகும். மனிதனின் வாழ்வில் முக்கியமானது அவனது மனப்பாங்கே.

"உள்ளம் பெருங்கோயில்", "உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்" என்பவை வாழ்கையில் நிம்மதி, வெற்றி, பெறும் ஒவ்வொருவரிடமும் அமைந்திருக்கும்.

வள்ளுவர்

"வெள்ளத் தணையது மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு" என்றார்.

நல்ல உழைப்பை நல்குவதற்கு அடிப் படை "என்னால் ஆற்ற முடியும்" என்ற நம்பிக்கை. இந் நல்ல நம்பிக்கையை ஒருவருக்கு அளிப்பது அவரது ஆழ்ந்த அறிவு, தூய சிந்தனை, நல்லொழுக்கம், இறைபற்று, நற்பண்பு என்பவையே.

ஒருவரது மனப்பான்மை அவரால் உருவாக்கப்பட்டு அவரது பண்பின் ஒன்றாக அமைந்துவிடும். இதற்கு அவரது வாழும் சூழல், அனுபவம், கல்வி மதிப்புமிகு கோட்பாடுகள் காரணமாகின்றன.

அறிவார்ந்த, ஆக்கபூர்வமான, அமைதி யான உயர்ந்த நல்ல சூழ்நிலை நேரான எண்ணத்தை உருவாக்கக் கூடியது. நல்ல அனுபவங்கள், வாய்ப்புக்கள், பொருள் பொதிந்த கல்வி அறிவு, தன்நம்பிக்கை, மதிப்பு மிகுந்த கோட்பாடுகள். இவற்றைப் பின் பற்றுதல் ஒருவரின் மனப்பாங்கை நேரிய முறையில் மாற்றுவதுடன் உயர்வையும் வெற்றி யையும் மற்றவர்களிடம் நன்மதிப்பையும் பெற்றுத் தரும்.

நேர் சிந்தனை ஒரு நேர் விளைவின் வித்தாகும். எமக்கு ஒன்றைப் பிடிக்கவில்லை என்றால், அதனை மாற்றுவதற்கு வழிதேடுதல் வேண்டும். அதனை மாற்ற முடியவில்லை எனின் எமது மனப்பாங்கை மாற்றுங்கள். மற்றவர்களிடம் முறையிடுவதைத் தவிர்த்து விடுதல் சாலச்சிறந்தது.

சீரிய மனப்பாங்கு உள்ளவர் பாதி கண்ணாடிக் குவளையில் இருக்கும் நீரைக் கண்டு "பாதிக் குவளையில் நீர் இருக்கின்றது" என்பார். எதிர்மறையான எண்ணங் கொண்டவர் "பாதிக் குவளை வெற்று" என்பார். தெளிந்த மனங்கொண்டவர்கள் தாம் செய்யும் குற்றங்களைக் கண்டறிவது இலகுவாகும்.

எந்நேரமும் மற்றவர்களில் குறை காண்பதே ஒருவரின் போக்காக இருப்பின் அவர் எதிர்மறையான எண்ணங்கொண்டவர் என்று கூறுவதிலும், அவர் விரைவில் மனநோய்க்கு ஆளாகிவிடக் கூடியவர் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

நேர்மனப்பாங்கு சாதகமான விளைவை ஏற்படுத்தும் ஒரு காந்த சக்தியாகும். எமது வாழ்க்கை எமது மனப்பாங்கின் பிரதிபலிப்பே. முன்னேற்றத்திற்கும் உயர்விற்கும் ஆக்க பூர்வமான மனப்பாங்கு ஒரு உந்து சக்தியாகும்.

நாம் எதை உலகில் காணவேண்டும் எனச் சிந்திக்கின்றோமோ அதையே எமது செயல்களில் செய்தல் வேண்டும். மற்றவர்களை மன்னிக்கும் மனப்பான்மையை வளர்த்தால் நாம் மன்னிக்கப்படுவோம். எமது மனங்கள் பேசுமானால் நாம் ஆற்றும் காரியங்கள் நமது வாழ்வை உயர்த்துவதற்கானவையாக அமைந்து மனநோயிலிருந்து எம்மைக் காப்பாற்றமுடியும்.

# "தகசாக்காவும் நானும்"

முத்து. இராதாகிருஷ்ணன்

தகசாக்கா...மெலிந்த கட்டையான உருவம். எழுபது வயதுக்கு மேல் இருக்கும். ஜப்பானில் கொக்கைடோத்தீவின் மைந்தர் ஒபஹிரோ நகரத்தின் ஹிக்கோ விஞ்ஞானகூட முன்னாள் பொறுப்பதிகாரி பணிப்பாளர். நல்ல ஒரு புத்தசமயத்தவர். இவரை நான் சந்தித்தது என்னவோ தெருவில்த்தான். எந்த முன்னேற் பாடும் இல்லாமல் சந்தித்துக்கொண்டு இன்று வரை நெருக்கமாக இருக்கிறார். சில நல்ல நட்பு காரணகாரியம் இல்லாமல் மனிதநேயம் என்ற ஒன்றினால் மட்டுமே எற்படும். தகசாக்காவும் அப்படியானவர்தான். இவரது சந்திப்பு எனது ஜப்பானிய பயணத்தின் இனிய நினைவு. இந்தக்கதைக்கு வரமுதல் நான் கொழும்புக்கு முதன்முதல் சென்றகதையைப் பார்ப்போம்.

உள்ளம் புளங்காகிதம் அடைந்திருந்தது. கொழும்புக்கு போகப்போகின்றேன் அப்பாவுடன், கொழும்பு என்றால் என்னவென்று சரியாக விளங்காத வயது.. அது எப்படி இருக்கும்... தெரியாது ஆனால் ஏதோ ஒன்று... அதைவிட ரயில் பயணம் செய்யவேண்டும் என்ற ஆர்வம்.. அதுவரையில் நான் ரயிலில் ஏறியதில்லை. காலை யாழ்தேவி ரயிலில் தான் பயணிக்க உத்தேசம். இரவு முழுதும் நித்திரை வரவில்லை. மீண்டும் மீண்டும் அப்பாவிடமும் அம்மாவிடமும் "இப்ப என்ன நேரம்" என்ற வினா மட்டும் தான். ஏதோ காலை விடிந்து பயணிக்கத் தொடங்கியாகிவிட்டது.... ரயில் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. எனக்கு இருப்புக் கொள்ளவில்லை... மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடியது... ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்த சீற்றில் துள்ளித்துள்ளி இருந்தேன். காலை புலர்ந்து சூரியன் புறப்பட்டு கதிர்களால் பெட்டி முழுவதும் நிறைந்திருந்தான். ரயில் நகர மரங்கள் நகர சூரியப்பந்தும் வெளிச்சமாக நகரந்து ஓடிவந்து கொண்டிருந்தது. அப்பா என்னை அடிக்கடி கவனித்தபடி புத்தகம் ஒன்றை வாசிக்கலானார். அப்படியும் இடையிடையே எனது கேள்விகள் அவரைத் துளைத்தது. கொழும்பு எப்படி இருக்கும்... எட்டுமணிநேரப் பயணம் ஒரு வழியாக நிறைவடைந்தது.

மருதானை ஸ்ரேசனைவிட்டு வெளியேறத் தொடங்கியபோது... புகையிரதத் தண்டவாளங்களை மெல்லக்கடந்தபோது... அப்பாவின் கையைப் பிடித்தபடி... மகிழ்வுடன் ஒரு கர்வத்துடன் இருந்தேன் நீலமும் சிவப்புமான ரயில் எஞ்ஜின்கள் மெல்ல அசைந்து சென்றன. எல்லாவற்றையும் மீறி அந்தப்பாடல் அருகில் இருந்த தேனீர்க்கடையில் இருந்து புறப்பட்டது. "ராஜாவின் பார்வை ராணியின் பக்கம்" ரி.எம்.சௌந்தர்தாஜனின் குரலில் அந்தப்பாடல் உச்சஸ்தாயியில் எழுந்து இன்றும் எனக்கு எனது முதலாவது கொழும்புப் பயணத்தை நினைவு படுத்தும். நானும் முணுமுணுத்துக்கொண்டேன்.

மவுண்லெவனியாவில் சிவநாதன் மாமாவின் வீடு கடற்கரைப்பக்கமாகவே இருந்தது. அவர்களின் வீட்டு வாசலில் நின்று பார்த்தால் தொலைவில் கடற்கரைப்பக்கமாக புகையிரத வீதியில் ரயில் போவது தெரியும். அந்த வீட்டில் நான் தங்கியிருந்த இரண்டு நாட்களுமே ஓட்டப்பந்தயம் தான். ரயில் சத்தம் கேட்டதும் வாசலுக்கு ஓடி நிற்பேன் ரயில் போனபின் உள்ளே வருவேன். திடீரென்று மறு பக்கமாக ரயில் போகும் சத்தம் கேட்கும். இப்படி என்னை அந்த வீட்டில் நிம்மதியாக இருக்க அந்த ரயில்கள் விடவேயில்லை. சிவநாதன் மாமாவும் அப்பாவும் காலையில் புறப்பட்டு விட்டால் மாமியுடன் தான் நான் இருப்பேன். மாமி எப்போதும் படுக்கையில் படுத்தபடியே. படுப்பது என்பது தான் அவரது முதலாவதும் முடிவானதுமான பணிபோலும். சாப்பிட வருவார் குளிக்கப்போவார். யாராவது

கேற்றில் தட்டினால் கத்துவார். பிறகு படுக்கப் போவார்... சாதாரணமாக ஆட்களுடன் அளவளாவவே மாட்டார். சொற்களை மிகச் சிக்கனமாகவே பயன்படுத்துவார். சிரிப்பதும் அவ்வாறே. அவருக்கு நீண்டகாலமாக குழந்தை களும் இல்லை. அதனாலோ என்னவோ குழந்தைகளைப் பிடிப்பதும் இல்லை. பக்கத்து வீட்டு குழந்தைகள் பந்து எறிந்துவிட்டால் எடுக்க வரமாட்டார்களாம்.....அதுதான் நான் வீட்டிற்கு வந்ததும் கைநிறைய இரண்டு மூன்று பந்துகளைத் தந்தார்..... மாமி அறையைச் சாத்திக்கொண்டு உள்ளே போய்விட்டார். நான் தனியாக என்ன செய்வது இருக்கவே இருந்தது... அந்த ரயில்கள்.

தண்ணீர் குடிக்கவேண்டும் போல் இருந்தது..வீட்டில் தண்ணீர் எங்குள்ளது என்று தெரியவில்லை.. சமயலறைக்குள் சென்று நோட்டம் விட்டேன். எதுவும் சரிவரவில்லை. மாமியின் அறை வாசலுக்கு அருகில் ஒரு ஸ்ரூலில் பிளாஸ்டிக் உருளைபோல் ஒன்று இருந்தது. பெட்டிபோல் அல்லது வாளிபோல் என்று சொல்லலாம். அதற்கு ஒரு டப் இருந்தது. ஆனால் அதன் பிடி வித்தியாசமாக இருந்தது. அருகில் ரேயில் கிளாஸ் ஒன்றும் இருந்தது. தண்ணீர் ஒரு நிறைந்த ஒரு தாங்கி எனச்சரியாக இனங்கண்டு கொண்டேன். டப்பை எப்படித்திறப்பது... மெல்ல கிளாசை எடுத்து டப்பின் வாயில் வைத்து மேலிருந்த ஒரு லிவரை மெல்ல இழுத்துப்பார்த்தேன். நீர்வரவில்லை தள்ளிப்பார்த்தேன் எதுவும் ஆகவில்லை. பைப்பைத் திறப்பது போல் சட்டென்று முறுக்கிப்பார்த்தேன். சர்ரென்று பைப்பில் இருந்து நீர்வந்தது. அது மட்டும் அல்ல அந்த லிவரும் கூட கையுடன் வந்துவிட்டது. எனக்கு என்னசெய்வது என்று தெரியவில்லை. தண்ணீர் கிளாசில் நிறைந்து வழியத்தொடங்கிவிட்டது. நீரை நிறுத்த முடியவில்லை. மெல்ல மாமி என்று அழைத்தேன்.... குரல் திணறித் திணறி வெளிவந்த.... தொண்டை அடைத்துவிட்டது.. நீர் வழிந்து ஓடத்தொடங்கிவிட்டது. மீண்டும் மாமி என்று அழைத்தேன். மாமி நல்ல நித்திரை போலும்..ஓ... அந்த ஹோல் முழுவதும் நீர் நிறைந்து ஓடத் தொடங்கி விட்டது.....என்ன செய்வது... மாமி எழுந்து என்ன சொல்லப் போறாவோ தெரியாது... ஓ....வந்த இடத்தில கையைக்காலை வச்சுக்கொண்டு சும்மா இருக்கத் தெரியாதா என்று அப்பாவின் ஏச்சு எல்லாம் என்னை நோக்கி வருவதாகத் தெரிந்தது... ஒரு வழியும் இல்லை. மெல்ல எழுந்து வெளியே வந்தேன். வாசல் கதவைத் திறந்து கொண்டு முற்றத்திற்கு வந்தேன். இன்னும் நீர் ஓடிக் கொண்டிருந்தது. கேற்றைத் திறந்து கொண்டு ஒழுங்கைக்கு வந்தேன்... நீர் சத்தம் இன்னும் கேட்டுக்கெண்டிருந்தது. மாமி அவ்வளவு நித்திரையா.... கேற்றை சாத்தாமல் அதிலேயே நின்றேன். ரயில் பாதையில் ரயில் வரும் சத்தம் கேட்டது.... ரயில் பாதையை நோக்கி விரைந்து ஓடினேன்.

ரன்வேயில் ஓடிக்கொண்டிருந்த விமானம் மெல்ல வேகம் குறைந்து திரும்பி நின்றது விமானநிலைய சோதனைச்சடங்குகள் முடிந்துவெளியில் வந்து ஜப்பானின் குளிர் காற்றை சுவாசித்தேன்.. பிறகு.. ஒபஹிரோ விமான நிலையத்திலிருந்து கிக்ஹோர என்ற கொக்கைடோ இன்ரனேஷனல் றிலேசன் சென்ரர் நோக்கி நிஸான்வானில் பயணம் தொடர்ந்தது. வானில் நாங்கள் எட்டுப்பேர் இருந்தோம். இது ஒரு சர்வதேசபுலமைப்பரிசில் கற்கைநெறிக்கானபயணம். வெளியில் கடும் பனி பொழிந்துகொண்டிருந்தது. புதிய இடம். முதன்முதலாக பனிப்பொழிவு அனுபவம். ஒருமணிநேரத்தின் பின் கிக்ஹோரா புறொண்ட் டெஸ்கில் வரவேற்பு நிகழ்ந்தது முதன்முதலாக பலர் அறிமுகமானோம் நேரம் இரவு ஏழு என ஜப்பானிய மணிகூட்டில் நேரம்காட்டியது. பின்பு எமக்காக ஒதுக்கப்பட்ட இடங்களை நோக்கி அழைத்துச்செல்லப்பட்டோம்

வீதியின் இருமருங்கிலும் சிறிய சிறிய தங்குமிடங்கள் பல வரிசையாக அமைந்தி ருந்தன. எல்லாம் ஒரே வடிவத்தில் சிறிய வீடுகளாக காணப்பட்டன. ஒவ்வொன்றுக்கும் இடையிலும் 200 மீற்றர் வரையான இடை வெளி இடைவெளியில் ஆங்காங்கே சில மரங்கள் நின்றன. வெண்தலைப்பாகையுடன் இருப்பது போல் மரங்களில் பனிப்படிவுகள். நிலம் தெரியாத பனிப்பொழிவு சிலீர் என்று குளிர் உறைத்தது. கால்களால் பூம்பனி

யைத்தட்ட உற்சாகம் பிறந்தது. 10 நிமிட நடைப்பயணத்தில் வரிசையாக இருந்த ஒருதங்குமிடத்தின் கதவு திறந்து உள்ளே அழைத்துச் செல்லபட்டேன். அறைக்கதவில் ஜப்பானிய மொழியில் ஏதோ எழுதப்பட்டி ருந்தது. "....." என்று அந்த இலக்கத்தை அழைத்து வந்தவர். கூறிவிட்டு 2 மணி நேரத்தின் பின்பு மீண்டும் கிக்றோ டின்னர் ஹோலில் இரவு உணவிற்குவருமாறு கூறிச்சென்றார். உடைகளை மாற்றி விட்டு சற்றுநேரம் ஒய்வெடுப் போம் எனநினைத்தபடி அந்த அறைக்கதவின் திறப்பை எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்த பின் தான் எனது பெட்டிகளின் சாவிகள் என்னிடம் இல்லை என்பது விளங்கியது.

இலங்கையில் இருந்து என்னுடன் வந்த சீதாவிதானகமகே என்பவரின் தோள்கைப்பை யில் எனது பெட்டிகளின் சாவிக்கொத்தை வைத்திருந்த சிறிய லெதர்பையை வைத்த ஞாபகம் வந்தது. உடைமாற்றுவதானால் கூட பெட்டிகளின் சாவிவேண்டுமே. சீதாவிதானக மகேயின் தங்குமிடம் ஹிக்கோவின் 2 ஆவது பக்க வரிசையில் இருந்தது என்று நினைக்கின் றேன். அந்தப்பக்கமாகத்தான் அவர்கள் அழைத்துச்செல்லப்பட்டார்கள்.

புரொண்டெஸ்கு இரவு 8 மணியுடன் மூடப்பட்டுவிடும்... ஆனால் டைனிங்ஹோல் எமக்காக 9.30 வரை திறந்திருக்கும். எனக் கூறியிருந்ததைநினைத்தேன். இரவு உணவுக்கு 2 மணிநேரம்இருந்தது அதுவரை உடைகளும் மாற்றாமல் இப்படியே இருப்பதா?

நான் எனது அறையில் இருந்து புறப்பட்டு வெளியே வந்தேன். ஹிக்கோ இருக்கும் பக்கமாக வீதியால் நடக்கத் தொடங்கினேன். வானம் பெரும் வெளியாக பிரமிக்கவைத்தது வீதிகளும் வெறித்துக்கிடந்தது. எங்கும் வெண்பனிச்சிதறல்கள் இடையறாது கொட்டிக் கொண்டிருந்தது. என்மேலே எனக்கு ஓர் கர்வம் தோன்றியது. நான் ஒரு சாதனையாளன் என்பதை நானே மெச்சிக்கொண்டேன். இப்படி ஒரு அந்நியநாட்டில் ஒர் இரவில் பனிப் பொழுதில் நான் தனிமையாக நடந்து செல்கின் றேன் என்ற கர்வம் அது..... 10 நிமிட நடைப் பயணத்தில் ஹிக்ஹோவை அடைந்தேன் வாசல் கதவு பூட்டப்பட்டிருந்தது. புரொண்டெஸ்கில் விசாரித்தால்தான் சீதாவின் இடம் அறை தெரியும். பக்க வாசல் வழியாக உள்ளே சென் றேன். அது ஒரு சுற்று வழிதான் ஆனால் எனது கர்வம், துணிவு. சாதனையாளன் என்ற எண்ணம் என்னை மென்மேலும் சிந்திக்க விடவில்லை. புரொண்டெஸ்கில் எவரும் இல்லை ஷாட்டர் பூட்டப்பட்டிருந்தது. செக்கியூரிட்டி டைனிங் ஹோலுக்கு இரவு உணவுக்கு 9 மணிக்கு வா எனக் கூறினான். ...

எவ்வாறு சீதாவை கண்டுபிடிப்பது. சரி என்னை அழைத்து வரும்போது சீதாவை மறுபக்கம் தான் அழைத்துச் சென்றார்கள். அந்தப்பக்க விடுதிகளில் தான் ஒன்றில் சீதா இருக்க வேண்டும். துணிவாகவும் தனியாகவும் நடந்தேன். கைகள் விறைத்துவிட்டிருந்தன. வலது பக்க விடுதியில் முதலாவதாக இருந்ததை அணுகி மணியை அழுத்தினேன். சற்றுநேரம் கழிந்தது. கதவு திறந்தது. ஒரு ஜப்பானியப் பெண் ஜப்பானிய மொழி மூலம் ஏதோ கூறினாள். நான் என்ன கேட்பது என்று முடிவெடுக்க முடியாமல் திணறி விட்டேன். அவர் ஹிக்கோ பக்கம் கையைக் காட்டிவிட்டு கதவைச் சாத்திக்கொண்டார். ஒரு விடயம் எந்தவொரு ஜப்பானியருடன் ஏதாவது கதைத் தால் அவர்கள் ஆங்கிலம் பேசமாட்டாதவர்கள் என்பதால் உடனடியாகக் ஹிக்கோவைக் காட்டுவார்கள். சிலர் கொண்டுவந்து இறக்கி விடுவார்கள்.

நான் மெல்ல நடந்து அடுத்த விடுதியை நோக்கிச் சென்றேன். அடுத்த ஹட்டில் மணியை அழுத்தியவுடன் ஒருவர் பின் ஒருவராக இருவர் வந்து சடார் என்று கதவைத் திறந்தார்கள். நான் சீதா என்றேன். ஹிக்கோவை நோக்கிக் கையைக் காட்டினர். மூன்றாவது விடுதியிலும் இதுதான் நடந்தது. வெளியில் குளிர் உடம்மை உதறத் தொடங்கிவிட்டது. யாழ்ப்பாணத்தான் எந்த நிலமையையும் சமாளிப்பான் என்பதெல்லாம் அந்தக்குளிரோடு விடைபெறத்தொடங்கிவிட்டது. மீண்டும் ஹிக்கோவை நோக்கி நடந்தேன். ஹிக்கோவின் முன்புற வெளிச்சம் நிறுத்தப்பட்டிருந்தது.

டைனிங்ஹோல் மட்டும் வெளிச்சமாகத் தெரிந்துகொண்டிருந்தது. மீண்டும் அறைக்குச் செல்வோம். பின்னர் டைனிங் ஹோலில் சீதாவைச் சந்தித்துத் திறப்பை எடுக்கலாம் என்ற மிகத் தாமதமான எண்ணம் வேறு வழியில்லாத நிலையில் ஏற்பட்டது. திரும்பி எனக்கு ஒதுக்கப் பட்ட தங்குமிடத்தை நோக்கி நடந்தேன். இப் போதுதான் விபரீதம் ஏற்படத் தொடங்கி யிருந்தது. நான் எனதுவிடுதி அறைக்கு குறிப் பான ஒரு அடையாளத்தை வைத்திருந்தேன். அது பனிக்கட்டிகளை வாரியள்ளும் இயந்திரம் அது எனது தங்குமிட பில்டிங்கின் அருகாக நிறுத்தப்பட்டிருந்தது. அதுதான் எனது பிரதான அடையாளம். நான் நடந்து களைத்து விட்டேன். அந்த இயந்திரத்தைக் காணவில்லை. எல்லாம் ஒரே வடிவிலான கட்டடம். எல்லா முகப்புக்களிலும் ஜப்பானிய மொழியில் எழுத்துக்கள் மெல்ல நிலமையின் விபரீதத்தை உணரலானேன். இடது பக்கத்தில் இருந்த கட்டடங்களில் ஒன்றை குத்துமதிப்பாகத் தீர்மானித்தேன். அருகே சென்று படியேறி கதவின் கைப்பிடியைப் பிடித்து திறப்பை நுழைத்தேன். ஆ.... திறப்பு நுழைய மறுத்தது.... இது எனது தங்குமிடம் அல்ல மீள வந்து அடுத்த கட்டடத்தை அடைந்தேன். அதன் கதவும் திறக்கவில்லை. அந்த வரிசையில் உள்ள எறத்தாழ 5 கட்டடங்களில் முயற்சி செய்து விட்டேன். சரிவரவில்லை. நான் கூடுதலாக நடந்து தள்ளி வந்துவிட்டேன் என்ற சிந்தனை எழுந்தது. கைகள் முற்றாக விறைத்துவிட்டன.... யாரிடம் கேட்பது... நேரம் இரவு 8.30 ஆகிக் கொண்டிருந்தது. ஓ..... இங்கு வந்து இறங்கியே ஒரு மணிநேரம் ஆகிவிட்டது. எனக்கு வெட்க மாக இருந்தது. எனது கர்வம் சிந்தனை எல்லாம் ஒரேயடியாக ஓடியே போய்விட்டது. ஒரு சாதாரண இடத்தையே கண்டுபிடிக்க முடியாது நிற்கின்றேனே என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆச்சரியமாகவும் ஆர்வமாகவும் இருந்த பனிப்பொழிவு வேதனையாகவும் வெறுப்பாகவும் தெரியத்தொடங்கியது. தொண்டை காய்ந்து வறண்டுவிட்டிருந்தது. கடும் குளிரை உணரத்தொடங்கினேன்.

மனதிலிருந்த பயம் குறையவில்லை. அருகிலிருந்த இரண்டு தண்டவாளங்களுக் கூடாகவும் மாறிமாறி ரயில்கள் போய்க் கொண்டிருந்தன.... இரண்டு மணி நேரமாக மாறிமாறி ரயில்களைப் பார்த்து சலிப்பும் தட்டிவிட்டது... வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினேன்.... ஒழுங்கையின் முகப்பில் இருந்து பார்த்தேன்.... வீடுகளில் வெளிச்சம் எரியத்தொடங்கியிருந்தது ..மெல்லநடந்தேன் வீட்டிற்கு அருகில் வந்துவிட்டேன். ஒரு சந்தடியையும் காணவில்லை.... இன்னும் ஒருவரும் என்னைத் தேடவில்லையா? என்ற எண்ணம் எழுந்தது. இப்போது சிவநாதன் மாமா வந்திருப்பார்... அப்பாவும் வந்திருப்பார். தம்பி எங்கே எங்கே எங்கே என்று ஏன் தேடவில்லை. எனக்கு அழுகையும் வந்துவிட்டது. வீட்டிற்கு மிக அருகில் வந்தவுடன் ஐயோ தம்பி எங்கே போனனீ... அலறியபடி சிவநாதன் மாமாவின் மாமி ஓடி வந்தார். நாங்கள் தேடாத இட மில்லை ஐயோ தம்பி எங்க போனனீ ?.

...கொப்பர் தேடிப்போட்டு பொலிசுக்குப் போயிட்டார்... நான் எல்லொ அவப்பெயர் கேட்டுப்போட்டன் என்று அழத்தொடங்கி விட்டார். நான் எதுவும் பேசவில்லை.. நிலம் நன்றாக மொப் செய்யப்பட்டு பளிச்சென்று இருந்தது. என்ன நினைத்தாரோ குண்டுக் கட்டாக என்னைத் தூக்கியபடி வீதிக்கு வந்து நடக்கத் தொடங்கினார். ஒரு சந்து கழிந்து மெயின் வீதிக்கு வந்ததும் மிக அருகிலேயே அந்தப் பொலிஸ் நிலையம் இருந்தது... உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாக அப்பாவை கண்டுவிட்டேன். அழுகை வந்தது. அப்பாவின் கண்கள் கலங்கியிருந்தன. ஓடிப்போய் தாவி அப்பாவைக் கட்டிக்கொண்டேன். மனதில் நிம்மதி எழுந்தது... அப்பா எதுவும் கேட்க வில்லை.

அந்த இடம் சூழல் எல்லாமே மனதில் வெறுப்பை ஏற்படுத்த அடுத்து என்ன செய்வது என்று தெரியாத நிலையில் மீண்டும் முழுமுழ நோக்கி நடக்க முற்பட்டேன். கால்கள் நகர மறுத்தன. உடல் நடுங்கத்தொடங்கியது. மரணவாசல் வா வா என அழைப்பது போல் ஓர் எண்ணம் ஏற்பட்டது. வெறுமயான வீதிகள் பனிப்படலம் புகார் எல்லாம் சேர்ந்து ஏதோ யமலோகத்தை நோக்கி போய்க் கொண்டி

ருப்பது போல ஓர் பிரமையை உருவாக்கியது. கால்கள் துவண்டுவிட்டன. கைகள் குளிர்ந்து இனி எதுவுமே செய்யமுடி யாது கீழே வீழ்ந்துவிட வேண்டியதுதான் என்றநிலை வந்தது. அது ஒரு பயங்கரமான அனுபவம் எனது கர்வம் அடங்கி வடிந்து உயிர் ஒடுங்கத் தொடங்கியபோது தூரத்து வீதியில் இரண்டு வெளிச்சப் பொட்டுக்கள் தெரிந்தன. அது ஒரு கார். வீதியில் காரின் முன்னால் கால்கள் துவண்டு விழுந்துவிடுவேனோ என்று துவண்ட வேளையில் விரைந்து வந்த கார் சட்டென்று அருகில் நின்றது.

கண்ணாடியைக் கீழிறக்கியபடி "வணக்கம் ஏதாவது உதவிதேவையா? காரின் ஜன்னலுக்கூடாக அந்த எழுபது வயதுக்கு மதிக்கக்கூடிய வயோதிகமுகம் தெரிந்தது. நீர் எந்த இடம்?"

என்னால் எதுவும் சொல்ல முடிய வில்லை. சட்டென்று கதவைத்திறந்து முன் இருக்கையில் இருந்து கொண்டேன். கதவை மூடியதும் காருக்குள் இருந்த ஹீற்றரின் கதகதப்பு உடலின் விறைப்பைப் போக்கத் தொடங்கியது. அந்தப் பெரியவர் கண் வெட்டாமல் என்னைப் பார்த்துக்கொண்டிருந்தார். எனது நிலை அவருக்கு விழுங்கியிருந்தது போலும், என்னால் வாய் திறந்து கதைக்க முடியவில்லை. பற்கள் கெட்டித்து கிட்டி யடித்தது. மூச்சுவிடுவதும் அந்தக்கார் முழுவதும் இரைச்சலாகக் கேட்டது.

அப்படியே பார்த்துக்கொண்டிருந்த அந்தப்பெரியவர் எனது கைகளை பற்றித் தனது கைகளுக்குள் வைத்துக்கொண்டார். ஏனோ அப்பாவின் நினைவு வந்தது. எனக்கு கண்கள் கலங்கி விட்டன. நான் எனது நிலையை மெல்ல அவரிடம் கூறினேன். அவருக்கு ஆங்கிலம் தெரிந்திருந்தது. அவர் எனது கையில் இருந்த திறப்பை வாங்கிப் பார்த்தார். பின்னர் காரை விட்டு இறங்கி நாங்கள் நின்றிருந்த இடத்துக்கு நேரில் இருந்த வீட்டின் கதவில் திறப்பை பொருத்தினார். என்ன ஆச்சரியம் கதவு திறந்து கொண்டது. அவரது மனதைப்போல்....



# இலக்கியம் கற்பிப்பதில் கையாள வேண்டிய நுட்பங்கள்

தி.தர்மலிங்கம்
உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்)
மாகாணக் கல்வித் திணைக்களம் வடமாகாணம்.

மனிதன் தன் கருத்தைப் பிறர் அறிதற் பொருட்டும் ஒரு பரிவர்த்தனைக் கருவியாக, பொது ஊடகமாக மொழியைப் பயன் படுத்துகின்றான். எனவே, இன்றியமையாத் தேவையில் ஒன்றாக மொழி காணப் படுவதால் அவன் மொழி பற்றிய அறிவு, மொழியாற்றல் மாணவருடாக வளரும் சந்ததிக்குக் கடத்தப்படுவதனால் ஆரோக்கிய முள்ள மொழியைப் பயன்படுத்துவோனாகக் காணப்படுவான். இதனடிப்படையிலேயே மாணவர்கட்கு மொழி ஒரு பாடமாகப் புகட்டப்படுகின்றது.

கனிஸ்ட இடைநிலை மட்டங்களிலும், சிரேஸ்ட உயர்கல்விப்பீடங்களிலும் மொழியறிவை வளர்ப்பதற்கு இலக்கியம் புகட்டப்படுகின்றது. அந்த இலக்கியத்தை மாணவர்கள் எளிதில் உணர்வதற்கும் மொழித்திறனை விருத்தி செய்வதற்கும் இலக்கியத்தில் ஆர்வமுடையோன் ஆக்குவதற்கும் ஏற்ற கற்பிக்கும் நுட்பங்களைக் கையாண்டு கற்றற் செயற்பாட்டில் ஈடுபடுதல் வேண்டும். அந்த வகையில் இலக்கியம் கற்பிப்பவர் கையாள வேண்டிய நுட்ப முறையில் பல இருப்பினும் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

இலக்கியம் என்பது இலட்சியம் என்ற வடசொல்லின் அடியாகப் பிறந்தது. அஃதாவது நீண்டகால நோக்கத்தோடு மனித விழுமியங்களை நல்வழிப்படுத்தும் நோக்கிலே ஆக்கப்பெற்றது. இலக்கியம் சமுதாயக் கண்ணாடியாகவும் சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்ற ஒரு வரலாற்றுச் சாதனமாகவும் விளங்குகின்றது. ஓர் குறித்த காலப்பகுதியில் தன் காலத்து அரசியல், பொருளாதார, சமய, ஒழுக்க, சமுதாய வாழ்க்கை முறைகளையும் மொழி நடையையும் படம் பிடித்துத் தொழிற்படுத்துபவையாக அமைவதனால் மாணவரிடையே காலத்துக்குக் காலம் மொழியில் ஏற்பட்ட மாற்றங்களை, மக்களில் வாழ்வியலில் ஏற்பட்ட மாற்றங்களை, அதன் பலாபலன்களைத் தெளிய வைப்பதற்கு இலக்கியம் சான்றாக அமைகின்றது.

இலக்கியத்தைக் கற்பிக்கும் பொழுது ஆசிரியர், இலக்கியம் எழுந்த காலம், இலக்கிய கர்த்தா வாழ்ந்த காலம், அக்காலத்து சமூக, அரசியல், பொருளாதார, சமயப் பின்னணிகள், அவ்விலக்கியம் எழுவதற்கான காரணம், இன்றும் நின்று நிலைப்பதற்கான தனித்தன்மை என்பவற்றை மாணவர்களுக்கு

ஓர் அறிமுகம் செய்தல் முதலாவது நுட்பமுடையாகும். இந் நுட்பமுறையி னூடாக மாணவன் வரலாற்று அறிவு, சமுதாயப் போக்கு என்பவற்றை அறிவதோடு மட்டுமன்றி இலக்கிய கர்த்தாவினது மொழிநடையையும் அவனது வாழ்க்கைப் பின்னணியையும் அறிந்து கொள்கிறான். உதாரணமாகப் பாரதியாரின் பாடல்களில் அவரது வாழ்க்கைப் பின்னணி, சமுதாயப் பின்னணி, அரசியற் பின்னணி என்பன மிளிர்வதைக் காணலாம்.

இலக்கியம் கற்பித்தற் செயற்பாட்டில் ஈடுபடும்போது இலக்கிய கார்த்தாவினது வாழ்க்கைப் பின்னணி, அவர் வாழ்ந்த காலச் சூழ்நிலை அமைவுகள் என்பவற்றை விளங்க வைத்தபின் இலக்கியப் பகுதியில் வரும் கதாபாத்திரங்கள், நாட்டு நகரச் சிறப்புக்கள், அவ்விலக்கியம் தாங்கிவரும் அல்லது பொதிந் துள்ள கருத்துக்கள், ஏனைய இலக்கியங் களைவிட அவ்விலக்கியம் கொண்டுள்ள சிறப்புக்கள், தனித்தன்மைகள் என்பவற்றை மேலோட்டமாக அறிமுகம் செய்தல் ஒரு சிறந்த நுட்பமாகும். கதாபாத்திரங்கள், அவற்றின் குணவியல்புகள் என்பவற்றை விளக்குவதுடன் இலக்கியப்பகுதி கதை வடிவத்திலா, நாடகப் பாங்கிலா, உரை வடிவிலா அமைந்தது என வினாவெழுப்பி சிந்திக்கத் தூண்டுதலும் நன்று. இதனால் பிற இலக்கியங்களைக் கற்கும்போது திறனாயும், நயம்கூறும், விமர்சனம் செய்யும் ஆற்றலைப் பெறுவர். எனவே இந்நுட்பமுறையானது மாணவரை விழிப்படையச் செய்து கற்றலில் ஓர் தூண்டியாகவும் தொழிற்படுகிறது.

ஒரு கருத்தை ஒருவர் நேரடியாகக் கூறு மிடத்து அவரது உணர்வுகள் வெளிப்படுவது திண்ணம். ஆகையால் அக்கருத்தினை உணர்வோன் எளிதில் புரிந்துகொள்ளக்கூடி யதாக இருக்கும்.

அதனைப் பிறிதொருவர் கூறுமிடத்து உணர்வுகள் வெளிப்பாடற்ற தன்மையால் விளங்கிக் கொள்வது கடினமானதாகும். அந்த வகையில் இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர் தன்னை ஒரு இலக்கிய கர்த்தாவாகப் படைப்பாளனாக மாற்றிக் கற்பித்தல் வேண்டும். இதனால் தெளிவான உணர்வுகள் ததும்பிய முகக்குறிப்புக்கள் நிறைந்த இயல்புகளோடு இலக்கியம் தாங்கி வருகின்ற கருத்துக்களை எடுத்தியம்புவதனால் மாணவர் எளிதில் உணரும் தன்மை பெறுவர்.

கற்பிக்கப்பட வேண்டிய இலக்கியப் பகுதிகள் ஆசிரியர் பொருளுக்கேற்ப பிரித்து ஒரு தரமோ அல்லது பல தரமோ வாசித்துக்காட்ட ஆசிரியர் வழிகாட்டலைப் பின்பற்றி எழுமாறாகக் குறைந்தது ஐந்து மாணவர்களையாதல் அப்பகுதியைப் பிரித்து வாசிக்கச் செய்தல் வேண்டும். இதனால் மாணவரிடையே பிரித்து வாசிக்கும் திறன் அதிகரிப்பதுடன் இலக்கியப் பரப்பின் மையக் கருத்தையும் நயச் சிறப்பையும் அறிந்து கொள்ள முடிகிறது.

பிரித்து வாசித்தவுடன் அரும்பதங் களுக்கான பொருளை விளங்கக்கூடிய வகை யில் அறியச் செய்தல் வேண்டும். அதன்பின் இலக்கியப் பரப்பினை எளிதுற மாணவர்கள் விளங்கும் வண்ணமாக சுவையுடைய கவர்ச்சிகரமான சொற்கள், சொற்றொடர்கள் என்பவற்றை அணிகள் மிளிர விளங்க வைத்தல் ஓர் சிறந்த நுட்பமாகும். இந்நுட்பத்தினூடாக மாணவர்களின் இலக்கியப் பாடத்தைக்

கற்கின்ற ஆவல் தூண்டப்படுவதுடன் இலகுவாக விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருக்கும். செய்யுட் பகுதிகளாயின் கடின சொல்லுக்கான பொருளை விளங்க வைக்க மாணவர்கள் செய்யுள்களின் பொருளைத் தம் சொந்த நடையில் கூறுமாறு அல்லது எழுதுமாறு ஆசிரியர் தூண்ட மாணவர் தம் செயற்பாட்டில் ஈடுபட்டுத் தம் திறனை வளர்த்துக்கொள்ளக்கூடியதொன்றாகும்.

இலக்கியம் கற்பிப்பதோடு இலக்கண அறிவை வளர்த்தலும் ஒரு சிறந்த இலகுவான முறையாகும். எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பதுபோல இலக்கியத்திலிருந்து இலக்கண விளக்கங்களை எடுத்து விளங்க வைப்பதனால் மாணவர்களுக்கு இலக்கண அறிவு தெளிவாகிறது. அதுமட்டுமன்றி இலக்கியங்களில் உள்ள மொழிகளின் பிறப்பு, மொழிக் குடும்பங்கள் எப்பவற்றை விளங்க வைப்பதனாலும் மொழியியல் பற்றிய அறிவு பெற்றோனாகின்றான். உதாரணமாக "நம்" என்ற வடமொழிச் சொல்லிலிருந்து "நாமம்" என்ற தமிழ்ச் சொல்லும் "நம்" என்ற சிங்களச் சொல்லும் "நேம்" (Name) என்ற ஆங்கிலச் சொல்லும் பிறந்தது. அதுபோலவே "தத்" என்ற வடமொழிச் சொல்லிலிருந்து "தற்" (That) ஏன்ற ஆங்கிலச் சொல்லும் பிறந்தது. இதுபற்றிய விளக்கங்களைக் கொடுப்ப தனூடாக மாணவன் இலக்கிய அறிவோடு மொழியியல் பற்றிய அறிவுடனும் பாடசாலையை விட்டு வெளியேறுகிறான்.

குறித்த இலக்கியப் பாடத்தினையோ அன்றிப் பரப்பினையோ அல்லது பகுதி களையோ நாடகங்களாக கதாபாத்திரங்களாக நடிக்கச் செய்தல், பார்வையிடச் செய்தல் ஒரு சிறந்த நுட்பமாகும். இந்நுட்பம் மாணவர் களின் மனதிலே பதியக்கூடியதாக என்றும் நிலைத்து நினைவிருக்கக் கூடியதாக இருக்கும். இது தவிர மாணவர்களை ஒவ்வோர் கதா பாத்திரங்களாக உருவகித்து வகுப்பறைக் கற்பித்தலில் வாசிக்க, நடிக்க வைப்பதனால் கருத்துக்களைக் கதைகளை மாணவர்களால் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இலக்கியத்தில் உள்ள உணர்வுகளை ஏற்ற ஓசை நயத்தோடு சந்தச் சிறப்போடு ஆசிரியர் பாடுதலும் மாணவரிடையே இலக்கிய அறிவில் ஓர் மாற்றத்தைக் காணக்கூடியதாக இருக்கும். உதாரணமாக கம்பராமாயணத்தில் வரும் "அங்கதன் புலம்பல்", " மண்டோதரி புலம்பல்", "தசரதன் புலம்பல்" நளவெண் பாவில் வரும் தயமந்தியை கானகத்தில் கைவிட்ட நிலையில் அவளது பரிதாப நிலை, பாரதத்தில் வரும் துகிலுரிதலின்போது பாஞ்சாலியின் பரிதாபக் கோலம் என்பவற்றை இலக்கிய கர்த்தா கூறியவாறே உணர்ச்சியுடன் ஓசை நயத்துடன் எடுத்துக்கூறி விளங்க வைப்பதனால் மாணவர். நேரடியாக அத்துன்பத்தைக் கண்டது போலவும் அவர்கள் மனதிலே இலக்கியப் பகுதியானது ஏற்படுத்திய தாக்கத்தை அறிய முடியும்.

இலக்கியப் பாடத்தில் வருகின்ற கருத்துக்களுக்குத் தொடர்புடைய கதைகளை சம்பவங்களை எடுத்து விளக்குதலும் ஒரு சிறந்த நுட்பமாகும். கதைகள், சம்பவங்களை எடுத்து விளக்குவதனால் மாணவர்கள் தம் பாடப்பரப்புத் தவிர்ந்த பிற கதைகள், சம்பவங்கள், நிகழ்வுகள், தத்துவக் கருத்துக்கள் முதலியவற்றை அறிந்துகொள்வதோடு மட்டு மின்றி பிற இலக்கியங்களைக் கற்றுக்

கொள்கின்ற, வாசிக்கும் ஆர்வம் மிகுந்து அவனது வாசிப்பாற்றல், எழுத்தாற்றல், பேச்சாற்றல், இலக்கியத்தை இரசிக்கும் ரசனை ஆற்றல் என்பன வளர்ச்சி பெறுகின் றன. எனவே இலக்கியப் பாடத்தில் ஆர்வத்தையும் விருப்பத்தையும் தூண்டக் கூடியவாறு பாடத்துடன் தொடர்புடைய கருத்துக்களை, கதைகளை, பழமொழிகளை, அறிஞர் கூற்றுக்களை எடுத்துக்காட்டிக் கற்பிப்பது சிறந்ததொன்றாகும்.

கட்புல சாதனங்களைப் பயன்படுத்துதல் இலக்கியம் கற்பித்தலில் ஓர் இலகுவான முறையாகும். இலக்கியப் பகுதியில் வருகின்ற கதாபாத்திரங்களை அல்லது சம்பவங்களைத் தனிச் சித்திரங்களாக, தொடர் சித்திரங்களாக உருவகித்து அப்பாத்திரங்களுக்கு ஏற்ற தோற்றப் பொலிவும் ஏற்றமும் கொடுத்து வகுப்பறையினுள் காட்சிப் பொருளாக்க வேண்டும். மாணவர்கள் அதனைப் பார்வையிட்டு நினைவிருத்தி எளிதில் அறியக்கூடியதாக இருக்கின்ற சிறந்ததொரு ஊடகமாக அது நிகழ்கிறது. உதாரணமாக,

"வாவி பரித் தேரேறி வாவென்றழைப்பன
போல்
கூவினவே கோழிக் குலம்"

இங்கு வாவுபரித்தேரேறி வருபவனாகிய சூரியனை எட்டுக் குதிரைகள் பூட்டப்பெற்ற ஒளிக்கற்றைகளுடன் பொருந்திய ஒருவனாக உருவமும் தோற்றப் பொலிவும் கொடுத்து வண்ணமும் தீட்டி மாணவர் மனக்கண் முன்கொண்டு வருவதால் அச்செய்யுளடிக் கான விளக்கத்தை எளிதில் உணர்வதோடு மட்டுமன்றி என்றும் மனதில் நிலைத்திருக்கும். இதற்கு பொம்மைகளையும் படங்களையும் பயன்படுத்தலாம்.

அடுத்து படைப்பாளி தான்கூற வந்த கருத்துக்களை வெளிப்படுத்தக் கையாண்ட உத்திகளை இனங்காண வைத்தல், விளக்குதல் என்பனவும் ஒரு சிறப்புடைய நுட்பமான கற்பித்தற் செயற்பாடாகும். அஃதாவது இலக்கியக் கர்த்தா அணிகள், ஓசைநயம், சொல், சொற்றொடர்கள், எடுத்துக்காட்டுக் கள், ஒப்பிட்டுக் கூறுதல் போன்வற்றைக் கையாளுதல் அவ்வுத்திகளில் சிலவாகும். இவற்றையும் ஆசிரியர் மாணவரிடத்தே தெளிய வைத்தலால் படைப்பாளியினது சித்திரிக்கும் ஆற்றல், நயக்கும் ஆற்றல் என்பன விரிவடையும்.

இது தவிர இலக்கியப் பாடம் சம்பந்தப் பட்ட அழகியல், நயங்கூறும் திறன், விமர்சனம், திறனாய்தல் இன்னோரன்ன திறன்களை, ஆற்றலை மாணவர்களிடையே வளர்த்தெடுத்தற்பொருட்டு ஆசிரியர் பாடசாலையின் பௌதீகச் சூழலுக்கேற்ப ஏற்ற கற்பித்தல் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி ஒரு தூண்டியாகக் காணப் படுகின்றனர்.



# வாசிப்பு மொழிவிருத்தியின் அடித்தளம் மட்டுமல்லாது சமூக மேம்பாட்டைக் கட்டியெழுப்பும் ஆணி வேருமாகும்.

திருமதி ந. சண்முகமூர்த்தி,
(உப அதிபர்)
யா/வட்டு. கார்த்திகேய வித்தியாலயம்.

காலத்திற்குக் காலம் உலகிலே தோன்றிய அறிஞர்களின் சிந்தனைகள், தத்துவங்கள், கோட்பாடுகள் அறிவியல் முடிவுகள், ஆய்வுகள் என்றும் நாம் நூல்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. அத்தகைய அரிய நூல்கள் தான் விலங்கு நிலையில் இருந்த மனிதனை விண்வெளிக்குப் பறக்கும் அளவுக்கு உயர்த்தி உள்ளது என்பதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை. கருங்கல்லைச் சிலையாக வடித்தெடுக்க வேண்டுமானால் நாம் அதனைக் கல்லுதல் போல மனித அறிவு வளர்ச்சியுற வேண்டுமானால் நாம் உள்ளத்தைக் கல்லுதல் வேண்டும். அரிஸ்ரோட்டில் என்ற அறிஞரும் இதே கருத்தையே கொண்டிருந்தார். வளர்ச்சியுறும் ஜீவன் ஒன்று ஈற்றில் அடையப் போகும் நிலையின் இயல்பு இப்பொழுதே இதனுள் அடங்கிக் கிடக்கின்றது என அவர் கூறுகிறார்.

மொழி என்பது தொடர்பாடல் ஊடகம் என்றும் கூறுவர். உண்மையில் இதற்கு அப்பாலும் மொழி தரும் பொக்கிஷமாகவும் வரலாற்றைக் கூறும் ஆவணமாகவும் காண்கிறார்கள். பாடசாலை மட்டத்தில் பிள்ளையின் மொழித் திறன்களை நான்கு வழியினூடாக வளர்த்தெடுக்க முடியும் என்று கல்வியாளர்கள் கூறுவர். அவையாவன.

1. கேட்டல் திறன் (Listening Skill)
2. பேச்சுத் திறன் (Speaking Skill)
3. எழுதுதல் திறன் (Writing Skill)
4. வாசித்தல் திறன் (Reading Skill)

நாம் இத்திறன்களில் வெற்றிபெற வேண்டுமாயின் மொழி, இலக்கியம், தொடர்பான நமது கருத்துக்களை புதுப்பித்துக் கொள்ளவேண்டியது அவசிய மாகும்.

மாணவர்களின் உடல், உளக் குறைபாடுகள் வாசிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக இருந்து வருகின்றன. பார்வைக் குறைபாடு, பேச்சுக் குறைபாடு, செவிப்புலக் குறைபாடு, உளவளர்ச்சிக் குறைவு போன்ற பல காரணங்களால் வாசிப்பதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. வாசிப்புத் தொடர்பாக ரெயிலர், புறூக்ஸ் போன்ற அறிஞர்கள் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இவ் ஆய்வுகளின் அடிப்படையில் வாசிப்பதற்கு பல்வேறு திறன்களுடன் மொழி பற்றிய அறிவு மாணவர்களுக்கு இருக்க வேண்டும்.

இன்று சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கும் பொய்மையும், பித்தலாட்டமும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கடத்தல், போர் போன்ற சமூக விரோதச் செயல்களும் அதிகரித்துவிட்டன. இச்செயல்களில் ஈடுபடுவோர் நல்லவர்போல வேடமிட்டு நாட்டை நாசமாக்குகிறார்கள். இத்தகைய

சமூக விரோதிகள் சீர்திருத்தம் சம்மந்தமான ஆக்க பூர்வமான நூல்கள் வெளிவருவதன் மூலம் அதனூடாக கசப்பு மாத்திரைக்கு, இனிப்புப் பூச்சுப் பூசுவது போல் நல்ல கருத்துக்களை வெளியிடுவதன் மூலம் ஓரளவுக்கு சீர்திருத்த முடியும் என்பது நம்பிக்கையான ஒன்றாகும். "என்னை என்றும் எச்சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே" என்றான் ஆங்கில கவிஞன் ஒருவன். இதனாலேயே "நல்ல நூல்களே. நல்ல நண்பர்கள்" ஆக்கிக் கொள்ளுங்கள் என்று அறிஞர்கள் வற்புறுத்துகிறார்கள். இளமைப் பருவம் இனியது. இப் பருவத்திலேயே கற்கும் விடயங்கள் பசுமரத்தாணி போல் மனதிலே பதியக்கூடியவை. இதனால் தான் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பார்கள். ஆகவே இப் பருவத்திலேயே சிறார்களுக்கு அறிவு சம்மந்தமான, ஆராய்ச்சி பூர்வமான நூல்களை வாசிக்கும் பழக்கத்தைப் பெற்றோரும், ஆசிரியர்களும் ஏற்படுத்திக் கொடுத்தால் மொழியாற்றல் விருத்தியிலும், படைப் பாற்றலிலும், விருத்தியடையவும் பாடங்களில் சிறப்படைந்து வாழ்க்கை பூராகவும் மகிழ்ச்சியாக இருக்கக் கூடிய வழியைக் கண்டு கொள்ளலாம்.

நூல்களை வாசிக்கும்போது நுனிப்புல் மேய்ந்த மாதிரி வாசிக்காது அதனை ஆழமாகவும், அகலமாகவும் நுணுகி ஆராய்ந்து வாசித்தல் வேண்டும். கிரகித்து அறிந்து கொண்டவற்றை மனதிலே நிலையாக வைத்துக்கொள்ள வேண்டும். கண்டதும் கற்பகப் பண்டிதனாவன்" என்ற பழமொழிக்கு ஏற்ப சகல வகையான புத்தகங்களையும் வாசிப்பதன் மூலம்தான் வளமான வாசிப்பு என்பதன் முழுமையான அர்த்தம் கிடைக்கின்றது. வளர்ந்து வரும் இளைய தலைமுறையினருக்கு நாம் கூறும் அறைகூவல் என்னவென்றால் வாழ்க்கையில் ஏற்படும் தில்லுமுல்லுகளையும், ஏமாற்றங்களையும் எதிர்நீச்சல் போடவேண்டும் என்றால் எதையும் சமாளிக்கத்தக்க வகையில் உங்கள் மனதைத் திடப்படுத்த வேண்டுமென்றால் அறிவியல் சார்ந்த ஏராளமான நூல்களைக் கற்று சமூகத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் வழியைக் காட்டிக் கொடுக்க வேண்டும்.

ஆளுமை மிக்க மனித சமூகத்தின் பலம் அறிவு எனச் சொல்லப்படுகின்றது. பலம் என்பது இயற்கை வளத்தாலோ, பணபலத்தாலோ அளவிடப்படுவதில்லை. உலகின் வளர்ச்சியுற்ற சமூகங்கள் அனைத்தும் அறிவு என்ற அத்திவாரத்தின் மேலே வளர்ச்சி என்ற கட்டடத்தை எழுப்பி உள்ளனர். அறிவுக்கு அடிப்படையாக இருப்பது வாசிப்பு. வாசிப்பைத் தூண்டக் கூடிய மிகப் பொருத்தமான இடம் நூலகங்களே. இதனால் தான் மாணவ சமுதாயம் பயனடைய வேணும் என்ற நோக்கோடு பாடசாலையிலும், கிராமங்களிலும் இவை தோற்றுவிக்கப்படுகின்றன. நூலகம் என்பது தேன்கூடு. அதில் நூல்கள் ஒவ்வொன்றும் தேன்துளிகள். எவ்வாறு உடல், பலமடைகின்றதோ அதே மாதிரி நூல்களை வாசிக்க அறிவு பலமடையும். இதனால் மனிதன் பூரணமடைகிறான்.

மொழி ஒரு நாகரிகத்தினதும் பண்பாட்டினதும் அடிப்படைக் கூறாகும். தமிழை வளர்ப்பதில் மொழி பெரிதும் உதவுகின்றது. அறிவியல், அழகியல், மருத்துவம், சோதிடம், சிற்பம் போன்ற பல விடயங்களை நூல்கள் வாயிலாகக் கற்பதால் சிறியோரிலிருந்து முதியோர் வரை அதன் உச்சப் பயன்பாட்டைப் பெறுகிறார்கள். அதுமட்டுமல்ல கருணை, ஈகை, அன்பு, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு போன்ற நல்ல தயாளசீலகுணங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். மாணவர் மட்டுமல்ல

ஆசிரியர்களும் வாசிப்பின்மூலம் வாண்மை விருத்தியடையச் செய்யமுடியும். ஒரு சமூகத்தைச் சீர்திருத்த, அவர்களின் அறிவு, பிரகாசிக்க, சமூக ஊழல்களிலிருந்து பாதுகாக்க, இளஞ்சிறார்களை இலட்சியப் பாதையில் புகுத்த, பெண்களைக் கற்பு நெறியில், அறப்பண்புகளில் தருமநெறியில் வாழ வைக்க நாட்டில் நல்ல நூல் நிலையங்கள் இருக்கவேண்டும். நூல்கள் எல்லோர் மனதையும் கவர்ந்திழுக்கக் கூடிய ஈர்ப்பு சக்தி கொண்டவையாக அமைய வேண்டும். சிலர் தமது ஓய்வுநேரத்தை வீண் சண்டை சச்சரவுகளில் காலத்தை அவமே வீணடிக் கிறார்கள். அந்நேரங்களில் பயனுள்ள நூல்கள் பத்திரிகைகளை வாசித்துப் பயனடைய வேண்டும். பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளை விளக்கும் நூல்களை வாசிப்பதால் பிள்ளைகளின் உள்ளங்களில் இலட்சிய உணர்வு பதிந்து வேரூன்றி விழுது விடும். சமூகத்தைத் திருத்தும் சமூகக்கதை களை தெள்ளிய நடையில் ராஜாஜி, கல்கி, டி.கே.சி போன்ற பெரியார்களின் நூல்கள் மூலம் பயனடையக்கூடியதாய் உள்ளது.

நூல்களை வெறுமனே கற்பிக்கும் அறிவை ஊட்டுவதோடு ஆசிரியப்பணி முற்றுப் பெறுவதில்லை. ஒழுக்கத்தை வளர்த்து சமூகத்தை மேம்படுத்துவது ஆசிரியரால் தான் முடியும். நல்லாசிரியரிடம் கல்வி பயிலும் பேறு பெற்ற மாணவர்கள் ஆசிரியரின் நடை, உடை, பாவனைகளைப் பின்பற்றி முன்னேற வேண்டும் என்ற நோக்கம் இளஞ் சிறார்களுக்கு ஏற்படவேண்டும். பார்த்தல் அறிவு, கேட்டல் அறிவு, மணத்தல் அறிவு, சுவைத்தல் அறிவு, உணர்தல் அறிவு, சிந்தித்தல் அறிவு ஆகிய ஆறறிவையும் சரியான வழியில் பயன்படுத்தினால் நிச்சயமாக நாம் எதிர்பார்க்கும் இலட்சியங்களை அடைந்து வாழ்க்கையில் வெற்றிபெறமுடியும்.

வளர்ந்து வரும் இன்றைய இளைய தலைமுறையினர் முதலில் மனிதனை மனிதனாக மதிக்கவேண்டும். மனித நேயத்தை மதிக்க வேண்டும். இன வேறுபாடு, மதவேறுபாடு, சாதிவேறுபாடு, நிறவேறு பாடு போன்ற பகைமையுணர்வை மறந்து ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் வாழ்வதற்கு நூலறிவே பெரிதும் பயன்படு கின்றது. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற அகக்கோட்பாட்டை மனதிலே நிறுத்தி ஒற்றுமையாக வாழ்வோமேயானால் எதிர்காலச் சமூகம் எம்மை இருகரம் நீட்டி வரவேற்கும் என்பதில் எவ்வித சந்தேகமு மில்லை.

நல்ல கருத்துக்களை அப்படியே நிறுத்தி வைக்கும் தன்மை நல்ல புத்தகத்திற்கே உண்டு என்றுதான் கூறவேண்டும். நல்ல புத்தகங்கள் கிடைக்காத நேரங்களில் நிறைவு, மகிழ்ச்சி, சுவாரஸ்யம் அனைத்தும் இழந்தது போன்ற உணர்வு ஏற்படுகிறது. எதிலும் வேகமாகச் செயற்பட முடியாத சோர்வு ஏற்படுகின்ற ஒரு உணர்வு எதையோ பறி கொடுத்து விட்டோம் என்று கூட சில சமயம் உணரமுடிகிறது. சிறந்த நூல்களை வாசிப்பது மனதுக்கு புத்துணர்வும், தூய சிந்தனையும் ஏற்படுத்தும் என்பது அறிவியலாளர்கள் கருத்தாகும். எந்தக் குழந்தையும் பிறக்கும் போது தாயிடமிருந்தே பெரும்பாலானதைக் கற்கிறது. வாழ்க்கையின் பெரும்பகுதி குடும்பம், சுற்றாடல் என்ற வட்டத்திற்குள்ளே கழிகிறது. குழந்தையின் முதல் ஆறு ஆண்டுகளின் வாழ்க்கையை என்னிடம் ஒப்படையுங்கள். அதற்குப் பிறகு அதன் வாழ்க்கை அமைப்பை எப்படிப்பட்டவர்கள். ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை எனக் கூறும் "பெஸ்டலோசி" என்ற தலைசிறந்த கல்விய லாளரின் கூற்று சமூக மேம்பாட்டில்

குடும்பம், சூழ்ந்த காரணிகள் வகிக்கும் பங்கைத் தெளிவாகக் காட்டப் போதுமானது.

வாசிக்கும் புத்தகங்களைத் தெரிவு செய்யும் போது நவரசம் ததும்பும் நூல்களையும், சுவாரஸ்யமான கதைகளினூடாக அறக்கருத்துக்களைத் தெளிவுபடுத்தும் நூல்களையும், சமயத்தத்துவங்கள் நிறைந்த நூல்களையும், சரித்திரப் புகழ்பெற்ற வரலாற்று நூல்களையும் படிப்பதன் மூலம் பல்துறை சார் அறிவைப் பெற்று வாழ்க்கையில் ஒர பேராசானாகவோ அல்லது ஒரு எழுத்தாளனாகவோ அல்லது ஒரு அறிவியல் மேதையாகவோ வந்து அறியாமை இருளில் மூழ்கிப் போயிருக்கும் பிற்போக்கான சமூகத்தை "வானில் கண்சிமிட்டி ஒளி பெறச் செய்யும் நட்சத்திரங்களாக்க முடியும்" என்று கூறி இக் கட்டுரையைச் சமர்ப்பிக்கிறேன்.



# மொழி கற்பித்தலின் அடிப்படைகள்

ஆக்கம்,
திரு.க.பரமேஸ்வரன்,
யா/விக்னேஸ்வர ஆரம்பப் பாடசாலை, கரவெட்டி.

மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் ஆவணப்படுத்தலுக்கும் அடிப்படையாக அமைவது மொழி. உலக மொழிகளில் முச்சங்கம் வளர்த்த தேனிலும் இனிமை பொருந்திய பழமையும் புதுமையும் நிறைந்த தமிழ்மொழியின் சொந்தக்காரர் நாம் என்று கூறுவதில் நாம் எந்நிலையிலும் பெருமை தான் படமுடியும். ஆனாலும் அம்மொழியை எமது சிறார்களுக்குப் பொருத்தமான சரியான முறையில் கற்க வழி அமைத்துக் கொடுக்கின் றோமா? எனக் கல்விப் புலத்தில் இருக்கும் அனைவரும் கவனமாக நோக்க வேண்டிய தேவையில் உள்ளோம்.

மொழிப்பாடக் கற்றலில் மிக மிக அவசியமானது மாணவர் விருப்புடனான கற்றல் ஆகும். மாணவர்கள் விரும்பும் விளையாட்டுக்கள், விநோதங்கள் ஊடாக மொழிப்பாடத்தைக் கற்பிக்கச் சந்தர்ப்பத் திற்கேற்ப சகலரும் அரும்பாடுபட வேண்டிய நிலையில் உள்ளோம். எனவே மாணவர் களுக்கு இடர்களாக அமையக் கூடிய விடயங் களினைத் தெரிவுசெய்து போட்டிகள், விளையாட்டுக்கள், விநோதங்கள் ஊடாக மாணவர்களுக்கு ஊட்ட வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். எனவே அடிப்படையான மாணவர் படும் இடர்களை இனம் காண வேண்டியவர்களாக உள்ளவை.

மழலை உச்சரிப்பிலிருந்து சரியான உச்சரிப்பிற்கு மாறுதல்.
பிரதேச உச்சரிப்பிலிருந்து சரியான உச்சரிப்பிற்கு மாறுதல்
தவறான உச்சரிப்பிலிருந்து சரியான உச்சரிப்பிற்கு மாறுதுல்

இவ்விடயங்கள் தொடர்பாக திட்ட மிட்ட சொல் பரிமாற்றல், வசனங்களுடன் கூடிய விளையாட்டுக்கள், இசையுடன் கூடிய பாடல்களினைப் பாடுதல், ஓசை நயம் மிக்க சொற்களினை விரைவாகக் கூறுதல், விடை கூறி விளையாடுதல் என வழிப் படுத்துவதுடன், ஆசிரிய புலத்தில் உள்ள நாம் ஒவ்வொருவரும் எமது மொழி நடைபற்றி சுய விமர்சனம் செய்து மாணவர்களுக்கு வாய்ப்பான ஓர் நிலையை ஏற்படுத்தியாக வேண்டும். ஏனெனில் மாணவர் கற்றலுக்குப் பெரிதும் உதவுபவை பின்பற்றுதல், போலச் செய்தல் முதலான செயல்முறைகள் ஆகும். மாணவர்கள் தாமாகவே இச்செயற்பாடுகளில் ஈடுபடுவது கண்கூடு. அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்பதற்கு அமைய எம்மை மாணவ சமூகம் பின்பற்றும் என்பதை உணர்ந்து கண்ணில் எண்ணெய் விட்டவர்கள் போல நாம் விழிப்பாக இருக்க வேண்டிய நிலையில் உள்ளோம். எனவே சரியானது எப்போதும் சரியாகவே இருக்கும் என்பதற் கமைய மாணவர்களைச் சரியான உச்சரிப் புடன் சொற்களையும், வசனங்களினையும் கூற நாம் வழிகாட்டியாக வேண்டும்.

எழுத்து கண் போன்றது. அதற்காக அதைக் கற்பதற்காக மாணவர்கள் கண்ணீர் விடக் கூடாது. இன்று அனேகமான மாணவர்கள் இம் மொழிப் பாடத்தைக் கண்டு பயப்படுவதற்கு அடிப்படையாக அமைவது எழுத்துக்களைக் கற்கும்போது அவர்கள் பட்ட வேதனைகளே! எம்மில் எத்தனை பேர் ஒரு வட்டத்தையேனும் சரியாக வரையக் கூடியவர்கள். ஆனால் அந்தப் பிஞ்சுக் கரங்களை எத்தனை முறை நோகடித்திருப் போம். நாம் சிந்திக்க வேண்டியது. எழுத்துக்களைக் கற்கும் போது மாணவர் களுக்கு ஏற்படக் கூடிய இடர்களையே.

- எழுத்துப் பற்றிய புலக் காட்சியின்மை
- கைத்தசை நார்களின் பயிற்சியின்மை
- எழுத்துக்கள் எழுதும் பொறி முறையை அறியாமை
- அழகாக எழுத்துக்களை எழுதும் எளிமையான வழிகளை அறியாமை
- எழுதத்துக்களின் ஆரம்பம், முடிவு பற்றி அறியாமை
- எழுத்தின் அளவு, திசைமுகம் என்பன அறியாமை
- உயிர்க் குறிகள் தொடர்பான அறிவின்மை
- ஒலிக்கும் வடிவத்திற்கும் தொடர்பு காணாமை
- தமிழ் நெடுங்கணக்கு பற்றிய புலக் காட்சியின்மை
- குறில், நெடில் பிரித்தறியாமை
- ஏகாரம், ஒகாரம் பிரித்தறியாமை
- ஒத்த சாயல் எழுத்துக்கள் பிரித்தறியாமை

எனக் கூறிக்கொண்டு செல்லலாம். ஆனால் திட்டமிட்ட மொழிப்பாடக் கற்பித்தலூடாக இதனை வெற்றிகொள்ள முடியும். இதற்கு உதாரணமாக "ஓ" ஒழுங்காக எழுத முடியாதிருந்த எனக்கு என் சகோதரி காட்டிய எளிய வழியை இங்கு நான் உதாரணமாகக் கூறுகின்றேன்.

"ஓ" இரட்டைக் கொம்பை இவ்வாறு போடு "ழ" வின் கீழ்ப்பகுதியை நிதானமாகப் போட்டால் "ஓ" வரும் எனவே ஒரு எழுத்தை எழுதப் பயிற்சி பெற முன்பு அவ்வெழுத்தின் ஒவ்வொரு பகுதியையும் குறித்த திசை முகத்துடன் எழுதுவதற்கு முன் எழுத்துப் பயிற்சி திட்டமிட்டு வழங்கப்பட வேண்டும். இதன் முதற் கட்டமாக வினோத வரைதல்கள், விளையாட்டுக்கள் வர்ணம் தீட்டல்கள், மண் விளையாட்டுக்கள், கிரூள ஆக்கங்கள் என்பவற்றின் மூலம் போதிய கைத்தசைநார்ப் பயிற்சி பெறுதல், வழங்குதல் அவசியமாகும். முக்கியமாக மாணவர்கள் படும் இடர்களைக் கண்டு அவற்றிலிருந்து அவர்களை மீட்டுவருதலே, ஆசிரியர்களின் தலையான பங்கு ஆகும். எனவே ஓர் ஆசிரியர் ஆனவர் தான் எழுதும் முறைபற்றி சுயவிமர்சனம் செய்து கொள்ள வேண்டும். சில சந்தர்ப்பங்களில் எழுத்துக்களுடன் நாம் வரையும் தேவையற்ற கோடுகள் அவர்களைத் தவறான வழியில் கொண்டு செல்வதை நாமறிவோம். ஒவ்வொரு மொழி எழுத்துக்களைச் சரியாக எழுதுவதற்கு விசேட பயிற்சிப் புத்தகங்கள் உண்டு.

அந்த வகையில் இரண்டு கோட்டுப் பயிற்சிப் புத்தகம் எமது தமிழ் மொழிக்கு சிறந்ததாகவுள்ளது. ஆயினும், இதை அச்சிடுவோர் பொருத்தமான இடைவெளிகளை மொழியியலாளர்களுடன் கலந்தாலோசித்து வெளியிட வேண்டும் என வினயமாகக் கேட்டுக் கொள்ள வேண்டிய தேவையுள்ளது. உறுப்பெழுத்தானது எழுத்துக்கே உரிய தெளிவு, திசை முகம் அளவு என்பன புலப்பட எழுதக் கூடியதாக அமைய வேண்டும் அல்லவா? செம்மொழியாகத்

தாய்மொழி அங்கீகாரம் பெற்ற இவ் வேளையில் இவற்றை எல்லாம் நாம் கவனிக்க வேண்டும் அல்லவா?

இன்றைய தேர்ச்சி மையக் கற்றலானது மாணவர்களின் சுய விருப்புடன் நிறைவேற்றப்படுவதற்கு நாம் நிறைய உழைக்க வேண்டியுள்ளது. எனவே நாம் தேர்ச்சிகளை அடையாளம் கண்டு அதை அடைவிக்கக் கூடிய செயற்பாடுகளைத் திட்டமிடவேண்டும். அதில் ஏற்படக் கூடிய இடர்களை இனம் காண வேண்டும். புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக தரம் 1, 2 இல் கூடிய பாகம் விளையாட்டு, வினோதங்களூடாகக் கற்ற மாணவர்கள் 3,4,5 எனத் தரங்கள் கூடும் போது முறையான எழுத்துப் பயிற்சிகளுடன் கற்கும் நிலைக்குக் கொண்டு வர வேண்டும். குறிப்பாக தரம் மூன்று மாணவர் ஒருவர் சரியான எழுத்துப் பொறிமுறையை, ஒலி வடிவத் தொடர்பை இனம் கண்டு கொள்பவரானால் அவருக்கு புலமைப் பரிசில் ஒரு தடையாக அமையாது.

ஆனால் புலமைப்பரிசில் என்ற மாயை வலையில் உந்தப்பட்டுத் திணிப்புக் கற்பித்த லில் ஈடுபடுவோமாக இருந்தால் பழுதான பலூனுக்குள் ஊதப்பட்ட காற்றாகவே எமது கற்பித்தல் அமையலாம். அதாவது சிறிய பாத்திரமொன்றுக்கு பெரிய பாத்திர நீரை ஊற்ற வேண்டிய அவசியமில்லை. கல்வியானது பொருத்தமான அளவில் பொருத்தமான வழியில் விருப்பத்திற்குரிய கல்வியாக வழங்கப்படும் போது அதுவே சிறந்த கல்வியாகும்.

தமிழ் மொழி எமது தாய்மொழி. இன்று செம்மொழியாக அங்கீகாரம் கிடைத்து நிற்கும் மொழி. இளமை குன்றாத பழமை வாய்ந்த மொழி மேலும் வளர வேண்டிய தேவையுடைய மொழி இம் மொழியைக் கற்பிக்கும் எமது பங்கை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் முன்மாதிரியாக இருப்பத னூடாக இலகுவாக எமது குழந்தைகள் மொழியைக் கற்க வழி சமைக்க வேண்டும்.

"எங்கள் மொழி தமிழ் என்போம்
என்றும் அதற்காய் உழைத்து நிற்போம்"



# இன்றைய தகவல் தொழில்நுட்பயுகத்தில் அருகிவரும் வாசிப்புப் பழக்கம்

ஆக்கம்,
திரு.க.சிவநேசராசன்
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

"உடல் வலிக்க வலிக்க மிகுந்த களைப்புடன் அரிசி மூடையைச் சுமந்து செல்கின்றான் அன்றாடம் காய்ச்சியான ஏழைத்தொழிலாளி"

"முதுகு வலிக்க வலிக்க புத்தக மூடையைச் சுமந்து செல்கின்றனர் இன்றைய மாணவர்கள்"

தான்சுமந்து செல்கின்ற அரிசி மூடைக்குள் இருப்பது குத்தரிசியா? சம்பாவா? அம்மாப்பச்சையா? என்ற ஆராய்ச்சி ஏழைத்தொழிலாளியைப் பொறுத் தவரையில் அவசியமற்ற விடயம்." ஆனால் தாங்கள் சுமக்கின்ற புத்தக மூடைக்குள் என்ன எழுதியிருக்கின்றது என்ற ஆராய்ச்சி மாணவர்களைப் பொறுத்த வரையில் மிகவும் அவசியமான விடயம்"

சுமந்து செல்கின்ற அரிசி மூடையை இறக்கியவுடன் தொழிலாளிக்கும் அரிசி மூடைக்கும் இடையில் உள்ள உறவு அற்றுப் போய் விடுகின்றது.

இதேபோல் தாம் சுமந்து செல்கின்ற புத்தக மூடையை இறக்கியவுடன் புத்தகங் களுக்கும் மாணவர்களுக்கும், இடையில் உள்ள உறவு துண்டிக்கப்படுமா? "வாசிப்பதனால் மனிதன் பூரணம் அடை கின்றான்"

"நூல்களே சிறந்த ஆசான்கள்"

இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது. மாணவர்களிடம் மட்டும் அல்ல. எல்லோரிடமும்தான்.

"என் நன்றி கொண்டாக்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொண்ட மகர்க்கு"

மேலே கூறப்பட்ட திருக்குறள் கொலை யாழ். மாவட்டத்தில் உள்ள பிரபல்யமான பாடசாலை ஒன்றின் விஞ்ஞான மன்றத்தினால் 2004இல் வெளியிடப்பட்ட விஞ்ஞானச் சஞ்சிகை ஒன்றின் இறுதிப் பக்கத்தில் உள்ள நன்றியுரையின் தொடக் கத்தில் அழகு தமிழிற் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

"விஞ்ஞானம் படித்தேன். கணிதம் படித்தேன். ஆனால் எனக்குத் தமிழ் தெரியாது. என்று நியாயமும் கற்பிக்கப்படு கின்றது. "சமயல் பாத்திரங்கள் வாடகைக்கு விடப்படும்"

"மாட்டு இறைச்சி கடை"

"சிரமம் தவிர்க்க சில்லரை தருக"

இவை நல்ல தமிழ் பேசுகின்ற யாழ் மண்ணில் நாம் அன்றாடம் சந்திக்கும் தமிழ்க் கொலைகள். இன்றைய அவசர உலகில் நூலகங்களில் நிரம்பி வழிகின்ற புத்தகங்களை ஆற அமர அமர்ந்திருந்து ஆழமாக

வாசிப்பதற்கு எவருக்கும் போதிய நேரம் கிடைப்பதில்லை.

நுனிப்புல்லே கூடுதலாக மேயப்படுகின்றது. "ஒருபுறம் வேடன் மறுபுறம் நாகம் இரண்டுக்கும் நடுவே அழகிய கலைமான்" என்பது போல ஒரு புறம் "ரியூசன்" மறுபுறம் "மொபைல்" இரண்டுக்கும் நடுவே அருமையான புத்தகங்கள்" என்ற நிலையே கூடுதலாகக் காணப்படுகின்றது.

"விஞ்ஞானம் படித்தேன்; அதனால் எனக்குத் தேவாரம் பாடத்தெரியாது. என்று கூறுவது நவீன நாகரிகமாகிவிட்டது. இதே போல் கணிதம் படித்தேன். அதனால் திருக்குறள் கொலை புரிவேன்" என்பது ஈழத்தமிழ் மொழி வளர்ச்சிக்கு உகந்தது அல்ல. விரைவாக மாறிவரும் தகவல் தொழில்நுட்ப யுகத்தில் மாணவர்களின் கிரகித்தல். தேடற்றிறன், நுண்ணறிவு போன்றவற்றை வளர்ப்பதற்கு அருகிவரும் வாசிப்புப் பூக்கம் மேம்பாடு அடைய வேண்டியது காலத்தின் அவசிய தேவை ஆகும்.

மாணவர்கள் தாமாகவே தேடி அறிவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். ஆழ்கடலில் மூழ்கி முத்து எடுக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியை மாணவர்கள் நூலகங்களில் உள்ள அருமையான புத்தகங்கள் மூலம் பெறுவதற்கு எல்லோரும் வழிப்படுத்தல் வேண்டும்.

அத்துடன் காலத்துக்குக் காலம் ஈழத்து எழுத்தாளர்களினால் எழுதப்பட்ட சிறுகதைகள், நாவல்கள் மூலம் ஆவணப் படுத்தப்பட்ட எமது கலாசாரம், பண்பாடு என்பன வாசிப்புப்பழக்கம்மூலம் இன்றைய மாணவர்களை அடைவதற்கு மாணவ உலகம் வழிப்படுத்தப்படுவது காலத்தின் அவசிய தேவை ஆகும்.

**கிரகித்தல்**

இன்றைய கல்வி உலகில் மாணவர்கள் சந்திக்கும் பல்வேறு போட்டிப் பரீட்சைகளிற் கேட்கப்படும் வினாக்களுக்கு மிகவும் சுருக்கமாகவும், விளக்கமாகவும் விடையளிப்பதற்கு மாணவர்களின் வாசிப்புப் பழக்கம்மூலம் பெறப்படும் கிரகித்தற்றிறன் கூடுதலாக உதவுகின்றது.

"ஆகவே இன்றைய தகவல் தொழில் நுட்ப யுகத்தில் அருகிவரும் வாசிப்புப் பழக்கத்தை எல்லோரும் மேம்படுத்துவோம்.



# தமிழின் சிறப்பு

திருமதி பத்மினீதேவி சகலகலாநிதி
(ஆசிரியர்)
யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்.

தங்கத் தமிழும் தாய் மண்ணும்
தரத்தில் என்றும் சிறந்தனவே
எண்ணற்ற மொழி எழுந்து வரினும்
கண் ஒத்த மொழி தமிழ் மொழியே.

தாயின் பெருமையைத் தரத்தினாற் பெறுவர்
தமிழின் பெருமையை இனிமையாற் பெறுவர்
எங்கும் தமிழ் எதிலும் தமிழ்
எம் இதயமே என்றும் மகிழ.

பாவலரும் நாவலரும் பண்புடை
காவலரும் கண் சிமிட்டும்
கருத்தின் நிறைவே தமிழ்
காலத்தின் சிறப்பே நெகிழ


அடுக்கடுக்காய்ச் சொல்லமைத்து
அழகழகாய்ப் பொருள் ஏற்றி
அருந்தவ இனத்தின்
அழியாச் செல்வம் தமிழ்.

புதுமைத் தமிழே பூரிப்போடு
விசைப் பலகையில் வீரியம் பேசும்
வலை அமைப்பை வளமாகக் கொண்டு
வலம் வருகிறாள் வளமாக இன்று.

பசும் தமிழுக்கு - பரணிபாடு
பல்லக்கில் ஏற்றிப் பாமாலை சூட்டு
மொழியது அழிந்தால் முழுவதும் அழியும்
மூங்கிலாய் நிமிர்ந்தால் முதுகெலும்பாகும்.

தலைவனாய் நின்று தமிழை வளர்ப்போர்
மண்ணில் விளையும் மரகதப் பூக்களே
மன்னுயிர் போற்றும் மங்காத தமிழே
மனுக்குலம் வாழ மாண்புகழ் சொல்வாய்

இதயத்தை மீட்டும் இன்பத் தமிழே
இனி எந்தன் வாழ்வு உந்தன் புகழே
வல்ல மொழியாய் வளர்கலை பெறுவாய்
வாழிய நீயே வாழிய நீயே !



# புதுமைச் சிற்பிகள்

ப. பவிசன்,
ஆரம்பப் பிரிவு மாணவன்.

புத்தாயிரத்தில் பூத்துக் குலுங்கும்
புதுமலர் நாங்கள்
புத்தம் புதிய பூமி சமைக்கும்
புதுச்சிற்பிகள் நாங்கள்

கத்தும் குயிலின் ஓசை எடுத்து
கருத்துகள் சொல்வோம்
நித்தம் நேர்மை வழியினில் சென்று
நினைத்ததை முடிப்போம்

சந்திர சூரியப் பந்துகள் தொட்டு
பொழுதைக் கழித்திருப்போம்
இந்திர லோகமாய் எங்களின் பாரினை
மாற்றி அமைத்திடுவோம்

நந்தவனத்தின் புஷ்பங்களாகவே
நாங்கள் இருந்திடுவோம்
நல்லதோர் வாழ்வொன்றை நம்மவர் எல்லோர்க்கும்
நாங்கள் அளித்திருப்போம்.



# இன்றைய இளைய தலைமுறையும் கையடக்கத் தொலைபேசியும்

- ஆக்கம் -
நயினை மதி (ஆசிரியர்)
உடுவில், மல்வத்தை, றோ. க. வித்தியாலயம்.

கைக்குள் அடக்கமாய்
கதைகள் பல கதைக்கலாம்
செல்லும் இடமெல்லாம்
சேர்த்து எடுத்துச் சென்றிடலாம்.

தொலை தூரத் தகவல்களை
தொடுந்தூரம் கண்டிடலாம்
விலைகளில் வித்தியாசத்தில்
வாங்கிடலாம் செல்போனை.

தம்பி கையில் செல்போன்
தாத்தா கையிலும் செல்போன்
குழந்தை விளையாடச் செல்போன்
குடும்பத்தில் அனைவருக்கும் செல்போன்.

செல்போன் வைத்திருந்தால்
சிறப்பு என்று நினைத்திடுவார்
வயிறு பசித்திருக்க - வீணே
வாங்கிடுவார் செல்போனை.

கவரேஜ் இல்லை என்றாலும்
காதில் வைத்துக் கதைத்த படி
காண்போரைக் கவரவைக்கும்
கலாசாரக் காலம் இது.

தேவையற்ற தகவல்களை
தேனாகப் பேசிக் கொண்டு
பலரது பார்வைக்காய் ..........
பரிதவிப்பார் பஸ்ராண்டில்.
தலைக்கவசத்தினுள் தந்திரமாய் செல்போனை


தடுத்து வைத்துக் கொண்டு தனியாகப் போவோரும்
வீதிகளில் விசரர் போல் பேசிக்கொண்டு செல்கிறார்
விதி முடிந்தால் அவரும் விண்ணுலகம் சென்றிடுவார்.

தன்னை ஹீரோ என எண்ணும்
தான்தோன்றி இளைய சமூகம் இது
செல்போன் பாவனையால் இன்று
சீரோவாக மாறும் நிலையே.

படங்கள், பாடல்கள், பகிடிவசனங்கள்
நீலப்படங்கள் என நீளமாய் அடுக்கிக்கொண்டு
கையடக்கத் தொலைபேசி கதைக்க வரவில்லை
கலாசார சீர்கேட்டில் கால்பதிக்க வந்தது தான்.

விஞ்ஞானக் கண்டுபிடிப்பு விந்தை பல மிக்கது தான்
மெய்ஞ்ஞான மனிதா! நீ நல்லவற்றை எடுத்து விடு
அஞ்ஞான இருள் நீக்கி நல்லவனாய் வாழ்ந்து விடு
ஆக்கம் பல செய்து அறிவுடன் வாழ்ந்து விடு.

ஆனால் நம்பினால் நம்பு
கையடக்கத் தொலைபேசி மூலம்
காலனும் வருவானாம் - கான்சர் வடிவத்தில்
கவனமாயிரு.




# செல்லிடத் தொலைபேசி

**திருமதி ம. சேதுலிங்கம்**
யா / வல்வை மகளிர் மகாவித்தியாலயம்.
வல்வெட்டித்துறை.

*செல்லுமிடமெல்லாம் தொடர்பையுண்டாக்கும்*
*துல்லியமான துரிதசேவைதனையாற்றும் துர்வஸ்தான*
*செல்லிடதொலைபேசியே நீ ஒரு தொல்லைபேசிதான்*
*அல்லவெனில் அருகிருப்போர் அமைதியை நீ குலைப்பாயா ?*

*அறிமுகமாகி அற்பகாலந்தானெனினும் அவனியெங்கும்*
*செறிவான விற்பனைக்குள்ளாகி சிகரத்தைத் தொட்டதுடன்*
*வெறிகொண்ட பல வீணர்களின் சிறுமைத்தனமான*
*நெறியற்ற செயல்களுக்காய் துணைநின்று சிறுமைப்படுகின்றாய்*

*கோயில் குளமென்றும் கோபுர தரிசனமென்றும்*
*வாயில்தனை நாடி வருந்திவந்தோர்தம் இறுதி நன்நாளில்*
*ஒய்வில் இருந்து அமைதிதனை வேண்டுமென்போரின்*
*பாய்ச்சலுக்குள்ளாகும் பண்பற்றகருவி நீதான்*

*வாகனம் செலுத்துவோருக்கென விதிமுறை வகுத்திருந்தும்*
*சாசனம் எழுதப்படாத தனிப்பெருங்கருவியுந்தன்*
*வாசனை வந்தபின் தான் வருந்தத்தக்க பல*
*யோசனையற்ற செயல்கள் நடக்குதிந்த வீதிதனில்*

*பொறுப்பற்ற பல புல்லரின் புளுகான செல்களினால்*
*பொதுஇடமா ? புண்ணியதலமா ? என்றெண்ணமேதுமின்றி*
*புறுபுறுப்பைப் பொருட்படுத்தாத புளகாங்கித உரைதனை*
*நறுக்காகப் பேசுதற்காய் நடுவீதியில் ஒலிக்கின்றாய்*

கருத்தொருமித்த காதலர் பலர் கனவுதனை ஏற்றி
உருக்களை நேரே பார்த்து நின்றபோதும் பிறர்தனை ஏமாற்றி
பருவத்தேவந்த பரிதாப நோய்கண்டு நிலைமறந்து
நெருக்கடியினுள்ளேயும் நீட்டி முழங்குகின்றார் நீள்வீதிதனில்

உன்னரிய சேவைகள் பலவெனினும் படித்தவர்க்கவை பயனுற
தன்னரிய சேவைதனைத் தானளித்துத் தனியிடத்தைப் பிடித்தாலும்
சொல்லரிய தீயசெயலெல்லாம் பிறர்தமை அறியாது படம்பிடிக்கும்
பண்பரிய செயல்தனுக்கும் பகரும் வண்ணம் துணைநின்றாய்

துரிதகதியதனில் தூரதேசத்திற்கோ சுருக்கச் செய்தி சொல்லும்
அரிய செயல்தனை அனைவர்க்கும் அன்புடனே ஆற்றிடினும்
நரியைப்போன்ற நாய்கள் சில நாணயமற்ற செய்திபல சொல்ல
பெரிய சேவை தனையாற்றும் தொலைபேசி நீயும் துணைபோகலாமா?

பருவமடையாப் பள்ளிச் சிறார்களும் கையில் வைத்திருத்தல்
கருவத்தை தருமென்ற கயமையெண்ணம் உந்தப்பெற்று
உருவத்தை மறந்து உஷாராக உஷாவி வருகின்றனர்
தெருவீதியெங்கும் தெய்வத்தையுருப்போடுதல் போல்

சத்தம் தனைக் கேட்டு சலிப்படைந்து சங்கரிப்போருமுண்டு
நித்தம் நின் ஒலிகேட்காதுவிடின் நிலைதளரும் பலருமுண்டு
சித்தம் தடுமாறி சிந்தையளித்தவர் போல் சீராட்டுவோருமுண்டெனினும்
மொத்தத்தில் நீ ஒரு கலாசார சீரழிவேற்படுத்தும் தொல்லைபேசியேதான்.



# விதை தந்த விருட்சங்கள்

ம. தயாளினி,
இடைநிலைப் பிரிவு மாணவி,
யா/ ஆனைக்கோட்டை றோ.த.க.

அனுபவப் பெட்டகம் இவர்கள்
ஆரவாரம் செய்யாத ஆழ்கடல்கள்
ஆரம் சூடுதற்கு ஆற்றல் உடையோர் - வாழ்க்கை
அரங்கில் ஆடிய ஆடற்கலைஞர்


முள்ளுப் பாதையில் பயணம் செய்தவர்
முயன்றே வாழ்வில் வெற்றி கண்டவர்
முன்னேற முயல்வோர்க்கு முன்னுதாரணங்கள்
முற்றிலும் இவர்கள் வாழ்வியல் நூல்கள்

நரைமயிர் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அனுபவம்
திரை விழுந்தாலும் தேயாத உடற்பலம்
கரை சேர்ந்த தோணிகள் காவியவை ஏராளம்
முறையாக வாழ்வமைத்த முழுமனிதர் - மாணிக்கங்கள்.

விரலசைவால் விளக்கம் தரும் விவேக வித்தகர்கள்
பிரளயமே வந்தாலும் பிறளாத உறுதியினர்
கரகோசம் செய்திவரை நாம் போற்ற வேண்டும் - அவர்
கரம் பற்றும் ஊன்று தடி நாமாக வேண்டும்.

வழிகாட்டும் தலைவர்கள் வயதானவர்களே
ஒளியூட்டும் பட்டறிவின் உறைவிடமிவரே
தெளிவான சிந்தனை தேங்கிய மனிதர்
மலிவாகக் கிடைக்கின்ற மகத்தான நூல்கள்

முற்றிய கரும்பே இனிக்கும்
முழுநெல்லி முன்கசக்கப் பின் இனிக்கும்
முதியோர் துணையிருக்க எங்கள் வாழ்வினிக்கும்
பிணிபோக்கும் மருந்து இவர்கள் - எங்கள் நோய் தணியும்
விதையாகிக் கனிதந்த விருட்சமே முதியவர்கள்
கருகாது காப்போம் அரும் பெரும் சொத்திவர்கள்.



# புதிய ஆசிரியருக்கு ........

செல்வி மதனரூபி பாரதிதாசன்
யா / அல்வாய் அம்பாள் வித்தியாலயம்.

வாங்க, வந்துவிட்டீர்கள்
வாழ்த்துக்கள்!
வேறு தொழில் தேடி
களைத்துப் போய் வந்தாயா?
அல்லது
நாளைய நற்பிரஜையை
நாட்டிற்குத் தர வந்தாயா?
அல்லது
அமைச்சின் சம்பளத்தில் காதலா?

பலர் பல விதமாக எம்மைப் பற்றிக் கதைப்பார்கள்
தவணை விடுமுறையோடு மெடிக்கல் லீவோடு
அரசாங்க விடுமுறையும் வருடத்தில் அரைவாசி
லீவு கூடிய தொழில் ஆசிரியத் தொழில் என்பர்
தோட்ட வேலையோடு வேறு வேலையும் செய்யலாம் என்பர்

இதை நம்பி வந்தீர்களா?
ஏமாந்தது போதும்.
சனி, ஞாயிறு செயலமர்வு இருக்கும்
தவணை விடுமுறையில் இணைப்பாட செயற்பாடு
தமிழ்த்தினப் போட்டி, ஆங்கில தினப்போட்டி
கோட்ட, வலய மட்ட விளையாட்டுப் போட்டி என்று
வருடம் முழுவதும் ஒரே வேலை
இன்னும் சொல்கின்றேன்.

கல்விப் பொதுத்தராதர சாதாரணமும் உயர்தரமும்
பல்கலையும் கணினியும் ஆசிரியர் பயிற்சியும் முடித்திட்டேன்

இனியென்ன படிப்பு என்று யோசிக்காதே
இனித் தான் படிப்புனக்கு

"ஓய்வு பெறும் வரை ஓயாது கற்க வேண்டும்"
தமிழ் எழுத்துக்கள் மாறும் கணிப்பீட்டு முறைமாறும்
அமைச்சர் மாற கற்பித்தல் முறை மாறும்
புதுப் புதுத் தகவல்களுடன் சுற்று நிருபமோ
புதுசு புதுசாக வரும்.

எதற்கும் அசையாது - நீ
படிப்பதற்கும் - பிறருக்கு
கொடுப்பதற்கும் தயார் என்றால்
வா ஆசிரிய குடும்பத்திற்குள்
சேவைக்காக உன்னைத் தியாகம் செய்
நாளைய நற்பிரஜையை உருவாக்க.

நாளை ஒருவன் உங்களைக் கண்டதும்
"சேர்" என்னைத் தெரிகின்றதா?
உங்களிடம் படித்து இப்போது
வேலை செய்கின்றேன் என்று
சொல்லும் போது
மேனி சிலிக்கும் - பாழாய்ப்போன
உடம்புக்கு புதுத் தெம்புவரும்
வா தம்பி ஆசிரிய வட்டத்துள்.........



# இணையிலாத் தமிழ்

திருமதி இராஜினிதேவி - சிவலிங்கம்
பகுதித்தலைவர்
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

1 விண்ணை முட்டும் மலை அழகும் - அதில்
முட்டிப் படிந்திருக்கும் வெண் முகிலும்
அலைகள் பொங்கி எழும் கடலும் - அதன்
அருகில் படர்ந்திருக்கும் மணலும் - கருங்
கல்லைக் கரைய வைக்கும் குழலும் - தென்றல்
காற்றில் மிதந்து வரும் இசையும் - இவையாவும்
தமிழுக்கிணையில்லை - இதை
எங்கும் முரசறைந்து சொல்வோம்.

2. பச்சைக் கம்பளமாய் விரிந்து -எங்கும்
பசுமை கொழித்து நிற்கும் வயலும்
வெள்ளைச் சிறகுகள் விரித்து - அங்கு
விளையாடும் கொக்குகளின் அழகும்
நீர் நிறைந்த பொய்கைகளின் வனப்பும் - அதில்
நீந்தும் தாமரையின் எழிலும் - எங்கள்
மண்ணின் வளமனைத்தும் பேசும் - உயர்
மாட்சி எம்மொழிக்குமில்லை.

3. அன்பின் மேன்மையினைக் கூறி - என்றும்
அறத்தில் வாழும் வழிகாட்டி - நல்ல
நீதிக் கதைகளையும் கூறி - நெஞ்சை
நிமிர்த்தும் வீரக்கதை பேசி - தமிழ்
மக்கள் நெஞ்சில் என்றும் மறவா
மயக்கும் பாடல்களின் சுவையும்
நிற்கும் உலகம் உள்ள மட்டும் - இதை
நினைக்கும் தமிழர் நெஞ்சு நிமிரும்.

4. முன்னைப் பழம் பெருமை பேசி - வீதி
எங்கும் மேடையிட்டு முழங்கி
சொன்ன கதைகளையே மீண்டும் - தினம்
சொல்லிப் புலம்பித் திரியாமல் - புத்தம்
புதுக் கலைகள் தேடி - இங்கு
புதிய படைப்புக்களை ஆக்கி
எங்கள் தமிழ் மொழியை வளர்ப்போம் - இதை
எங்கும் முரசறைந்து சொல்வோம்.

5. மேலை நாடெங்கும் சென்று - அங்கு
விஞ்ஞான விந்தைகளைக் கற்று
தேடிப்பல கலைகள் ஆய்ந்து - அவை
அத்தனையும் நன்றாகக் கற்று
புத்தம் புதிய துறை யாவும்
எங்கள் மொழியில் கலந்து வரச்செய்து
இந்த மண்ணில் முளை முடுக்கெல்லாம் - தமிழ்
முழக்கம் கேட்கும் வகை செய்வோம்.



# வாழ்வும் இசையும்

திருமதி சா. விஜயகுமார்
ஆசிரிய ஆலோசகர்,
யாழ். கல்வி வலயம்.

64 கலைகளுள் மிகவும் உன்னதமான நிலையில் இசை உள்ளது. இதனைப் புனிதமான கலை, தெய்வீகக் கலை எனவும் கூறலாம். இசை இசைவிக்க வல்லது. இதனையே "இசையால் வசமாகா இதயமெது" எனச் சிறப்பித்தனர். பாலர் முதல் விருத்தர் வரை யாவரையும் ஆட்கொள்ள வல்லது இசையெனில் மிகையாகாது. இசையினை அனுபவிப்பதனால் மனிதன் மனிதனாக வாழ்கிறான். இசையானது ஒரு மனிதனை முழு மனிதனாக வாழ வழிவகுக்கின்றது.

மேலும் இதனை ஆராயும்போது இசையானது ஒரு மனிதனது வாழ்விற் பிரிக்க முடியாத அளவு பின்னிப் பிணைந்துள்ளது. அதாவது ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை இசையானது முக்கியம் பெறுகின்றது. இதனை ஆராயும்போது மனிதனது ஒவ்வொரு வளர்ச்சிப் பருவத்திலும் இசையினைப் பயன்படுத்திக் கொள்கின்றான்.

மனிதன் தன்னைத்தானே மகிழ்வித்துக் கொள்ளவும் தன்னைச் சார்ந்த மக்களை மகிழ்விக்கவும் பாடல்களைத் துணையாகக் கொண்டான். நாட்டுப்புற இலக்கியங்களே மனிதனின் உணர்வுகளை எவ்விதப் பூச்சுமின்றி, பகட்டின்றி, இலக்கண வேலி போட்டுக்கொண்டு அடங்கிக் கிடக்காமல் பூக்களைப் போன்று பூத்து மணம் பரப்புகின்றன. இன்பமோ துன்பமோ அந்தந்த உணர்வுகளை அப்படியே வெளிப்படுத்தும் பாடல்களை நாட்டார் பாடல்கள், நாட்டுப்புற இலக்கியங்கள் எனக் கூறலாம். இவ்வாறு தோற்றம்பெற்ற பாடல்களுக்கு எவரும் சொந்தம் கொண்டாட முடியாது. நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும், அதாவது கிராம மக்களின் இயல்புக்கும், அவர்களின் உழைப்பிற்கும், உணர்ச்சிக்கும் ஏற்பத் தோற்றம்பெற்ற பாடல்களே நாட்டார் பாடல்கள் ஆகும்.

மேலும், இசையானது மனிதனது வாழ்வில் எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என ஆராயும்போது, பல உண்மைகளை நாம் உணரக்கூடியதாக உள்ளது. ஒரு குழந்தை பிறந்தவுடன் மருத்துவிச்சியினால் "மருத்து விச்சி வாழ்த்து" என்ற பாடல்வகை பாடப்படுகின்றது. இதில் குழந்தையின் குலப் பெருமை மிகவும் அழகாகக் கூறப்படுகின்றது. அடுத்து இடம் பெறுவது தாலாட்டு. தால் என்பது நாக்கு. நாக்கினால் குழந்தை ஆட்டப்படுகிறது. அதாவது சீராட்டப்படுகின்றது. குழந்தை நித்திரை செய்வதற்காக இப்பாடல் பாடப்படுகின்றது. நித்திரை செய்யாது அடம்பிடிக்கும் குழந்தைகள் இப்பாடலின் இசையினைக் கேட்டவுடனே தமது அழுகையை நிறுத்திவிட்டு

இப்பாடலைக் கேட்டு இன்புற்று நித்திரை செய்கின்றன. இதில் "ஆராரோ ஆரிவரோ" என்ற சொற்கள் காணப்படுகின்றன. இத்தாலாட்டுப் பாடல்கள் நீலாம்பரி இராகத்தில் பாடப்படுகின்றது. தாலாட்டுப் பாடல்களில் இனிய இசையும் சொற் சித்திரங்களும் அரிய கருத்துக்களும் கற்பனைகளும் கலந்திருக்கும் என்று கலைக் களஞ்சியத்திற் கூறப்பட்டுள்ளது.

குழந்தைகள் வளர்ந்து பிள்ளைப் பருவத்தை அடைகின்றன. இப்பருவத்தில் பல விளையாட்டுப் பாடல்களைப் பாடுகின்றனர். விளையாடும் பொழுது பாடிக்கொண்டே விளையாடுவது சிறுவர் சிறுமியரின் இயல்பாகும். இவர்கள் ஆடுவதும் அதற்கேற்பப் பாடுவதுமே நோக்கமாக இருப்பர். இப்பாடல்களிற் பொருட்செறிவு காணப்படமாட்டாது. உதார ணமாக: கிட்டிப் புள்ளு விளையாடும்போது;

**"ஆலையிலே சோலையிலே**
**ஆலங் காடிச் சந்தையிலே**
**கிட்டிப் புள்ளும் பம்பரமும்**
**கிறுகியடிக்கப் பாலாறு**

பாலாறு பாலாறு பாலாறு" எனப் பாடிக்கொண்டே விளையாடுவர். மேலும், இரண்டு சிறுவர்கள் தமது இரு கைகளையும் உயர்த்திக் கோபுரம்போல் வைத்திருக்க மற்றைய சிறுவர்கள் அந்த இடைவெளியூடாக நுழைந்து வருவர். அப்போது :

**"ஒரு குடம் தண்ணி ஊத்தி**
**ஒரு பூ பூத்திச் சாம்**
**இரண்டு குடம் தண்ணீ ஊத்தி**
**இரண்டு பூ பூத்திச்சாம்"** இவ்வாறு பத்து வரும்வரை எண்ணிக்கொண்டே பாடுவர். பத்தாவதாக நுழையும் சிறுவனைப் பிடித்து வைத்துக்கொள்வர். இவ்வாறு பலகையான விளையாட்டுப் பாடல்களைக் கேட்கலாம்.

மேலும், இப்பருவத்திலேயே பாடசாலைகளில் கலைகள் கற்பிக்கப்படுகின்றன. இசையினைப் பயில்வதனால் அமைதி, அன்பு, சாந்தம், அடக்கம், பொறுமை, சகிப்புத் தன்மை போன்ற நற்பண்புகள் வளர்க்கப் படுகின்றன.

அடுத்து, இளமைப் பருவத்தை அடைகின்றனர். இங்கேயும் பல பாடல்களைப் பாடுகின்றனர். ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது" என்ற கூற்றுக்கிணங்கத் தொழிற் பாடல்கள் தோற்றம் பெற்றன. அதாவது, மீன்பிடிக்கக் கடலிலே செல்லும்போது கப்பற் பாடலும், வயலில் விவசாயம் செய்யும் போது விவசாயப் பாடலும் வயலில் உழும்போது ஏர்ப்பாடலும் நாத்து நடும் போது நாத்து நடுகைப் பாடலும் நீர் இறைக்கும்போது எற்றப் பாடலும் அரிவு வெட்டும்போது அரிவு வெட்டுப்பாடலும் நெல் சாத்தும் போது பொலிப் பாடலும் பாடப்பட்டன. இவ்வாறு ஆடிப்பாடி வேலைகளைக் களைப்பில்லாமற் செய்து முடித்தார்கள்.

மேலும், பொழுதுபோக்கிற்காகப் பல பாடல்களைப் பாடி மகிழ்ந்தார்கள். ஆலயங்களுக்குச் சென்று இறைவனைப் போற்றி வழிபட்டுத் தேவார, திருவாசக, திருமுறைகளையும், பஜனைப் பாடல்கள் என்பவைகளையும் பாடி வழிபடுகின்றார்கள். மேலும், ஆலயங்களில் மங்கலகரமான வாத்தியங்களான நாதஸ்வரம், தவில் என்பன வாசிக்கப்பட்டு வருகின்றன. மேலும், திருமணத்தின்போதும் நாதஸ்வரம், தவில் இசைக்கப்படுகின்றன. ஊஞ்சல், லாலி, நலங்கு போன்ற பாடல்கள் இசைக்கப்படுகின்றன. ஆலயங்களில் திருவிழாக்களின்போதும் பல

இசைக் கச்சேரிகளைக் கேட்கலாம். இதிலிருந்து மனிதனது வாழ்வில் இசை பிரிக்கமுடியாதவாறு பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது.

மேலும், ஒரு மனிதன் தனது வாழ்க்கையில் இசையினைக் கற்றும் கேட்டும் இரசித்தும் இன்பமடைந்து வாழ்கின்றான். இவ்வாறு வாழ்ந்து வாழ்வின் இறுதியில் மரணமடைகிறான். மரணமடைந்தபோதும் இசை பயன்படுத்தப்படுகின்றது. அதாவது, அவன் வாழ்ந்த சிறப்பு, குலப் பெருமைகள் என்பவைகளைக் கூறுமுகமாகப் பாடப்படும் பாடல் "ஒப்பாரி" என்ற பாடல் வகையாகும். இதனை அக்கிராமத்துப் பெண்கள் வட்டமாகக் கூடி இருந்து ஒருவருடன் ஒருவர் கைகோர்த்து கேட்கும்போது துன்ப உணர்ச்சியே மேலோங்கிக் காணப்படும். அத்துடன் இரங்கற் பாக்கள் பாடப்படும். இங்கேயும் அவர் வாழ்ந்த சிறப்புக்கள் கூறப்படும். இவையாவற்றிற்கும் மேலாக "பறை" என்ற இசைக் கருவி பயன்படுத்தப்படும். இவை யாவற்றினையும் கேட்கும் போது எங்களை அறியாமலேயே ஒருவகைத் துன்பஉணர்ச்சியின் வசப்படுகின்றோம்.

ஆகவே, இவை எல்லாவற்றினையும் நாம் நோக்கும்போது ஒரு மனிதன் பிறந்து இறக்கும்வரை இசை பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளது எனக் கூறினால் மிகையாகாது.

இரசிப்போம், சிந்திப்போம், செயற்படுவோம்.



# செம்மொழி வரிசையில் தமிழ்மொழி

திருமதி கலைவாணி மகாலிங்கசிவம், ஆசிரியர்,
யா/ இணுவில் மத்திய கல்லூரி.

இன்று இந்தியாவில் வழக்கிலுள்ள திராவிடமொழிக் குடும்பத்தைச் சார்ந்த இருபத்தைந்திற்கும் மேற்பட்ட மொழிகளுள், நான்கு மொழிகளே எழுத்துவடிவம் உடையனவாகவும்,; இலக்கியப் பாரம்பரியம் உடையனவாகவும் விளங்குகின்றன. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய இந்நான்கு மொழிகளினுள்ளும் தமிழ்மொழி மேலும் ஒரு சிறப்பைப் பெற்று மேலோங்கி நிற்கிறது. திராவிடமொழிக் குடும்பத்தில் உள்ள ஒரேயொரு செம்மொழி என்னும் பெருமை தமிழுக்குரியது.

உலகில் இன்று பேசப்படுகின்ற பல்லாயிரக்கணக்கான மொழிகளுள் செம்மொழித் தகுதியினைப் பெற்றவையாக எட்டுமொழிகள் சிறப்புப் பெறுகின்றன. அந்த வகையில் தமிழ்மொழியும் 2004ஆம் ஆண்டு இந்திய மத்திய அரசினாற் பிறப்பிக்கப்பட்ட அரசாணைமூலம் செம்மொழி என்னும் உயர்தகுதியினைப் பெற்றுக்கொண்டது. இதனால் உலகுவாழ் தமிழர்கள் அனைவரும் பெருமையும் பெரும்பயனும் உடையவர்களாக மகிழ்வுறுகின்றனர்.

ஒரு மொழியைச் செம்மொழியாகக் கொள்ள சில தகைமைகள் தேவைப்படுகின்றன.

(1) பண்டைக்காலம் தொடக்கம் நீண்ட காலப்பயன்பாடு உடையதாக; அதாவது, 2000 வருடத்திற்கு மேற்பட்ட பயன்பாடு உடையதாக இருக்கவேண்டும்.

(2) நீண்ட கால இலக்கியப் பாரம்பரியம் உடையதாக இருக்கவேண்டும்.

(3) வேறெந்த மொழிகளிலிருந்தும் கிளைத்து ஏழாததாக இருக்கவேண்டும்.

இத்தகுதிகள் உடைய மொழியே செம்மொழி ஆகும்.

கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், ஹீப்ரு, பாரசீகம், அராபிக், சீனம் ஆகிய மொழிகளே நீண்டகாலமாக செம்மொழிகள் எனப் போற்றப்பட்டு வந்துள்ளன. தமிழ் மொழியையும் செம்மொழி ஆக்குவதற்கு நீண்ட காலமாகச் முயற்சிகள் எடுத்தபோதும் அது அன்று நிறைவேறவில்லை. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், சிறீநிவாச ஐயங்கார், பூர்ணலிங்கம்பிள்ளை போன்றோர் இதற்காக அரும்பாடுபட்டனர்.

"மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்"

என்ற நிலையை அடையாமல் தமிழ்மொழி இன்றும் சிறப்புப் பெற்று வீறுநடை போடுகின்றது.

செம்மொழியென வகைப்படுத்திக் கொள்ளப் பயன்படும் தகுதிப்பாடுகள் தமிழில் உள்ளனவா என நோக்கினால், 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமை வாய்ந்த நூல்கள் ஆவணப்படுத்தப்பட்ட வரலாறு இம்மொழியில் இருப்பதைக் காணலாம். இதற்குச் சான்றுகளாக: கல்வெட்டுக்கள், இலக்கியங்கள், இலக்கண நூல்கள், உரையாசிரியர்களின் உரைகள், வெளி நாட்டார் குறிப்புக்கள் போன்றன விளங்கு கின்றன.

தமிழ்மொழி கிறிஸ்துவுக்கு முன்னரே வழக்கில் இருந்துள்ளமையை கி. மு. இரண்டாம் நூற்றாண்டு திருநாதர் குன்றத்துக் கல்வெட்டு ஒன்று பறைசாற்றுகின்றது. தொல்காப்பியம், சங்கத் தமிழ் இலக்கியங்கள், சங்க மருவிய கால இலக்கியங்கள் என்று இன்று வரையும் இடையறாத இலக்கியப் பாரம்பரியம் கொண்டதாக தமிழ்மொழி அமைந்துள்ளது. நவீன தொழிநுட்பம் வளர்ச்சியடையும்போது அதற்கேற்றபடி மொழியும் வளரவேண்டிய தேவை ஏற்படுகின்றது. இவ்வகையில் தமிழும் புதிய கலைச்சொல்லாக்கங்களுடன் அறிவியற் றமிழாக இன்று வளர்ந்து வருகின்றது. செம்மொழிகளாகக் கருதப்பட்டுவந்த இலத்தீனும் சமஸ்கிருதமும் இறந்தமொழி களாகிவிட, தமிழ்மொழி பண்டைக்காலம் தொடக்கம் இன்றுவரை சீரிளமைத்திறம் குன்றா மொழியாகத் திகழ்கின்றது.

உலகு தழுவிய மிகச் சிறந்த இலக்கி யங்களைக் கொண்டமைவது செம்மொழிக் குரிய சிறப்பம்சம் ஆகும். அவ்வகையில் சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், திருவாசகம், இராமாயணம் போன்ற சிறந்த இலக்கியச் செல்வங்களைத் தமிழ்மொழி கொண்டு விளங்குகின்றது. திருக்குறள் எல்லா இன, மத மக்களுக்கும் பொதுவான சிறந்த நீதிகளைக் கூறுவதால் பலமொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கம்பராமா யணமும் சிலப்பதிகாரமும் உலக காவியங் களின் தரமுடையனவாகப் போற்றப்படு கின்றன. திருவாசகத்தை மொழிபெயர்த்த ஜி.யு. போப் அவர்கள், "கல்லைக் கனிய வைக்கும். என்பையே உருக வைக்கும் பாடல்கள்" என இப்பாடல்களின் சிறப்பைக் கூறியுள்ளார். இவற்றுடன் நவீன இலக்கிய வடிவங்களான சிறுகதை, நாவல், கட்டுரை என்பனவும் தோன்றித் தமிழை வளப்படுத்து கின்றன. தமிழோடு தொடர்புடைய சமயங்களிற்கெல்லாம் தமிழிலே காவியங்கள் இயற்றப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

செம்மொழிக்குரிய முக்கிய தகுதிப் பாடாக அமைவது, அது வேறெந்த மொழிகளிலிருந்தும் கிளைத்தெழாத தன்மையாகும். தமிழ்மொழி சமஸ்கிருத மொழியிலிருந்து கிளைத்தெழுந்தது என்பதை நிலைநாட்ட பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. எனினும் டாக்டர் கால்டுவெல்: தமிழ்மொழி இலக்கண அடிப்படையில் சமஸ்கிருதத்தைச் சாராதது என்றும், அது திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்றும் "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" எனும் தனது நூலில் விளக்கமாகக் கூறியுள்ளார்.

இத்தகைய உயர் தகுதியினைப் பெற்ற தனால் தமிழ்மொழி பல வாய்ப்புக் களையும், வசதிகளையும் பெற்று மேலும் வளர்ச்சி பெறும் நிலையில் விளங்குகின்றது. உலகப் பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறை அமைக்கப் பட்டுத் தமிழ் கற்கும், கற்பிக்கும் பேற்றை உலகத் தமிழர்களுக்கு இதன்மூலம் வழங்க முடிகின்றது. அத்துடன் தமிழ்மொழியிலுள்ள சிறந்த இலக்கியங்கள் வேற்றுமொழிகளில் மொழி பெயர்க்கப்படவும், வேற்று மொழியிலுள்ள உயர் இலக்கியங்கள்

தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்படவும் வாய்ப்புக்கள் கிட்டியுள்ளன.

கட்டுரையின் நிறைவாகச் செம்மொழியாக்கப்பட்ட தமிழ்மொழியை மேலும் வளப்படுத்த நாம் எத்தகைய பணிகளை ஆற்ற வேண்டுமென்று சிந்திப்பது பயனுடையதாக அமையும். இவ்வகையிற் பாரதியார் :

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"

என அன்றே ஆற்ற வேண்டிய பணிகளைக் கோடிட்டுக்காட்டியுள்ளார்.

இந்த வருடத்தின் ஆரம்பத்திற் கொழும்பில் நடைபெற்ற சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் உரையாற்றிய இந்தியத் தமிழ் எழுத்தாளரான தோப்பில் முகமது மீரான் தமிழுக்கு இதுவரை நோபல் பரிசு கிடைக்காமற் போனமைக்குக் காரணம் தமிழ் இலக்கியங்கள் ஆங்கில மொழி உள்ளிட்ட பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்படாமையே என்றார். இக் குறைபாடு நிச்சயம் நீக்கப்படவேண்டும். இந்நிலை மாற மொழிபெயர்ப் புக்குழு ஒன்று உருவாக்கப் பட்டுத் தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளிலும், பிறமொழிச் சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும் மொழி பெயர்க்க வேண்டும். தமிழ்ப் பல்கலைக்கழகங்களிற் பிறநாட்டவர் தமிழ் மொழியைக் கற்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும்.

2010இல் கோவையில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன்; தொடர்ந்தும் செம்மொழி மாநாடுகளை நடத்திப் புதிய துறைகள் தொடர்பான ஆய்வுகளுக்கு வழியமைக்க வேண்டும்.



சாரண ஸ்தாபகர் றொபேட் ஸ்ரிவின்சன் சிமித் பேடன் பவல்
அவர்களின் 154 ஆவது பிறந்த தினத்தில்

# ஆரோக்கியமுள்ள மனிதரும், சாரணியமும்


சி. சிவராஜன் - அதிபர்,
(காங்கேசந்துறை மாவட்ட உதவி சாரண ஆணையாளர்)
யா/ பன்னாலை சோ கனகசபை அ.த.க பாடசாலை, தெல்லிப்பழை.


பேடன் பவல் அவர்கள் 1857ஆம் ஆண்டு மாசிமாதம் 22ஆம் திகதி இங்கிலாந்திற் பிறந்தார். தந்தையார் பேராசிரியர் H.S பேடன் பவல், தாயார் H.சிமித். இவரது குடும்பம் ஒன்பது பிள்ளைகளுடன் கூடிய தாய்ப்பாசம், சகோதரத்துவம், ஒற்றுமை, மிகுந்த குடும்பம். இவரது ஆரம்ப காலங்களில் தனது சகோதரர்களுடன் சேர்ந்து வெட்ட வெளி வாழ்க்கை, பாசறைவாசம், கடுமையான நடைப்பிரயாணங்கள், மலையேறுதல், படகு கட்டி ஓடுதல், நடித்தல், படம் வரைதல், உதைபந்தாட்டம் போன்ற ஆரோக்கிய வாழ்வின் செயற்பாடுகளில் முனைப்பாக இருந்துள்ளார். பிரபு அவர்கள் மூன்று வயதாக இருக்கும்போது தந்தையாரை இழந்தார். இழப்புக்களைக் கண்டு துவண்டுவிடாமல் மனதை ஆரோக்கியப் படுத்தி வாழ்தல் வேண்டும் என்பதற்கு இதுஒரு சுட்டியாக உள்ளது. பல அழிவுகளையும், இழப்புக்களையும் சந்தித்த இலங்கை மாதாவின் மக்களாகிய நாங்கள் மகாகவியின் கவிதைக்கு ஏற்ப "மீண்டும் தொடங்கும் மிடுக்குடன்" வாழமுனைவதும் ஒரு வகையில் ஆரோக்கியம் உள்ள மனிதனின் நற்பண்பு ஆகும்.

"ஆரோக்கியம் என்பது நோய் நிலைகளிலும் இயலாமைகளிலும் இருந்து விடுபட்ட நிலைமாத்திரம் அல்ல ஒருவர் தன் உடல், உள, சமூக, ஆத்மிக நல்நிலைகளில் அடையக்கூடிய அதிஉயர்ந்த நிலையே ஆரோக்கியம் எனலாம். ஆரோக்கியம் மனிதனது அடிப்படைப் பிறப்புரிமைகளில் ஒன்றாகும் . உலக சுகாதார ஸ்தாபனம் இக் கூற்றை உறுதி செய்கிறது.

உடல் ஆரோக்கியம் அதிகரிக்க வேண்டுமாயின் நிறையுணவு, சுறுசுறுப்பு, சுகாதாரப்பழக்கவழக்கங்கள் போன்றவற்றை கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும் . உள ஆரோக்கியம், மகிழ்ச்சி, அன்பு, பாசம், பரிவு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு ஏற்றுக்கொள்ளும் தன்மை போன்றவற்றை மையப்படுத்திக் காணப்படும். உள ஆரோக்கியமானது ஒவ்வொரு தனி மனிதனிலும் தங்கி உள்ளது. உள ஆரோக்கியம் குறைவான மனிதர்களே ஏனைய மனிதர்களின் தவறுதல்களைச் சுட்டிக்காட்டித் துன்புறுத்துபவர்களாகவும். அதிகரித்த கோப உணர்வு கொண்டவர்களாகவும் இருப்பதை சமூகத்தில் காண்கிறோம். உள ஆரோக்கியத்தை ஏற்படுத்துவது அவ்வரவர் மனப்பாங்கில் தங்கியுள்ளது.

சமூகம் என்ற பரந்த விடயம்: குடும்பம், கூட்டுக்குடும்பம் , கிராமம், நகரம் என விரிவுபட்டு நாடு, தேசம் என மக்களை வியாபிக்கச் செய்துள்ளது. சிறந்த சமூக உறவானது மானிட வாழ்க்கையின் உன்னத நிலைக்கு அழைத்துச் செல்லும் திறவுகோலாக உள்ளது.

ஆன்மிகம் என்பது ஒரு பரந்துபட்ட விடயமாயினும் தன்னகத்தே நம்பிக்கை, பக்தி, இரக்கம், கருணை, ஒழுக்கம், நன்னடத்தை போன்ற கருத்துக்களைத் தாங்கிநிற்கின்றது. எனவே, ஆரோக்கிய மனிதர்களாக வாழவேண்டுமாயின் உடல், உள, சமூக, ஆன்மீகம் என்ற நான்கு விடயங்களிலும் கவனம் செலுத்தவேண்டும். ஒவ்வொரு செயற்பாடுகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. உள ஆரோக்கியம் உன்னத நிலையை அடைய வேண்டுமாயின் உடல் ஆரோக்கியம் இணையவேண்டும். இவ்வாறுதான் ஏனையவையும் குறித்த நான்கு கூறுகட்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளதை அறிய முடிகிறது.

சாரணி வாழ்க்வையும், ஆரோக்கிய வாழ்வையும் இணைத்துப் பார்ப்போமானால், தந்தை பேடன் பவல் காட்டிய பாதை சாலச்சிறந்தது. சாரணர்களின் பத்து விதிகளும் கூறும் சாரணன் நம்பத்தகுந்தவன், பற்றுறுதி உடையவன், மற்றெந்தச் சாரணனுக்கும் சகோதரன், தைரியமுள்ளவன், பிராணிகளின் தோழன், ஒத்துழைப்பவன், மனமகிழ்வுடையவன், சிக்கனமானவன், சிந்தனை, சொல், செயல்களில் தூய்மையானவன் என்பவற்றின் மூலம் அறிந்து கொள்ளமுடியும். இன்றைய மாணவ சமூகம் சாரணியத்தில் இணைந்து கொள்வதன் மூலம் தமது வாழ்வை உயர் நிலைஅடையச் செய்ய முடியும். ஸ்ரீலங்கா மாதாவின் சாரணர் சபையின் போஷகரும், பிரதம சாரணருமாக இருப்பவர் நாட்டின் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களே, இதிலிருந்து சாரணியத்தின் முக்கியத்தை அறிய முடிகிறது.


சாரணியத்தின் பத்து விதிகளிற் சில விதிகளை ஆரோக்கியத்துடன் இணைத்துப் பார்ப்போம் ஆனால், பிராணிகளின் தோழன் என்பது ஆன்மிகத்தில் இரக்கம் என்பதைப் புலனாக்குகிறது. மகிழ்ச்சியுடையவன் என்பது உளம் சார்ந்த ஒரு விடயமாக உள்ளது. இதில் இருந்து ஆரோக்கிய வாழ்வுக்கும் சாரணியத்திற்கும் உள்ள பிணைப்பை உறுதிசெய்ய முடிகிறது.

சாரணர்களாக ஆண் மாணவர்கள் இணைந்து கொள்வது போன்று பெண் மாணவிகள் சாரணியர்களாகச் செயற்பட முடியும். இதற்காகப் பிரபு அவர்கள் சகோதரி அக்னஸ் 1ஆவது பெண் சாரணராக இணைந்து கொண்டார். 1910ஆம் ஆண்டு பெண்கள் வழிகாட்டி இயக்கமும், 1916ஆம் ஆண்டு குருளைச் சாரணியமும் பேடன் பவல் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இன்றைய மாணவ சமூகம் சாரணியச் செயற்பாடுகளில் இணைவதன் மூலம் தம்மையும் சமூகத்தையும் மேன்நிலை அடையச் செய்து தானும், நாடும் சுபீட்சம் அடைய உழைக்க முடியும் என்பதை மேற்குறிப்பிட்ட ஆதாரங்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும். சாரணியத்தின் மூலம் குழு மனப்பாங்கு, செயற்பாடு என்பன அதிகரிக்க பெரும் வாய்ப்பு உண்டு. இன்றைய கல்விச் சமூகம், கல்வியாளர்கள், தொழில் வல்லுநர்கள் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பின்னணியையும் அவர்களின் கோட்பாடுகளையும் அவதானிக்கும்போது குழுச் செயற்பாடுகள் மனித வளத்தின் உச்சப் பயனுறுதிக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் அபிவிருத்திக்கும் உதவுவதை அறிய முடிகிறது. எனவே, பின்வரும் குழுச்செயற்பாட்டின் நன்மைகளில் மேலும் தெளிவு பெறமுடியும் (Benefit of team Work)

**அணி / குழுவேலையினால் ஏற்படும் நன்மைகள்**

**Benefits of TeamWork**




ஆரோக்கியமுள்ள மனிதராக வாழ்வின் நீண்ட ஆயுளுடன் நிம்மதியான வாழ்வைக் கண்டு கொள்ளமுடியும். ஆரோக்கியமான மனிதர் என்பதும் சாதாரண மனிதர் என்பதும் ஒரே கருத்துடையன அல்ல. உள ஆரோக்கியமான மாணவர்களுக்கும் வாழ்வில் மேடு, பள்ளம் ஏற்படுவது இயல்பு. ஆயினும், அவர்கள் மகிழ்ச்சி, அச்சம், கோபம், பயம், இழப்பு, விரக்திபோன்ற தமது உணர்வுகளை முழுமையாக அனுபவிக்கத்தவற மாட்டார்கள். உள ஆரோக்கியம் கொண்ட மனிதர்கள் உண்மையானவர்களாக இருக்கின்றார்கள். தமது சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றில் இயல்பாகவே இருந்து செயற்படுவர். இவர்கள் எந்த வகையிலும் தம்மைச் சுருக்கிக் கொள்ளாமல் சுதந்திரமாக இருக்கிறார்கள். மற்றவர்களின் சுதந்திரத்தையும் மதிக்கிறார்கள். எனவே ,இன்றைய எங்கள் சாரணிய ஸ்தாபகர் பிரபு பேடன் பவலின் வாழ்க்கைப் பாதை ஆரோக்கியத்தின் திறவு கோல் என்பதில் மன நிறைவு அடைகிறோம்.

"எதற்கும் தயாராய் இரு"

# உங்கள் சிந்தனைக்கு.......

திரு.இரா. ஜெயக்குமார்,
அதிபர்,
யா/ புன்னாலைக் கட்டுவன் மகாவித்தியாலயம்.

ஆற்றலில் மிகப் பெரியது மனிதனின் மன ஆற்றல் **- ஸ்டாலின்**

வெற்றிக்கும் தோல்விக்கும் உள்ள வித்தியாசத்தை நிர்ணயிப்பது பிரச்சனையே
**-அப்துல்கலாம்**

சாதிக்க முடியாதவர்கள் சாதனையாளர்களை ஒரு போதும் மன்னிப்பதில்லை
**-யப்பானிய ராஜதந்திரி**

நூறுபேர்களின் உழைக்கும் கரங்களைவிட ஒருவனின் உண்மையான உற்சாகம் மாற்றிவிடும் **-நெப்போலியன்**

சூழ்நிலைகள் மனிதர்களை உருவாக்குவதில்லை. ஆனால், மனிதர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதை உலகத்திற்குப் பறை சாற்றுகின்றன.
**- ஜேம்ஸ் ஆலன்**

மாற்றம் வேண்டுமானால் பணியாளர்களிடம் அதிகாரத்தைக் கொடுங்கள் மாற்றத்தை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். **- யாரோ**

எனக்கு உடல் ஆரோக்கியத்தைவிட, மன ஆரோக்கியமே முக்கியம்
**-காந்தி**

ஒரு மனிதன் எந்தஅளவுக்கு மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென மனத்தில் தீர்மானித்துக் கொள்கின்றானோ அந்த அளவிற்குத் தான் அவன் மகிழ்ச்சியாக இருக்க முடியும். **- ஆபிரகாம் லிங்கன்**

மற்றவர்களிடம் சம்பளத்திற்கு வேலை செய்யக்கூடாது. சொந்தத் தொழில் செய்ய வேண்டும். **- அம்பானி**

என் மகத்தான கண்டு பிடிப்புக்களுக்குப் பின்னணியில் உள்ள இரகசியம் கேள்வி கேட்கும் வழக்கத்தை விடாமல் இருப்பதுதான். - ஐன்ஸ்டீன்

மிகச் சிறந்தமனிதர்கள் பிறப்பதில்லை. தங்களைத் தாங்களே உருவாக்கிக் கொள்கிறார்கள். - சுப்பிரமணியம் சந்திரசேகர்

நூல்களும் நண்பர்களும் குறைவாகவும் தரமாகவும் இருக்கவேண்டும்
- இரசியா

சிந்தியதைப் பற்றிச் சிந்திக்காமல், சிதறியதைச் சேகரிக்கப் பாடுபடுங்கள்
- அறிஞர் அண்ணா

மனைவியைத் தேர்ந்தெடுப்பதில் தவறு செய்பவன் மரணத்தைத் தேர்ந்தெடுப்பதில் வெற்றி பெறுகிறான். - கண்ணதாசன்

சந்தேகமே கண்டுபிடிப்பின் தந்தை - கலிலியோ

புத்தகங்கள் கனவுகளை வளர்க்கும்-கனவுகள் எண்ணங்களை உண்டாக்கும்-எண்ணங்கள் செயல்களை உருவாக்கும். - அப்துல்கலாம்

எந்த மாபெரும் காரியத்தைப் புரிவதற்கும் அளவு கடந்த எழுச்சி தேவை
-சேகுவரா

அதிகப்பேச்சும் பொய்யும் நெருங்கிய உறவினர்கள் - ஜெர்மனி

இலட்சியங்களே உலகின் எஜமானர்கள் - ஹோலந்து



# மழலை இன்பம்

வெ. சண்முகநாதன் (அதிபர்)
யா/ பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை,
சுழிபுரம்.

துன்பமும் இன்பமும் கலந்த இந்த மனித வாழ்க்கையில் யாரும் துன்பத்தை விரும்புவதில்லை. ஒவ்வொரு வகையி னரும் தம்பருவத்திற்கேற்ப ஒவ்வொரு வகை இன்பத்தை நாடி நிற்கின்றனர். இதனையே ஒரு சினிமாப் பாடல்

" இன்பம் எங்கே இன்பம் எங்கே என்று தேடு
எங்கிருந்த போதும் அதைநாடி ஓடு
மாடி மனை கோடி பணம் வாகனம் பேர்
வாழ்வினிலே ஒருவனுக்குத் வருவதல்ல இன்பம்
மழலை மொழி வழங்கும் பிள்ளை வார்த்தையிலே
இன்பம்........."

என்று அந்த இனிமையான பாடல் கடந்த ஒரு தசாப்தத்தில் ஒலிக்காத இடமில்லை. அந்த மழலை இன்பத்திற்கீடாக எதுவு மில்லை.

சாதாரணமாகப் பாருங்கள் சிறுகுழந் தைகளைத் தூக்குவதிலும் அணைத் தெடுப்பதிலும் எவ்வளவு இன்பம் என்று. அது எந்த வயது வித்தியாசமுமின்றி நாம் செய்வது. இதில் உள்ள அந்த இன்பம் அளவிட முடியாதது. எதைக் கொடுத்தாலும் அதற்கு ஈடாகாது. சாதாரணமானவர்களிலிருந்து புகழ்பெற்ற கவிஞர்கள் வரை அந்த மழலை இன்பத்தை மகிழ்ந்து இரசித்துச் சுவைத்திருக் கிறார்கள்.

மகாகவி பாரதி தனது பாடல்களிற் பாடாத விடயங்கள் இல்லை. அவனுடைய பாடல்களைப் படித்துச் சுவைப்பவர்கள் குறிப்பிட்ட காட்சி மனக்கண் முன்தோன்றி மகிழ்வான இன்பத்தை வழங்கும் என்பதற்குக் கண்ணம்மா என்ற பாடலில் வரும் வரிகளில்

" சுட்டும் விழிச்சுடர் தான் - கண்ணம்மா
சூரிய சந்திரரோ
வட்டக்கரிய விழி- கண்ணம்மா
வானக்கருமை கொல்லோ"

என்கின்றான். அவ்வடிகள் எவ்வளவு அற்புதமானவை. அந்த விழிகள் எவ்வளவு ஒளிபொருந்தியவை.

"குழந்தையை வருடுவதற்கு அதன் மொழிகள் தேவையில்லை அந்த விழிகளே போதும். அந்த விழிகளில் தெய்வம் வந்து சிரிக்க மொழிகளில் வாழ்க்கைத் தத்தவம் புரிந்துவிடும்" என்கிறார் ஒரு கவிஞர்.

" சின்னக் குழந்தை விழிகளிலே தெய்வம் வந்து
சிரிக்குதம்மா
வண்ணப்பூவிதழ் மழலையிலே வாழ்க்கையின்
தத்துவம் புரியுதம்மா"

என்கின்றார். மழலைக்கு நிறமேது? மொழியேது? பேதமேது? உயர்வு தாழ்வு உண்டா? இல்லை இல்லை என்பதே விடையாகும். அந்தப் பாடல் வரிகள் தொடர்ந்து,

"குழந்தையாய் மனிதன் இருந்துவிட்டால்
குழப்பமும் மயக்கமும் உலகில் இல்லை
வளர்ந்த மனிதன் ஆசைகளால்
வாழும் வழிகளில் நேர்மை யில்லை......."

மழலைகள் உலகத்தைப்பாருங்கள் எப்போதும் இன்பம். சிறுசண்டை என்றாலும் உடன் தீர்ந்துவிடும் பின்னர் சேர்ந்துவிடும். இந்தப்பாடலில் இறுதியாகக் கவிஞர் எப்போதும் என்னைக் குழந்தையாய் இருக்க விடு இறைவா" என்கின்றார்.

மழலை இன்பத்தை நுகராதவர் எவற்றை இன்பம் என்கின்றார்கள்? வள்ளுவர் தரும் வரிகள்

"குழல் இனிது யாழ் இனிது என்பர் தம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்"

மழலை இன்பத்திற்கீடாக எதுவும் இல்லை என்றால் மழலை மொழி மட்டுமா?- இல்லை என்கிறார் வள்ளுவர்.

"அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் - மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

மழலைக்குத் தாய் உணவை ஊட்டுகிறாள். தான் அந்த உணவை அளைவதற்கு குழந்தை அடம் பிடிக்கிறது. அந்த அளைந்த உணவு கிடைத்தற்கரிய அமிழ்தம் அதனிலும் இனிமையானது, சுவையானது ஏதும் உண்டா?

"குழந்தையின் மொழி, விழிகள் மட்டுமா இன்பம் பயப்பவை? இல்லை" என்கிறார் மகாகவி பாரதி"

"கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளம்தான்
கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ - கண்ணம்மா
உன்மத்தமாகுதடி"

மழலைகள் பெற்றோருக்கு விளை விக்கும் மகிழ்ச்சி சொல்லி அடங்காதது. மேலும் பாரதி

"சொல்லும் மழலையிலே - கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்
முல்லைச்சிரிப்பாலே - எனது
மூர்க்கம் தவிர்த்திடுவாய்"

குழந்தையின் இனிய மழலைச் சொல்லும், முல்லைச் சிரிப்பும் பெற்றோருக்கு மகிழ்ச்சியைத் தந்து கோபத்தைத் தணித்துவிடும்.

இன்பத்தை இந்த உலகில் எங்கும் தேடவேண்டியதில்லை. மழலையின் மொழியிலும் விழியிலும் அதன் குறும்புகள் அனுபவித்தாற்போதும், குழப்பமும் இல்லை மயக்கமும் இல்லை.

# தமிழ்த்தாயின் தவப்புதல்வன் தனிநாயக அடிகள்

திருமதி செந்தில்நாயகி பரமலிங்கம், ஆசிரியை,
யாழ் / உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்."

ஈழவள நாட்டின் இயற்கை அழகு நிறைந்த நெய்தல் நிலமாகிய நெடுந்தீவிலே தமிழ் அன்னை செய்த அருந்தவப்பேறாய் ரனிஸ்லஸ் கணபதிப்பிள்ளை, சிசில் இராசம்மா என்னும் பெற்றோருக்கு *08.02.1913*அன்று அடிகளார் அவதரித்தார். நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்த இவர், ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரியில் தமது ஆரம்பக்கல்வியைப் பயின்ற பின்னர் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் தமது உயர்கல்வியைத் திறமையுடன் கற்றார்.

புனித பூமியாம் ரோமாபுரியில் தமது குருத்துவப் படிப்பை முடித்து; கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனார் தோன்றிய தூத்துக்குடியிற் புனித திரேசாள் கல்லூரியில் நல்லாசிரியராகவும் அதிபராகவும் இருந்து *1940 - 45* வரை தமிழ், ஆங்கிலம், வரலாறு போதித்துத் தொண்டாற்றினார்.

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்த பெருந்தகை, தமிழின் சிறப்பைத் தமிழின் பெருமையை, தமிழின் உயர்பண்பாட்டை, அயல் நாடுகளுக்கு அதிலும் சிறப்பாக மேல்நாடுகளுக்கு எடுத்துச் சென்ற பெருமை அவருடையதே.

தனிநாயக அடிகளாருக்கு தமிழ்ப் பாரம்பரியத்தின் மீதும், அதன் கலாசாரத்தின் மீதும் இருந்துவந்த ஆழ்ந்த அறிவும் உணர்வும் ஈடுபாடும் காரணமாக தமிழ்கூறும் நல்லுலகத்தை ஒன்றுபடுத்தி அதன் மூலம் தமிழர்களுக்குத் தம் பெருமையையும், பாரம்பரியத்தையும் உணர்த்தி, அவர்களை விழிப்புணர்ச்சி பெறுமாறு செய்ய எண்ணினார்.

தமிழ்த்தூதின் முதற்படியாக *1950 - 51* வரை வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா, யப்பான் போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களில் விரிவுரையாற்றிய முதல் தமிழர் என்ற பெருமையையும் தமதாக்கிக் கொண்டார். அடிகளாரின் பேச்சுநடை சேக்கிழார் நடையைத் தழுவியதால் இருபதாம் நூற்றாண்டின் சேக்கிழார் என்றே அன்பொழுக அழைக்கப்பட்டார்.

அகிலமெல்லாம் சுற்றித்திரிந்து தமிழ்மொழியின் இயல்பு, சிறப்புப் பற்றி ஆங்கிலத்திற் பேருரைகளை நிகழ்த்திப் பிறமொழி வல்லுநர்களையும் கவர்ந்தார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் *1952 - 1962* வரை கழகக் கொள்கை விரிவுரையாளராகக் கடமையாற்றியபோது தமிழ் மாணவர்களது வளர்ச்சிக்காகவும் தமிழ் மொழியின் உயர்வுக்காகவும் அளவிற்கதிக சேவையாற்றினார். ஜேர்மனி, பிரான்ஸ், நேபிள் ஆகிய நாடு நகரங்களிலுள்ள சர்வகலாசாலைகளிலும் தரிசக பேராசிரியராகக் கடமையாற்றினார்.

எம் இனத்தின் பண்பாட்டை, பாரம்பரியங்களை, ஐயந்திரிபறக் கற்றதோடு மட்டுமல்லாது

*"கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"*

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஒப்பவும் வாழ்ந்து காட்டினார். "தமிழ் அன்னையே உன்புகழைப் பாடிவரும் வண்டாக நான் பறப்பேன்" என்று சொல்லிக் கொண்டு உலகிற் பல்வேறு நாடுகளுக்கும் தூதுவராகப் பறந்து சென்று தமிழ் மொழியின் மாண்பையும், தமிழ் இலக்கியத்தின் இனிமையையும் எடுத்தியம்பினார். இராசஇராசசோழன், இராசேந்திரசோழன் செல்லத் தவறிய இடங்களுக்கெல்லாம் தனிநாயக அடிகள் சென்று தமிழ் மணம் பரப்பினார்.

தமிழில் இயற்கைக் காவியங்கள் "தமிழ்த்தூது" என்னும் கட்டுரைக் கொத்து, ஒன்றே உலகம், நிலத்தோற்றமும் காவியமும், உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுப் பேரவைகள் என்பன இவரது நூற் தொகுப்புக்களும் சொற்பொழிவுகளும் இவற்றாற் பயனடையாதார் யாருமிலர்.

உலக அரங்கில் தமிழாராய்ச்சிக்கு ஒரு சிறப்புமிக்க இடத்தை உருவாக்கியதில் அடிகளாருக்குப் பெரும்பங்கு உண்டு. அடிகளார் பதினைந்து மொழிகளிற் புலமை பெற்றவர். முப்பது மொழிகள் நன்கு அறிந்தவர். தமிழுக்கு அவராற்றிய தொண்டு அப்பழுக்கற்றது. கடந்த ஆயிரம் ஆண்டுகளில் தமிழுக்காக அளவிடற்கரிய பணியாற்றி யவர்களில் அவரை விஞ்சியோர் எவரு மில்லை. கடல் கடந்த பல நாடுகளிற் பல் கலைக்கழகங்களும், தமிழாய்வுப் பிரிவுகளும், போதனாபீடங்களும் ஏற்படுத்தப்பட்டன. மலேசியா, சென்னை, செக்கோசிலவாக்கியா, அமெரிக்கா, சோவியத்யூனியன் முதலான நாடுகளில் உள்ள உயர்கல்வி நிலையங்களில் தமிழ் அன்னைக்கு இடமளிக்கப்பட்டிருப் பதைக் கண்டு எந்தத் தமிழ்ப் புலவன்தான் பெருமை கொள்ளமாட்டான்.

இவையெல்லாம் செய்தும் அவர் மனம் நிறைவு பெற்றுவிடவில்லை. உலகிலுள்ள தமிழ்மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்க விரும்பி உலகத் தமிழ் அறிஞர் நிறுவனம் ஒன்றை 1953இல் நிறுவினார். பின்னர் தமிழராய்ச்சி மகாநாடுகளை 1966 இல் மலேசியாவில் முதலாவதாகவும், 1968 இல் சென்னையில் இரண்டாவதாகவும், 1970 இல் பரிசில் மூன்றாவதாகவும், 1974 இல் யாழ்.நகரில் நான்காவதாகவும் நடாத்தி உலகப் புகழ் பெற்றவர்.

அகத்தியர் காலம் தொட்டு இன்றுவரை தமிழ்த்தாய்க்குத் தொண்டு செய்த பெரியார்களில் உலகளாவிய தொண்டு அடிகளாருடையதே.

***"மறைவாக நமக்குள்ளே - பழங்கதைகள்***
***சொல்வதிலோர் மகிமை இல்லை***
***திறனான புலமை எனில் வெளிநாட்டார்***
***அதை அறியச் செய்தல் வேண்டும்"***

என்ற பாரதியின் பாவடிகளுக்கேற்ப, பாரினில் வாழ்ந்து காட்டியவர். தன்னால் இயன்ற மட்டும் தமிழ்த் தாய்க்குத் தொண்டுபுரிய எண்ணித் தமிழ் அன்னைக்குத் தமிழ்ச் சிறப்புக் கொடுத்து அரியாசனத்திலிருத்தி அழகு பார்த்துத் தரணி எங்கும் அதன் தனிச் சிறப்பை அறியவைத்த பெருமை அவருக்கே.

தான் காணும் சகல விடயங்களையும் தேவனின் திருமொழியாம் விவிலிய நூலோடு இணைத்து இன்பம் கண்டார். சிந்திய முத்துக்களாய்த் தமிழ் மழை பொழிந்து சென்ற வீரமாமுனிவரின் சிந்திக்கத்தக்க செம்மொழி களைத் தொகுத்து இறைமகன் ஜேசுவின் மகிமையைப் பாருக்கு உணர்த்தினார். தேம்பாவணி என்னும் நூலையும் தம்கரம் கொண்டு தேவன் அன்புக்குரிய செயலையும் தமிழோடு சேர்த்துத் தரணிக்கு அளிக்க மறக்கவில்லை.

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே."**

என்ற திருமூலரின் வாக்கைத் தன் தாரக மந்திரமாகக் கொண்டிருந்தார். கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்ப்பணியே தன் பணியாகவும், ஆண்டவனுக்குத் தான் செய்யும் பணி தமிழை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் தான் என்றும் உரைத்தார்.

பாரதிகண்ட கனவை நனவாக்கிய ஒரு தமிழ்த்தாயின் தவப்புதல்வன் உண்டென்றால் அவர் தனிநாயகமாக, பண்பாட்டின் தனிநாயகமாக, சிந்தனையாளரின் தனிநாயகமாக, தமிழ்மக்களின் பொதுநாயகமாக, தமிழ் அன்னையின் கலைநாயகமாகத் திகழ்ந்த தவத்திரு தனிநாயகம் அடிகளார் 1980ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் முதலாம் நாள் இறையடி எய்தினார். தமிழ் வாழும் உலகெங்கும் தனிநாயகம் வாழும் என்பது உறுதி.

ஈழநாடு ஈன்றெடுத்த தமிழ்ப் புலவர்களாம் வசனநடை கைவந்த வல்லாளர் நாவலர், யாழ்நூல் தந்த முத்தமிழ்வித்தகர் விபுலாநந்தர், சுவாமி ஞானப்பிரகாசர் வழித்தோன்றலாய் தமிழ் வளர்த்த துறவியாக நம்மிடையே திகழ்ந்தார்.

தமிழ் வாழும் காலம் முழுவதும் தாம் வாழும் தனிப்பெருமை பெற்ற தனிநாயக அடிகள் மறைந்தும் மறையாப்புகழ் பெற்ற மாண்பினராய்த் தமிழ்த்தாயின் தவப்புதல்வன் ஆனார்.



# "புழுதி மண்"

திருமதி. உதயலதா நவநீசன்
யா / சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.

லண்டன் மாநகரின் புகழ்பூத்த மண்டபம். கண்கவர் விளக்குகள், பூக்களால் அலங்காரம்; பளிச்சிடும் வழுக்குத் தரை; அடுக்கப்பட்டிருந்த நாற்காலிகளைக் கணிசமான தொகையினர் அலங்கரித்துக் கொண்டிருந்தனர். எதற்காக இந்த அலங்காரம் ? இன்று இந்த மண்டபத்தில்தான் "புழுதி மண்" நூல் வெளியீடு நடை பெற இருக்கின்றது.

மேடையில் "புழுதி மண்" ஆசிரியர் கமலக்கண்ணன் அமர்ந்திருக்கிறார். பெயருக்கேற்றாற்போல் அழகான கண்கள். யாரையுமே வசீகரித்துவிடும் அந்தக் கண்களில் கவர்ச்சிக்கும் மேலாகக் கருணையே மண்டிக்கிடந்தது. கருணையுடன் இணைந்து, "புழுதி மண்" தந்த பெருமையும் இழையோடியது. கமலக் கண்ணன் நாற்பது களின் நடுப்பகுதியில் இருந்தாலும் அவர் தோற்றம் முப்பதுகளின் ஆரம்பத்தையே காட்டியது. முறுக்கான தேகம், சுருள் சுருளாக முடி. உறுதியான கை, கால்கள், முகத்திலே ஆண்மையின் கம்பீரம் தெளிவாகத் தென்பட்ட போதும் மென்மையான பெண்மைச் சாயலும் தெரியாமலில்லை. தமிழ்ப்பண்பாடு மாறாமல், கலாசாரம் பிறழாமல் வேட்டியும், சட்டையும் நெற்றியில் விபூதிக் கற்றையும், சந்தனம் குங்குமமுமாக அவர் அமர்ந்திருந்தார்.

கமலக்கண்ணன் தன் தாய்நாடு விட்டு வந்து லண்டனில் பிரஜாவுரிமை பெற்று நிரந்தரமாகத் தங்கிவிட்டபோதும் அவர் தன் நிலை பிறழாது இயல்பாகவே வாழ்ந்து வருகின்றார். அவர் தன் சொந்த மண்ணாம் நெல்லியடியை விட்டு லண்டனுக்கு வந்த போது எவ்வளவு தூரம் மனம் உடைந்து போனார் என்பது அவருக்குத் தான் தெரியும். தன் தாய்ப் பூமியைப் பிரியமனமில்லாது தாயைப் பிரிந்த சேயாகவன்றோ லண்டன் வந்து சேர்ந்தார். இந்த ஆற்றாமை, அழுகை எல்லாம் எழுத்தில் வடிப்பது இயலாத காரியம். அவரவர் அனுபவத்தில் தான் அதை உணரமுடியும்.

மங்கல விளக்கேற்றலுடன் "புழுதிமண்" நூல் வெளியீடு ஆரம்பமாகும். தலைவர் உரை கேட்டு நிகழ்வைச் சிறப்பிக்க கரவெட்டியிலிருந்து வந்து லண்டனில் வசித்துவரும் தமிழ்ப்பற்றாளர் சாமிநாத ஐயா அவர்கள் மங்கல விளக்கை ஏற்றி வைத் தார்கள். தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்து காதினுள் ஒலித்தபோது, கமலக்கண்ணனின் உடல் அணுக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு மகிழ்ச்சி ரேகை எட்டிப்பார்த்தது. அவரைப் பொறுத்தவரை தமிழ்த்தாய் வாழ்த்து என்பது செவிப்பறையை மோதிவிட்டுச் செல்லும் சாதாரண ஒலி அல்ல, அது ஒரு தெய்வீக

ராகம்; தெவிட்டாத கானம். கானம் காதில் சென்றபோது கண்களில் கண்ணீர் வடிந்து கன்னங்களில் கரைந்தோடியது. இன்று மட்டுமல்ல; எப்போதுமே, அவரது பாடசாலை பல்கலைக்கழகக் காலங்களில் கூடத் தமிழ் வகுப்பில் அமர்ந்திருக்கும்போது உடல் முழுக்கக் கற்றுக்கொண்டிருப்பதாய் உணர்வார். பல்கலைக் கழகத்திலும் தமிழைச் சிறப்புப் பாடமாய்ப் பயின்றார். இயல்பான அவரது தமிழ் ஆர்வத்திற்கு அந்தக் கற்கை தீனி போட்டது. தாய்மொழியை மட்டுமல்ல; தாய் நாட்டையும் உயிராக நேசித்தவர் அவர். தேசத்தின் மண் வாசனை இப்போதும் அவர் நாசிகளில் நிறைந்திருக்கின்றது. தன் தேசத்தின் சுகமான நினைவுகளில் மூழ்கியிருந்தவரைத் தலைவரின் உரை சுயநினைவுக்குக் கொண்டு வந்தது.

தலைவர் உரையாற்றினார். "இன்று நாம் நல்லதொரு நிகழ்விற்காக இங்கு கூடியிருக்கின்றோம். நம் நண்பன் கமலக் கண்ணன் அவர்களின் "புழுதி மண்" நூல் வெளியீடு நடைபெறப் போகிறது. நம் மதிப்பிற்குரிய ஐயா சொக்கலிங்கம் அவர்கள் நூலை வெளியிட்டு வைப்பார்கள். தலைவர் கூற, மேடை வந்தார். சொக்கலிங்கம் ஐயா. "புழுதி மண்ணை" வெளியிட்டு வைப்பதில் நான் பெருமகிழ்வு அடைகின்றேன். எம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினரால் நடாத்தப்படும் இந்நிகழ்வில் நெல்லி மைந்தன் கமலக்கண்ணனின் "புழுதி மண்" நம் கதை பல சொல்லும் காவியமாய் மிளிரப்போகிறது என்ற மகிழ்வோடு இதனை வெளியிட்டு வைக்கிறேன்" என்றார். நூலின் முதற் பிரதியை லண்டன் கிளையின் செயலாளர் பெற்றுக் கொண்டார். ஏனையவர்களின் கைகளிலும் "புழுதிமண்" ஒட்டிக் கிடந்தது. நூல் பற்றிய விமர்சனத்தை, சாமிநாத ஐயா சபையிலே ஆற்றத் தொடங்கினார்.

"புழுதி மண்" இந்தப் பெயரே எவ்வளவு அற்புதமாக, அவரின் எண்ணங் களையும், தேசப்பற்றையும் வெளிக் காட்டு கிறது என்றார். விமர்சனம் தொடர்கிறது. இந்தப் பெயர் பற்றி கமலக் கண்ணனிடமே விமர்சித்தவர்கள் பலர். பெயரை மாற்றுமாறு கேலி பண்ணினர். தன் தேசத்து மண்ணோடு ஒன்றிப் போயிருந்த அவரால் அதனை மாற்றத்தான் முடியுமா? சிந்தனைக் குருவி மீண்டும் தன் தேசம் நோக்கிச் சிறகு விரித்தது.

வடமராட்சியின் நெல்லியடியில் பிறந்தது வளர்ந்தவன் கமலக்கண்ணன். சிறுவனாக இருந்தபோதே இயற்கையை அதிகம் ரசிப்பான். பரந்த வானம், விரிந்ததரை பார்த்துப் பிரமித்துப் போவான். கைகளினால் மண்ணை அளைந்து விளையாடுவான். மழையின் ஒவ்வொரு துளியையும் மனதார ரசிப்பான். மழைநீர் மண்ணோடு கலக்கும் போது வருமே ஒரு வாசம். அதை நாசி முட்ட இழுத்துச் சுவைப்பான். அந்திப்பொழுது சாய்ந்து கொண்டிருக்கும் வேளை, சிவந்த வானம்; குளு குளு வீசும் கடற்காற்று; மலர்கள் பேசும் மௌன மொழிகளுக்கு நம் மனச் செவியைக் கொடுத்து வெளி உலகை மறக்கும் சுகம், உள்ளம் மலர்த்தோட்டம் எனும் தனியுலகத்துள் ஒடுங்கி அங்கேயே மலர்ச்சியுடன் சஞ்சரித்துக்கொண்டிருக்கும், ஜில்லென்று பூத்துச் சொரியும் புஷ்ப சௌந்தர்யத்தில் மனம் சுகம் கண்டு லயித்துப்போகும்; மலர்களின் சங்கத்தில் குழைந்து கமழும் கதம்ப சுகந்தத்தில் மனம் பொங்கிப் புளகாங்கிதம் கொள்ளும்; மாலைக் கதிரவனின் தங்கக் கிரணங்கள் பூஞ்செடி கொடிகளை அணைத்துத் தழுவி ரசவாதம் செய்யும் விந்தையில் சிந்தை மயங்கும்; மலர்களின் தூய வெண்மையும், சுகமான மென்மையும் எப்பொழுதும் உள்ளத்தைக் கவர்ந்து ஒரு தனியான இன்பத்தை அளித்துக் கொண்டிருக்கும். அந்த வேளைகளில் அம்மா செய்த பனாட்டையும், தேங்காய்ச்

சொட்டையும் தம்பி தங்கைகளோடு சுவைப்பான். புழுக்கொடியலை முறித்துதும்பு நீக்கி பனையின் கீழிருந்தே கொறிப்பார்கள்.

கமலக்கண்ணனுக்கு மூன்று தங்கையரும் ஒரு தம்பியும். என்ன தான் குறும்பும் துடுக்குத்தனமும் நிறைந்தவனாக இருப்பினும் குடும்பப் பொறுப்பும் அவனுக்கு இருந்தது. இளைஞனானபோது தன் கடமைகளை நன்கே உணர்ந்திருந்தான். ஒரு தமிழ் ஆசானாக வரவேண்டும் என்பதே அவனது ஆசையாக இருந்தது. இளைஞனான போது கமலக் கண்ணனுக்கும் அவனது தாய் மாமன் மகள் சங்கீதாவிற்கும் திருமணம் என்பது சிறு வயதிலேயே நிச்சயிக்கப்பட்டு விட்டது. இதயங்கள் இடம்மாற இணைந்து கொண்டார்கள்.

அவன் விரும்பிப் படித்த குறுந்தொகை இலக்கியத்தின் நாற்பதாவது செய்யுளை அடிக்கடி சங்கீதாவிற்குச் சொல்லுவான்.

**"யாயும் ஞாயும் யாராகியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்**
**நீயும் நானும் எவ்வழி அறிதும்**
**செம்புலப் பெயல் நீர்போல்**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"**

இதெல்லாம் சங்கீதாவிற்கு அவ்வளவாகப் புரியாது. அவள் கமலக் கண்ணனிடமிருந்து வேறுபட்ட இயல்புடையவள். சங்கீதாவிற்கு இரண்டு அண்ணன்களும் ஒரு தம்பியும் லண்டனில் வசிக்கிறார்கள். அவள் செல்லப்பிள்ளை. ஆடம்பரவாழ்க்கையை அதிகம் விரும்புபவள். வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் புதிய நாகரிகங்களை அன்றாடம் பிரதிபலிக்கும் ஒரு நிலைக்கண்ணாடி அவள். நகப் பூச்சுத் தொடக்கம் உதட்டுச் சாயம்வரை புதிய உற்பத்திகளின் சோதனைக்கூடம் அவள். கண்ணன் யாழ்ப்பாண நாகரிகத்தின் சிலை வடிவம் என்றால் சங்கீதா இறக்குமதி நாகரிகத்தின் தலைமகள். அவள் லண்டன் போக ஆசைப்பட்டாள். கண்ணனிடமும் இது பற்றிக் கதைத்தாள். அவன் முற்று முழுதாகவே மறுத்துவிட்டான். தாய் மண்ணை விட்டு ஒரு போதுமே வேறுநாடு செல்ல மாட்டேன். என் மண்ணை, என் மக்களைவிட்டு ஏனங்கே ? நம் மண்ணில் யாது குறை ? இங்கே வாழ முடியாதா? "ஓ இந்தப் புழுதி மண்ணில் நீங்களே கிடந்து புரளுங்கள்" உங்களால் நானுமல்லவா இங்கேயே இருக்க வேண்டியுள்ளது" அவள் அடிக்கடி வாசிக்கும் வரவேற்புப் பத்திரம் அது.

ஒரு சுப நாளில் கண்ணன் சங்கீதா திருமணம் நடைபெற்றது. கண்ணனின் தங்கைகள் வயதிற் சிறியவர்கள் என்பதாலும், சங்கீதாவின் பெற்றோரின் விருப்பத்தினாலும் இவர்களின் திருமணம் முதலில் நடந்தது.

கமலக்கண்ணன் விரும்பிய ஆசிரியப் பணி அவருக்குக் கிடைத்தது. மகிழ்ந்தார். அந்த வேளையில் நாட்டுப் பிரச்சினையில் ஒரு குண்டு வெடிப்பில் அவன் தந்தை அகப்பட்டு இறந்துவிட்டார். கவலையோடு வறுமையும் வந்து வாட்டியது. பொறுப்பு முழுதாய் அவன் தலைக்கு ஏறியது. தம்பி தங்கையின் படிப்பு, தங்கைகளின் திருமணம். அதுவும் சீதனச் சந்தையில் எத்தனை சிரமங்கள். கடமை அவனைப் பிடரியைப் பிடித்துத் தள்ளியது. சங்கீதாவின் நச்சரிப்பு இன்னும் அதிகமாகியது. கூடவே நாட்டுப் பிரச்சினையையும் காரணம் காட்டி குடும்பத்தினர் அவனை லண்டனுக்கு ஏற்றுமதி செய்யமுனைந்தார்கள். விடாப்பிடியாக நின்றனர். தந்தையை இழந்த குடும்பத்தின் வறுமைநிலை; தம்பி தங்கைகளின் எதிர்காலம்; நாட்டின் அமைதியற்ற சூழல்; மனைவி, அவள்

குடும்பத்தினரின் ஓயாத நச்சரிப்பு எல்லாமாகச் சேர்ந்து கமலக்கண்ணனை நெல்லியடி மண்ணிலிருந்து லண்டன் மாநகருக்குப் புலம்பெயர வைத்தது. தன் இலட்சியப் பணியையும், தாய் மண்ணையும் விட்டுப் பிரிந்து லண்டன் சென்றபோது, தன் உயிரையே விட்டு வந்தது போலிருந்தது. கடைசியாகத் தன் தேசத்தின் ஒரு பிடி மண்ணை ஆசையாக அள்ளி முத்தமிட்டுச் சென்றான்.

கமலக்கண்ணன் தற்போது லண்டன் பிரஜாவுரிமை பெற்ற ஒருவர். லண்டனில் வசித்தபோதும் கூட அவர் தன் கலாசாரம், பண்பாட்டை மறக்கவில்லை. மாறவில்லை. அது அவர் உதிரத்தோடு ஊறிப்போன விடயம். ஆனால்.... சங்கீதா ! அவள் மாறி விட்டாள். அங்கேயே அப்படி வாழ்ந்தவள் இங்கே சொல்லவா வேண்டும் ? பண்பாட்டைப் பஞ்சாய்ப் பறக்கவிட்டாள். கலாசாரம் காற்றோடு கலந்தது. நடை, உடை, பாவனை எல்லாம் லண்டனாகவே மாறிவிட்டது. ஏதோ கணவன் மனைவியாக வாழ்வது மட்டும்தான்.

வெளிநாடுகளில் உழைத்து வீட்டிற்குப் பணம் அனுப்பும் ஆடவர்களின் கஷ்டங்களை எத்தனை பேர் புரிந்து கொண்டிருக்கின்றார்கள். எத்தனை பேர் அவர்களின் கஷ்டங்களை உணர்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து காசு வந்தால் உழைப் பின் வலி தெரியாமலே ஆடம்பரமாய்ச் செலவு செய்வோர் பலர். அதிலும் அண்ணா வெளிநாட்டில் என்றால் தம்பியின் கொடி தலை தெறிக்கப் பறக்கும். மோட்டார் சைக்கிளில் நகர ராஜாவாக உலா வருவர். தம்பி நன்றாகப் படிக்கட்டும் என்று அண்ணன் கணனி அனுப்பினால் தம்பி பச்சைப்படமும், நீலப்படமும் பார்த்து சீரழிந்து போகிறான். குடும்பத்திற்காய்த் தம்மை உருக்கும் மெழுகுவர்த்திகளாய் அவர்கள் மாறிப்போவதை யார்தான் நினைத்துக் கொள்கிறார்கள்? கமலக்கண்ணன் வெளிநாட்டு ஆடவர்க்காய் மனதால் உருகினான். இங்கே சங்கீதா லண்டன் வீதிகளின் நாகரிக நங்கையாய் உலாப் போனாள். குடும்பம், வருமானம், பண்பாடு, கலாசாரம் என்பதையே அவள் பொருட்ப டுத்தவில்லை. இயல்பான மென்மையான அவரது சுபாவத்தால் அவர் அவர்களைக் கூடியளவு பொறுத்துப்போனார். ஆனால், அவரது குழந்தை ஆசையைக்கூட இப்போது நிறைவேற்ற அவள் தயாராக இல்லை. ஆளுமை வேண்டுமாம். சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டுமாம் என்ற போதுதான் அவரால் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மழலைப்பூ மணம் பரப்பினால் அதை விடவும் இன்பம் எங்கிருந்து கிடைக்கும் ? பொண்ணாக இருந்தும் அவள் அதை உணரவில்லை. அவர் என்ன சொல்லியும் அவள் கேட்பதாய் இல்லை. மாறாய் அவரையே கேலி செய்தாள். " லண்டனில் வசிப்பவர்கள் எவ்வளவு நாகரிகமாய் நடந்து கொள்கிறார்கள். நீங்கள் தான் இன்னும் மாறாமல் தமிழும், தாய்மண்ணுமாய் யாழ்ப்பாணத்தவராகவே இருக்கின்றீர்கள். புழுதியில் புரண்ட உங்களைக் கல்யாணம் கட்டியது என் தப்புத் தான்" "என் உடலில் தான் புழுதி. உன் உள்ளமே சகதியாகிவிட்டது." மனதில் நினைத்துக் கொண்டார். வெடித்தாள் அவள். வெகுண்டார் அவர். ஈற்றில் "உங்களோடு இனி என்னால் வாழ முடியாது. நாம் பிரிந்து விடுவோம். விவாகரத்திற்கு ஏற்பாடு செய்கிறேன்." என்று சங்கீதா சொன்ன வார்த்தைகள் அவர் காதுகளில் ஈயத்தைச் காய்ச்சி வார்த்ததுபோல் இருந்தன. என்ன கேட்டாள் ? விவாகரத்தா? நம் யாழில், நம் குடும்பத்தில் இது பற்றி இவ்வளவு சாதாரணமாகப் பேசுவோமா? நூறில்

ஒருவருக்குக்கூட இது நிகழ்வதில்லையே. அத்தகைய விரும்பத்தகாத விடயம் அது. என்னதான் கணவன் மனைவி உறவில் விரிசல் வந்தாலும்கூட எப்படியாவது சேர்ந்து வாழவேண்டும் என்று நினைப்பார்களே தவிர, விவாகரத்திற்கு முன்வர மாட்டார்கள். நம் மண்ணைப் பொறுத்தவரை அது ஒரு தீண்டத்தகாத வார்த்தை. எங்கேயோ எப்பவோ ஒன்றுதான் நடக்கும். ஆனால், சங்கீதா எவ்வளவு இயல்பாகக் கேட்டு விட்டாள். எப்படி இதைக் கேட்கலாம். எத்தகைய சூழலிருந்து வந்தவர்கள் நாம்! இந்தச் சூழல் சங்கீதாவை இவ்வளவு தூரம் மாற்றிவிட்டிருக்கின்றது. அவர் என்ன சொல்லியும் அவள் மாறவில்லை. தன் சுதந்திர வாழ்விற்கு இதுதான் நல்ல முடிவென்று தீர்மானித்துக் கொண்டாள். தீர்மானம் நிறைவேறியது.

கமலக் கண்ணன் தனித்தார்; தவித்தார். வரம்பற்ற தன் சோகங்களுக் கெல்லாம் வார்த்தைகளில் வடிகால் தேடினார். மண்ணின் தாகமும் மனதின் சோகமுமாய்ப் புளுங்கும் மன உணர்வுகளைப் புழுதியில் புரட்டி எடுத்தார். புரட்டிய வார்த்தைகளின் புலரியாய், "புழுதி மண்" அவன் கைகளில் மழலையாகச் சிரித்தது. அதில் அவர் மகிழ்ந்தார் ; மலர்ந்தார்.

"கடவுள் கண்ணன் போதனையாக பகவத்கீதை; நம் கமலக்கண்ணன் சாதனை யாக "புழுதி மண்" விமர்சகரின் ஆய்வுச் சொற்கள் கமலக்கண்ணனின் காதுகளில் ஒலித்து, சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. சிறகு விரித்துப் பறந்து தன் சிந்தனைப் பறவையின் சிறகுகளுக்குத் தடைபோட்டார். தலைவர் அழைக்க, "புழுதி மண்" ஆசிரியராக ஏற்புரை வழங்க மேடையில் ஏறுகிறார் கமலக் கண்ணன்.

சிறுகதை

# மாற்றங்கள்

- ஆக்கம் - திருமதி யசிந்தா இரவீந்திரன்
மு/ தேராவில் தமிழ்வித்தியாலயம், விசுவமடு.

"இரண்டு மனம் வேண்டும். இறைவனிடம் கேட்டேன். நினைத்து வாழ ஒன்று மறந்து வாழ ஒன்று" பேருந்தில் பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது. என்மனம் பாடல் வரிகளில் ஆழமாகப் பதிந்திருந்த வேளையில் "அண்ணை இறக்கம். சுண்டிக்குளம் சந்தி இது தானே? இறக்கம் அண்ணை" குரல் வந்த திசையைத் திரும்பிப் பார்த்தேன்.

தஞ்சாவூர்ச் சிற்பம்போல அழகான மங்கை. எலுமிச்சம் பழத்தை ஒத்த நிறம். கரு மேகத்தைப் பழிக்கும் சீவி விட்ட கூந்தல். வார்ந்தெடுத்த ஈர்க்கைப்போல மெல்விய உடலமைப்பு, சந்தன நிறத்தில் சேலைய ணிந்திருந்தாள். நெற்றியில் கீறிவிட்டாற் போல் விபூதிக்குறியும் பொட்டும். எதையோ சாதிக்க வேண்டும் என்ற வெறி கண்ணில் தெரிந்தது.

பஸ்வண்டி நின்றது. ஆனால் பஸ் வண்டியைத் துரத்தி வந்த புழுதி வேகமாக உள்ளே நுழைந்தது. இவ்வளவு அழகான பெண் ஏன்தான் தலைக்கு செம்பாட்டு நிறத்தில் சாயமடித்திருக்கிறாள். நான் என் மனதுக்குள் முணுமுணுத்தேன். அப்போதய இளசுகளின் மையல்தான் இது. அவரவர் விருப்பம்தானே; மீண்டும் என்மனம் கூறிக்கொண்டது. அவள் என்னைப் பார்த்துச்சிரித்துக்கொண்டே "சேர்! நான் நந்தனின் தங்கை சயந்தவி. நீங்க வசந்தகுமார் சேர் தானே? நான் முதல் நியமனம் நெத்தலியாறு வித்தியாலயம் சேர்." என்றார். "ஆ அப்படியா"? என்று கூறும்போதே இறங்கிவிட்டாள். அப்போதுதான் பார்த்தேன் அவளது தலை புழுதியால் நிறைந்திருந்ததை நான் தப்பாக நினைத்து விட்டதை உணர்ந்தேன்.

பேருந்து திரும்பவும் விசுவமடுச் சந்தியில் நின்றது. "டீ குடிக்கிறவர்கள் இறங்குங்கோ; வேகமாகக் குடித்துவிட்டு பத்து நிமிடத்தில் வந்திடுங்கோ பள்ளிக்கூடக்காரர் போகவேணும்." இது சாரதியின் வேண்டுகோள். காலையில ஐந்து முப்பதுக்கு வெளிக்கிட்ட பேருந்து எனக்கும் பசிக்கிற மாதிரித்தான் இருந்தது. கடைக்குள் உள்ளிட்டேன். நல்ல வெங்காய வடைக்கும் பசும்பால் டீக்கும் இன்னுமொரு வடை சாப்பிட வேண்டும்போல் இருந்தது. "எல்லாரும் வந்தாச்சா" நடத்துனரின் குரல் கேட்கவே ஓடிப்போய் பஸ்ஸில் ஏறிக் கொண்டேன். வீட்டுச்சாப்பாடு உண்டது போல் ஓர் உணர்வு. காசும் குறைவு. இங்கு வரத்தானே நான் பின்நின்றேன். மனம் என்னைக் குற்றம் சாட்டியது.

பஸ்வண்டி தேராவில் வீதியில் திரும்பியது. ஆவலுடன் வெளியே பார்வையை விட்டேன். வீதியின் இருமருங் கிலும் கற்பகத்தருக்கள் நகரக் காவலர்கள் நிற்பதுபோல் காட்சிதந்தன. தூரத்தே பாடசாலைச் சீருடையுடன் மாணவர்கள் தென்படவே அப்பாடா... பாடசாலை வந்து விட்டது என்ற நிம்மதியுடன் கைப்பையைத் தூக்கினேன். ஆசிரியர்கள் பலர் முண்டி யடித்துக்கொண்டு இறங்கினர். அப்போது

தான் மு / பாரதி வித்தியாலயம் என்ற பெயர்ப் பலகையைப் பார்த்தேன். திரும்பவும் அமர்ந்து கொண்டேன்.

பாரதி வித்தியாலயத்தைக் கடந்து இப்போது பஸ்வண்டி சென்றுகொண்டிருந்தது. பெரிய பாலைமரங்களும் முதிரை மரங்களும் புழுதியில் நீந்தின. கிடங்கிலும் மேட்டிலும் பஸ்வண்டி குலுங்கியது. கெட்டியாக இறுக்கிப் பிடித்துக்கொண்டிருந்தேன். வீதியே இப்படியிருக்கிறதே பாடசாலை எப்படியிருக்குமோ? எப்படித் தான் இந்தப்பாடசாலையில் கற்பிக்கப் போறேனோ தெரியவில்லை. மனம் பேசியது. பாடசாலை வாசலில் பஸ்வண்டி நின்றது.

கடந்தகாலப் போர் அனர்த்தத்தின் போது பாடசாலையும் சேதங்களுக்குட் பட்டிருந்தது தெரிந்தது. தறப்பாள்கூரைகள் பாடசாலையை அழகுபடுத்தின. நித்திய கல்யாணி மரங்கள் வாசலிலே பூச்சொரிந்த வண்ணமிருந்தன. அலுவலக வாசலிலே நின்றவர் "வாங்கோ சேர்" என்றார். அவர் அதிபர்தான்; ஒருகால் செயற்கைக்கால். ஒருகணம் பாடசாலையை என் கண்கள் நோட்டமிட்டன. ஆரம்பப்பிரிவு ஆசிரியர் கள் தங்கள் மாணவர்களுடன் விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

அலுவலகத்தினுள் நுழைந்தேன். ஒரு பெண் ஆசிரியை மூன்று வயதுப் பிள்ளையைக் கையைப் பிடித்துக்கொண்டு அதிபரிடம் அனுமதியைப் பெற்று வெளியே சென்று கொண்டிருந்தார். "இந்த ஆசிரியரின் கணவர் யுத்தத்தின்போது காயப்பட்டவராம். காணவில்லையாம். பிள்ளையைப் பார்ப்பதற்கு அவவுக்கு யாருமில்லையாம். அதுதான் பக்கத்தில் சோழர் இல்லத்தில் பிள்ளையை விடப்போகிறா" அதிபர் கூறியதைக் கேட்டு மனம் வருந்தினேன்.

"சேர் இன்றைக்கு எத்தனை கிலோ அரிசி போடுறது" வெள்ளைச் சேலையுடன் வந்த அம்மா அதிபரிடம் கேட்பதைப் பார்த்து இவவின் கணவர் இல்லை என்பதை உணர்ந்து கொண்டேன். "சேர், நீங்கள் எங்கள் பாடசாலைக்கு வந்தது எனக்கு மிகவும் சந்தோசம். கணித ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்பிவிட்டீர்கள்" பதிலுக்கு நானும் சிரித்துக்கொண்டே தலையசைத்தேன். யாரைப்பிடித்தாவது ஒருமாதத்துக்குள் யாழ்ப்பாணம் போயிட வேணும். மனம் கூறிக்கொண்டேயிருந்தது) "சேர், டீ" ஒரு கண்ணையிழந்த மாணவச் சிறுமி டீயுடன் நின்றிருந்தாள். "நன்றி; பிள்ளைக்கு என்ன பெயரம்மா" "பிரியா" "அப்பா என்ன செய்யிறார்" அம்மாவும் அப்பாவும் யுத்தகாலத்தில் இறந்து விட்டார்கள்." கூறும்போதே குரல் கரகரத்தது. "சரி போய் வாங்கோ" என்றதும் மாணவி சென்று விட்டாள். ஆனால் எனது கண்களில் நீர் நிறைந்துவிட்டது. நான் என்ன வேற்றுக்கிரகவாசியா? அப்போதுதான் பார்த்தேன். அதிபரின் கண்களும் நீரால் நிறைந்திருந்தது.

"சேர்! என்ன செய்வது? இந்தப் பிரதேசத்தில் யுத்தகாலப் பாதிப்புக்கள் அதிகம். எனக்கும் வீட்டுக்குப் பக்கத்தில் பாடசாலையுள்ளது. கேட்டால் மாற்றம் கிடைக்கும். ஆனால் இந்தப்பாடசாலைக்குத் தான் எங்கள் சேவை தேவை என்பதை உணர்ந்தேன். இங்கு ஆசிரியர்கள் குறைவு அதனாலேதான் இன்று உங்கள் வரவில் என் மகிழ்வு இரட்டிப்பாகியுள்ளது" என்று உணர்வுபொங்கக் கூறினார் அதிபர். பேசிக்கொண்டே ஒவ்வொரு வகுப்பறையையும் காட்டும்போது "புதுசேர் வந்திருக்கிறார், புதுசேர் வந்திருக்கிறார்" என்று மாணவர்கள் ஆரவாரப்படுவது தெரிந்தது.

அதிபர் காட்டிய வகுப்பறைக்குச் சென்றேன். பக்கத்து வகுப்பறை மாணவர்கள் "சேர்; எங்கள் வகுப்புக்கு வாங்கோ, எங்கள் வகுப்புக்கு வாங்கோ" என்று ஆதங்கப் பட்டனர். அமைதியாக இருக்கும்படி கையால் சைகை செய்துவிட்டு தரம் ஆறு வகுப்பறையில் மாணவர்களுடன் உரையாடினேன். பட்டணப்பாடசாலையின் மாணவர்களையும், இவர்களையும் ஒப்பிட்டுப்பார்த்தேன். பைபிள் வாக்கியம் ஒன்று ஞாபகத்திற்கு வந்தது. "வைத்தியன் நோயற்றவனுக்கன்று நோயுற்றவனுக்கே". கணித பாடத்தில் சில விடயங்களைச் செய்வித்தேன். மாணவர்களை இனங்கண்டு கொண்டேன். மாணவர்களுக்கு மேலதிக செயற்பாடுகள் தேவை என உணர்ந்தேன். தினமும் பஸ்பிரயாணம் செய்யாமல் இவர்களோடு கூடுதலான நேரத்தைச் செலவிட முடிவெடுத்தேன்.

ஆசிரியர்களோடு உரையாடினேன். நெத்தலியாறுப் பாடசாலையும், பாரதி பாட சாலையும், தேராவில் பாடசாலையும் சகோதரப் பாடசாலை என்பதை ஒரு ஆசிரியர் கூறினார். இதைக்கேட்டதும் சயந்தவியின் உதவியையும் பெறலாம். பாடசாலையை நன்றாக வளர்க்கலாம். கால் ஏலாத அதிபருக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றெல்லாம் என் கற்பனை, சிறகு கட்டத்தொடங்கியது. "வாழும் போது செத்து செத்துப் பிழைப்பவன் மனிதனா? வாழ்ந்த பின்னும் பேரை நாட்டி நிலைப்பவன் மனிதனா?" ஐஸ்கிறீம் விற்பவரின் பாட்டு காதில் நுழைந்தது. எனது ஊக்கம் பாடல் வரிகளைக் கேட்டதும் இரட்டிப்பாகியது. இன்று நெத்தலியாறு பாடசாலை முடிந்ததும் நெத்தலியாறு அதிபரோடு கதைத்து சயந்தவி டீச்சர் உதவியைப் பெறவேண்டும் என்று முடிவெடுத்தேன். செயலில் இறங்கினேன்.

சயந்தவி டீச்சர் இரும்பை ஈர்க்கும் காந்தமாக என்னைப் பார்க்கிறாள். அது ஆபாசப் பார்வையல்ல. உணர்வுகளின் உந்துதலல்ல. ஆச்சரியப் பார்வை. இருவரும் தெளிவான முடிவுகளோடு உரையாடினோம். "சேர் என்றுமே என் உதவிகள் உங்களுக்கு" அவள் கூறிய வார்த்தைகளின் களிப்போடு என் சேவை தொடர்கிறது.



சிறுகதை

# மனங்கொண்ட மாங்கல்யம்

திருமதி. ஆனந்தராணி நாகேந்திரன்
ஆசிரியை

நடையில் ஒரு சறுக்கல் தென்படவே காலில் மாட்டியிருந்த பாட்டாவைப் பார்த்துக் கொண்டார் சாமிநாதன். பாட்டாவின் குதிக்கால் பக்கம் தேய்ந்து பிறைவடிவத்தை ஒத்துக் காட்சி தந்தது. அதனைப் பார்த்த சாமிநாதனின் மனமும் கரைந்து கனக்கத் தொடங்கியது.

மூன்று பெண்பிள்ளைகளின் தோற்றமும் கண் எதிரே மும்மூர்த்திகளின் தோற்றம்போல் காட்சி தந்தது. ஒரு பெண்பிள்ளையைப் பெற்றவர்களே வரன் தேடுவதில் சிரமத்தை எதிர்நோக்கும் இக் காலத்தில் மூன்று பெண்பிள்ளைகளின் தந்தையின் மனநிலை சொல்லவும் வேண்டுமா?

மாப்பிள்ளை தேடும் படலத்தின் உச்சக்கட்டத்தில் தான் பாட்டா தன் களையை இழந்திருந்தது, என்பது அவர் மட்டும் அறிந்த உண்மை. காதலித்து திருமணம் செய்யும் பிள்ளைகளைப் பெற்றோர் திட்டித்தீர்க் கிறார்கள். ஒதுக்கி வைக்கிறார்கள். ஆனால் அவர்கள் பெற்றோருக்கு ஒரு விதத்தில் நல்லதைத் தானே செய்கிறார்கள். நண்பர்கள் கூடும் இடத்தில் நண்பன் சந்திரசேகரனுக்கும் பேரம்பலத்திற்கும் இடையில் இடம்பெற்ற உரையாடல் ஒன்று சாமிநாதனின் நினைவுக்கு வந்தது.

"பேரம்பலம் அண்ணை! உங்கடை பெட்டையள் கெட்டிக்காரியள். உங்களுக்கு ஒரு செலவோ அலைச்சலோ இல்லாமல் காரியத்தைச் சாதிச்சிட்டுதுகள். நீங்களும் எந்தவிதக் கவலையோ பொறுப்போ இல்லாமல் எவ்வளவு சந்தோசமாய் இருக்கிறியள். சாமிநாதனைப் பார். பிள்ளையள் குமராகுறதுக்கு முன்னம் இருந்த இருப்பும் இப்ப இருக்கிற இருப்பும். சோர்ந்து வடிஞ்சு போயிருக்கிறான். பாவம்".

நினைவுகளைச் சுமந்துகொண்டு படலையைத் திறந்தவரை வாசலில் வர வேற்றாள் செண்பகமாலை.
"என்னப்பா! காயோ பழமோ"

நெஞ்செல்லாம் படக் படக் என அடிக்கப் பதட்டத்துடன் வினவினாள் செண்பகமாலை. பிள்ளைகளும் வெளியே வந்து எட்டிப் பார்த்துக் கொண்டார்கள். காய் என்று சொல்ல மனம் தயங்கியது. செண்பகமாலை தலையில் கைவைத்து புலம்பத் தொடங்கி விடுவாள். அதனால் அதனை வெளிக்காட்டாமல்

"பழம் தான் உள்ளை நடவப்பா"
இறுகிப் போயிருந்த மனதைத் தளர்வு படுத்தியவராகக் கூறினார் சுவாமிநாதன். மூன்று பெண்பிள்ளைகளின் வதனங்களும் வர்ண மின் குமிழ்களுக்கு மின்சாரம்

பாய்ச்சியது போல் ஒரே நேரத்தில் ஒளியைப் பெற்றன. ஒரு பெண் வெளியேறினால் தான் மற்றைய இருவருக்கும் சுபீட்சம் என்று சொல்லி விட்டார் குறிப்பு பார்த்த சாத்திரியார். சாண் ஏற முழம் சறுக்கும் என்பார்கள். அது போல் பொருத்தம் கூடும் சம்பந்தங்கள் எல்லாம் தொழில் ஏற்றத் தாழ்வில் கலைந்து போய்விட்டன.

ஏதோ மூன்று பெண்களையும் படிக்க வைத்து தொழில் ஒன்றையும் மூவருக்கும் பெற்றுக்கொடுத்துவிட்டார் சாமிநாதன். அந்த வகையில் அவர் பாக்கியசாலி. அது தவிர மூவரும் அழகிலும் குறைந்தவர்களில்லை. மூத்தவளின் வயது கடுகதியில் ஏறிக்கொண்டிருந்தது. வரம்புயர நெல் உயரும் என்பது போல் மூத்தவளின் வயது ஏற ஏற அடுத்தவர் களின் வயதும் அதிகரித்துக் கொண்டிருந்தது.

கால் கழுவுவதற்காக நீர் நிறைந்த செம்புடன் வந்துநின்றாள் மூத்த பெண் ஹேமவதி. அவளது கூர்மையான விழிகள், தந்தையின் முகவோட்டத்தைத் துளாவிக் கொண்டிருந்தன. அதனைக் கவனிக்கத் தவறவில்லை சாமிநாதன்.

கைகால் அலம்பிவிட்டு உட்சென்ற வரைக் குளிர்மைப்படுத்த தேசிக்காய்த் தண்ணியைக் கொண்டுவந்து நீட்டினாள் இரண்டாவது மகள் சேனாவதி. அவளது வதனமும் வழமையை விட சற்று பொலிவு பெற்றிருந்தது. சாமிநாதனுக்கு தர்மசங்கட மாகிப் போய்விட்டது. அமர்ந்தபடி வாங்கிப் பருகிக் கொண்டார்.

சிறிது நிமிடம் கழிய தந்தையின் சாரத்தையும் பெனியனையும் கொண்டு வந்து நீட்டினாள் மூன்றாவது பெண் ரூபவதி. கடைக்குட்டி என்பதால் தந்தையைப் பார்த்து செல்லமாகச் சிரித்துக் கொண்டாள்.

திடீரென வாயிலில் புறோக்கர் சீனிவாசனின் அழைப்புக்குரல். சாமிநாதன் மனமகிழ்வுடன் வரவேற்றுக் கொண்டார். சால்வைத் தலைப்பால் முகத்தில் விசிறியபடி சாமிநாதனுக்கு அருகில் இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டார் சீனிவாசன்.

பங்குனிமாத வெய்யில் உச்சியைப் பிழந்தது. இக்காலப்பகுதியில் தான் திருமணங்களும் களைகட்டும். ஊருக்கு ஒரு திருமணமாவது நடந்தேறி விடும். சாமிநாதனே பேச்சைத் தொடங்கினார்.

"என்ன புறோக்கர்? ஏதாவது நல்ல செய்தி" சாமிநாதனின் தொனியில் ஒரு அவசரம் தெரிந்ததை புறோக்கர் கவனிக்கத் தவறவில்லை.

"எல்லாம் நல்ல சேதி தான். ஆனால் முடிவெடுக்க வேண்டியது உன்னுடைய பிள்ளைகள்" பீடிகை போட்டார் சீனிவாசன். சாமிநாதனின் முகத்தில் ஆச்சரியக் குறி. "ஒரு குறிப்பு நல்லாய்ப் பொருந்தியிட்டுது. சீதனம் வரதட்சணை எண்டு அவையள் ஒண்டும் எதிர்பார்க்கையில்லை..." சீனிவாசன் இழுக்க

"உத்தியோகம் பார்க்கிற பிள்ளை யைக் கொடுக்கிறம். பிறகேன் சீதனம், வரதட்சணை?" மனம் விரக்தியில் உழல சாமிநாதனின் வார்த்தைகள் குறுக்கீடு செய்தது.

"அப்படிச் சொல்லக்கூடாது சாமிநாதன், உத்தியோகம் பார்க்கிற பிள்ளை யளுக்குத்தான் நிறைய சீதனம் கொடுத்து மாப்பிள்ளை தேடுதுகள். எடுக்குதுகள். உனக்கு நான் சொல்லித் தெரிய வேண்டிய தில்லை.

"ஓம் அண்ணை, நீங்கள் சொல்லுற தும் சரிதான். எங்கடை அயலில் இப்ப ஒரு சம்மந்தம் கைகூடினது இரண்டு பேரும்

டாக்குத்தர். 20 லட்சம் ரொக்கப்பணம். பெரிய வீடுவளவு. 50 பவுண் நகை எண்டு பெரிய அட்டகாசம்"

சாமிநாதனின் மனைவியின் அனுசரனை புறோக்கருக்கு சாதகமாக அமைந்தது.

"சரி, சரி விசயத்துக்கு வாருங்கோ." துரிதப்படுத்தினார் சாமிநாதன்.

"என்ன... பொடியனுக்கு வேலை இல்லை..." புறோக்கர் வார்த்தைகளை நீட்டிமுழக்க.

"என்ன! வேலையில்லையோ? எழும்பும் சீனிவாசன் எழும்பும். நடையைக் கட்டும். சாமிநாதனின் வார்த்தைகள் காரசாரமாக ரீங்காரமிட்டது.

"சாமிநாதன் அவசரப்படாதை. பொடியன் அரசாங்க வேலை இல்லையே தவிர கை நிறையச் சம்பாதிக்கிறான். மெக்கானிக் காய் இருக்கிறான். அது தவிர மெக்கானிக் வேலை கேவலமானதில்லை. இந்தக் காலத்துப் பிள்ளையளுக்கு நல்லது எது? கெட்டது எது? எண்டு வடிவாத் தெரியும். நாங்கள் ஒண்டும் விளங்க வைக்கத் தேவையில்லை எல்லாம் நல்ல பொருத்தம். இப்பிடி ஒரு பொருத்தம் நான் இதுவரை கண்டதில்லை. பிள்ளையள் உங்கடை விருப்பம் என்ன?" முற்றுப்புள்ளி வைத்தார் சீனிவாசன்.

சிறிது வினாடிகள் அங்கே மௌனம் ஊசலாடியது. ரூபவதி தன்னைத் தயார்படுத்திக் கொண்டாள்.

"அப்பா! ஏன் மெக்கானிக் தொழிலைக் கேவலமாகப் பார்க்கிறியள். அவர்கள் அணிந்து வேலை செய்யும் ஆடைகள் தான் அழுக்கே தவிர அவர்கள் செய்யும் தொழில் அழுக்கில்லை. டாக்டர், எஞ்சினியர் என்று படித்தவை செய்ய முடியாத சாதிக்க முடியாத காரியங்களை இவர்கள் சாதிக்கிறார்கள். மெக்கானிக் எண்டு ஒரு தொழிலாளி இல்லை எண்டால் நாங்கள் பாவிக்கிற அத்தனை வாகனங்களுக்கும் ஒரு பிழை வந்தால் தூக்கி வீசவேண்டியது தான்."

தைரியமாகக் கூறி ரூபவதி தொடர்ந்து ஒரு கதையினைக் கூறத் தொடங்கினாள்.

படித்த ஒரு மேதையைப் படிக்காத ஒரு சிறுவன் தோணியில் ஏற்றிச் சென்று கொண்டிருந்தான். பொழுதினை எவ்வாறு கழிப்பது என்று சிந்தித்த மேதை, சிறுவனைப் பார்த்து,

"தம்பி நீ இராமாயணம் படித்திருக் கிறாயா?" என்றாராம். சிறுவன் முழிகளைப் பிதுக்கி உதட்டினால் மறுப்பைத் தெரிவித்தான்.

"வாழ்க்கையில் கால்பகுதியை இழந்து விட்டாயே தம்பி." பெரியவர் சலிப்புடன் கூறிவிட்டு, "சரி நீ மகாபாரதம் படித்திருக்கிறாயா" என்றாராம். மீண்டும் சிறுவன் உதட்டினால் மறுப்பைத் தெரிவித்தான்.

"தம்பி! நீ வாழ்க்கையில் அரைப்பகுதியை இழந்துவிட்டாய். சரி போகட்டும். உனக்கு ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி பாடிய ஔவைப் பாட்டியைத் தெரியுமா" என்றாராம் பெரியவர். சிறுவன் முகத்தில் எரிச்சல் பற்றிக் கொண்டது. "பெரியவரே இந்தத் தோணியை ஓட்டுவதைத் தவிர எனக்கு எதுவுமே தெரியாது. என்னை விட்டு விடுங்கள்."

"தம்பி நீ வாழ்க்கையில் முக்கால் பகுதியை இழந்து விட்டாயே" என்று பூரித்துக் கொண்டாராம் பெரியவர்.

"சரி பெரியவரே நான் ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்கிறேன். இந்தப் பகுதியில் ஆழம் அதிகம். தோணி கவிண்டால் உதவிக்கு ஒருவரும் வரமாட்டார்கள். உங்களுக்கு நீந்தத் தெரியுமா?" என்றானாம். பெரியவரின் முகத்தில் கலக்கம். வியர்வைத் துளிகள் பொட்டுக்களாக காட்சியளித்தன.

"என்னப்பா சொல்கிறாய்"

"பெரியவரே நீங்கள் வாழ்க்கையின் முழுப் பகுதியையும் இழந்து விட்டீர்கள்."

ரூபவதியின் குட்டிக் கதையைக் கேட்டு எல்லோரும் விழுந்து விழுந்து நகைக்கத் தொடங்கினர். தந்தைக்கு சிரிப்பு முட்டி நெஞ்சை அடைக்கத் தொடங்கியது. சிரிப்பின் கனதியால் சிலர் நெஞ்சைப் பற்றிக் கொள்ள சிலர் வயிற்றைப் பொத்திக் கொண்டார்கள். ரூபவதி விடயத்திற்கு இறங்கினாள்.

"அப்பா! ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திறமை இருக்கிறது. படித்துத் தான் உலகை அறியவேண்டும் என்றில்லை. உலகப்படிப்பு நிறைய இருக்கிறது. அதைக் கற்றுக்கொண்டாலே பல அறிவுபூர்வமான விடயங்களை அறிந்து சாதனைகள் படைத்துக்கொள்ளலாம். அதனை அரச உத்தியோகம் மாத்திரம் தீர்மானித்துக் கொள்ளாது."

"பிறகென்ன இதை விட ஒரு நிரூபணம் தேவையில்லை. என்ன சொல்லுகிறாய் சாமிநாதன்"

சாமிநாதன் முகத்தில் பூரண தெளிவு. ஆனாலும் உடனடியாக ஒத்துக்கொள்ள விரும்பாதவராக

"என்ன செண்பகமாலை, நீ என்ன சொல்லுகிறாய்?" மனைவியின் தலையில் பாரத்தைப் போட்டுவிட்டார் சாமிநாதன்.

"கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமோ. பிள்ளைதான் தெளிவாகப் புரியவைத்துவிட்டாளே. வாழவேண்டிய இளம் பிள்ளையளே இதை ஏற்றுக் கொள்ளயிக்கை நாங்கள் ஏன் தடை விதிப்பான். எல்லோரும் உத்தியோகம் பார்த் தால் மற்றைய வேலைகளை ஆர்செய்யிறது. உத்தியோகஸ்தர்கள் சம்பாதிக்கிற பணம் மூக்குக்கை விட்டுதும்மக்காணுமே."

பெருமூச்செறிந்தாள் சாமிநாதனின் மனைவி. "சரி புறோக்கர் மெக்கானிக் சம்பந்தத்தை முடிச்சிடும்" சாமிநாதன் முடிவுக்கு வர புறோக்கர் மனநிம்மதியுடன் விடைபெற்றுக்கொண்டார்.

# கணனி யுகத்தில் தமிழ்

திருமதி க. ஸ்ரீதரன், ஆசிரியர்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து
சங்கத் திருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்தது"

என வரந்தருவாரால் சிறப்பிக்கப் படும் நம் தமிழ் மொழியானது ஈராயிரம் ஆண்டுகள் தொன்மை வாய்ந்த இலக்கியச் செழுமங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. உலகில் வழங்கும் செம்மொழிகளில் ஒன்றாக விளங்கும் நம் அரும் பெருஞ் சொத்தான தமிழ்மொழி ஏனைய செம்மொழிகளான சீனம், ஈபுறு, இலத்தீன் போன்றவற்றைக் காட்டிலும் எண்ணிக்கையில் அதிகமானதும் காத்திரமானதுமான இலக்கியங்களைக் கொண்டு மிளிர்வதாக ஆராய்வாளர்கள் கூறுகின்றனர்.

சங்ககாலம் தொட்டு இன்றுவரையான காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்களை நோக்குகின்றபோது "கத்து கடல் பறித்தும், கல்லாதார் தீவைத்தும், குத்து வடமொழியின் கூர்பட்டும் "அழிந்தொழிந்து போகாது "கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும்" தனது உதரத்திலே தோன்றி வளர்ந்து கிளைமொழிகள் பெற்று மலர்ச்சியுற தான் தனது கவின் குன்றாது சீரிளமைத் திறனுடன் மிளிர்கின்றது.

இலக்கணத்துடன் கூடிய இயற்றமிழ், இசையுடன் கூடிய இசைத்தமிழ் அபிநயத்துடன் கூடிய நாடகத்தமிழ் என முத்தமிழாகி முடியாட்சி செய்த தமிழானது காலம் தோறும் தமிழ் என இன்று பரிணாமம் பெற்று வளர்ந்துள்ளது. அறிவியற் தமிழ் கணனித் தமிழ், இணையத்தமிழ் என்ற பல்துறை வளர்ச்சிகளை நோக்குகின்ற போது பாரதி கூறியது போல "மெல்லத் தமிழ் இனிச் சாரும் அந்த மேற்கு மொழிகள் அவனியில் ஓங்கும்" என்ற நிலை எம் தாய் மொழிக்கு நேராது என்று நம்ப முடிகின்றது.

சைவமும் தமிழும் நமதிரு கண்கள் என ஆறுமுக நாவலர் சமயப் பிரசங்கம் செய்து வந்த அன்றிலிருந்து இன்றுவரை அவ்விரண்டுமே நமதிரு கண்கள் என நாம் பலரும் கூறக் கேட்டிருக்கின்றோம். நாமும் அவ்வாறே நம்பி வந்திருக்கின்றோம். ஆனால் அண்மைக்காலங்களில் கல்வியியலாளர்கள் கலந்து கொள்ளும் அரங்குகளிலே ஆங்கிலமும் தகவல் தொழில் நுட்பமுமே நமதிரு கண்கள் என அறைகூவல் விடுப்பதை நமது காதுகளால் கேட்டிருக்கின்றோம். மேலும் 2011 ஆம் ஆண்டு ஆங்கிலத்திற்கும் தகவல் தொடர்பாடலுக்கும் உரிய ஆண்டாகவே அரசாங்கத்தால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய தகவல்களை நோக்குகின்றபோது பாரதியின் கூற்று பலித்து விடுமோ என ஒருகணம் அச்சம் ஏற்படுகின்றது. நம்மவர்கள் புலம்பெயர்ந்து வேற்று நாடுகளில் வேற்று மொழிகளுக்குரியவர்களாக மாறிச் செல்ல பாரதி கூறிய மேற்கு மொழிகள் தான் அவனியில் ஓங்குமோ என்ற பயம் நம் உள்ளத்தில் ஏற்படுகின்றது.

தமிழ் ஆர்வலர்களின் உள்ளத்தில் எழுந்த அச்சத்தைப் போக்குமுகமாக இன்று இணையத்தில் தமிழ் மொழி இடம் பிடித்து

விட்டது. "பழையன கழிதலும், புதியன புகுதலும் கால வழுவில" என்ற நன்னூலார் கூற்றுப்படி இன்றைய கணனியுலகிலே இணையத்தில் தமிழ் இரண்டறக் கலந்துள்ளது. இதுவரை 9 இணையத் தமிழ் மாநாடுகள் நடைபெற்றுள்ளமையும் 10ஆவது இணையமாநாடு ஆனி மாத நடுப்பகுதியில் அமெரிக்காவில் நடைபெறவுள்ளமையும் பத்திரிகைகள் வாயிலாக நாம் அனைவரும் அறிந்த விடயமே.

இணைய மாநாடுகள் நாடுகள் தோறும் இடம் பெறுவதால் பல்வேறு நாடுகளிலும் உள்ள தமிழ் அறிஞர்கள் தமிழர் அல்லாத தமிழ் அறிஞர்கள், ஆர்வலர்கள் ஒன்றுகூடி தமிழ்மொழி பற்றி ஆராய் கின்றனர். இத்தகைய மாநாடுகளில் நமது தெய்வத் தமிழ்மறையான திருக்குறள் போட்டிகள் இடம்பெறுகின்றன. கணனித் தமிழ்ச் சங்க உறுப்பினர்களின் குறுந்தகடுகள் பார்வைக்கு வைக்கப்படுகின்றன. ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. பல்வேறு ஆய்வுகள் சம்பந்தமான விவாதச் சுற்றுக்கள் போன்றன இடம் பெறுகின்றன. இவை யாவும் ஒட்டுமொத்தமாக தமிழ் மொழி வளர்ச்சிக்கு அருந்துணை புரிவனவே.

பல்வேறு நாடுகளிலும் தமிழில் கணினி, விசைப்பலகை போன்றன உருவாக்கப்படுகின்ற போது வெவ்வேறு விதமாகவே அவை வடிவமைக்கப்படு கின்றன. ஆளுக்கொரு விதமாக அவற்றை வடிவமைக்கின்றார்கள். தமிழர்களின் பலமும், பலவீனமும்தான் உருவாக்கியது தான் மிகச் சரியானது என வாதிடுவதே. இத்தகைய பிடிவாதக் குணம் காலங்காலமாக எமக்குப் பலவித இடர்பாடுகளையே சம்பவித்துத் தந்ததால் நாம் பொதுத் தன்மை காணமுயலவேண்டும்.

இன்று எமது தமிழ் மக்கள் புலம்பெயர் தமிழர்களாக உலகின் மூலை முடுக்கு எங்கும் பரம்பி வாழ்கின்றனர். அவர்கள் தத்தம் வாழ்வாதாரத்திற்காகப் பல நாட்டு மொழிகளையும் பயின்று கருமமாற்றினாலும்"நாமமது தமிழரென" வாழ்வதையே அவாவி நிற்கின்றனர் என்பதற்கு தத்தம் பிள்ளைகளுக்கு தமிழ் மொழியைப் பயிற்றுவிப்பதற்கு எடுக்கும் முயற்சிகள் சான்றாகின்றன. வீடுகளில் பெருமளவு பிள்ளைகளோடு தமிழிலேயே உரையாடுவதோடு தமிழ் மொழிக்கான பாடசாலைகள், பல்கலைக்கழகங்களையும் அமைக்கின்றனர்.

"காலம் என்பது கறங்கு போற் சுழன்று மேலது கீழாய், கீழது மேலாய் மாறி வருவதோர் தோற்றம்" என்ற அறிஞர் கருத்துக் கிணங்க எமது தாய் மொழியாம் தமிழும் நமது மரபுகள், பாரம்பரியங்கள் சிலவற்றை வேற்று மொழித் தாக்கங்களினால் இழந்தாலும் காலந்தோறும் புதுமைகளை ஏற்கும் தனது மனோபாவத்தினால் இணையத் தமிழாக புதுவாழ்வு பெற்றுள்ளது. காலப்போக்கிலே ஏனைய மொழிகளின் உதவியின்றியே உலகின் எல்லா நாடுகளிலும் செறிந்து வாழும் தமிழ் நெஞ்சங்கள் தமிழ் மொழியிலேயே தமது அனைத்துக் கருமங்களையும் ஆற்றக் கூடிய நிலைமையும் உருவாகலாம். அத்தகைய ஒரு அரிய நிலையினை தமிழ் அன்னைக்கு ஈட்டிக் கொடுக்க தமிழர்கள் நாம் ஒன்றிணைவோம்.

"வாழ்க தமிழ்
வளர்க புதுமை"

# அகில இலங்கை தமிழ் மொழித்தின தேசிய நிலைப் போட்டி முடிவுகள் - 2010

வடமாகாணம்

| | | |
|---|---|---|
| 01) போட்டி இல 01<br>முதலாம் இடம் : | கட்டுரை வரைதல்<br>செல்வி. P. காருண்யா<br>யா / சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். | பிரிவு - 01 |
| 02) போட்டி இல 02<br>இரண்டாம் இடம் : | கட்டுரை வரைதல்செல்வி.<br>P. கஸ்தூரி<br>யா/ வேம்படி மகளிர் கல்லூரி. | பிரிவு - 02 |
| 03) போட்டி இல 05<br>முதலாம் இடம் : | தமிழியற் கட்டுரை இலக்கியம் நயத்தல்<br>செல்வி. P. கஜிதா<br>யா/ மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் | பிரிவு - 05 |
| 04) போட்டி இல 07<br>மூன்றாம் இடம் : | இலக்கணம்<br>செல்வி. K. சிவகௌரி நாயகி<br>யா / யூனியன் கல்லூரி | பிரிவு - 05 |
| 05) போட்டி இல 08<br>முதலாம் இடம் : | திறனாய்வுப் போட்டி<br>செல்வன் I. சுயாந்தன்<br>வ / புதுக்குளம் மகாவித்தியாலயம் | பிரிவு - 05 |
| 06) போட்டி இல 10<br>முதலாம் இடம் : | குறுநாடக ஆக்கம்<br>செல்வன். அ. கோகுலன்<br>யா/ நெல்லியடி ம.ம. வித்தியாலயம் | பிரிவு - 05 |
| 07) போட்டி இல 13<br>இரண்டாம் இடம் : | சிறுகதை ஆக்கம்<br>செல்வன் V. திவாகரன்<br>யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி. | பிரிவு - 04 |
| 08) போட்டி இல 14<br>முதலாம் இடம் | சிறுகதை ஆக்கம்<br>செல்வி. I. பிரியங்கா<br>யா / மெதடிஸ்ட் பெண்கள் உ. பாடசாலை | பிரிவு - 05 |
| 09) போட்டி இல 15<br>மூன்றாம் இடம் | வாசிப்பு<br>செல்வி. T. சாம்பவி<br>வ / இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் | பிரிவு - 01 |
| 10) போட்டி இல 16<br>இரண்டாம் இடம் | வாசிப்பு<br>செல்வி. S. டிலக்ஷினி<br>வ / இறம்பைக்குளம் மகளிர் ம. வித்தியாலயம் | பிரிவு - 02 |
| 11) போட்டி இல 17<br>மூன்றாம் இடம் | ஆக்கத்திறன் வெளிப்பாடு<br>செல்வன். S. நிறோஜன்<br>யா / கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம் | பிரிவு - 01 |
| 12) போட்டி இல 18<br>முதலாம் இடம் | பேச்சு<br>செல்வன். T. அபிநாத்<br>யா / இந்து ஆரம்ப பாடசாலை | பிரிவு - 01 |

| | | |
|---|---|---|
| 13) போட்டி இல 19<br>மூன்றாம் இடம் : | பேச்சு<br>செல்வி. T. கீர்த்தனா<br>கிளி/ இந்துக் கல்லூரி | பிரிவு - 02 |
| 14) போட்டி இல 22<br>முதலாம் இடம் : | பேச்சு<br>செல்வன் கே. வசீகரன்<br>யா / மானிப்பாய் இந்துக் கல்லூரி | பிரிவு - 05 |
| 15) போட்டி இல 23<br>முதலாம் இடம் : | பாவோதல்<br>செல்வி. I. கிருஷிகா<br>மன் / சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி | பிரிவு - 01 |
| 16) போட்டி இல 24<br>மூன்றாம் இடம் : | பாவோதல்<br>செல்வி. R. யதுசா<br>யா / வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | பிரிவு - 02 |
| 17) போட்டி இல 27<br>மூன்றாம் இடம் : | பாவோதல்<br>செல்வி. C. செறின் சியாமா<br>மன் / சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி | பிரிவு - 05 |
| 18) போட்டி இல 28<br>மூன்றாம் இடம் : | இசையும் அசைவும்<br>செல்வி. Y. லஜனிகா<br>வ / விபுலானந்தா கல்லூரி | பிரிவு - 01 |
| 19) போட்டி இல 29<br>முதலாம் இடம் : | இசை - தனி<br>செல்வன் - V. வத்சாங்கித சர்மா<br>யா / இந்துக் கல்லூரி | பிரிவு - 02 |
| 20) போட்டி இல 30<br>மூன்றாம் இடம் : | இசை தனி<br>செல்வி. N. சிபிஷா<br>வ / இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் | பிரிவு - 03 |
| 21) போட்டி இல 31<br>மூன்றாம் இடம் : | இசை தனி<br>செல்வன் A. சண்முகப்பிரியன்<br>யா / யூனியன் கல்லூரி | பிரிவு - 04 |
| 22) போட்டி இல 32<br>முதலாம் இடம் : | இசை தனி<br>செல்வன். K. வர்ஜிகன்<br>யா / செங்குந்தா இந்துக் கல்லூரி | பிரிவு - 05 |
| 23) போட்டி இல 36<br>முதலாம் இடம் : | நடனம் தனி<br>செல்வி. S. பாவனா<br>யா / வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | பிரிவு - 03 |
| 24) போட்டி இல 37<br>இரண்டாம் இடம் : | நடனம் தனி<br>செல்வி. K. அபிநயா<br>யா / வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | பிரிவு - 04 |
| 25) போட்டி இல 38<br>முதலாம் இடம் : | நடனம் தனி<br>செல்வி. S. லாவண்யா<br>யா / விக்ரோறியாக் கல்லூரி | பிரிவு - 05 |

| | |
|---|---|
| 26) போட்டி இல G. 33 முதலாம் இடம் : | இசை குழு - I<br>வ / இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் |
| 27) போட்டி இல G. 34 இரண்டாம் இடம் : | இசை குழு - II<br>யா / இந்து மகளிர் கல்லூரி |
| 28) போட்டி இல G. 39 முதலாம் இடம் : | நடனம் குழு - I<br>யா / யாழ். மத்திய கல்லூரி |
| 29) போட்டி இல G. 40 முதலாம் இடம் : | நாட்டிய நாடகம்<br>யா / யாழ் மத்திய கல்லூரி |
| 30) போட்டி இல G. 42 முதலாம் இடம் : | இலக்கிய நாடகம்<br>வ/ விபுலானந்தாக் கல்லூரி |
| 31) போட்டி இல G. 43 முதலாம் இடம் : | வில்லுப்பாட்டு<br>யா / சென். ஜோன்ஸ் கல்லூரி |
| 32) போட்டி இல G. 44 முதலாம் இடம் : | விவாதம்<br>யா / யாழ். இந்துக் கல்லூரி |
| 33) போட்டி இல G. 45 இரண்டாம் இடம் | தமிழறிவு வினா விடை<br>யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரி |

# மாகாணநிலைத் தமிழ்மொழித் தினப்போட்டிகள் - 2010

## மாகாணக் கல்வித்திணைக்களம், வடமாகாணம்

## போட்டி முடிவுகள்

| போட்டி இல. | பிரிவு | போட்டியின் பெயர் | நிலை | பாடசாலையின் பெயர் | வலயம் | மாவட்டம் | போட்டியாளர் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | ஆக்கம் - எழுத்து | 1 | யா/சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | பா.காருண்யா |
| | | | 2 | மு/வித்தியானந்தாக் கல்லூரி | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | ந. அபிராமி |
| | | | 3 | வ/புதுக்குளம் மகா வித்தியாலயம் | வவுனியா வடக்கு | வவுனியா | ம. லக்சன் |
| 2 | 2 | கட்டுரை வரைதல் | 1 | யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | ப. கஸ்தூரி |
| | | | 2 | கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி | கிளிநொச்சி | கிளிநொச்சி | இ. சங்கீர்த்தனா |
| | | | 3 | மு/ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியாசாலை | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | செ. அருந்துசன் |
| 3 | 3 | கட்டுரை வரைதல் | 1 | யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | ப. கதிர்தர்சினி |
| | | | 2 | மன்/உயிலங்குளம் றோ.க.த.வி | மன்னார் | மன்னார் | க. மோகனப்பிரியா |
| | | | 3 | கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம் | கிளிநொச்சி | கிளிநொச்சி | க.தூரிகா |
| 4 | 4 | கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல் | 1 | வ/கிடாச்சூரி அ.த.க.பாடசாலை | வவுனியா வடக்கு | வவுனியா | சோ. நிரஞ்சன் |
| | | | 2 | மு/வற்றாப்பளை மகா வித்தியாலயம் | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | பொ. கோகிலா |
| | | | 3 | வ/ அல்மினா ம.வி. | மன்னார் | மன்னார் | ஏ.எப்.நிபாயா |
| 5 | 5 | தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல் | 1 | யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் | தென்மராட்சி | யாழ்ப்பாணம் | ப.கஜிதா |
| | | | 2 | மன்/நானாட்டான் ம.வி | மன்னார் | மன்னார் | அ. மடுமலர் |
| | | | 3 | வ/புதுக்குளம் மகா வித்தியாலயம் | வவுனியா வடக்கு | வவுனியா | சோ.வசந்தகௌரி |
| 6 | 4 | இலக்கணப் போட்டி | 1 | யா/வட.இந்து மகளிர் கல்லூரி | வடமராட்சி | யாழ்ப்பாணம் | கோ. தர்மிக்கா |
| | | | 2 | வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | ச. கீர்த்திகா |
| | | | 3 | மன்/முருங்கன் ம.வி. | மன்னார் | மன்னார் | உ. துஷேந்தினி |

| போட்டி இல. | பிரிவு | போட்டியின் பெயர் | நிலை | பாடசாலையின் பெயர் | வலயம் | மாவட்டம் | போட்டியாளர் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | இலக்கணப் போட்டி | 1 | யா/பூனியன் கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் | க.சிவகௌரிநாயகி |
| | | | 2 | வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | இ. நிஷாந்தினி |
| | | | 3 | மன்/பத்திமா ம.ம.வி | மன்னார் | மன்னார் | நற்குணநாதன் ஜீவிதா |
| 8 | 5 | திறனாய்வுப் போட்டி | 1 | வ/புதுக்குளம் மகா வித்தியாலயம் | வவுனியா வடக்கு | வவுனியா | இ. சுயாந்தன் |
| | | | 2 | யா/கரம்பொன் சிறியபுஷ்பம் மகா வித். | தீவகம் | யாழ்ப்பாணம் | வி. மேகலா |
| | | | 3 | மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி | மன்னார் | மன்னார் | றொ.இ. ஜெய்ராஜ் |
| 9 | 4 | குறுநாடக ஆக்கம் | 1 | யா/ அருணோதயாக் கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் | து. சங்கீர்த்தனா |
| | | | 2 | கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி | கிளிநொச்சி | கிளிநொச்சி | அ. அனந்தா |
| | | | 3 | வ/சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாசாலை | வவுனியா வடக்கு | வவுனியா | செ. டேசிகா |
| 10 | 5 | குறுநாடக ஆக்கம் | 1 | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | வடமராட்சி | யாழ்ப்பாணம் | அ. கோகுலன் |
| | | | 2 | வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி | வவுனியா தெற்கு | வவுனியா | கு. நிதர்சனா |
| | | | 3 | மு/மல்லாவி மத்திய கல்லூரி | துணுக்காய் | முல்லைத்தீவு | ச. நிலானி |
| 11 | 4 | கவிதை ஆக்கம் | 1 | கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி | கிளிநொச்சி | கிளிநொச்சி | சி. பிரவீனா |
| | | | 2 | வ/ பூம்புகார் கண்ணகி வித்தியாசாலை | வவுனியா | வவுனியா | கு.ரஜிந்தினி |
| | | | 3 | யா/விக்கினேஸ்வராக் கல்லூரி | வடமராட்சி | யாழ்ப்பாணம் | செ.சுகாங்கி |
| 12 | 5 | கவிதை ஆக்கம் | 1 | மன்/உயிலங்குளம் றோ.க.த.வி | மன்னார் | மன்னார் | க.ரமாப்பிரியா |
| | | | 2 | மு/யோகபுரம் மகா வித்தியாலயம் | துணுக்காய் | முல்லைத்தீவு | ஜெ. ஜனார்த்தனன் |
| | | | 3 | யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் | ஆ. கனிஷ்ரா |
| 13 | 4 | சிறுகதை ஆக்கம் | 1 | யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் | வி. திவாகரன் |
| | | | 2 | மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | பா. உஷாந்தினி |
| | | | 3 | மன்/தோட்டவெளி அ.த.க.பா | மன்னார் | மன்னார் | ப.சியாந்தன் |

| போட்டி இல. | பிரிவு | போட்டியின் பெயர் | நிலை | பாடசாலையின் பெயர் | வலயம் | மாவட்டம் | போட்டியாளர் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|
| 14 | 5 | சிறுகதை ஆக்கம் | 1 | யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை | வடமராட்சி | யாழ்ப்பாணம் | இ. பிரியங்கா |
| | | | 2 | மன்/அடம்பன் மத்திய ம.வி | மடு | மன்னார் | ஞா. அனுசியா |
| | | | 3 | வ/சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி | வவுனியா தெற்கு | வவுனியா | கா. கிருஷாந்தினி |
| 15 | 1 | வாசிப்பு | 1 | வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | த. சாம்பவி |
| | | | 2 | மன்/புனித ஆனாள் மத்திய ம.வி. | மன்னார் | மன்னார் | வெ.மேரி திரேஸ் லெம்பேட் |
| | | | 3 | யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் | வலிகாமம் | யாழ்ப்பாணம் | க. கேனுகா |
| 16 | 2 | வாசிப்பு | 1 | வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | ச.டிலக்ஷினி |
| | | | 2 | யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பா.. | தென்மராட்சி | யாழ்ப்பாணம் | சி. டிலக்சனா |
| | | | 3 | மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி | மன்னார் | மன்னார் | பொ.ஆன் நித்தியா |
| 17 | 1 | ஆக்கத்திறன் வெளிப்பாடு | 1 | யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம் | வடமராட்சி | யாழ்ப்பாணம் | சி. நிறோஜன் |
| | | | 2 | வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | சி. புருஷாத் |
| | | | 3 | கிளி/ஜெயபுரம் மகா வித்தியாலயம் | கிளிநொச்சி | கிளிநொச்சி | சிவஞானம் கௌதமன் |
| 18 | 1 | பேச்சு | 1 | யா/யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | த. அபிநாத் |
| | | | 2 | வ/நெளுக்குளம் கலைமகள் மகா.வித். | வவுனியா தெற்கு | வவுனியா | மா. டிலோஜினி |
| | | | 3 | மு/காமினி மகா வித்தியாலயம் | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | க. பிரவின் |
| 19 | 2 | பேச்சு | 1 | கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி | கிளிநொச்சி | கிளிநொச்சி | கீர்த்தனா திருநாவுக்கரசு |
| | | | 2 | யா/ யூனியன் கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் | சி. மதுஷனா |
| | | | 3 | மு/பாலிநகர் மகா வித்தியாலயம் | துணுக்காய் | முல்லைத்தீவு | பி. பிரசாந்தினி |
| 20 | 3 | பேச்சு | 1 | மு/காமினி மகா வித்தியாலயம் | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | ந. சாமந்தி |
| | | | 2 | மன்/தலைமன்னார் பியர் அ.த.க. பாடசாலை | மன்னார் | மன்னார் | இரா. மரியதுஷாந்தி |
| | | | 3 | யா/இந்துக் கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | ஆ. ஹரிசங்கர் |

| போட்டி இல. | பிரிவு | போட்டியின் பெயர் | நிலை | பாடசாலையின் பெயர் | வலயம் | மாவட்டம் | போட்டியாளர் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|
| 21 | 4 | பேச்சு | 1 | மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி | மன்னார் | மன்னார் | பி. ஜான்சிராணி |
| | | | 2 | மு/காமினி மகா வித்தியாலயம் | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | செ. கௌசிகா |
| | | | 3 | வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | இ. தனுசிகா |
| 22 | 5 | பேச்சு | 1 | யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் | க. வசீகரன் |
| | | | 2 | வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வி | வவுனியா தெற்கு | வவுனியா | வி. ஆன்டினுசியா |
| | | | 3 | மன்/அடம்பன் மகா வித்தியாலயம் | மடு | மன்னார் | வே. திசுபா |
| 23 | 1 | பாவோதல் | 1 | மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி | மன்னார் | மன்னார் | இ. கிருஷிகா |
| | | | 2 | வ/சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி | வவுனியா தெற்கு | வவுனியா | கு. நிர்மியா |
| | | | 3 | மு/யோகபுரம் மகா வித்தியாலயம் | துணுக்காய் | முல்லைத்தீவு | பி. எடின்சிகா |
| 24 | 2 | பாவோதல் | 1 | யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | ர. யதுசா |
| | | | 2 | மன்/சென்மேரிஸ் பெண்கள் வித்தியாலயம் | மன்னார் | மன்னார் | கி. ஜெனிபர் |
| | | | 3 | வ/புதுக்குளம் மகா வித்தியாலயம் | வவுனியா வடக்கு | வவுனியா | தெ. மிதிலை மாறன் |
| 25 | 3 | பாவோதல் | 1 | மன்/அடம்பன் மகா வித்தியாலயம் | மடு | மன்னார் | நெ. அனற்றிசானா |
| | | | 2 | யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | உ. ரசிந்தா |
| | | | 3 | கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி | கிளிநொச்சி | கிளிநொச்சி | டனசினி சிவசுப்பிரமணியம் |
| 26 | 4 | பாவோதல் | 1 | வ/ஸ்ரீநாகராஜா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | ம. சைலாதேவி |
| | | | 2 | மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி | மன்னார் | மன்னார் | சி. யதார்த்தனி |
| | | | 3 | யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | வடமராட்சி | யாழ்ப்பாணம் | நி. சாமந்தி |
| 27 | 5 | பாவோதல் | 1 | மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி | மன்னார் | மன்னார் | செறின் சியாமளா |
| | | | 2 | யா/இந்து மகளிர் கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | சு.வத்சலா |
| | | | 3 | வ/கல்மடு மகா வித்தியாலயம் | வவுனியா வடக்கு | வவுனியா | செ.குணவதி |

| போட்டி இல. | பிரிவு | போட்டியின் பெயர் | நிலை | பாடசாலையின் பெயர் | வலயம் | மாவட்டம் | போட்டியாளர் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|
| 28 | 1 | இசையும் அசைவும் | 1 | வ/விபுலாநந்தாக் கல்லூரி | வவுனியா தெற்கு | வவுனியா | ஜோ. லஜனிகா |
| | | | 2 | மன்/கட்டையடம்பன் றோ.க.த.க.பாடசாலை | மடு | மன்னார் | இ. கிலானி |
| | | | 3 | யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் | ம. ரம்மியா |
| 29 | 2 | இசை - தனி | 1 | யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | வி. வத்சாங்கிதசர்மா |
| | | | 2 | வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | ஜீ. ஜெதுசன் |
| | | | 3 | மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி | மன்னார் | மன்னார் | பீ. மேரி டிலக்சினி |
| 30 | 3 | இசை - தனி | 1 | வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வி | வவுனியா தெற்கு | வவுனியா | ந.சிபிஷா |
| | | | 2 | யா/இந்து மகளிர் கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | தி. வருணியா |
| | | | 3 | மன்/புனித ஆனாள் மத்திய மகா வித். | மன்னார் | மன்னார் | அ.ஆன் அஜந்திக்கா |
| 31 | 4 | இசை - தனி | 1 | யா/யூனியன் கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் | அ. சண்முகப்பிரியன் |
| | | | 2 | மன்/புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயம் | மன்னார் | மன்னார் | ஜெ. ஜல்சி லெம்பே |
| | | | 3 | வ/புதுக்குளம் மகா வித்தியாலயம் | வவுனியா வடக்கு | வவுனியா | கே. ஜீவலதா |
| 32 | 5 | இசை - தனி | 1 | யா/செங்குந்தா இந்துக் கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | க.வர்ஜீகன் |
| | | | 2 | வ/பெரியகோமரசன்குளம் மகா வித். | வவுனியா தெற்கு | வவுனியா | இ. அனுஷா |
| | | | 3 | கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம் | கிளிநொச்சி | கிளிநொச்சி | தாவீது நிர்மலகென்றீசன் |
| 33 | குழு - 1 | இசை - குழு -1 | 1 | வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித். | வவுனியா தெற்கு | வவுனியா | |
| | | | 2 | யாழ்ப்பாணக் கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் | |
| | | | 3 | புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயம் | மன்னார் | மன்னார் | |
| 34 | குழு - II | இசை - குழு - II | 1 | யா/இந்து மகளிர் கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | |
| | | | 2 | மன்/புனித ஆனாள் மத்திய மகா வித். | மன்னார் | மன்னார் | |
| | | | 3 | வ/கல்மடு மகா வித்தியாலயம் | வவுனியா வடக்கு | வவுனியா | |

| போட்டி இல. | பிரிவு | போட்டியின் பெயர் | நிலை | பாடசாலையின் பெயர் | வலயம் | மாவட்டம் | போட்டியாளர் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|
| 35 | 2 | நடனம் | 1 | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி | தென்மராட்சி | யாழ்ப்பாணம் | ஈ. வித்தகி |
| | | | 2 | வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித். | வவுனியா தெற்கு | வவுனியா | ஸ்ரீ. வித்தகி |
| | | | 3 | மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி | மன்னார் | மன்னார் | ம. மிலானி கிறிசாந்தி |
| 36 | 3 | நடனம் | 1 | யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | சி. பாவனா |
| | | | 2 | வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | வ.கம்சினி |
| | | | 3 | மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம் | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | அ. ரினோஜா |
| 37 | 4 | நடனம் | 1 | யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | க. அபிநயா |
| | | | 2 | வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | பு. ஜனந்தன் |
| | | | 3 | மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி | மன்னார் | மன்னார் | கை. துளசிகா |
| 38 | 5 | நடனம் | 1 | யா/விக்ரோறியாக் கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் | ச. லாவண்யா |
| | | | 2 | வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | ம. அமிர்தவர்ஷினி |
| | | | 3 | மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி | மன்னார் | மன்னார் | டி. திவிசா நிவேதனா |
| 39 | குழு - 1 | நடனக் குழு-1 | 1 | யா/யாழ். மத்திய கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | |
| | | | 2 | வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | |
| | | | 3 | கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம் | கிளிநொச்சி | கிளிநொச்சி | |
| 40 | தி.போட்டி | நாட்டிய நாடகம் (ஆடல் கதை) | 1 | யாழ். மத்திய கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | |
| | | | 2 | வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | |
| | | | 3 | மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி | மன்னார் | மன்னார் | |
| 41 | தி. போட்டி | நாட்டார் பாடல் | 1 | யா/ஹாட்லிக் கல்லூரி | வடமராட்சி | யாழ்ப்பாணம் | |
| | | | 2 | கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி | கிளிநொச்சி | கிளிநொச்சி | |
| | | | 3 | மன்/முருங்கன் ம.வி | மன்னார் | மன்னார் | |

| போட்டி இல. | பிரிவு | போட்டியின் பெயர் | நிலை | பாடசாலையின் பெயர் | வலயம் | மாவட்டம் | போட்டியாளர் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|
| 42 | தி. போட்டி | இலக்கிய நாடகம் | 1 | வ/விபுலாநந்தாக் கல்லூரி | வவுனியா தெற்கு | வவுனியா | |
| | | | 2 | யா/திருக்குடும்பக் கன்னியர்மடம் | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | |
| | | | 3 | மன்/புனித ஆனாள் மத்திய ம.வி | மன்னார் | மன்னார் | |
| 43 | தி.போட்டி | வில்லுப்பாட்டு | 1 | யா/சென். ஜோன்ஸ் கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | |
| | | | 2 | வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | |
| | | | 3 | மன்/ஆண்டாங்குளம் றோ.க.த.க.பாடசாலை | மடு | மன்னார் | |
| 44 | தி.போட்டி | விவாதம் | 1 | யா/யாழ். இந்துக் கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | |
| | | | 2 | வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | |
| | | | 3 | கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம் | கிளிநொச்சி | கிளிநொச்சி | |
| 45 | தி.போட்டி | தமிழறிவு வினாவிடை | 1 | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி | தென்மராட்சி | யாழ்ப்பாணம் | |
| | | | 2 | மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | |
| | | | 3 | வ/பெரியகோமரசன்குளம் மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | |
| 46 | தி.போட்டி | முஸ்லிம் நிகழ்ச்சி | 1 | மன்/புதுக்குடியிருப்பு அ.மு.க.பா. | மன்னார் | மன்னார் | |
| | | | 2 | வ/மதீனா ம.வி. | வவுனியா தெற்கு | வவுனியா | |
| | | | 3 | யா/ஒஸ்மானியாக் கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | |
| 47 | வி.பிரிவு1 | சிங்கள மாணவர்களுக்கான தமிர் வாசிப்பு | 1 | வ/காமினி ம.வி | வவுனியா தெற்கு | வவுனியா | P.K. கீதாஞ்சலி |
| 48 | வி.பிரிவு1 | சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து | 1 | வ/காமினி ம.வி. | வவுனியா தெற்கு | வவுனியா | எஸ். கே.சஜீகா தில்ஹானி |

| போட்டி இல. | பிரிவு | போட்டியின் பெயர் | நிலை | பாடசாலையின் பெயர் | வலயம் | மாவட்டம் | போட்டியாளர் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|
| 49 | வி.பிரிவு2 | சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து | 1 | வ/காமினி ம.வி. | வவுனியா தெற்கு | வவுனியா | சாருகா பிரியதர்சினி |
| 50 | தி.போட்டி | வடமோடிக் கூத்து | 1 | யா/கைதடி நாவற்குழி அ.த.க.பா | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | |
| | | | 2 | வ/புதுக்குளம் மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | |
| | | | 3 | மன்/முருங்கன் ம.வி | மன்னார் | மன்னார் | |
| 51 | தி.போட்டி | தென்மோடிக் கூத்து | 1 | யா/கொக்குவில் இந்துக் கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | |
| | | | 2 | வ/புதுக்குளம் மகா வித்தியாலயம் | வவுனியா வடக்கு | வவுனியா | |
| | | | 3 | - | - | - | |
| 52 | தி.போட்டி | சிந்துநடைக் கூத்து | 1 | வ/கல்மடு மகா வித்தியாலயம் | வவுனியா வடக்கு | வவுனியா | |
| | | | 2 | யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை | வலிகாமம் | யாழ்ப்பாணம் | |
| | | | 3 | மன்/மடுக்கரை அ.த.க.பாடசாலை | மன்னார் | மன்னார் | |
| 53 | தி.போட்டி | விசேட கூத்து | 1 | யா/புனித ஹென்றியரசர் கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் | |
| | | | 2 | கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம் | கிளிநொச்சி | கிளிநொச்சி | |
| | | | 3 | வ/முஸ்லிம் மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு | வவுனியா | |
| 54 | தி. போட்டி | இசை நாடகம் | 1 | யா/புனித அந்தோனியார் கல்லூரி | தீவகம் | யாழ்ப்பாணம் | |
| | | | 2 | மன்/ஆண்டாங்குளம் றோ.க.த.க. பாடசாலை | மடு | மன்னார் | |
| | | | 3 | வ/சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் | | வவுனியா | |
| | | | | | | | |
| | | | | | | | |



# தமிழ்மொழித்தின வாழ்த்து

வாழ்க தமிழ்த்தினம் வளர்க தமிழ்த்தினம்
வாழிய வாழியவே!
மாண்புறு முத்தமிழ் வித்தகரின் நினை
வாம் தினம் வாழியவே!

இலங்கையின் மாணவர் வளங்கொள் தமிழ்ப்பயிர்
இமயமெனப் பொலிய
ஏற்புறு முத்தமிழ் போட்டி பண்பாட்டின்
எழுச்சிக்கு வித்திடவே.

சங்கத்திருப்பினில் பங்கமிலாதிருந்
தாண்ட தமிழ் மொழியே
சால்புயர் கல்வித் தமிழ்மொழிப் பிரிவுயர்
தகைமைக்கு வித்திடவே.

இந்து கிறிஸ்தவம் பௌத்தமிஸ் லாம்நெறி
ஏற்றம் மிகுந்த தமிழ்
எம்முளே தேசிய ஒற்றுமை நிலைபெறும்
எழில் தினம் வாழியவே!

Harikanan, Jaffna.